[illegible] [illegible]

[illegible] 19 [illegible] 12

15 June 1934

JL
ᱛᱛ211, N15 AB
N34·19·12
187579

# ஆனந்தபோதினி



REGd No. M. 1160.

# ANANDA BODHINI

Vol. 19. சோடியாகசகம் No. 12.



| | | பக்கம். |
|---|---|---|
| 1. | கடவுள் வணக்கம் | 881 |
| 2. | யாகச் கொலைகள் | 883 |
| 3. | நேயர்கட்கு ஒரு வேண்டுகோள் | 887 |
| 4. | அந்தணரும் மாமிச ஆகாரமும் | 888 |
| 5. | வில்லிபாரதச் செய்யுளாராய்ச்சி | 894 |
| 6. | குடி வெறி | [illegible] |
| 7. | இலக்கிய இலக்கணம் | ... 901 |
| 8. | இங்கிலாந்தில் மத சீர்திருத்தம் | 907 |
| 9. | அறிவு, பிராட்டியார் | 911,913 |
| 10. | 'மணிமேகலை' | ... 918 |
| 11. | அப்யங்க ஸ்நானம் | ... 922 |
| 12. | வீரரசம் | ... 924 |
| 13. | நெஞ்சொடு புலம்பல் | ... 929 |
| 14. | நாடக மேடை | ... 933 |
| 15. | தென்னிந்திய உற்சவங்கள் | ... 941 |
| 16. | விசித்திர விநோதம் | ... 949 |
| 17. | ஆசிரியர் குறிப்புக்கள் | ... 954 |
| 18 | நாவல், பஞ்சாங்கம் | 957,960 |



OFFICE OF THE ...
12 JUL 19..

நே. 6, லா...

சென்னை...



All R...

காலிகோ பைண்ட்
விலை ரூபா 1—6—0

# ஆனந்தபோதினி

## சந்தா விவரம்

| | | |
|---|---|---|
| வருடம் 1-க்கு தபாற்கூலி யுள்பட | இந்தியா, பர்மா, ஸிலோன் ... ... | 1—0—0 |
| | பினங், ஸிங்கபூர், தென்னாப்ரிக்கா, பசரா, மெசபொடோமியா முதலிய வெளி நாடுகளுக்கு | 2—0—0 |
| நடந்துகொண்டிருக்கிற வருடத்திய தனிச் சஞ்சிகை விலை | | 0—1—6 |
| சென்ற வருடங்களின் தனிச் சஞ்சிகை விலை | | 0—3—0 |

ஒரு வருடத்திற்குக் குறைந்த சந்தா கிடையாது.

(1) சந்தாதாரராய்ச் சேருகிறவர்கள் பூரணமாகப் பெயரை எழுதி யனுப்பவேண்டும்.

(2) சந்தாத் தொகையை முன்னுடிச் செலுத்தியாவது அல்லது வி. பி. யில் பணம் கட்டியாவது பத்திரிகை பெற்றுக்கொள்ளவேண்டும். எப்போது சேர்ந்தாலும் அவ்வருட ஆடிமாத முதல்தான் கணக்கு வைக்கப்பட்டு ஆடி மாத சஞ்சிகை முதல், பத்திரிகை அனுப்பப்படும்.

☞ (3) சஞ்சிகையை வி. பி. யில் வரவழைப்போர் ரிஜிஸ்டர் சார்ஜ் 3—அணு வோடு (18-4-1921 முதல் மணியார்டர் கமிஷன் 10-ரூபா வரையில் 2-அணு வாகையால்) அந்தக் கமிஷன் 2-அணு, வி. பி. க்குத் தபால் சார்ஜ் 0-0-6. ஆக 0-5-6-அதாவது 6-அணு சேர்த்து ரூபா 1-6-0 கட்டி வி. பி. யைப் பெறவேண்டும். மணியார்டர் அனுப்பினுல் 1-2-0 மட்டுமே யாகும். ஆதலால் முன்னுடி மணியார்டர் அனுப்பிப் பத்திரிகை பெற்றுக் கொள்வதே நலம். இதைக் கவனிக்கவும்.

(4) யாருக்கேனும் சஞ்சிகை சேராவிட்டால் அவர்கள் அம்மாதம் 15-ம் தேதி வரையில் பார்த்து அதற்கு மேல் அதே தமிழ்மாத முடிவிற்குள் அவ்விவரத்தைத் தெரிவித்தால்தான் மறுபடி யனுப்பக்கூடும். பிறகு தெரிவிப்போர் கிரையமனுப்பிப் பெறவேண்டும்.

(5) இடம் மாறும் சந்தாதாரர்கள் அடுத்த சஞ்சிகை தங்களுக்குப் புது விலாசத்திற்கு வந்து சேரும் வண்ணம் தபாலாபீஸோடு ஏற்பாடு செய்துகொண்டு நமக்குப் புது விலாசத்தை யறிவிக்கவேண்டும். இன்றேல் அடுத்த சஞ்சிகை பெரும்பாலும் பழைய விலாசத்திற்கே போய்விடும். அதற்கு நாம் பொறுப்பாளியல்ல.

(6) சந்தா நம்பரைக் குறிக்காமல் எழுதும் கடிதங்கள் கவனிக்கப்பட மாட்டா. அத்தகைய கடிதங்களால் நேரிடும் தவறுதல்களுக்கு நாம் பொறுப்பாளி யல்ல. பதிலை விரும்புவோர் ரிப்ளை கார்டாவது தபால் பில்லையாவது அனுப்பினுலன்றி விடை யளிக்கப்பட மாட்டாது.

(7) வியாசங்களை எழுதுவோர் சுத்தமாக இலக்கணப் பிழையின்றி, தங்கள் உண்மைப் பெயருடன், மத தூஷணை, பிறர் தூஷணை, ராஜாங்க விரோதம் முதலியவையின்றியும், பொது ஜனங்கள் விரும்பக்கூடியவைகளாகவும் எழுதவேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| Life Subscription ஜீவிய சந்தா | இந்தியா, பர்மா, ஸிலோன் | ரூபா | 15—0— |
| | அன்னிய நாடுகளுக்கு | ,, | 25—0— |

Telephone No. 3005. *Telegram* :—"Ananda Bodhini," Madras.

[illegible]— நா. முனிசாமி முதலியார், "ஆனந்தபோதினி [illegible]

[illegible]

# ஆனந்தபோதினி

ஒரு சிறந்த மாதாந்தத்
தமிழ்ச் சஞ்சிகை.

"எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"—திருவள்ளுவர்.

(தொகுதி 19.)

ஸ்ரீமுகவருஷ ஆடிமீ முதல் பவவருஷ
ஆனிமீ வரையில்
1933வருஷ ஜூலைமீ முதல் 1934 ஜூன்மீ வரையில்


நா. முனிசாமி முதலியார்,
"ஆனந்தபோதினி" ஆபீஸ்,
நெ. 6, லாயர் சின்னதம்பி முதலி தெரு,
சௌகார்பேட்டை, மதராஸ்.


*All Rights Reserved.*


காலிகோ பைண்ட் விலை ரூபா 1—6—0 } 1934. { தபாற் கூலி வேறு

# ANANDA BODHINI

## GOLDEN OPINIONS

From Rao Saheb Late T. Ramakrishna Pillai Avl., B.A., F.M.U., F.R.H.S., Chairman, Board of Examiners in Dravidian Languages, Madras University.

I am a regular reader of "Ananda Bodhini" the Tamil monthly published in George Town and I am glad to take this opportunity of expressing my appreciation of the way the Journal is conducted. It is just the kind of magazine we want for the Indian women in their houses and the conductors of the Journal have my best wishes for the success of their undertaking.

*Madras, 28th Nov. 1915.*<br>THOTTAKADU HOUSE. } (Sd.) T. RAMAKRISHNA PILLAY.

From Rao Bahadur A. C. Pranatartihara Iyer Esq., B.A., I.S.O., Retired Inspector of Schools, and Registrar of Books, Nungambakkam.

I have read several numbers of "**Ananda Bodhini**." It is conducted on right lines. The matter is suitable and the diction is unobjectionable. I can unhesitatingly say that the journal deserves public encouragement and support.

NUNGAMBAKKAM,<br>*Madras, 5th Dec. 1915.* } (Sd.) A. C. PRANATARTIHARA IYER.

We h[illegible] received [illegible] current number of the Tamil monthly "**Ananda Bodhini**," c[illegible] variety of information on several subjects of every day imp[illegible]. The special feature of the monthly is that a separate section is set apart for giving advice to wom[illegible] [illegible]ther in the form of abstract statements, or s[illegible] stories containing moral lessons.—*Hindu 22-9-15.*

187519

D[illegible] Sir,

[illegible] [illegible]mil monthly entitled "ANANDA BODHINI" ........................is written [illegible], *clear* and *readable* style, *well-suited*, *particularly*, to *ladies* who take a liking to it on account of the varied subjects of interest dealt therein, calculated to mould their characters. That such a monthly should be in existence, side by side with the Anglo-Indian contemporaries, is very much to be appreciated. The subjects dealt within the short compass of the monthly are such that they deserve to be *read* and *re-read* from the view point to quality in contradistinction from style and rhetoric, with a select few of our readers seem to yearn for, as is evident from the pages of the current number *i.e.* pages 288 and 289. A majority of the subscribers now on the rolls will be at one with me when I say that the style now adopted would conduce to the well-being and uninterrupted continuances of the monthly, since it is being and has to be read by both sexes. ... ... ... ... ... It is very much to be envied that there should be over 10000* subscribers, on the rolls which no other monthly of the kind is able to secure, or has ever before secured since inception. I wish the monthly all success.

Trivandrum,<br>**21-1-17.** } A. V. SUBRAMANIA AIYAR,<br>F.N. S.A. (Lon.), F.G.I. (Birm.)

# ஆனந்தபோதினி

## 19-ம் வருடத்திய விஷய அட்டவணை.


| விஷயங்கள் | பக்கங்கள் |
|---|---|
| கடவுள் வணக்கம் ... | 1,81,161,241,321,401,481, 561,641,721,801,881 |
| அரும்பொருள் விளக்கம் ... | 2,82,162,242,322,402,482, 562,642,722,802,882 |
| **தலை அங்கம்** | |
| ஆனந்தபோதினியின் 19-வது ஆண்டு ... | 3 |
| ஞானியாரின் அறுபதாண்டு நிறைவு ... | 5 |
| பலியும் நிர்வாணமும் ... | 83 |
| தமிழன்பர் மகாநாடு ... | 163,403 |
| உண்மைத் தீபாவளி எது ? ... | 243 |
| பட்டதாரிகள் கடமை ... | 323 |
| தமிழன்பர் மகாநாட்டுத் தீர்மானங்கள் ... | 483 |
| தனித்தமிழ் வாதம் ... | 563 |
| படித்தவர்கட்கு வேலை ... | 643 |
| பக்தியா சித்திரவதையா ? ... | 723 |
| கொடுமை ! கொடுமை !! ... | 803 |
| யாகக் கொலைகள் ... | 883 |
| கோஹினூர் என்னும் அருமணி ... | 9 |
| எங்கே போனாலும் துக்கம்தரும் பாட்டு (படம்) ... | 16 |
| சத்தியவாதி சாக்கரட்டீஸ் ... | 17 |
| **பாட்டு** | |
| ஆனந்தபோதினி புத்தாண்டு வாழ்த்து ... | 8 |
| ,, 19-வது ஆண்டு வாழ்த்து | 87 |
| ஆனந்தபோதினி பொங்கல் வாழ்த்து ... | 488 |
| பிரேமா ... | 24 |
| வேண்டா மண விபரீதம் ... | 33 |
| புதிய திருவந்தியார் ... | 65 |
| அழுகையின் மர்மம் ... | 126 |

| விஷயங்கள் | | பக்கங்கள் |
| --- | --- | --- |
| சன்மார்க்க சற்போதங்கள் | ... | 246 |
| கற்பும் பொற்பும் | ... | 334 |
| பிறவிப்பிணியோ றெவாடாதே | ... | 497 |
| தாழ்மையின் தனித்தகைமை | ... | 622 |
| முருகன் என் காதலன் | ... | 648 |
| சன்மார்க்க போதங்கள் | ... | 654 |
| தமிழோம்பல் | ... | 827 |
| **சமயம் தத்துவம்** | | |
| நெற்றிக் குறிகளின் தத்துவம் | ... | 26 |
| திருக்குறளும் வீடும் | ... | 97,180 |
| உலகினர்க் குறுதி கூறல் | ... | 360 |
| நடமாடும் கோவில் | ... | 457,529 |
| பிரம சூத்திரம் | ... | 606,700,770,821 |
| என் குமுறுகிறாய் | ... | 37 |
| **மாதர் உலகம்** | | |
| பிராட்டியார் | ... | 46,110,187,268,354,433, 536,567,673,737,844,913 |
| அநாதை | ... | 62 |
| உறு விலை! | ... | 55 |
| அன்பின் மாண்பு | ... | 59 |
| **இலக்கிய இலக்கணம்** | | |
| நாயனையார் கேண்மை | ... | 61 |
| பாரியும் மாரியும் | ... | 90 |
| நச்சுக்கண் நாகமும் நல்லார் கற்பும் | ... | 177 |
| மூவா மொழியின் முறையீடு | ... | 279 |
| ஆவி அகத்ததோ புறத்ததோ | ... | 328 |
| அரக்கனும் அநுமனும் | ... | 408 |
| புரவலர் பெருமை | ... | 489 |
| தலைக்கொடை | ... | 593 |
| வாய்மையும் பொய்மையும் | ... | 650 |
| கொக்கு வேட்டை | ... | 728 |
| முருகனும் முழுமதியும் | ... | 807 |
| கிருகபரண சாஸ்திரம் | ... | 66 |
| **விசித்திர விநோதம்** | ... | 68,145,227,305,385,466, 546,625,707,787,865,949 |
| **சிறுமணித்திரட்டு** | ... | 71,148,230,308,888,469, 549,629,710,791,870,953 |





| விஷயங்கள் | | பக்கங்கள் |
| --- | --- | --- |
| **பிரபஞ்ச விநோதம்** | ... | 72,149,231,309,389,470, 550,630,711,790,869,952 |
| **ஆசிரியர் குறிப்புகள்** | ... | 73,150,232,310,390,471, 551,631,712,792,871,954 |
| **நாவல்**—நீல அறையின் மர்மம் | ... | 75,154,235,313,392 474, 556,636,716,796,876,957 |
| **பஞ்சாங்கம்** | ... | 78,158,237,316,396,478, 560,640,720,800,880,960 |
| தமிழன்பர் மகாநாடு | ... | 94 |
| **சிறு கதைகள்** | | |
| விதவை—விமலா | ... | 104 |
| கைம்பெண் கமலா | ... | 287 |
| காதலா காமமா | ... | 369 |
| சாவித்திரி | ... | 414 |
| உள்ள நூல் | ... | 116,199 249 |
| தங்கைக்குத் தமக்கையின் கடிதம் | ... | 121 |
| போர் | ... | 128 |
| **மாணவர் பகுதி** | | |
| குடியானவர்களின் கலகமும் பிரபுக்களின் கல்நெஞ்சமும் | ... | 129 |
| ரோஜாப் பூக்களின் யுத்தம் | ... | 302 |
| நவீனகால ஆரம்பம் | ... | 411 |
| ஐரோப்பிய மதச் சீர்திருத்தம் | ... | 524 |
| ட்யூடர் வம்ச அரசர்கள் | ... | 619 |
| ஹென்றி VIII-ம் மார்ட்டின் லூதரும் | ... | 622 |
| இங்கிலாந்தில் மதச் சீர்திருத்தம் | ... | 907 |
| மச்சங்களின் மகாநாடு | ... | 133 |
| வணிக தர்மம் | ... | 141 |
| கிராமச் சீர்திருத்தம் | ... | 167 |
| நகை | ... | 175 |
| அடக்கமென்னும் அருமணி | ... | 194 |
| காதலின் பாக்கியம் (கதை) | ... | 203 |
| தந்தையும் தநயனும் | ... | 210 |
| சிறைக் கிளியும் மட மயிலும் | ... | 337 |
| ஐம்படைகளின் தத்துவங்கள் | ... | 214 |
| ஓர் ஐய வினா | ... | 222 |
| பெட்டகக் கதைகள் | ... | 224 |

| விஷயங்கள் | பக்கங்கள் |
|---|---|
| ஹோமரும் வால்மீகரும் ... | 254 |
| ஆளுடைப் பிள்ளையாரும் ஆலி நாடரும்... | 257 |
| நைடதத்தில் இயற்கைத் தோற்ற வருணனை ... | 266 |
| புதியன் புனைதல் ... | 275 |
| கம்பியில்லாத் தந்தி ... | 277 |
| சாதாரண தருமம் ... | 283 |
| தர்ம பாலர் ... | 285 |
| தமிழர் வேள்வி ... | 295 |
| ஆரம்பக் கல்விமுறை ... | 332 |
| பெண்கல்வி ... | 340 |
| புருடர் சீர்திருத்தம் ... | 349 |
| பாதகர் வந்திலர் ... | 366 |
| நாடக மேடையில் தேர்ச்சி பெறுவ தெப்படி? ... | 375,447,755,933 |
| உபவாசத்தின் மகிமை ... | 381 |
| உண்மையின் மேன்மை ... | 383 |
| மத மாறுதல் ... | 417 |
| சோம்பேறியின் கனவு ... | 420 |
| பிரிவாற்றாமை ... | 424 |
| வள்ளுவனார் காட்டும் வழிகள் ... | 438 |
| மாணிக்கவாசகரும் அகப்பொருளும் ... | 442 |
| சிற்றில் சிதையேல் ... | 463 |
| மாதர் பகுதி ... | 465 |
| சிவபெருமான் கீதப் பிரியர் ... | 493 |
| சந்திரவதனா (ஓர் சரித்திரக் கதை) ... | 495,749,850 |
| கம்பர் உவமை நயம் ... | 500 |
| ஈழவர் ... | 506 |
| இந்திர விழா ... | 509 |
| நன்றியறிவின்மை ... | 513 |
| ஜன நாயக அரசியல் முறை ... | 521 |
| மேட்டூர் அணைக்கட்டு ... | 527 |
| கவிப்பித்தர்கள் இருவர் ... | 542 |
| ஒளி நூல் ஆராய்ச்சி ... | 573 |
| நமது தற்கால நிலைமை ... | 577 |
| ஈச்சரவேன்? ... | 582 |
| பிருதிவிராஜன் ... | 584,666 |
| உறுதி உள்ளம் ஒரு வெற்றி ... | 589 |
| இயற்கைதானே? ... | 591 |





| விஷயங்கள். | பக்கங்கள். |
|---|---|
| தமக்கென வாழாப் பிறர்க்குரியாளர் ... | 597,682 |
| கொசுக்கள் மகாநாடு ... | 510 |
| நன்மக்களைப் பெறுதல் ... | 657 |
| தாழ்த்தப்பட்டவரை முன்னேற்ற முயற்சி | 679 |
| ஜலபானத்தால் பல நோய்களைப் போக்கடிக்க முடியும் ... | 687 |
| பண்டைத் தமிழர் நாகரிகம் ... | 689 |
| திருமாலின் சயனத் திருக்கோலம் ... | 691 |
| தனித்தமிழ் உரைநடை ... | 733 |
| சிதம்பர ரகசியம் சிதாகாச மான்மியம் ... | 743 |
| அந்திப் பொழுதின் அற்புதக் காட்சிகள் ... | 762 |
| சந்தேகங்கள் ... | 774 |
| மக்களும் சமய வாழ்வும் ... | 776 |
| மகளிர்க்குப் பட்டப் படிப்பு அவசியமா? | 779 |
| நன்றிமறவேல் ... | 783 |
| அழகர் ஆற்லிலங்கும் வைபவம் ... | 785 |
| நேயர்கட்கு ஒரு வேண்டுகோள் ... | 806,887 |
| வில்லிபாரதச் செய்யுளாராய்ச்சி ... | 811,894 |
| மரபுக் கொடுமை ... | 814 |
| சீதையும், மாயத் தாதையும் ... | 817 |
| இலக்கிய இலக்கணம் ... | 829,901 |
| ஒரு அன்பனின் முறையீடு ... | 835 |
| மணிமேகலை நூலின் அமைப்பும் சரித்திரக் குறிப்பும் ... | 857,918 |
| சத்தியாக்கிரக நீக்கம் ... | 863 |
| அந்தணரும் மாமிச ஆகார முயற்சியும் ... | 888 |
| குடி வெறி ... | 897 |
| அறிவு ... | 911 |
| அப்யங்க ஸ்நானம் ... | 922 |
| வீர ரசம் ... | 924 |
| நெஞ்சொடு புலம்பல் (பாட்டு) ... | 929 |
| தென்னிந்திய உற்சவங்கள் ... | 941 |

# மலையாளபகவதி.

## (இரண்டாம் பதிப்பு.)

(வித்வான். ஸ்ரீ. வீ. ஆறுமுகஞ் சேர்வை அவர்கள் எழுதியது.)

ஆனந்தத்தை அடிக்கடி யுண்டாக்குவது; அடங்காச் சிரிப்பை விளைவிப்பது; அகங்குளிரச் செய்வது; அறிவை வளர்ப்பது; தமிழ்ஞானத்தைத் தருவது; உலக இயற்கையை உள்ளபடி உணர்த்துவது; தந்திர மந்திரக்காரர்களின் தன்மைகளை விளக்கமாகத் தெரிவிப்பது; சமஸ்தானப் புரட்டர்களின் தன்மைகளை சவிஸ்தாரமாகக் கூறுவது; படிப்பவர் மனதைக் கவரத்தக்கது.

இதில், அரண்மனைச் சேவகன் அக்கிரமங்கள், இலஞ்சம் வாங்குவோரின் இழிவான நடக்கைகள், உண்மைப்புலவர் தன்மைகள், போலிப்புலவர் பொய் வேடச் செயல்கள், விகடக்காரர் தன்மைகள், அக்கிரமக்காரர்களுக்கு அளவற்ற துன்பங்களுண்டாகும் விதங்கள், பரத்தையர் இயல்பு, கடன்காரர் வேடிக்கை, மூடர் இயற்கை, மடையரின் மூடசாஸ்திரக் கொள்கைகள், பேதை மனிதரின் விநோதச் செயல்கள், முழுமோசக்காரரின் மதிமோசச் செயல்கள், மந்திரக்காரர் இயற்கை, பூசாரிகள் புரட்டு, கோடாங்கியின் கூத்து, பேய்க்கூத்து, பெண்களின் பேயாட்டு, கோடாங்கிப்பாட்டுகள், பேயோட்டுதல், கழிப்புக்கழித்தல், கிரகசாந்தி செய்தல், எமனை வரவழைத்து இறப்பவனைப் பிழைப்பித்தல், கோடாங்கிக்காரரை நம்புவோர் குடிகெட்டுப் போதல், பேயாட்டத்தை நம்புவோர் பெண்களை யிழத்தல் முதலிய பற்பல விஷயங்கள் மிக்க அற்புதமாகவும் விரிவாகவும் எழுதப்பட்டிருக்கின்றன.

இதன் விலை ரூபா. 1.

"ஆனந்தபோதினி" சந்தாதாரர்களுக்கு 31-8-34 வரை அணா 12.

அங்கத்தை மெச்சி பங்கமடைந்த

# மேனுமினுக்கி கதை

(பெ. சு. பாலராஜம் பிள்ளை எழுதியது.)

இதில், மேனுமினுக்கி யெனும் ஓர் பெண் தன் நாயகனிடம் மாளிகையில் பதித்துள்ள நிலைக்கண்ணாடியில் தன்னுடைய ரூபலாவண்யங்களைக் காட்டி அங்கத்தை மெச்சிக்கொள்வதும், அவள் நாணும்படி அங்கு வசித்துள்ள ஓர் கிளிப்பிள்ளை நகைத்து இராமதேசத்தில் வாழும் விசித்திர வல்லியின் கதையைத் தெளிவாய்ச் சொல்வதும் அதைக்கேட்ட வசீகரன் அவள் மீது மோகாந்தகாரங் கொண்டுழல்வதும், மந்திரிகள் பலவித நீதிகளைச் சொல்லியும் கேளாது சந்திரசேகரனெனும் மந்திரியின் உபாயத்தால் சந்நியாசி ரூபங்கொண்டேகுவதும், மேனுமினுக்கி தன் புருஷனைக் காணாது கானகமடைந்து: வாலிப மாந்திரீக வல்லபனிடமும், மாயா ராட்சசியிடமும், கார்க்கோடகனிடமும் அனேகவித கஷ்டப்பட்டு விறகுச் சுமை தாங்கிக் கடைவீதியில் விற்று ஜீவித்து சில மாதர்கள் சகாயத்தினால், வசீகரன் மீது ஆவல் கொண்டலையும் விசித்திர வல்லியிடம் பாங்கித்தொழில் புரிந்து வாழ்வதும். அப்போது பைத்தியந்தீர்ந்த வசீகர சந்நியாசிக்கு விசித்திரவல்லியைத் திருமணம் புரிவதும் இன்னும் பல அற்புதமாயிருக்கும். விலை அணா 8.

ஆனந்தபோதினி சந்தாதாரர்களுக்கு 31-8-34 வரை விலை அணா 6.

ஆனந்போதினி ஆபீஸ், தபால்பெட்டி நெ-167, மதராஸ்

ஜாதகாமிருத பலவிமர்சம் என்னும்

# சோதிட கணிதாமிருத சாகரம்.

கற்கக் கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக.

என்ற மூதுரை வாக்கியப்படி எவ்விதக் கல்வியாயினும் குற்றமறக் கற்றுத் தெளிவதே நம்மோர் கடமையாகும். அதுபற்றியே வேத புருஷனுடைய அங்கங்கள் ஆறினுள் நேத்திர அங்கமாகிய, சோதிட சாஸ்திரமானது கம்மவர் எளிதில் றியும் வண்ணம் ஆரம்பசோதிடர் முதல் பஞ்சாங்க கணித ஆராய்ச்சிவரையில் துர்பிக்ஷகாலமுண்டாகும் விபரம், சர்வதேச அக்ஷாம்சம் செய்யும் முறை, சாஸ்திர உபயாதிநன். வர்கோத்துமம். தசவர்க்கம் பிரிக்குமடைவு வக்கிர. ரிஜு அஸ்தமயமறிதல். துவாதசாம்ச சக்கிர நிர்ணயம், உச்சாதி கிரகசங்கியை, கேந்திர திரிகோணாதிஸ்தானங்கள், பார்வைஸ்தான பலம், திரிகாண சக்கிரமறியும் விதம், மற்றும் ஜாதக கணிதத்திற்காய்வேண்டிய லக்னஸ்புடம்—நக்ஷத்திரஸ்புடம், பாவகஸ்புடம், கிரகங்களில் ஆக்ஷி, உச்சநட்பு நீச்சம்பகை முதலியபலம்; மண்டல சமயசார பருவம், மனையளந்து ஆயம் சொல்லும் மார்க்கம்; ஆரூடபாவம், விஷயத்தை யறிந்தபிறகு முடியும் முடியாதெனக் கூறும் வகை; காலசக்கிரம், அஷ்டக வர்க்கம், கோசாரம்; லக்னபாவம்; சகோதரபாவம்; மாதுருபாவம்; புத்திரபாவம்; ரோக பாவம்; களத்திரபாவம்; ஆயுள்பாவம்; பிதுர் பாவம்; தொழில், லாபம், விரய முதலியவைகளும்; ருதுகால பலாபலன்களை விளக்கும் மார்க்கமும் பலன் முதலியவைகளையும் செவ்வனே விளக்கி சோதிட வித்வசிகாமணிகளின் வேண்டுகோளால், சாஸ்திர சம்பந்தமான குதர்க்க வார்த்தைகளாடுபவருடன் சாஸ்திரசம்பந்தமான உண்மையைத் தெள்ளிய நடையினலெடுத்துக் காட்டும் புராதன கணிதசாஸ்திர மூலமாய் ஒவ்வோர் விஷயங்களுக்கும் சந்தேக நிவர்த்தியாக, போதுமான காரணங்களுடன் எடுத்துக்காட்டி, ஜாதகாமிருதபலவிமர்சம் என்னும் ஜாதககணிதசாகரம் என்னும் புதுப்பெயர் சூட்டி உலக பரோபகாரமாக குறைந்தவிலையில் தயார் செய்திருக்கிறோம். இந்நூலிலேயுள்ள விஷயங்கள் பெரும்பாலும் சாஸ்திர சம்பந்த சந்தேகங்கள் நிவர்த்தி செய்யவும் உள்ளபடி உண்மைப் பலன் சொல்லவும் ஏதுவாகும். சோதிடர்கள் பொதுவாய் ஜனன கால லக்ஷணங்களை சந்தேகமின்றி எடுத்துச்காட்டவும் யோகாவயோகங்களும் அவையுண்டாகுங் காலங்களும் தமிழ் வாசிக்கத் தெரிந்தவர் இப்புத்தகத்தைக் கொண்டே கணிதம் செய்யத்தக்க எளியநடையிலெழுதியுள்ளதாகையால் இப்புத்தகத்தைக் கையாள்வோர் பெரிதும் பயன்படுவாரென்பதற்கு சிறிதேனுமையமில்லை.

## இப்புத்தகத்தி லடங்கிய விஷயங்கள்.

1. நட்சத்திர விவரணம்.
2. விவாக பொருத்த நக்ஷத்திரங்கள்.
3. ஜன்ம நட்சத்திர பலன்.
4. இராசி.
5. இராசிகளில் சாஸ்திராதிகள்.
6. ஜன்ம லக்கின பலன்.
7. கிரகங்கள்.
8. அவைகட்குள் சத்துரு மித்திரத்து[வம்.
9. தாத்கால சத்துருமித்திரத்துவம்.
10. காரகத்துவம்.
11. சுப, பாபிகள்.
12. கேந்திர திரிகோணாதிஸ்தானங்[கள்.
13. ஆட்சி, உச்சாதிகள்.
14. உச்சாதி கிரகஸங்கியை.
15. இராசிக்கு சுப, பாபி.
16. பார்வை.

[illegible]களும், ஆயப்பொருள் நூல்களின் கருத்துகளும், தேக தத்துவ சாஸ்திரங்கள், வைத்திய சாஸ்திரங்கள் முதலியவற்றிற் கூறப்பட்டிருக்கும் பல அரிய விஷயங்களும், சாகரம், தெலுங்கு, கன்னடம், மராட்டி, அரபி, இந்துஸ்தானி, பார்ஸி, இங்கிலீஷ், பிரென்ச் முதலிய பாஷைகளிலுள்ள இன்பரச நூல்களின் கொள்கைகளும், இன்ப வாழ்க்கையின் இரகசிய முறைகளும், அதற்குப் பொருத்தமான மனத்தையும் கண்ணையும் கவரும் ஆப்டோன் படங்களும், லயன் பிளாக்குகளும், இன்னும் இல்வாழ்க்கைக்கு இன்றியமையாதனவாகிய அநேகம் விஷயங்களும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இதனை வாங்கிப் படிப்போர் உண்மைக் காதல் என்பது இன்னதென்பதையும், இன்னவிதமானவர்களை மணம்புரிந்தால்தான் இன்பம் ஏற்படுமென்பதையும், இவ்வாழ்க்கையில் இன்னவித மணக்கிரமங்களை அனுசரித்தால்தான் அளவற்ற ஆனந்தமும் அழகிய சந்ததிகளைப் பெற்று ஜீவித்திருக்கலா மென்பதையும் உணர்ந்து இவ்வுலகத்தில் அடைய வேண்டிய இன்பத்தையும, மறுமை இன்பத்தையும் அடைவார்கள். இதனை ஒவ்வொரு குடும்பத்தினரும் வாங்கி வாசிக்கலாம்.

ஷை தெலுங்கு பதிப்பு விலை ரூபா 2.

# இல்லற இன்ப விஜயம்

“இது எங்கே யிருக்கிறது? என்ன ரூபமுடையது? இதை எப்படி உபயோகித்து ஆண் மக்களும் பெண் மக்களும் உலக இன்பத்தை அனுபவிக்க வேண்டும்?” என்று பலர் இக் கேள்விகளைக் கேட்கலாம்.

உண்மைக் காதல் ரசத்தை விரும்பும் உத்தமர்களே! சுகானந்தத்தை விரும்பும் சகோதர சகோதரிகளே! “இல்லற இன்ப விஜயம்” என்னும் சிற்றின்பரச பொக்கிஷம், ஆனந்தக் களஞ்சியம் சென்னை ‘ஆனந்தபோதினி’ ஆபீஸில் தமிழ்நாட்டுச் சுகவாசிகளின் அதிர்ஷ்டவசத்தால் விற்பனைக்குத் தயாரித்து வைக்கப்பட்டிருக்கிறது; இஃதோர் அருமையான தமிழ்ப் புத்தகம்; இதைப் படித்து ஆண் பெண்கள் அனுபவிக்கத் தக்க இன்ப வகைகள் அத்தனையும் பிரத்தியக்ஷமாகக் கண்டு பேரானந்தத்தை அடையலாம்.

இதன் விலை ரூபா 1—8—0

ஆனந்தபோதினி சந்தாதாரர்களுக்கு விலை ரூபா 1.

## தமிழ் மெட்டீரியா மெடிக்கா

என்னும் அருமையான வைத்திய நூல்

## MATERIA MEDICA

இவ்வரிய பெரிய வைத்திய புஸ்தகமானது ஆங்கில மருந்துக் கலப்பு விவர முறைகளைத் தமிழில் விளக்கமாக உள்ளங்கை நெல்லிக்கனிபோல் நன்கு விளக்குவது. இன்னின்ன நோய்க்கு இன்னின்ன விதமாக மருந்துகளைச் சேர்த்து மிக்சர் (Mixture) முதலானவை செய்து சாப்பிடவேண்டுமென்பதை இந்நூல் நன்குகக் கூறுகின்றமையால் இதை ஓர் ‘ஆபத்துக் குதவும் தோழன்’ என்று அனைவரும் நம்பலாம். இது வைத்திய அனுபவம் மிகப் பெரிதும் உடைய ஒருவரால் எழுதப்பட்டது. ஒவ்வொருவரும் தங்களுக்குத் தாங்களே கூடிய வரையில் நோய்களுக்குப் பரிகாரம் செய்து கொள்ளவும் இந்நூல் மிகவும் உபயோகப்படும். இதன் விலை ரூபா 3.

---

ஆனந்தபோதினி ஆபீஸ், மதராஸ்.

புதிய நாவல்! பெருகும் ஆவல்!!

# சற்குணவல்லி

அல்லது

# சித்தூர் இளைய ஜமீன்தாரணி.

(ஸ்ரீ. எஸ். எஸ். அருணகிரிநாதர் எழுதியது)

இதில் தர்மசீலன் என்னும் கதாநாயகன் முதலில் ஆனந்தசுந்தரி என்னும் மாதை மணக்கிறான். இவளோ கணவனை மதியாத மாபாதகி, சிற்றின்ப ஆனந்தத்தையே மதித்து அன்னிய ஆடவருடன் அடிக்கடி உறவாடு கொடு சீலியாகி கொண்டவனை விட்டு கண்டவனுடன் திடீரென்று மறைந்து விட்டாள். தர்மசீலன் மிகவும் யோக்கியன். பிறகு அவன் மேல் காதல் கொண்ட கோமளஸ்வரி சற்குணவல்லி என்னும் சித்தூர் இளைய ஜமீன்தாரணி அவனை உள்ளன்புடன் மணக்கிறாள். இவளோ கற்பின் அணிகலம், பொற்பின் பொற்கொடி, பொறுமையின் பொக்கிஷம், நிறையுடைமை நங்கை, வீரத் தெய்வம். கணவனைக் கடவுளென மதித்தவள். தர்மசீலன் முதல் மனைவியைக் கொன்றுவிட்டு மறு மணம் செய்துகொண்டான் என்னும் அபாண்டமான பழி, சந்தர்ப்ப சாக்ஷியங்களால் அவனைப் பலவித பரிசோதனைகட்கும், ஆபத்துகளுக்கும் உட்படுத்திற்று. இருந்தாலும் சற்குணவல்லி அவன் மீது வைத்த பிரியம் மாறவில்லை. கடைசியில் ஆனந்தசுந்தரி திடீரென்று ஒரு நாள் தோன்றி தன் நடக்கைக்குத் தக்க தண்டனையைத் தானே ஏற்று தன் கணவன் மீது சுமத்தப்பட்ட வீண் பழியை விளக்கி, ஆவி நீத்தாள். இதில் இருவித மாதர் நடத்தை விளக்கப்பட்டிருப்பதோடு பலவித நீதிகள் தெள்ளிய எளிய இனிய நடையில் படிப்போர் மனதைப் பரவசப்படுத்தும்படி எழுதப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு ஆடவரும் பெண்டிரும் இதை வாசித்து இருமைப் பயனைத் தேடி இன்புறுவார்களாக.

இதன் விலை ரூபா 1—8—0.

ஆனந்தபோதினி சந்தாதாரர்களுக்கு 31-8-34-வரை விலை ரூபா 1—0—0.

# கைவல்ய நவநீத வசனம்.

ஸ்ரீமான் ஆரணி-குப்புசாமி முதலியார் அவர்கள் எழுதியது.

ஆன்மாக்கள், மாயையினின்றும் விடுபட்டு மோக்ஷசாதனத்தை அடையும் பொருட்டுக் கருணாநிதியாகிய கடவுள் அருளிய வேதத்தின் உட்பொருளைத் தழுவிப் பல மகான்கள் பல நூற்களை இயற்றி யிருக்கின்றனர். அவற்றுள் தாண்டவராய சுவாமிகள் இயற்றிய கைவல்ய நவநீதமும் ஒன்று. இதன் நடை செய்யுளாகவும் மிகவும் கடினமாயிருப்பதால் எவரும் எளிதில் வாசித்துணரும்படி இதை வசனமாக எழுதி வெளியிடப்பட்டிருக்கிறது. இதனால் முத்தி மார்க்கத்தை எவரும் நன்குணரலாம். விலை ரூபா 1—8—0.

ஆனந்தபோதினி சந்தாதாரர்களுக்கு 30-6-34 வரை விலை ரூ. 1—2—9

---

ஆனந்தபோதினி ஆபீஸ், தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.

# சந்திரசேகரி.

## (இரண்டாம் பதிப்பு)

எளிய இனிய நடையில் எழுதப்பட்டது. உலகானுபவமும் இலக்கண அறிவும் விசேஷமாகக் கொண்டது; அன்பின் மகிமை, பொறுமையின் பெருமை, கேடு நினைப்போர் கெடுவர், கடவுளை நம்பினோர் கைவிடப்படார் முதலிய பல அரிய விஷயங்கள் இதில் விளக்கமாகவும் படிப்போர் மனதைக் கவரக்கூடியதாகவும் எழுதப்பட்டிருக்கிறது. அறிவை விருத்திசெய்யக்கூடிய நாவல் இதுவே.

இதன் விலை ரூபா 1—4—0

ஆனந்தபோதினி சந்தாதாரர்களுக்கு 31-3-34 வரை விலை ரூ. 1.

# ஞானகாந்தி

கற்பின் ஜோதியாக விளங்கும் ஞானகாந்தி என்னும் இக்கதா நாயகியின் பதிபக்தி, அறிவு, ஆற்றல், பொறுமை, தன்னடக்கம், பிறர் துயரங் கண்டிரங்கல், பரோபகாரம் முதலியவை பல அத்தாட்சிகளோடு அனைவரும் படித்து ஆனந்திக்குமாறு வரையப்பட்டிருக்கின்றன. இதற்கு எல்லாவிதத்திலும் நேர் மாறான நடத்தையுள்ள அம்புஜம் என்னும் ஸ்திரீயின்போக்கு மிகவும் கேவலமாயிருந்தும், கடைசியில் நல்லுணர்வுபெற்று சீர்திருந்தி சாந்தமடைவது எல்லோருக்கும் சிறந்த நீதியைப் போதிக்கும். எளிய இனிய நடையில் எழுதப்பட்டது. அநேக நீதிகளடங்கியது; அறிவு விருத்திக்கு நிகரற்ற ஓர் பொக்கிஷம் என்றே இதைச் சொல்லவேண்டும். புதிய பதிப்பு விலை ரூபா 1–6–0

ஆனந்தபோதினி சந்தாதாரருக்கு 31-8-34 வரை விலை ரூபா 1.

# அன்பானந்தன்

அல்லது

## அருஞ்செல்வன் விழைந்த பெருஞ்செல்வம்

இந்நூலின் கதாநாயகன் பெயரே இந்நூற்கும் பெயராய் அமைந்தது. அன்பானந்தன் என்னும் பெயரால் இரண்டு உண்மைகள் அறியலாகும்; அன்பு, ஆனந்தத்தில் முடிந்து அதனோடு ஒன்றாகி விளங்கும் என்பதொன்று; மற்றொன்று இந்நூல் எந்தப் பாஷையில் எழுதப்பட்டுள்ளதோ, எந்தப் பாஷை நமக்குத் தாய்ப்பாஷையாக வுள்ளதோ, அந்தப் பாஷையின் பெருமை இப்படிப்பட்டதென்பது. தமிழ் என்னும் சொல்லே இனிமை என்று பொருள் படும். அன்பைவிட இனிமையுள்ளது வேறில்லை. இவ்வன்பும் அவ்வினிமையும் கலந்தால் ஆனந்தம் பிறக்கத் தடையென்ன? இந்த ஆனந்தம் தமிழ்ப்பாஷை முழுவதும் நிரம்பியிருக்கிறது என்பதைக் குறிப்பிக்கவே, தமிழ் எழுத்துக்களின் முதலெழுத்தாகிய 'அ' என்பதும், இறுதி எழுத்தாகிய 'ன்' என்பதும் இந்நூற் பெயர்க்கு முதலும் இறுதியுமாக அமைந்தன.

இதன் விலை ரூபா 1-4-0

ஆனந்தபோதினி சந்தாதாரர்களுக்கு 31-8-34 வரை விலை ரூ. 1.

---

**ஆனந்தபோதினி ஆபீஸ்,** தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.

ஓம்
பரப்பிரஹ்மணே நம:

# ஆனந்தபோதினி

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"—திருவள்ளுவர்.

(ALL RIGHTS RESERVED.)

| தொகுதி | பவ௵ ஆனிமீ ௧௳ | பகுதி |
|---|---|---|
| 19 | 1934௵ ஜூன்மீ 15௳ | 12 |

## கடவுள் வணக்கம்.

ஆரண மார்க்கத் தாகம வாசி
அற்புத மாய்நடந் தருளும்
காரண முணர்த்தும் கையுநின் மெய்யும்
கண்கள்மூன் றுடையவென் கண்ணே
பூரண அறிவிற் கண்டிலம் அதனால்
போற்றியிப் புந்தியோ டிருந்து
தாரணி யுள்ள மட்டுமே வணங்கத்
தமியனேன் வேண்டிடத் தகுமே. (1)

இடமொரு மடவாள் உலகனைக் கீந்திட்
டெவ்வுல கத்தையும் ஈன்றும்
தடமுறு மகில மடங்குநாள் அம்மை
தன்னையும் ஒழித்து விண்ணெனவே
படருறு சோதிக் கருணையங் கடலே
பாயிருட் படுகரிற் கிடக்கக்
கடவனோ நினைப்பு மறப்பெனும் திரையைக்
கவர்ந்தெனை வளர்ப்பதுன் கடனே. (2)

அன்றோவா மோவெனவும் சமயகோடி
அத்தனையும் வெவ்வேறு யாற்ற நேரே
நின்றாயே நினைப்பெறுமா றெவ்வா றங்கே
நின்னருள்கொண் டறிவதல்லா னெறிவே றுண்டோ. (3)

துன்பமெனும் இட்டனைத்தும் சூறையிட ஐயாவே
இன்பவெள்ளம் வந்திங் கெதிர்ப்படவும் காண்பேனோ. (4)

# அரும்பொருள் விளக்கம்

1. இதனால் இறைவனை என்றும் வணங்கவேண்டும் என்று விரும்புகின்றார்.

(இ-ள்) முக்கண்களையுடைய எனது கண்ணே! வேத வீதியில் ஆகமமாகிய குதிரையை அற்புதமாய் நடத்தியருளுகின்ற காரணத்தினைத் தெரிவியாநின்ற தேவரீருடைய திருக்கரத்தையும், திருமேனியையும் வியாபக அறிவினிற் கண்டோமில்லை. ஆகையால், உலகத்தில் உள்ளமட்டும் புகழ்ந்து இம்மனநிலையோடு வாழ்ந்து காயத்தால் வணங்கத் தமியேன் விரும்பத் தகும் என்க.

ஒரு இடத்தினைக் கருதிச் செல்லுவானுக்கு வீதியும் குதிரையும் அவசியம் ஆவதுபோல, முதல்வன் திருவடிகளைக் குறித்துச் செல்லுவோருக்கு வேதமும் ஆகமமும் அத்தியாவசியமாதலின் வேதத்தினை வீதியாகவும், ஆகமத்தினைக் குதிரையாகவும் உவமித்துக் கூறினர். காரணமுணர்த்தும் கையாவது சின்முத்திரை.

2. இதனால் தம்மைக் காப்பது இறைவனது கடமை என்று கூறுகின்றார்.

(இ-ள்) இடப்பாகத்தினை ஒப்பற்ற மடவாளாகிய பார்வதிக்குக் கொடுத்துவிட்டு, உலகங்கள் அனைத்தையும் சிருஷ்டித்தும், பெருமை தங்கிய உலகம் அழியுங் காலத்தில் பார்வதியையும் அடக்கிக்கொண்டு ஆகாயம்போல எங்கும் வியாபித்திருக்கிற ஒளிமயமாகிய கிருபா சமுத்திரமே! பரந்த அஞ்ஞான இருள் பொருந்திய பிறவிச் சமுத்திரத்தில் அழுந்தியிருக்கத் தக்கவனோ? நினைப்பு மறப்பு என்னும் திரையைக் கிரகித்துக்கொண்டு அடியேனை வளர்த்து வருவது தேவரீருடைய கடமையாம் என்க.

முதல்வனும் முதல்வியும் குணம்—குணி சம்பந்தமாயுள்ள உண்மையினைச் சகளத் திருமேனியினும் காட்டும்பொருட்டு அம்மையார் விரும்ப இறைவன் தனது இடப் பாகத்தினை ஈந்தனனாகலின், “இடமொரு மடவாள் உலகனைத் தீந்திட்டு” என்றனர். சர்வ சங்கார காலத்தில் எல்லாம் ஒடுங்குகையில் சத்தியும் சிவத்தில் அடங்கி நிற்குமாகலின் “அம்மை தன்னையும் ஒழித்து” என்றனர்.

3. இதனால் இறைவனை அறிதற்கு அவனது திருவருள் வேண்டும் என்கின்றார்.

(இ-ள்) உண்மைப் பொருள் இது அல்லவோ? இதுதானோ என்று எல்லாச் சமயங்களும் வேறு வேறாகப் பிதற்றும்படி அவரவர் கொள்கைக்கு நேரே நின்றனையே. நின்னைப் பெறும் வழி எவ்வழி? அங்கே தேவரீர் திருவருளைக்கொண்டு உணர்வதல்லாமல் அறியும் வழி வேறு உண்டோ? என்க.

4. இதனால் துன்பம் தீரவேண்டும் என்று விரும்புகின்றார்.

(இ-ள்) ஐயனே! துக்கம் என்கின்ற மேடுகளை யெல்லாம் கல்லிக்கொண்டு போம்படி சுகப்பெருக்கு வந்தவிடத்தில் எதிர்ப்படவும் காணப்பெறுவேனோ? என்க.

ஆனந்தபோதினி
பவ ஸூ
ஆனிமீ 1வ

## யாகக் கொலைகள்

வேலியே பயிரை மேய்ந்தமாதிரி இருக்கிறது ஒரு சில வைதிக பிராமணர்களின் செய்கை. சென்ற மாதம் கும்பகோணத்தில் ‘வாஜபேய யாகம்’ என்னும் பேரால் முப்பத்திரண்டு ஆடுகள் சித்திரவதை செய்யப்பட்ட செய்தியை நேயர்கள் பத்திரிகைகளின் வாயிலாகத் தெரிந்திருக்கலாம். பகுத்தறிவு வளர்ந்து நாகரிகம் உச்சநிலை அடைந்திருப்பதாகச் சொல்லப்படும் இவ்விருபதாம் நூற்றாண்டில், பழைய காட்டு மிராண்டி வழக்கங்கட்கு ஒரு சிலர் புத்துயிர் கொடுக்கத் துணிவது வருந்தத்தக்கதாகும். பண்டைக் காலத்தில் ஒரு குறிப்பிட்ட சமூகத்தினர் தங்கள் இஷ்ட சித்திகட்கென்றும் “உலக சுபிட்ச”த்திற்கென்றும் பற்பல விதமான யாகங்களைச் செய்ததாக அறிகிறோம். கோமேதம், அசுவமேதம், அஜமேதம், நரமேதம் முதலிய பெயர்களை வைத்துப் பசுக்களையும், குதிரைகளையும், ஆடுகளையும், மனிதர்களையும் கொன்று யாகம் செய்திருக்கிறார்கள். இத்தகைய யாகங்கள் வேத சம்மதம் பெற்றவை என்று புகழப்பட்டன. அக்காலத்தில் இருந்த அரசர்களும், பொதுஜனங்களும் இந்த யாகங்களை நடத்த ஆதரவு காட்டியதாகவும் சொல்லப்படுகிறது. ஆனால் தமிழ்மக்கட்கு யாகமுறை முற்றிலும் புறம்பானதாகும். ஜீவகாருண்ணிய ஒழுக்கத்தையே தமிழ்மக்கள் தங்கள் வாழ்க்கையின் சிறந்த நோக்கமாகக் கொண்டிருந்தனர். உண்மைச் சைவர்களும், வைஷ்ணவர்களும் இன்றும் ஜீவகாருண்ணிய சீலர்களாய் வாழ்ந்து வருதலை நாம் கண்கூடாகக் கண்டுவருகின்றோம்.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரை பிராமணர்கள் தங்களை உயர் வகுப்பினர் என்று சொல்லிக் கொள்ளுவதற்குரிய முக்கிய ஆதாரமாய் இருப்பது புலால் உண்ணாமையே ஆகும். ஏனைய பல வகுப்பினர் புலாலுண்ணும் காரணத்தாலேயே பிராமணர்களால் இழிவாகக் கருதப்படுகின்றனர். இப்பொழுது யாகக் கொலைகளை ஆதரிக்கும் பிரா

மணர்களின் நிலைமை என்ன என்று கேட்கின்றோம். எல்லாம் பிரம மயமாகக் காணும் உயரிய தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டது அத்வைத சமயம். அச்சமயத்தின் குருவாகிய கும்பகோணம் சங்கராச்சாரிய ஸ்வாமி கோஷ்டியினரே சென்ற மாதம் நடைபெற்ற யாகக் கொலைகட்குக் காரண புருஷர்களாயிருந்தார்கள் என்பதை எண்ணும்போது எமக்கு அளவுகடந்த வருத்தம் உண்டாகிறது. அஹிம்ஸையைப் பரம தருமமாகப் போற்றும் ஸ்ரீசங்கரர் மதம் யாகக் கொலைக்கு எவ்விதம் இடந் தந்தது என்று எமக்கு விளங்கவில்லை.

நாகரிகம் இல்லாத பண்டைக் காலத்தில் ஏற்பட்ட யாக வழக்கம் இக்காலத்தில் போற்றிச் செய்யப்படுவது கேலிக்கூத்தாய் இருக்கிறது. முற்கால ஆரியமக்கள் தங்கள் கோரிக்கைகளைப் பூர்த்தி செய்து வைக்குமாறு இந்திரன் வருணன் முதலிய தெய்வங்களை யாகங்களின் வாயிலாகப் போற்றி வணங்கினர். வெறி தரும் சோம பானமும் செய்தனர். இக்காலத்தில் சித்திரான்னங்கள், பலகார பக்ஷணங்கள், தேங்காய் பழங்கள் முதலியவைகளைத் தெய்வங்கட்குப் படைக்கிறார்கள். அவற்றைப் பிரசாதங்களாக உண்டு களிக்கிறார்கள். சாமானிய மக்கள் தெய்வங்கட்கு ஆடு கோழிகளைப் பலியிட்டு உண்டும், மது வருந்தியும் களிக்கிறார்கள். இங்ஙனம் செய்யும் கருத்து என்ன ! தாங்கள் படைக்கும் வஸ்துக்களை அத் தெய்வங்கள் ஏற்றுக்கொண்டு தங்கள் கோரிக்கைகளை நிறைவேற்றி வைக்கும் என்னும் நம்பிக்கையே அன்றோ ? மக்கள் எவைகளை உயர்வாகக் கருதுகிறார்களோ அவைகளையே தெய்வங்கட்கும் தியாகம் செய்கிறார்கள். இதுபோலவேதான் முற்கால ஆரிய மக்கள் தாங்கள் உயர்வாகக் கருதியவையும், தங்கள் வசம் இருந்தவையுமான ஆடு மாடு குதிரை முதலியவைகளை இந்திரன் முதலிய தேவர்கட்கு யாகங்களின் வாயிலாகக் கொடுத்துத் தங்கள் வாழ்க்கையை வளம் செய்யுமாறு வேண்டிவந்தனர். இந்த யாக வழக்கம் பல நூற்றாண்டுகட்கு முன்னரே வழக்காறற்றுப் போயிற்று என்று கூறலாம். நமது நாட்டில் தோன்றிய பௌத்த-ஜைன மதங்கள் யாகக் கொலைகளை அழுத்தமாகக் கண்டித்திருக்கின்றன. சைவ-வைஷ்ணவ சமயங்களும் இக்கொலைகட்கு ஆக்கம் அளிக்கவில்லை. இதுகாறும் சும்மா இருந்த வைதிகர்கள் இப்பொழுது இச்சித்திரவதைகளைச் செய்ய முனைந்து நிற்கவேண்டிய அவசியம் என்ன நேர்ந்துவிட்டது என்று விளங்கவில்லையே.

புலால் உண்ணலை அருவருக்கும் பிராமணர்கள் யாகத்தின் பேரால் ஆடுகளைக் கொன்று தின்னல் எவ்விதம் நியாயமாகும் ? யாகத்தில் உயிர்களைக்கொன்று தின்னல் சுய நலம் ஆகாது என்றும், உலக க்ஷேமங் கருதி தரும சம்ரக்ஷணார்த்த நிமித்தம் அவ்விதம் செய்வதாகவும் வைதிகர்கள் சமதானம் சொல்ல முன் வரலாம்.



யாகங்களெல்லாம் உலகக்ஷேமங்கருதிச் செய்யப்படுமாயின் மனிதரைக் கொன்று செய்யும் நரமேத யாகத்தையும், பசுக்களைக் கொன்று செய்யும் கோமேத யாகத்தையும், அசுவமேதத்தையும் ஏன் செய்யத் துணியக்கூடாது என்று கேட்கின்றோம். ஆடுகள் மாத்திரம் என்ன பாவம் செய்து விட்டன? ஆடுகளைச் சாதாரணமாய் உண்ணுவதற்குக் கொலைசெய்வது வேறு விஷயம். தூய்மையான கடவுளரின் பேராலும் சாஸ்திரங்களின் பேராலும் வாயில்லாப் பிராணிகளைப் பீஜமர்த்தனம் (விரை நசுக்கல்) செய்து சித்திரவதைக் குட்படுத்தல் தருமமாகும் என்று எள்ளளவேனும் பகுத்தறிவுடையவர்கள் ஒப்புக்கொள்ளுவார்களா? எல்லாப் பிராமணர்களும் யாகக் கொலைகட்கு ஆதரவு காட்டுகிறார்கள் என்று சொல்லிவிட முடியாது. கும்பகோண யாகச் செய்தியைக் கேட்டவுடன் வெட்கித் தலை குனிந்த பிராமணர்களையும், அருவருத்து வெறுத்த பிராமணச் சிரேஷ்டர்களையும் நாம் நேரில் அறிவோம். ஆனால் ஆங்கிலங் கற்று வக்கீல் தொழிலையும், அரசாங்க உத்தியோகங்களையும் மேற்கொண்டுள்ள சில பிராமணர்கள் யாகக் கொலைகட்கு ஆதரவு காட்டி அவை சரி என்று வாதிக்கத் தொடங்கியதாக வெளிவந்த செய்திகளை அறிந்து நாம் ஆச்சரியம் அடைந்தோம். இவர்களுடைய மனப்போக்கே இவ்விதம் இருக்கும்போது பழைய சம்பிரதாயங்களில் பற்றுள்ளம் கொண்டிருக்கும் வைதிகர்களைக் குறைகூற வாயில்லை என்றே நினைக்கவேண்டி யிருக்கிறது.

இப்பொழுதுள்ள கும்பகோணம் காமகோடி பீடம் ஸ்ரீசங்கராச்சாரிய ஸ்வாமிகள் சிறந்த மேதாவிகளாக விளங்குகிறார்கள். சாஸ்திர விசாரணையிலும், தரும சூக்ஷ்மங்களை அறிவதிலும் மிகவும் தேர்ச்சி பெற்றிருக்கிறார்கள். ஒழுக்க சீலராயும் மிளிர்கின்றார்கள். இத்தகைய பெருமை வாய்ந்த ஸ்ரீசங்கராச்சாரிய ஸ்வாமிகள் "வாஜபேய யாக"த்தின் பேரால் முப்பத்திரண்டு ஆடுகளைச் சித்திரவதை செய்ய அநுமதி தந்தது காலத்தின் கோலம் என்றே நினைக்கின்றோம். இப்பொழுது செய்யப்பட்ட யாகம் தரும சம்ரக்ஷணையின் பொருட்டு என்று சொல்லப்படுகிறது. இங்கே சொல்லப்பட்ட தருமம் என்ன என்று நேயர்கள் கேட்கலாம். காந்தியடிகள் தீண்டாமை என்னும் தீமையைப் போக்கி ஆறேழுகோடி தாழ்த்தப்பட்ட மக்களை முன்னேற்ற வேண்டும் என்று அல்லும் பகலும் அரும் பாடுபட்டு வருகிறார். அதற்காகக் கால் நடையாக அகில இந்தியச் சுற்றுப் பிரயாணம் மேற்கொண்டிருப்பதும் எல்லாருக்கும் தெரியும். இந்திய சட்டசபையில் ஆலயப் பிரவேச மசோதாவும், தீண்டாமை விலக்கு மசோதாவும் ஆலோசனையில் இருந்து வருகின்றன. தீண்டாமையை விலக்கித் தாழ்த்தப்பட்ட மக்களை முன்னேற்றும் முயற்சி வைதிகர்கட்குப் பிடிக்கவில்லை. தீண்டாமை விலக்குச் சாஸ்திர விரோதம், சமய விரோதம், தெய்வ விரோதம் என்று எதிர்ப் பிரசாரம் செய்யத் தொடங்கி யிருக்கின்றனர்.

குழந்தைகளை மணம் செய்து கொடுப்பதைத் தடை செய்யும் சாரதாச் சட்டமும் வைதிகர்கட்குப் பிடிக்கவில்லை. அது சட்டமாகி அமுலுக்கு வந்துவிட்ட பின்னும் அதை ஒழித்துவிட வேண்டும் என்று ஆர்ப்பாட்டம் செய்து வருகின்றனர். இப்பொழுது இவர்கள் ஆடுகளைக் கொன்று யாகங்களைச் செய்வதின் மூலம் தீண்டாமையையும், குழந்தை மணங்களையும் நிலைநாட்டிவிடலாம் என்று எண்ணிக்கொண்டிருக்கின்றனர். இவர்களுடைய தரும சம்ரக்ஷணம் என்ன என்பதைத் தமிழ்மக்கள் உணர்ந்துகொள்ள வேண்டும் என்றே இங்கே சிறிது குறிப்பிட விரும்பினோம். யாகம் நடந்துகொண்டிருந்தபோதே ராஜாபகதூர் கிருஷ்ணமாச்சாரியாரை இந்திய சட்டசபைக்குப் பிரதிநிதியாகத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்றும், அவருக்கே எல்லாரும் ஓட்டுக் கொடுக்க வேண்டும் என்றும் எடுத்துக் கூறப்பட்டதாம். எல்லாரும் கரகோஷத்தின் மூலம் அவ்வேண்டுகோளை அங்கீகரித்தனராம். இந்த இடத்தில் ஒரு சிறிய சந்தேகம். தரும சம்ரக்ஷணம் செய்வது யாகமா? இந்திய சட்டசபையா? என்பதே அந்தச் சந்தேகமாகும். யாகமே தரும சம்ரக்ஷணம் செய்துவிடும் என்று உண்மையில் வைதிகர்கள் நம்பிக்கை கொண்டிருந்தால் யாகத்திற்கு விரோதமான வைஷ்ணவ சமயத்தைச் சேர்ந்த ஸ்ரீமான் ராஜாபகதூர் கிருஷ்ணமாச்சாரியாரின் தயவை அவர்கள் நாடவேண்டியது அநாவசியம் அல்லவா என்று கேட்கிறோம். சட்டசபை வாயிலாகத் தரும சம்ரக்ஷணம் செய்து விடலாம் என்று நம்பிக்கையிருந்தால் யாகம் செய்ய வேண்டியதும் அநாவசியமேயாகும்.

கும்பகோணத்தில் யாகம் நடைபெறப் போவதாகச் செய்தி வெளி வந்தவுடன் சென்னையிலும், பிறவிடங்களிலும் கண்டனக் கூட்டங்கள் நடைபெற்றன. அநேக அறிஞர்கள் யாகக் கொலைகளின் கோரத்தன்மையை எடுத்துக் காட்டினர். ஆனால் வைதிகர்கள் பிடிவாதமாய்த் தங்கள் காரியத்தைச் சாதித்துவிட்டனர். யாக சமயத்தில் குழப்பம் விளையக்கூடும் என்று அஞ்சிப் போலீஸாரின் உதவியையும் வைதிகர் நாடினர். சிறு தேவதைகட்கு ஆடு கோழிகளைப் பலியிடும் அநாகரிக வழக்கத்திற்கும் இந்த யாகக் கொலைகட்கும் அணுவளவும் வித்தியாசம் இல்லை என்பதே நமது அபிப்பிராயமாகும். இப்பொழுது கும்பகோணத்தைப் பின்பற்றி அநேக இடங்களில் யாகக் கொலை முயற்சிகள் தீவிரமாய் நடைபெற்று வருகின்றன. செடில் குத்தியாடும் சித்திரவதைக் கொடுமைகளை ஆங்காங்கு தடை செய்து வெற்றி பெற்றதுபோலவே இந்த யாகக் கொலை முயற்சிகளையும் தடை செய்ய வேண்டியது அரசாங்கத்தாரின் நீங்காக் கடமையாகும். தமிழ் மக்கள் இந்த அநாகரிகக் காட்டுமிராண்டி வழக்கத்தை ஒழிக்க முற்படுவார்களாக.

ஓம் தத் ஸத்.

# நேயர்கட்கு ஒரு வேண்டுகோள்.

## 20-வது ஆண்டின் முன்னறிக்கை

நாளிது பவ ஆண்டு ஆடித்திங்கள் 1-ம் தேதி (16-7-34) நமது "ஆனந்தபோதினி" மாத சஞ்சிகைக்கு 20-வது ஆண்டு பிறக்கப் போகிறது. "ஆனந்தபோதினி" பருவத்திற்கேற்ற வளர்ச்சி பெற்றுப் பற்பல சிறப்பியல்புகளுடன் விளங்கி வருவது நேயர்கள் அநுபவத்தில் உணர்ந்துள்ள விஷயமாகும். தமிழ் மக்கட்கு எல்லாத் துறைகளிலும் ஒரு விழிப்பையும் எழுச்சியையும் உண்டாக்கித் தக்க வழிகாட்டியாய் விளங்குவதே "ஆனந்தபோதினி"யின் முதற்பெரு நோக்கம். 20-வது ஆண்டில் இன்னும் குறிப்பிடத்தக்க விசேஷ அம்சங்களுடன் "ஆனந்தபோதினி" உங்கட்கு மகிழ்ச்சிப் பெருக்கை அளிக்கும் என்று தெரிவித்துக் கொள்ளுகின்றோம். ஆகையால் "ஆனந்தபோதினி"யின்பால் அன்பு பூண்டு ஆதரித்துவரும் அன்பர்கள் எல்லாரும் 20-வது ஆண்டின் சந்தாத் தொகையை நாளிது பவஹு ஆனிமீ 27-ம் தேதிக்(11-7-34)குள் மணியார்டர் மூலமாகவோ நேரிலோ எங்கட்குக் கிடைக்கும்படி செய்ய வேண்டுகின்றோம். சந்தாத் தொகையின் பொருட்டு வி. பி. அனுப்புவதால் தபால் செலவு 4-அணா மணியார்டர் கமிஷன் 2-அணா ஆக 6-அணா அதிகச் செலவும் சஞ்சிகை வந்து சேர வீண் காலதாமதமும் ஆகும். ஆகையால் எல்லா நேயர்களும் மேற் குறிப்பிட்ட தேதிக்குள் மணியார்டர் செய்து விடுவதுதான் உங்கட்கும் எங்கட்கும் லாபமும் சௌகரியமும் ஆகும். வி. பி. அனுப்புவதால் இன்னொரு சங்கடமும் உண்டு. அதாவது வி. பி. வந்தால் ஏழு நாளைக்குமேல் தபாலாபீஸில் வைத்திருக்க மாட்டார்கள். அதற்குமேல் இருக்க வேண்டும் என்று விரும்புகின்றவர்கள் நாள் 1-க்கு 2-அணா வீதம் ஸ்டாம்பு வாங்கி ஒட்டி விண்ணப்பித்துக்கொள்ள வேண்டும். அதுவும் பத்து நாட்களுக்குமேல் தபாலாபீஸில் வைத்திருக்க மாட்டார்கள். இந்தச் சங்கடங்களையெல்லாம் நோக்கும்போது அன்பர்கள் எல்லாரும் சந்தாத்தொகையை முன்பணமாக அனுப்பி ஆதரிப்பதே நலம்.

குறிப்பு:—முன் பணம் அனுப்புவோர் பழைய சந்தாதார்களாயிருந்தால் மணியார்டர் கூபனில் தங்களுடைய சந்தா நம்பரைக் குறிப்பிட்டு "20-வது ஆண்டுக்கு" என்று விவரம் எழுதவேண்டும். புதிய சந்தாதார்கள் 'புதிய ஆண்டுக்கு' என்ற விவரம் எழுதவேண்டும்.

மானேஜர்.




# அந்தணரும் மாமிச ஆகார முயற்சியும்

(சித்தூர் பண்டித-பூ. ஸ்ரீநிவாசன்)

பூர்வகாலத்தில் நம் நாட்டில் மாமிச ஆகாரம் பிராம்மணர்களுள்பட யாவராலும் கைக்கொள்ளப்பட்டிருந்தது என்பதை நிரூபிப்பதற்குப் போதிய ஆதாரங்களுண்டு. வசிஷ்டர் அகத்தியர் முதலிய முனிசிரேஷ்டர்களும் மாமிசம் புசித்து வந்தார்கள். இறந்தவர்களுக்காகச் செய்யப்படும் சிரார்த்தங்களில் மாமிசத்தைப் படைத்தல் வெகு முக்கியமானதாகக் கருதப்பட்டு வந்தது. ஆனால், பிற்காலத்தில், அறிவும் நாகரீகமும் வளர வளர, மாமிச ஆகாரம் அனாசாரமாகக் கருதப்படலாயிற்று. அதனால் மாமிசமுண்ணும் வழக்கம் பெரும்பாலோரால் வெறுக்கப்பட்டதோடு, மாமிசமுண்போர் இழிந்தவர்களாகவும் எண்ணப்பட்டனர். "எல்லா உயிர்களும் சர்வேசுவரனுடைய மக்களே. மனிதர்களுக்கு இருப்பதுபோன்றே அவைகளுக்கும் இன்பதுன்ப உணர்ச்சிகள் உண்டு. எலும்பில்லாத உடல்களையுடைய புழு முதலியவைகளும் தங்களுயிருக்கு யாதொரு தீமையும் உண்டாகாதவாறு தங்களைக் காத்துக் கொள்ளல் வேண்டும் என்னும் எண்ணத்தை மிகுதியுமுடையன. தீமை உண்டாகும் என்று தெரிந்தால் தம்மைக் காத்துக்கொள்ளும் நிமித்தம் ஒளிப்பிடம் தேடி ஓடுகின்றன. ஆதலின், மனிதர்களாகிய நாம் அவற்றைக் கொல்லுதல் மிகக் கொடிய பாவம். அவ்வாறு கொலை செய்வோர் பரம பிதாவாகிய பகவானால் தண்டிக்கப்படுவர். ஆகவே அத்தகைய கொலைப் பாதகத்தால் வரும் மாமிசத்தைப் புசித்தலாகாது; புசித்தல் கொடிய பாவம்" என்னும் ஜீவகாருணிய உணர்ச்சி நல்லோரிடையில் நாளுக்கு நாள் பரவலாயிற்று.

பொல்லாப் புழுக்களுக்கும் மிகுந்த நோய்களுக்கும் இருப்பிடமாகவுள்ள மாமிசம் இரத்தம் முதலியவைகளால் ஆக்கப்பட்டுள்ள அசுத்த உடலையறுத்துப் புசிப்போர் அநாகரிகர்களாகவும் அசுத்தர்களாகவும் எண்ணப்பட்டு ஒதுக்கவும் பட்டனர். அவர்களைத் தொடவும் அவர்களோடு இருந்து உண்ணவும் சம்பந்தம் வைத்துக்கொள்ளவும் பிரியப்படாத பெரியோர்கள் அவர்களினின்றும் பிரிந்துகொண்டன ரென்பது ஆச்சரியமல்லவே!

மேற்குலத்தார் என்று எண்ணப்பட்டவர்களுள்ளும் சிலர் தங்களுக்குப் பழக்கமான மாமிச ஆகாரத்தைக் கைவிட மனமில்லாதவர்களா யிருந்தார்கள். ஆதலால், அவர்கள் 'மாமிச ஆகாரம் வேத சம்மதமானதே' என்று கூறத்



துணிந்ததோடு, அதற்குப் பிரமாணங்களாகச் சிற்சில சுலோகங்களையும் நூல்களையும் செய்து, அவை பெரிய மகரிஷிகளால் செய்யப்பட்டவை என்று பிறரை நம்புமாறு செய்வதற்காக, அம்முனிவர்களின் பெயர்களையே அவற்றிற்குக் கிரந்த கர்த்தாக்கள் ஆக்கினர். வேறு சிலர் வாமம் முதலிய இழி மதங்கள் உண்டாக்கி நூல்களையும் அவற்றிற்கேற்ப தயாரித்தனர். 'மதுவருந்தல் மாமிசம் புசித்தல் முதலியவை மோக்ஷத்தையளிக்குஞ் செயல்களாம்' என்று அந்நூல்களில் எழுதி, அவற்றை நிர்ப்பயமாகவும் வெளிப்படையாகவும் அனுஷ்டித்தும் வரலாயினர். வேறு சிலர் 'ஆடு கோழி பன்றி மீன் முதலியவைகளைக் கடவுள் மனித ஆகாரத்திற்காகவே படைத்திருக்கின்றனர். ஆகலின் அவற்றைக் கொல்லுதலும் அவற்றின் மாமிசத்தைப் புசித்தலும் பாவச் செயல்களன்று; கடவுளுக்குப் பிரியமான காரியங்களே' என்று கூறிக் கொண்டு மச்சமாமிசங்களைத் தாராளமாகப் புசிக்க லாயினர்.

வேறு சிலர், தங்கள் இனத்தோர் பலரால் வெறுத்து ஒதுக்கப்பட்ட மாமிச ஆகாரத்தை விட மனமில்லாதவர்களா யிருந்தும், அவர்களால் தாங்கள் இழிந்தவர்களாகக் கருதப்படப் பிரியப்படாதவர்களாக மாமிச உணவைக் கைவிட்டவர்களாகலின், அவ்வுணவின்மேல் அந்தரங்கத்தில் மிக்க பற்றுடையவர்களாகவே யிருந்து வந்தார்கள். அதனால் அவர்கள் மீண்டும் அவ்வுணவைப் பகிரங்கமாகக் கைக்கொள்வதற்கேற்ற வழியைத் தேடிக்கொண்டிருந்தார்கள். அதனையறிந்த பெரியோர் பலர் 'இதற்கு யாதேனும் தக்க உபாயம் கண்டறியாவிடின் அவர்கள் விபரீத புத்தியடைந்துவிடுவார்கள். ஒட்டுவாரொட்டி நோய்போல் அவ்விபரீத செய்கை எல்லோரிடத்தும் பரவிவிடும். மீண்டும் பழைய நிலைக்கே யாவரும் திரும்பிவிடுவார்கள்' என்று கண்டு அதனைத் தடுக்க ஓர் உபாயம் தேடலானார்கள். 'யாகங்கள் செய்து அந்த யாகங்களில் பலியாக ஆடு முதலியவற்றைக் கொன்று அவற்றின் மாமிசங்களைப் புசிக்கலாம். அப்படி யாகம் செய்யுங்காலத்தில் கொல்லப்படும் ஆடு முதலியவைகள் மந்திர பூர்வகமாகக் கொல்லப்பட்டு அக்கினியில் ஆகுதி செய்யப்படுதலால் அந்த மிருகங்கள் சுவர்க்கத்தை யடையும். அந்த யாகத்தைச் செய்தவர்களும் சுவர்க்கத்தை யடைவார்கள்' என்று அதற்கேற்ற மந்திரங்களையும் எழுதிச் சாஸ்திரங்களில் சேர்த்ததுமன்றிப் புதிதாகவும் சில நூல்களைச் சாஸ்திரங்களாக எழுதி வைத்துவிட்டார்கள். தாங்களும் அப்படிச் செய்தும் காட்டினார்கள். மாமிசப் பிரியர்களாகிய மற்றவர்களும் இதுவே தக்க சமயம் என்று அதில் கலந்துகொண்டு அடிக்கடி யாகங்களின் பெயரால் மாமிசங்களைப் புசிக்கவாரம்பித்தார்கள். இதுவே யாகங்களில் ஜீவவதை செய்வதன் வரலாறாகும். ஆனால்,

அவ்வாறு யாகங்களில் ஜீவவதையை விதித்த பெரியோர்களின் உண்மையான நோக்கம் யாது? எனில்; எப்படியேனும் ஜீவவதையை நீக்கவேண்டும் என்பதேயாகும். யாகத்தின் மூலமாகப் புசிக்கலாம் என்று விதி ஏற்படுத்தியிருத்தலால் இவ்வுண்மை எளிதில் உணரப்படுகின்றது. எப்படியெனில்; யாகம் தினந்தோறும் ஒருவரால் செய்யப்படத் தக்கதல்ல. ஒரு யாகம் செய்யவேண்டுமானால் அதற்கு மிகுந்த திரவியம்வேண்டும். அவ்வளவு பணத்தைச் செலவிட்டு யாகம் செய்வது சுலபசாத்தியமான காரியமல்ல. ஓராண்டுக்கொரு முறையோ ஈராண்டிற் கொருமுறையோதான் அப்படிச் செய்வது சாத்தியமாகும். ஆகலின், உயிர்க்கொலை அடிக்கடி நேரிடுவதற்கு வழியில்லாமற்

போய்விடும் என்பது திண்ணம். இந்த நோக்கத்தைக் கொண்டே சில அறிஞர்கள் யாகங்களில் பலியிடுவதை அனுமதித்ததுமன்றி, "யாகத்தின் வாயிலாக அல்லாமல் வேறு வகையில் தமது உணவிற்கென்று பிராணிகளை வதைத்து உண்ணலாகாது: அவ்வாறு உண்போர் கொலைப் பாதகர்களும் சண்டாளர்களும் ஆவார்கள். ஆகலின் அவர்கள் மனித சமூகத்தில் மிகவும் இழிந்தவர்களாகக் கருதப்படுவார்கள்" என்னும் விதிகளையும் அனுஷ்டானத்தில் கொண்டுவந்தார்கள்.

"தினமும் மண்துகர் பிள்ளைநோய்க் கிரங்கியே,
திம்பண்ட மெதிர் காட்டிக்
கனமருந்துகள் ஒளித்துவைத் தழைக்கின்ற
கருணைநல் தாய்போல,
மனைய றங்கள்செய் மகங்கள்செய் நன்றென்று
மலர்ந்த வாசகஞ் சொல்லும்
நினைவு வேறுகாண் சுவர்க்கக்கா மிகளந்த
திண்ணயம் தெரியாரே."
"போக மாருயிர் கண்டதை யுண்பதும்
புணர்வது மியல்பே காண்
ஆக மங்களும் சுபாவத்தை விதிக்குமோ?
அத்தனை தெரியாதோ!
காகமே கறுத்திடு நெருப்பே சுடு
கசந்திடு வேம்பே நீ
வேக வாயுவே அசையென ஒருவரும்
விதித்திடல் வேண்டாவே."
"கள்ளும் ஊனும்நீ விரும்பினல் மகங்கள்செய்
காமத்தில் மணதானல்
கொள்ளும் பெண்டொடு கலவிசெய் எனிலிவன்
குறையெலாம் தொடா னென்றே
தள்ளும் வேதத்தின் சம்மதம் சகலமும்
தவிர்வதே கருத்தாகும்
விள்ளும் இவ்விதி என்னெனில் பூருவ
நியமமாம் விதி யன்றே."
"மதுவி றைச்சிகள் உண்ணென்ற சுருதிபின்
'மணந்துபார்' எனல் பாராய்."

"தினமும் மண்ணைத் தின்னும் பிள்ளைக்கு மனமிரங்கி மருந்தையுள்வைத்து வெல்லத்தை வெளிகருக் காட்டி அழைக்கும் கருணையுள்ள தாயைப்போல, 'இல்லத்திற்குரிய கிரியைகளைச் செய், யாகங்களைச் செய்' என்று



வேதம் விளம்புகின்றது. ஆனல், வேதத்தின் கருத்து இதுவல்ல. பலர் அவ்வேதத்தின் கருத்தை அறிவதில்லை. ஐம்புலன்களாலும் போகத்தை உண்பது உயிர்களுக்கு இயல்பாயிருக்க அதனையே வேதமானது சொல்லுமோ? சுபாவத்திற்குச் சட்டமும் வேண்டுமோ? 'காகமே நீ கறுப்பாக இரு. நெருப்பே! நீ சுடு.' என்று சட்டம் ஏற்படுத்துவார் உண்டோ? இல்லையே. ஆதலால், 'கள்ளும் மாமிசமும் உண்ண விரும்பினல் யாகங்கள் செய்து அங்கே சாப்பிடு' என்றால், அக்கட்டளைக்குப் பயந்து தினந்தோறும் நினைத்த பொழுதெல்லாம் சாப்பிடும் பழக்கத்தை ஒழித்திடுவான் என்பதே வேதத்தின் கருத்தாகும். ஆகவே, மாமிச ஆகாரத்தை ஒழித்தல் வேண்டுமென்பது வேதத்தின் அபிப்பிராயமே தவிர, யாகஞ் செய்யவேண்டுமென்பது அபிப்பிராயமல்ல. 'மாமிசம் புசிப்பதில் இச்சையுண்டானல் யாகஸ்தலத்தில் புசி' என்ற வேதம், பிறகு, 'யாகஸ்தலத்திலும் மாமிசத்தைப் புசியாமல் அதனை மோந்து பார்த்தல் மாத்திரம் செய்வாயாயின் வெகுகாலம் சுவர்க்க போகங்களை அனுபவிப்பாய்' என்று விதித்திருப்பதையும் ஆலோசித்துப் பார்" என்று கைவல்லிய நவநீதம் கூறுவதை யாராயுமிடத்து, யாகங்கள் மாமிச வுணவில் பிரியமுள்ளவர்களை ஓர் வரம்பிற் குட்படுத்துவதன் வாயிலாக மாமிச உணவைத் தடுக்க வேண்டியதற்காகவும் ஜீவகாருணியவொழுக்கத்தைப் பரவச் செய்வதற்காகவுமே ஏற்படுத்தப்பட்டன வென்பது வெள்ளிடை மலைபோல் விளங்குகின்றதல்லவா? அதன் பின்னர்,

'யாகங்களிலும் உயிர்க்கொலை கூடாது என்று அதனையும் நீங்கும் பொருட்டு வேறொரு உபாயத்தால் தடுக்கலாயினர்பெரியோர். 'யாகத்தில் கொல்லப்பட்ட ஆடானது சுவர்க்கத்தில் இரும்புக் கொம்புகளுடையதாயிருக்கும்; யாகத்தைச் செய்தவன் சுவர்க்கத்தை யடையும்பொழுது அவ்வாடு தன் இருப்புக் கொம்புகளால் அவன் வயிற்றைக் குத்திக் கிழிக்கும்" என்று ஓர் கதையைக் காட்டி, அதன் வாயிலாக யாகம் செய்வதன் இழிவை விளக்கி, "யாகம் செய்தல் பெரிய பாபச் செயலாகும்; ஆகலின், யாகத்தை முன்னிட்டும் உயிர்க்கொலை புரியலாகாது" என்று விலக்கு ஏற்படுத்தி மறுத்திருக்கின்றனர். இவ்வுண்மை,

"அயமகத்தினில் அரச! நீ படுத்த அம்மறிகள்
செயிர் தழைந்து கண்தீயுக வரவு பார்த்திருக்கும்
பயில் விசும்பு செல்காலையில் வெகுவரம் பாய்ந்து
வயிறு போகும் வல்இருப்பின் ஒன்மருப்பினின் மாதோ."
"படுத்திடும் மறிகள் வேள்வி புரிந்தவன் பனிவிசும்பில்
அடுத்திடும் காலம் நோக்கி அழல்விழி யொழுகப் பாய்ந்து
வடித்த காரிருப்பில் செய்த மருப்பினல் வயிறு போழ்ந்தது
எடுத்து நாம் உரைக்கக்கேட்டி இறைவ! என்றுரைக்க லுற்றான்."

என்று பாகவதம் நான்காவது ஸ்கந்தத்தில், பிராச்சீனபாரிசி ஆவிர்த்தானனுக்கு நாரதமுனிவர் கூறியதாகவுள்ள செய்யுட்களால் தெளிவாம்.

எனவே, மாமிச ஆகாரத்தில் விருப்பங் கொண்டவர்களுக்காகவே யாகத்தில் பலிகள் ஏற்படுத்தப்பட்டன வென்றும், அந்த ஆகாரத்தைப் படிப்படியாக விடவேண்டு மென்பதற்காகவே இவ்விதி யமைக்கப்பட்டதென்

னும், உண்பதினும் மோந்து பார்ப்பது மாத்திரம் செய்வோர் சுவர்க்கத்தில் நீண்டகாலம் பெரும் போகங்களை அநுபவிப்பர் எனக் கூறப்பட்டிருப்பதிலிருந்தும் இது விளங்குகின்றதென்றும், முடிவாக யாகத்தில் உயிர்க்கொலை புரிதல் கொடும் பாவமே யாகும். அவ்வாறு யாகத்தில் கொல்லப்பட்ட ஆடானது இரும்புக்கொம்புகளை யுடையதாய் யாககர்த்தா சுவர்க்கத்திற்கு வருவதை எதிர் பார்த்திருந்து அவன் வந்தவுடன் கொம்புகளால் குத்தி வயிற்றைக் கிழிக்குமென்று கூறி யிருப்பதிலிருந்து யாகபலி நன்மைக்குப் பதிலாக தீமையே பயக்குமென்றும் முன்னோர் அபிப்பிராயம் கொண்டிருந்தனர் என்பது உள்ளங்கை நெல்லிக்கனியாம்.

இவ்வுண்மையை அறிந்தும் மாமிசச் சாப்பாட்டின் மேலுள்ள ஆசையினாலோ அல்லது அறியாமையினாலோ அந்தணர் என்னப்படுவோர் பலர் யாகபலியை அங்கீகரித்து அநுஷ்டிக்கலாயினர். ஆகவே, யார் எப்போது யாகம் செய்கின்றனரோ அவர் அப்போது மாமிச ஆகாரத்தினிமித்தமே அந்த யாகத்தைச் செய்கின்றனர் என்பது கூறாமலே விளங்கும்.

காஞ்சிபுரம் கும்பகோணம் முதலிய இடங்களில் அந்தணர் என்றும் பிராம்மணர் என்றும் தங்களைச் சொல்லிக் கொள்வோர் பலர்,

“அந்தணர் என்போர் அறவோர் மற்றெவ்வுயிர்க்கும்
செந்தண்மை பூண்டொழுக லான்.”

“பிரஹ்மஞான முணர்ந்தவனே பிராம்மணன்.”

என்னும் உண்மைகளை அறவே மறந்து, துடிக்கத் துடிக்கப் பல ஆடுகளைத் தம் கைகளால் சித்திரவதை செய்து கொன்று யாகத்தின் பெயரால் ஆட்டுக்கறியை அவாவுடன் தின்ற செய்தி உலக மறியும். நாள் பல கழியவில்லை. இப்போது மறுபடியும் அந்த மாமிச ஆசை அவர்கள் உள்ளத்தில் உதித்து விட்டது போலும். அதனால் மறுபடியும் யாகத்தின் மூலமாக மாமிசம் புசிக்க விரும்பி விட்டார்கள் போலும். சமீபத்தில் கும்பகோணத்திலும் காட்பாடியிலும் யாகங்கள் செய்யப் போகிறார்களாம். எத்தனை ஆடுகளைக் கொன்று தின்னப் போகிறார்களோ! எப்படியும் ஐம்பது ஆடுகளேனும் சுவர்க்கத்திற்கு அனுப்பப்படும் என்பதில் ஐயமில்லை. மற்ற கொலைகளினும் யாகக்கொலையில் ஓர் விசேஷமுண்டு. மற்ற கொலைகள் பிராணிகளுக்குப் பெருந் துன்பத்தை விளைப்பதில்லை. ஒரே வெட்டில் அவற்றை வெட்டி விடுவார்கள். யாகக் கொலை அத்தகைய தல்ல. தலையும் கால்களும் சிலரால் உறுதியாகப் பிடித்துக் கொள்ளப்படும். அந்த நிலைமையில் சிலர் அவற்றின் பீஜத்தைப் பிசைந்து கதறக்கதற கொல்வார்கள். அந்தோ! அப்போது அந்த ஜீவன் என்ன பாடுபடும்! நினைக்கினும் உள்ளமும் உடலும் பதைக்கின்றனவே! அந்தக் காரியத்தைச் செய்வோர் கண்களால் பார்த்துக் கொண்டிருந்தும் சிறிதும் இரக்கமின்றிச் செய்கின்றனரே! அவாகள் மனமென்ன கல்லா? இரும்பா? இது அந்தணர் செய்கையா? அரக்கர் செய்கையா? உடம்பில் எங்கேனும் புண்ணுடையதாகவோ நொண்டியான தாகவோ நடக்கச் சக்தியற்ற தாகவோ இருக்கும் மாட்டையோ குதிரையையோ வண்டியில் பூட்டி யோட்டுவோரை தண்டிக்கும் காருண்ய அரசாங்கத்தார் இக்கொடிய ராட்சதச் செயலை எவ்வாறு அநுமதித் திருக்கின்றார்களோ? அறியோம்! மதசம்பந்தமான காரியம் என்பதால் நமக்கென்னவென்று சும்மா இருக்கின்றனர் போலும். உண்மையில்



மதத்தோடு சிறிதும் சம்பந்தப் படாத இக் கொடுஞ் செயலை மதத்தின் பெயரால் நடத்துவோரை மதத்திற்கு நன்மை செய்வோர் என்பதா? தீமை செய்வோர் என்பதா?

இவர்களைப் போலவே மகமதியர்கள் ‘தங்கள் கடவுளின் பெயரைச் சொல்லிக் கொல்வதால் அந்த ஜீவன்கள் மோட்ச மடைகின்றன’ வென்று சொல்லுகின்றார்கள். காளி காட்டேரி கூளி முதலிய தேவதைகளுக்கு ஆடு கோழிகளைப் பலி யிடுவோரும் அவ் ஆடு கோழிகள் மோட்சத்திற்குப் போகின்றன என்று நம்பியே கொல்லுகின்றார்கள். அவர்களை இவ் வந்தணர் எனப்படுவோர் இழிவாகப் பேசுகிறதற்கு என்ன நியாயம் இருக்கின்றது? என்று கேட்கின்றோம். மாமிச மூண்ண இச்சை யிருந்தால் நாடோறும் கடைகளில் வாங்கித் தாராளமாகப் புசிக்கலாமே. யார் தடுத்தார்கள்? அதற்காக மதத்தின் பெயரைச் சொல்லிக்கொண்டு இக்கொலைப்பாதகத் தொழிலைச் செய்து மாமிசம் புசிக்க வேண்டுமா?

“இக்கொலைப் பாதக யாகத்தைக் குறித்து சங்கராசாரிய சுவாமிகளுக்குத் தெரிவித்து தடை செய்யுமாறு கேட்டுக்கொள்ள வேண்டும்” என்று சில பெரியோர்கள் ஓர் கூட்டத்தில் தீர்மானம் செய்ததாக ‘தமிழ்நாடு’ பத்திரிகையில் ஓர் விஷயம் வெளியா யிருந்தது. இது வெகு வேடிக்கைதான். சங்கராசாரியாருக்கு இவ்விஷயம் தெரியாமலா இருக்கின்றது? “மாமிசக் கடைகளில் கணக்கற்ற ஆடுகளைக் கொல்கின்றார்களே! அவர்களைத் தடுக்காமல் யாகத்தில் மாத்திரம் கொலையைத் தடுக்க வந்து விட்டார்களே. யாகக் கொலை குற்றமல்ல” என்று ஓர் சங்கராசாரிய சுவாமிகள் சென்னையில் திருவாய் மலர்ந்ததை யாரும் மறந்திருக்க மாட்டார்களே. அங்ஙனமாக, அவரிடம் விண்ணப்பித்துக் கொள்வதாற் பயன் யாது! ‘உண்மையில் உறங்குவோரை எழுப்பலாம்; விழித்துக்கொண்டே உறங்குவோர்போல் இருப்போரை எழுப்புவது எப்படி?’

அடிக்கடி யாகம் யாகம் என்று சொல்லிக்கொண்டு மாமிச இச்சையைத் தீர்த்துக்கொள்ளத் தலைப்பட்ட இவர்கள், இனி, மெல்ல மெல்ல சிரார்த்த தினங்களில் மாமிசத்திற்குப்பதிலாக வேறு பொருள்களை உபயோகித்து வரும் பழக்கத்தையும் விட்டு, பழைய படியே மாமிசத்தையே உபயோகிக்கவும் ஆரம்பிப்பார்கள் போலும். இக்கொடுஞ் செயலைக் கண்டிக்காத பத்திரிகைளில்லை. கிராமவாசிகளும் பட்டணவாசிகளும் பண்டிதர்களும் பாமரர்களும் ஆகிய யாவருமே வெறுத்துத் தூற்றிக்கொண் டிருக்கிறார்கள். யார் எப்படிப் பழித்தால் என்ன! கருமமே கண்ணாயினர் அதனைக் கவனிப்பரோ! ஆசை வெட்கம் அறியுமோ! இனியேனும், யாகத்தை அநுமதிப்பதாகச் சொல்லிக் கொள்ளும் சாஸ்திரங்களைக் கிழித்து ஆட்டுக்குப் பதிலாக யாகத் தீயில் போட்டெரித்து விட்டு,

“அவிசொரிந் தாயிரம் வேட்டலின் ஒன்றன்
உயிர்செகுத் துண்ணாமை நன்று.”

என்னும் உண்மையை யுபதேசிக்கும் தமிழ்மறையைக் கைக்கொண்டு ஒழுகுவார்களாயின், இவர்கள் சுகமடைவார்கள். இன்றேல் சுவர்க்கத்திலோ எமலோகத்திலோ ஆட்டின் கொம்புகளால் குத்துண்டு அலறிக் கதறித் துடித்து அழிவார்கள் என்பது திண்ணம்.

“முற்பகல் செய்யிற் பிற்பகல் விளையும்.”

# வில்லிபாரதச் செய்யுளாராய்ச்சி

(பண்டித. ரா. திம்மப்பய்யர்.)

யோகப் பயிற்சி விடயமாக நம் வில்லிபுத்தூராழ்வார் தமது பெருங்காப்பியத்தி னிடையே ஆங்காங்கு மிக அரிய விடயங்களை யுணர்த்திச் செல்வர். உதாரணமாக பாசுரம் ஒன்றை யீண்டெடுத்துக் காட்டுதும்

வில்லுக் கொருவனென உலகெங்கும் பரவும் புகழ்பெற்ற பாண்டு புத்திரனாகிய அர்ச்சுனன் சிவபாஞ் சுடரைக் குறித்துப் பகைவெல்லப் பாசுபதம் பெறற் பொருட்டுத் தவங்கிடந்தகாலை அவனது யோக நிலையைப் பற்றி,

"அங்கியா லங்கியை வெதுப்பி வெம்மையைப்
பொங்கிய வாயுவாற் போக்கி மெய்சிரந்
தங்கிய வமுதினாற் றண்மெ னும்படி
யிங்கிதத் தொடுக்கின னிதயந் தன்னையே."

என நம் கவிஞர் பெருமான் யோகப்பயிற்சியின் ஆழ்ந்த விடயங்களைச் செவ்வனே சில தொடர்களி லடக்கி விளங்க வைக்குந்திறம் பாராட்டற் பாலதாம்.

இனி, இப் பாசுரத்தி லடங்கிய விசேட விடயங்களை விளக்கி யெழுதுவாம்.

(பொழிப்புரை) (அருச்சுனன் மேலெழுகின்ற உடம்பிலுள்ள பிராணவாயுவினால் (இருதய கமலத்தில் சஞ்சரிக்கின்ற) அக்னியை மேலே எழுப்பி, (அவ்வக்கினியின்) வெப்பத்தை அங்ஙனம் மேலெழுந்த வாயுவை அடக்குவதனால் ஒழித்து, உடம்பில் உத்தம அங்கமாகிய சிரசிலே தங்கியுள்ள அமிருதத்தினால் குளிர்ச்சி யடையும்படி மனத்தை இனிமையாக (தியானத்தில்) ஒடுங்கச் செய்தான்.)

இந்திரியங்களை யொடுக்கி இடைகலையால் வாயுவை இரேசித்துப் பதினாறு மாத்திரை யளவு பூரித்து, அறுபத்துநான்கு மாத்திரை யளவு கும்பித்த அவ்வாயுவைப் பிங்கலையால் அறுபது மாத்திரை யளவு இரேசித்துச் சுழுமுனையிற் செலுத்த வேண்டுதலாலும், அக்கினி மண்டலமாகிய உடல மத்தியிலுள்ள அக்னியை வன்னி பீசத்தால் தோய்தலாலும், நாசி நுனியாகிய சந்திரமண்டலத்தின் வழியே ஆறுதாரங்களையுந் தரிசித்துச் சிந்துகின்ற அமுதத்தைப் பருக வேண்டுதலாலும் இங்ஙனங் கூறினர்.



சுழுமுனை, இடை, பிங்கலை யென்பன தசநாடிகளிற் சேர்ந்தவை. இவற்றில் சுழுமுனை—மூலாதாரம், சுவாதிஷ்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆஜ்ஞை என்கிற ஆறுதாரங்களுக்கும் இடமான குதம், குய்யம், நாபி, இதயம், அடிநா, நெற்றி என்னும் ஆறு இடங்களிலும் ஊடுருவி நிற்பதொரு நாடி. இடை, பிங்கலை யென்பன—கத்திரிகைக் கால்போல ஒன்றோடொன்று பின்னி நிற்கும் இரண்டு நாடிகள். இடைகலை—இட மூக்கால் வரும் சுவாசம். வல மூக்கால் வரும் சுவாசம்—பிங்கலை. மூச்சை வெளிவிடுதல்—இரேசகம். உள்வாங்குதல்—பூரகம். கும்பகம்—பிராணவாயுவைச் சமப்படுத்தி அடக்கல்.

சிரத்தில் பிங்கலை இடை நாடிகளுக்கு நடுவே புருவ மத்தியிலே அமிருதம் சிந்தும். சமாதியிலிருந்து இதய புண்டரீகத்தைத் திரும்பச் செய்து அங்கிருந்து மேன் முகமாக எழுகிற சோதியினாற் பிரம கபாலத்தினின்று பெருகுகிற அமுதத்தையே உணவாகக் கொண்டு கடவுட்பேற்றை யெய்தும் யோகியரும் உளர். இதனை 'இன்னமுதம் வைத்து விளைத்திடுவார்க்கும்' எனக் கம்பர் 'ஏரெழுபது' என்னும் நூலிற் குறிப்பிட் டிருத்தலை யுணர்க.

அங்கி—அங்கத்து உள்ளது; ஈண்டுப் பிராண வாயுவை யுணர்த்தி நின்றது. இங்கிதத்து—பாவனையில் என்றுமாம். இதயம்—ஹ்ருதயம் என்னும் வடமொழித்திரிபு.

"கிளர்ந்த காலினா லங்கியை நிமிர்த்துமேற் கிடைத்து
வளர்ந்த பிங்கலை யிடைநடு வழியுகு மதியின்
விளைந்த வின்னமு துண்டுநம் விடையவன் வடிவங்
குளந்தனிற் குறித்தவ னுருக் கொண்டவ ரிவர்காண்"

என்னுந் திருவிளையாடற் புராணச் செய்யுள், இக்கவியின் கருத்தை யொட்டியிருத்த னோக்குக.

'சகமார்க்கம் புலனொடுக்கித் தடுத்துவளி யிரண்டுஞ் சலிப்புற்று முச்சதுர முதலாதாரங்க, ளகமார்க்க மறிந்தவற்றினரும் பொருள்க ளுணர்ந்தங் கணைந்து போய் மேலேறியலர் மதிமண்டலத்தின் முகமார்க்க வமுதுடல முட்டத் தேக்கி முழுச்சோதி நினைந்திருத்தன் முதலாக வினைக, ளுகமார்க்க வட்டாங்க யோகமுற்று, முழுத்தலுழந்தவர் சிவத்தி னுருவத்தைப் பெறுவர்" என்னுஞ் சிவஞான சித்தியார்ப் பாட்டும் அதனுரையான 'தோழமார்க்கமாகிய யோகநெறிப் பயிற்சியாவது யாதெனின், கீழ்நோக்கிச் செல்லும் வாயுவையும் மேல்நோக்கிச் செல்லும் வாயுவையும் அடக்கி, சுழுமுனை மார்க்கத்தில் பிராணவாயுவைச் செல்லும்படி நிறுத்தி, மனதைத் விடயங்களில் செல்ல வொட்டாது திருப்பி முக்கோணம் சதுரம் முதலிய அடையாளங்களையுடைய மூலாதாரம், சுவாதிட்டான முதலிய ஆறுதாரங்களிலுள்ள உயிர், மெய் என்னும் இருவகை யக்

ரங்களின் சிரமத்தையு முணர்ந்து, அவ்வாதாரங்களின் அரிய அதிதேவதைகளைத் தியானித்து, அவ்வாறாதாரங்களிலும் சிவனை வெளிப்படுத்துவதாக நிற்கும் இச்சாசத்தி சிவசொரூபமாய் நிற்கும் முறையை நோக்கி, மூலாதார விநாயகர் முதலிய தேவதைகளைப் பொருத்தி மேலாகிய பிரமரந்திர மளவும் அவ்வசபையுடன் சென்றணைந்து அப்பிரமரந்திரத்தின் கண்ணதாகிய தாமரை முகையை மலரும்படி செய்து, அத்தாமரை மலரின் தாதுக்களின் நுனியிலுள்ள சந்திர மண்டலத்தை மூலாக்கினியினால் இளகப்பண்ணி, அம்மண்டல வழியாக ஒழுகும் அமிர்தத்தைத் தேகம் முழுதும் நிரப்பிப் பூரணப் பிரகாசத்தைத் தியானித்தல் முதலியனவாம். இது வினைகள் கெடுதற்கு வழிகளாகிய இயமம், நியம முதலிய அட்டாங்க யோகமெனப் படும். இவ்வழிபாடு அகத்தொழில் மாத்திரையானே சிவபெருமானுடைய அருவத் திருமேனியிடத்து நிகழ்வதாதலின், இதனை முற்றும் அநுட்டித்தோர் சிவ சாரூபமாகிய பத முத்தியைப் பெறுவர்.'

என்ற சிவஞான யோகிகளது தெளிபளிங்கு போன்ற மெய்ஞ்ஞான பாடியமும் ஈண்டைக்குப் பன்முறையும் யூகித்துணரற் பாலனவாம். இச் செய்யுளின் விரிவுரையை யடுத்தமுறை விவரித் தெழுதுவோம்.

'வடாதிசை முனியுநண்ணி மலர்க்கர நாசி வைத்தாங்
கிடாவுபிங் கலையானைய விதயத்து டெழுத்தொன் றெண்ணி
விடாதுபற் பருவ நிற்ப.'

என்னுங் கம்பர் கவியில் இக்கருத்துக்கள் அடங்கக் காணலாம்.

இனி, 'அங்கியா லங்கியை வெதுப்பி' என்பதற்கு, சாடராக்கினியாகிய பசியை மூலாக்கினியா லடக்கி என்றும், இங்கிதத்து என்பதை (இங்கு+இதத்து) எனப் பிரித்து, இந்நிலையில் இனிமையாக வென்றும் உரைப்பாரு முளர். தண்ணெனல் சீதக் குறிப்பு.

## மானிட தேகத்தின் மதிப்பு


லண்டன் ஸண்டே எக்ஸ்பிரெஸில் ஒருவர் பின்வருமாறு எழுதுகிறார்:—அதாவது, மானிட தேகத்தின் ரொக்க மதிப்பு 3 ஷில்லிங் 6 பென்ஸ் அதாவது, ரூ. 2-4-10 என்றும், அதில் பின்வரும் வஸ்துக்கள் இருக்கின்றன வென்றும் அவர் சொல்லியிருக்கிறார்.

சுண்ணாம்பு:—6 பார் ஸோப்பு செய்வதற்கு எவ்வளவு தேவையோ அவ்வளவு. இரும்பு ஒரு 6 பென்னி மதிப்புள்ள ஆணி செய்வதற்கு எவ்வளவு இரும்பு வேண்டுமோ அவ்வளவு. பாஸ்பரஸ்—20 பெட்டி நெருப்புக்குச்சி செய்வதற்கு வேண்டிய அளவு. சர்க்கரை-10 கோப்பை காப்பிக்கு வேண்டிய சர்க்கரை. போடாஷியம்-ஒரு விளையாட்டுப் பீரங்கியை வெடிக்க வைப்பதற்கு வேண்டிய அளவு. (ஆ—தீ.)

# குடி வெறி

"சுப்"

என்று மில்லாத குதூகலத்துடன் வீரன் தான் படுத்திருந்த ஓலைப் பாயைச் சுருட்டி ஓர் மூலையில் எறிந்து விட்டுக் குடிசையை விட்டு வெளியே வந்தான். அவசர அவசரமாக பச்சைப் பசேலென்ற நீர் நிரம்பிய குட்டையில் கால் கைகளை அலம்பி சுத்தப்படுத்திக்கொண்டுக் குடிசைக்குள் நுழைந்தான். கருப்பாயி புன்முறுவலுடன் அளித்த நீர்ப்பாகத்தை குடித்துவிட்டு, ஏருங் கலப்பையுந் தூக்கித் தோளில் போட்டுக் கொண்டு புறப்பட்டான். இரு மாடுகளும் அவனுக்கு முன்னே வயலை நோக்கி ஓடின.





கதிரவன் இப்பொழுதுதான் கீழ் வானில், அடிவாரத்தில் செந்நிறக் கதிர்களை வீச ஆரம்பித்தான். உழவு காலம். உழவர்கள் பாட்டுப் பாடிக்கொண்டே மாட்டை யடித்தனர். எருதுகளின் காலோசையும், வண்டுகளின் ரீங்காரமும், உழவர்களின் தெம்மாங்குப் பாட்டும் ஒன்றாகக் கலந்து ஒலித்தன.

அன்றைய தினம் வீரனுக்கு நான்கு வயல்களில் உழவேண்டியதிருந்தது. பகல் பதினோரு மணிக்கு கருப்பாயி கொண்டுவந்த கஞ்சிதான் அவனுக்கு அன்றைய பகற் போஜனம்.

மாலை மணி நான்காயிற்று. வெய்யோன் வெப்பமும் தணிந்தது. மந்த மாருதம் வீசத் தொடங்கிற்று. உழவர்களும் கரையேறினர். மாடுகளும் அலுத்துப்போய் தத்தம் வீட்டை நோக்கிப் புறப்பட்டன.

வேலை முடிந்ததென்ற மகிழ்ச்சியுடன் வீரனும் வீட்டை நோக்கினான். வழியில் தனது எஜமானர் வீடு சென்று வயல்கள் உழுத விபரத்தைத் தெரி

வித்தான். அவர் நாலு வசவு வைதுவிட்டு நாலணாக் காசை வீசி யெறிந்தார்.



மிகுந்த அடக்க வொடுக்கத்துடன் அதை யெடுத்துக்கொண்டு வீரன் புறப்பட்டான். நாலணா கையிலிருக்குமட்டும் நாம் ராஜா தான் என்பது அவனது செருக்கு!

சற்று தூரத்தில் ஓடிய சிற்ளுேடையில் நன்ருகக் குளித்தான். உழவர்கள் எல்லோரும் இவ்வோடையில்தான் குளிப்பது வழக்கம். நீராடியதும் யாவரும் ஒன்ருகச் செல்வார்கள். எங்கு? கோவிலுக்கா? அன்று, அன்று! ஓடையின் மறு கரையிலிருக்கும் ஷாப்புக்கு. என்ன ஷாப்? கள் ஷாப்?

நண்பர்கள் சகிதம் வீரனும் ஷாப்பை நோக்கிப் புறப்பட்டான். கையில் நாலணா விருப்பது வரை ராஜாவல்லவா? வேண்டிய மட்டும் குடித்தான். மற்றவர்களுக்கும் வாங்கிக் கொடுத்தான். நன்ருகக் குடித்துவிட்டு பக்கத்துத் தென்னஞ் சோலையி லமர்ந்தார்கள். ஒருவர்க் கொருவர் தத்தம் குடும்பச் சண்டைகளைப் பற்றிய வீரப் பிரதாபங்களை யெல்லாம் சாங்கோ பாங்கமாக எடுத்துப் பேசினுர்கள். ஒருவர்க்கொருவர் மேல் கீழ் என்ற வாதம் தோன்றியது. வாய்ப் பேச்சு, கைச்சண்டை சமரஸமாகக் கட்குடியில் தீரும். சிறிது குடித்ததும் மீண்டும் பழைய புரோகிராம் தான். இவ்வாறு இருட்டுவது வரை இந்த வேடிக்கை நிகழ்ந்தது. நன்ருக இருள் சூழ்ந்ததும் ஒவ்வொருவராக சேரியை நோக்கிப் புறப்பட்டனர்.



வீரன் நன்கு குடித்திருந்தான். குடிவெறி அவனைக் குப்புறத்தள்ளியது.



எங்கும் இருள் சூழ்ந்திருந்ததால் பாதையும் புலன்படவில்லை. குடிவெறி தள்ளியபடி அவன் ஆடியாடி நகர்ந்து சென்றுகொண்டிருந்தான். கள்ளுக் கடைக் கூட்டத்தில் நிகழ்ந்த சண்டைகளும், பேச்சுகளும் அவன் மனக் கண்முன் ஒன்றன் பின் ஒன்ருக, சினிமா சீன் மாதிரி வந்துகொண்டே யிருந்தன. இடை யிடையே பாட்டு; கூத்து; ஆட்டம்.

இப்பொழுது ரோட்டை யடைந்தான். இனி ஒருவாறு செல்லக் கூடுமல்லவா? கள்ளரக்கன் தனது ஆணையை வரம்பு மீறிச் செலுத்த வாரம்பித்தான். சண்டைப் பேச்சுகளும் வலுத்தன. பாட்டுகள் சிறிது சிறிதாகத் தேய்ந்தன. ஒருவருக் கொருவர் நிகழ்த்திய உரையாடல்களே முன்னின்றன. இப்பொழுதும் தான் எதிரியுடன் பேசுவது போலவே வீரனுக்குத் தோன்றிற்று. சண்டை முற்றிவிட்டதால் இனி ஆயுதந் தேவை யெனப்பட்டது.

இடுப்பில் செருகப்பட் டிருந்த அரிவாள் வலது கையை அடைந்தது. "அடே! பத்திரம். இனிப் பேசாதே. கையில் என்ன இருக்கிறது பார்த்தாயா? ஒரே வெட்டு துண்டு இரண்டு! ஜாக்கிரதை" யென்ற வார்த்தைகள் சரமாரியாக சம்மனில்லாமலே வீரனது வாயிலிருந்து வெளிப்பட்டன. ஆனுல் அக்கம் பக்கத்தில் யாரையுங் காணுேம்.

வீரனே இரு கட்சிக்காகவும் பேசுகின்ருன். அடிப்பவனும் அடிபடுவனும் அவனே. இந்த போராட்டம் சிறிது தூரம் வரை நிகழ்ந்தது. இனிப் போராட்டம் வலுத்தது. 'அடே தடியா! சும்மா பேசாதே யென்ருல் கேட்கமாட்டாயா? இதோ பார்! கையில் அரிவாள். ஓங்கிவிட்டேன்! 'ஒரே வெட்டு யார் மீது? வீரன்மீதுதான். வலது காலில் பெருங்காயம். இரத்தம் ஆருகப் பெருகிற்று. இன்னும் வீரன் தனது சூரத்தனத்தை விடவில்லை! 'அடே என்னை வெட்டிவிட்டாயா?' மறுவெட்டு. இப்பொழுது இடது காலில். அடியற்ற மரம்போல் வீழ்ந்தான் வீரன் ஆ வென்ற சத்தத்துடன்.



* * *

கள்ளுக் கடை இரைச்சலிலேயே கவனமாக இருந்தாள் கருப்பாயி: இரைச்சல் ஓய்ந்தாலன்றி வீரனை எதிர்பார்க்க முடியாதென்பது அவளறியாததன்று. அன்று பகல் முழுவதும் அறுத்த புல்லை விற்றுக் கிடைத்த இரண்டணுவுக்கும் அரிசி வாங்கிச் சருகு கொளுத்திச் சமைத்து வைத்திருந்தாள். வீரன் தான் சம்பாதித்ததில் குடித்தது போக, மீதிக்குக் கறியும், உப்புப் புளி மிளகும் வாங்கிவருவானென்று எதிர்பார்த்தாள். நேரம் அதிகமாய்விட்டது. இரைச்சலும் ஓய்ந்தது. பக்கத்து வீட்டுக்காரர்களெல்லாம் ஒருவர் பின் ஒருவராகச் சேரிக்கு வந்து சேர்ந்துகொண் டிருந்தனர். ஆனுல் வீரனை மட்டும் காணுேம். குழந்தைகள் ஒவ்வொன்றா...

ஆரம்பித்தன. 'முகம் காட்டும் கஞ்சி' மட்டும் பகல் உணவாகக் கொண்டிருந்த பசிமிகுந்த குழந்தைகள் இரவு ஒரு பிடிச் சாதமாவது சாப்பிட்டால் தானே காலையில் உயிர்பெற்றெழுமென எண்ணினள் கருப்பாயி. வெறுஞ் சோற்றைச் சாப்பிட முடியுமா?

கலங்கினள் கருப்பாயி. திடீரென்று ஓர் சப்தம். அது வீரனின் குரல் தான். கருப்பாயிக் கெட்டியது. ஏதோ அபாயம் நேர்ந்துவிட்டது. பக்கத்து வீட்டுக் கந்தனை யழைத்துக்கொண்டு சத்தங் கேட்ட திக்கு நோக்கி ஓடினள்.

காலையில் கண்ட புன்முறுவலுடன் வீரன் ரோட்டருகில் இரத்தப் பெருக்கின் நடுவே கிடந்தான். கால்களிரண்டும் வெட்டப்பெற்றிருந்தன. அரிவாள் சற்று தூரத்தில் எறியப்பெற்றிருந்தது. வீரன் தனது யுத்தத்தில் வெற்றிபெற்று விட்டான்! வீர சுவர்க்கம் போய்விட்டான்!!




கருப்பாயி அலறினள், கதறினள். யாரை நோவது? அன்று கருப்பன் கள்ளாக்கனுக்குத் தனது துணைவனைப் பலி கொடுத்தாள்.

மறுநாள் வழக்கம்போல் உழவர்கள் உழுதார்கள்; மாலையில் மீண்டும் கள் ஷாப்பில் கூட்டந்தான்; சண்டையும் சச்சரவுந்தான்.

தினந்தினம் எத்தனை கொலைகள்? குத்து வெட்டுக்கள்? யாரைக் குறை கூறுவது? பாழுங் குடி செய்யுந் தீமைதா னென்னே?

---

சந்தாதாரர்களுக்கு:—சந்தா நெம்பர் தெரியாதவர்கள் மாத மாதம் வரும் சஞ்சிகையின் மேலுள்ள விலாசத்தில் குறிக்கப்பட்டிருக்கும் நம்பரைப் பார்த்துக் குறித்து வைத்துக்கொள்ளக் கோருகிறோம்.

# இலக்கிய இலக்கணம்

பண்டித இராமசுப்பிரமணிய நாவலர்.

சுருங்கிய சொற்களில் விளங்கிய பொருளை நிறுவுவர் அருந்தமிழ்ப் புலவர். கருத்துக்கேற்ற சொல்லமையாமையால், பற்பல சொற்களைக்கொண்டு கூட்டிக் குறித்த பொருளையும் சிதைவுறச் செய்வர் புன்புலவர்.

'சொல்லுக சொல்லைப் பிறிதோர்சொல் அச்சொல்லை
வெல்லுஞ்சொ லின்மை யறிந்து'

'பலசொல்லக் காமுறுவர் மன்ற மாசற்ற
சிலசொல்ல றேற்றா தவர்' —திருக்குறள்.

என்பன புலவருரைக்கு இன்றியமையா இலக்கணங்களாய் நிற்பனவாம்.

'மன்பதை காக்குந் தென்புலங் காவ
லென்முதற் பிழைத்தது' —சிலப்பதிகாரம்.

இதனுள், 'என்முதற் பிழைத்து' என்பது, 'என்முதற்கொண்டு (அரசநெறி) தவறிற்று' என்னும் பொருளோடு நில்லாது 'முதற்கண் தவறியது என்னே! (தவறிற்றன்று)' என்னும்பொருளையும் வற்புறுத்துகின்றது. அன்றியும், பாண்டியன் தான் செய்த முறை யன்மைக்கு வருந்தி நிற்றலையும் பொருந்தக் காட்டுகின்றது.

'கணவனை இழந்தோர்க்குக் காட்டுவதில்' —சிலப்.

என்பது 'உறவினர் பிறரை இழப்பினும் பிறர்பிறரைக் காட்டி ஆற்றாமையை நீக்கலாம்; தாயை இழப்பின் பிறளொருத்தியைக் காட்டித் தாயெனலாம். தந்தை, உடன் பிறந்தாரை இழப்பினும் பிறர் பிறரைக் காட்டி ஆற்றாமையை ஆற்ற முயலுதலும் கூடும். கற்புடைப் பெண்டிர் கணவரை இழந்த பின்னர் யாரைக் காட்டி 'உவன் நின் கணவன்' என்பது? ஆகாதன்றே? ஆகலான், கணவனை இழந்தோர்க்கு எடுத்துக்காட்டி ஆற்றுதற்குரியதொரு பொருளின்று' என்னும் சீரிய பொருளைச் சில சொற்களின் அடக்கிக் கொண்டு ஒளிர்வது காணத்தக்கது.

'இடும்பைக் கிடும்பை படுப்பர் இடும்பைக்
கிடும்பை படாஅ தவர்'

'யாதனின் யாதனி னீங்கியா னோத
லதனி னதனி னிலன்' —திருக்குற

என்பனவும் சுருங்கியின்று பொருளினிது விளக்குவது

187519

உலக வழக்குச் செய்யுள் வழக்கு என்னும் இரண்டும் புலவனுணரல் வேண்டும். உலகியலையம் வேண்டப்படுமிடத்து, உலக வழக்குணர்ச்சி பெரிதும் பயன்படும். செய்யுள் வழக்கு உணராக்கால், செய்யுட் சிறப்பு அரும்புதலு மின்று. வழிமுறைக் கருத்துத் தொகுதிகளின் உண்மையும் சொற்களின் மெய்ப் பொருளும் செய்யுள் வழக்கு உணரார்க்கு அமைவனவல்ல. அவ்வக் காலத்திற்கேற்பத் திசைச் சொல் வட சொற்களும் புலவனுக்குப் பயன்படுவன என்க. 'ஒகினன்', 'இச்சேனை கிடக்கிடு' 'பாக்கழி' என்பன முதலியன கம்பர் கண்ட திசைச் சொற்கள். பல்வேறு தேயங்களி னொழுக்க வழக்க உணர்ச்சி யும் புலவனது உள்ளத்தே அமையற் பால.

புலவர் தம் கருத்தை இனிது விளக்குதற்கண் புதுவது கற்பித்துக் காட்டுதலு முளது. அக்கற்பனைக் கிடைய சொற்கள் தம் இயற்பொருளைத் தாராது புலவனது குறிப்புப் பொருளையே பயந்து நிற்கும். அவை 'புலவர் மரபு' எனப்படுவன. அரசனாணையை 'ஆக்கினை சக்கரம்' எனவும், அரச நீதி செலுத்தலை 'செங்கோல் செலுத்தல்' எனவும் முறைபன்மையைக் 'கொடுங் கோல் செலுத்தல்' எனவும் கூறுவன புலவர்மரபுக்களா மென்க. இவற்றுக் குச் சக்கரப்படை செவ்வியகோல் கொடியகோல் என்பன பொருளல்லவாதல் கருதற்பாற்று. இனிய அருளைத் 'தண்ணளி' என்பதும் இனிய தமிழைத் 'தண்டமிழ்' என்பதும் இன்னோரன்ன பிறவும் புலவர் மரபொடு சார்த்தி உண ரப்படும். தண்மைக்கு ஈண்டுக் குளிர்ச்சி பொருளன்றென்க.

உலகு, இரவு, அழகு முதலியவற்றைப் பெண் எனக் கூறுவதும் புலவர் மரபேயாம். கல்வியைக் 'கலைமகள்' என்பதும் செல்வத்தைத் 'திருமகள்' என்பதும் புலவர் மரபாய் வந்தனவேயாம். பின்னர் இவை தெய்வங்க ளெனவே கருதப்பட்டுவிட்டன. அக்கருத்துப் புலவரது நுண்ணிய கருத் தையும் குறிக்கோளையுங் கருதாமையான் வந்த இழுக்கே யன்றி பிறிதன்றாக வும், சிலர், குற்றத்தைத் தாம் ஏலாது புலவர்க்கு ஏற்றி அவரை அறிவிலர் என வும் கூறத் துணிகின்றனர். யார் அறிவிலர்? என்பது வெள்ளிடை விலங்கல்.

பகலோனது இளமை நிறங்களை எழு குதிரைகள் எனக் கூறுவதும் அவ னது வட்டத் தனி வடிவு நோக்கி அவனை ஒற்றை யாழித் தேரினன் என்ப தும் அவனது தோற்றத்துக்கட் டோன்றும் சேப்பு நிறத்தை அருணன் என்ப தும் பிறவும் புலவர் மரபுகளாம். 'அருணன்' என்பது சேப்பு நிறத்தினன் என்று பொருடரும் இவைபோல்வனவற்றையும் இக்காலத்தார் புலவ ருரைத்த பொய் எனக் கூறித் தடுமாறுவர். கடலைக் கண்கூடாக் கண்டும் அதனை நீரெனவும் தென்றலைத் தேர் எனவும் கூறும் புலவர் என் கூறார்? இவையெல்லாம் புலவர்தம் நினைவாற்றல் புனைவாற்றல்களைத் தெரிப்பனவே. இம்மரபு பற்றிய எடுத்துக்காட்டுக்களை ஈண்டுக் காண்போம்.

'பொருவரி பூந்தசிறை வண்டினம் விருந்துண்பப்
பூங்கமல நாண்முகையெலாம்
போதாக எழுபரித்தேர் காடாய்ந் கடன்முகடு
பூப்பவரு பருதிப்பிரான்'

—அமுதாம்பிகை பிள்ளைத்தமிழ்.

'துணைபுரவித் தனித்தேர்மேற் றோன்றுவான் கதிர் தோன்ற'

—பெரியபுராணம்.



'பாழிமா முகட்டுச்சி பச்சைமா
ஏழுமேறப்போ யாறுமேறினர்'

'செஞ்சுட ரிருள்கீறித் தினகரனொரு தேர்மேல்
மஞ்சனை யணிகோலங் காணிய வெனவந்தான்-கம்பராமாயணம்.

'அலை நீராடை மலைமுலை யாகத்
தாரப் பேரியாற்று மாரிக் கூந்தற்
கண்ணகன் பரப்பின் மண்ணக மடந்தை.'—சிலப்பதிகாரம்.

இத்தகைப் புலவர் மரபுகள் சீரிய காப்பியங்களில் நன்கு இடம்பெற்றுத் தீஞ்சுவை பயந்து நிற்கின்றன.

புலவர் பெரும்பாலும் வெளித் தோற்றத்தையே கண்டு உரைப்பர் மெய்ப்பாடு உரையாவிடத்து எல்லோனுக்கு இயக்கமின்றென்பார். உலகா ராய்ச்சி நூலோராயினும், இயக்க முண்மைபோற் றோன்றுதலின், இயக்கங் கூறுவர் புலவர். 'பாழிமா முகட்டுச்சி' என மேல்வந்த செய்யுள் காண்க. கடலினின்றும் பகலோன் எழுவதுபோற் றோன்றுதலின், அது பொய்யே னும், வெளிப்படுத் துரைப்பர் புலவர்.

'உலக முவப்ப வலனேர் புதிரிதரு
பலர்புகழ் ஞாயிறு கடற்கண்டா அங்கு'—திருமுருகாற்றுப்படை.

பகலோன் மறைதலைக் கடலின் மூழ்கினன் என்பர்.

இனி, உதயகிரி அத்தகிரி என இரண்டு கொண்டு பகலோன் றோற்றம் உதயகிரியினெனவும் அடைவு அத்தகிரியினெனவும் புலவர் கூறுவர்.

'வெய்யவன், கோபமுற்றி மிகச் சிவந்தன
னெத்தனன் குணக்குன்றிலே'

'கதிரவ னத்தம் புக்கனன்' —கம்பராமாயணம்.

என்பன காண்க. 'குணக்குன்று' என்றது உதயகிரியை; 'அத்தம்' என்றது அத்தகிரியை:

புலவர் எப்பொருளையும் கூர்ந்து தம் அறிவு விளங்கக் காண்பர். ஒரு பொருளைக் கண்டதும் அதன் தோற்றப் பொலிவு தொழில் பண்பு பயன் முதலியவற்றை ஒருங்குடன் ஆய்ந்து, தாம் சொல்லப்புகும் பொருட்கேற்ப அதனை பயன் படுத்துவர். பொய்கை யொன்றில் மூழ்கி யெழும் பறவைகளை நோக்கிய புலவற்கும் ஏனையோர்க்கும் அக்காட்சிக்கண் வேற்றுமை உளது. ஏனோன் பறவைகளின் மூழ்கலையும் எழுதலையும் கண்டு 'காண்டற்கு இனிது' என்கின்றான். புலவனுடைய உள்ளம் அக்கருத்தொடு நிற்றுப் பெறுவதன்று. அப்போழ்தே, அத்தொழிலொடு ஒக்கும் இறப்பும் பிறப்பும் அவனது நினைவுக் குக் காட்சி கொடுக்கின்றன. எனவே, 'இப்பறவை மூழ்கி எழுதல் உயிர்க ளின் பிறப்பு இறப்புக்களைக் காட்டுகின்றது' என்கின்றான். இவ்வாறு தான் உணர்ந்த பொருண்மையொடு காட்சி உணர்வை ஒருப்படுத்துக் காண்பது புலவனது இயல்பு. உறக்க உணர்ச்சிகளை நோக்கிய திருவளுவர்,

'உறங்குவது போலுஞ் சாக்கா டுறங்கி
விழிப்பது போலும் பிறப்பு'

என்று நயம்பட நிறுவினர். இப்புலமை யுள்ளம் ஒருவரிடத்து இயல்பாக அரும்பி மலரும் இயல்பு உடைத்து. ஒவ்வொருவருடைய உள்ளம் ஒவ்வொரு நெறிக்கண் பயிலுவதாம். அப்பயிற்சி இப்பிறப்பின் கண்ணே உஞற்றப்படும் முயற்சியான் உண்டாவதன்று; பிறப்பினாற் பெறப்படுவதாம். ஏதேனும் ஒரு பயிற்சியை மேற்கொண்டுவரினும் அது பிறப்பொடு புணரா விடத்துப், பெரும்பாலுந் தவறுபட நிற்கும். சிலர் பொருள்களின் காரணம் உண்மைகளை ஆய்வர்; சிலர் அவற்றின் தோற்றம் நோக்கி மகிழ்வர்; சிலர், அப்பொருள்களை இயலுமாற்றான் நுகர விழைவர்; அவற்றின் பயனை ஆய்வர் சிலர்; அவற்றைப் பிரித்து உணர முயல்வர், சிலர்; அவற்றைப் பிரித்து உணர முயல்வர், சிலர். புலவனது உள்ளம் காட்சிப் பொருளின் தோற்றம், அழகு, தொழில், பயன் என்னும் நான்கிடத்தும் சென்று அவற்றின் உண்மை யுணர்தலொடு அமையாது, அவற்றை முற்றும் ஒருங்கு ஒரு வடிவாய்க் கொண்டு அமைத்து மேன்மேலும் நினையவும் புனையவும் புரிகின்றது. புலவன் பொருள்களை மெய்யுறத் தோயவேண்டா; காட்சி யுணர்வே மெய் யுணர்வை அளித்தாற்போலும் செறிவுற்று நிற்கும். அவர் கண்ணானே உற்றறிவர், பருகுவர், நுகர்ந்தறிவர், கேட்டறிவர், கண்டறிவர். ஐம்புல உணர்ச்சிகளைக் கண்ணால் எய்துதற்குக் கழிபேருதவி பயப்பது அவரது உள்ளக் கண்ணும். அழுந்த நோக்கி உணரும் வன்மை புலவர்க்கு இயல்பாயுள்ளது. எனவே, ஒரு பொருளைக் காண்புழி அழுந்த நோக்கியாய்தல், அறிதல், அதனோடு உள்ளுறத் தோய்தல், இன்புறல் என்பன புலவரிடத்துக் காணப்பெறுவ. இப் பயிற்சிக்குரிய உள்ள வியல்பு இயல்பானே உண்டாவதாகலின், கற்றாரெல்லாம் புலவரல்லர் என்க. கல்வி புலமை பெறுதற்குக் காரண மாவதத் துணையே. புலமை இல்லாதார் யாப்பு உணர்ந்து யாப்பினும் புலமை காண்டலரிது. யாப்பு என்னுமளவின் மட்டுமே அவை பேணற்பாலவாம்.

புலவன் தான் ஒன்றைக் குறித்து உணர்ந்ததனை அதனினும் வாய்ப்புறப் பன்மடங்கு திரட்டிக்கூற விழைகின்றான். இருட் செறிவைக் காணின் 'மைக்குழம்பு' என்கின்றான்; முலையை மலையென்கின்றான்; கண்ணைக் கடல் என்கின்றான்; இடையை வெளி யென்கின்றான்; இருள் முதலியன மை முதலியவல்லன அறியாதோ உரைக்கின்றனன்? அன்று, தான் உணர்ந்ததை வாய்ப்புறக்காட்டும் கருத்தானே அவன் அன்னணம் அறைய அவாவுகின்றனன். முலைப் பெருமை கண்டான், அப்பெருமையை நன்கு உணர்த்த மலை யென்றான்; இடை நுட்பம் கண்டான், அதனை நன்கு உணர்த்த வெளியென்றான். 'மருங்கிலா நங்கையும்' எனச் சீதையின் இடை நுட்பம் கூறிய கம்பர் அவட்கு இடையே இல்லை யென்றனர். ஆயின், இன்னணம் புனைந்து கூறுதலாற் பயன் யாது எனின், புனைந்துகூறின் ஆய்வார் உள்ளவாறு உணர்தல் பயன். 'மருங்கிலா நங்கை' என்று கூறப்படினும் சீதைக்கு இடையின்று என்று கருதாரன்றே, பயில்வோர்? அத்துணைக்கு இடை நுண்ணியது போலும்' என்று உணர்ப. இவையெல்லாம் பொய்பட வந்தனவல்ல; உண்மையை நன்கு புலனுறுப்பான் வந்தன காண்க.

ஒரு பொருளைப் புலவன் காணு மிடத்து, அதன் உண்மை புலப்படுத்து



மாறு, புனைந்துரைக்கின்றான். அதனை யொத்த பிறிதொன்றினையும் உடனிணைந்து ஒப்புரைக்கின்றான். உவமப் பொருட்டொழிலையே அப்பொருட்டொழிலாகச் சில விடத்துக் கூறுதலும் புலவனது இயல்பு. வாய்க்கால் ஒலி கேட்கும் புலவன் மக்களது உரையாட்டொடு ஒப்புக் கண்டு, அதனை நோக்கி 'என் பேசுகின்றாய்?' எனக் கடாவுகின்றான். இவ்வாறு ஒரு பொருளை நோக்குழி, புலவன், பிறபொருள்களையும் அதனொடு இணைத்துப் புனைந்து மகிழ்கின்றான். புனைவாற்ற லுடையார்க்கு அதுவே நனி களிப்பை நல்குந் தகைத்தாம். பருப்பொருளாய்க் காட்சிதரும் பொருள்களின் கவினையு முணர்ந்து இன்புறுவது உள்ளமே யன்றோ? அப்பொருட்களைக் காணுவழிப் புலவன் நுண்வடிவாக அவற்றைப் படைத்து உட்கண்ணிற் கண்டு களிப்பு எய்துகின்றான். ஆண்டும், இன்புறுவது உள்ளமாதலின், புறக்காட்சி இன்பமும் அகக்காட்சியின்பமும் ஒக்குமென்க. புலமை இல்லாதார் புறக்காட்சி ஒன்றனையே அறிவர். புலவர் இரண்டனையு முணர்ந்து இணைத்துப் புனைவர். ஆகலிற் புனைவுணர்வாய அகக்காட்சி புறக்காட்சி போலும் இன்பத்தை யவர்கட்குப் பயக்கும்.

விண் மீன்கள் மலிந்து காணப்பெறும் வானத்தை நோக்கி, 'வானில் விண் மீன்கள் மிக்குள' எனில், பயக்கும் இன்பம் என்னை? புலவன் அவற்றை நோக்கி, 'வானம்பூத்தது' என்கின்றான்; குவளை மலர்ந்து மலிந்த பொய்கையை நோக்கி, 'பொய்கை விழித்தது' என்கின்றான். இவ்வாறு கூறவே, பயில்வார் விண்மீன் காட்சியை மலர்ச்சோலை யொடு புணர்த்தியும் குவளைகளைக் கண்களோடு புணர்த்தியும் இன்பு உறுப.

புலவர் உள்வலி மிக்கு உடையர்; உடல்வலியினும் மிக்க பயனை உள்வலியாற் பெறும் இயல்பினர். அவரது உள்ளம் உலகுணர்ச்சி செறிந்தது; அவரது காட்சிக் கெய்திய பொருட்களெல்லாம் நிலைத்த பொருளினை; உலகின் நிழலீடு. உலக முற்றையும் புலவர் தம் உள்ளத்தே வடித்துக் காண்போர். அவர் தம் அகத்தில்லாத தொன்று புறத்து இன்று. ஒரு பொருளை மிகுத்துரைத்தல், இழித்துரைத்தல், விரும்பல், வெறுத்தல், ஒன்பான் சுவைகளினும் நன்கு ஈடுபடுதல், வேண்டுமிடத்து அவற்றின் ஒன்றையோ பலவற்றையோ வெறுத்தல் முதலிய வினைத்திற்கும் அவரது உள்வலிமையே காரணமாம். புலவர் தமக்கென வாயதொரு உள்ளமுடைய ரல்லர்; புலமை புலனுமிடத்து எல்லாருள்ளமுஞ் செறிந்தது அவருள்ளம். பிறருடைய உட்பான்மைகளை நுனித்து உணர்ந்து பயின்றவராதலின், தாம் எவரைக் குறித்துப் பாடுதல் வேண்டுமோ அவரது உள்ளமாகத் தமது உள்ளத்தை மாற்றும் வன்மை புலவரிடத்தே காணப்படும். எனவே, புலவரது பாடல்களினின்று அவர்க்கு உரித்தாய உட்பான்மையை வகைப்படுத்து உணர்தலரிது. சினத்தை மிகுத்துரைக்கும் புலவன் அதனானே சினமுடையன் என்பது ஒண்ணாது. காமத்தை மிகுத்து உரைப்பவன் காமமுடையனு மல்லன்; தன்பத்தை மிகுப்பான் கவலையுளத்தனு மல்லன் என்க. தம் உட்பான்மை இதுவெனச் சுட்டிப் பிறர் ஐயப்படுமாறு எச்சுவையையும் மிகுத்துப் புனைதல், அவரது உள்வலிமையாலும், புலமையில்லார்க்குத் தாம் புறத்து மிகுத்துரைப்பது பெரும்பாலும் தமது உட்பான்மையாக அமைதலும் கூடும். என்னை? அவர் தமக்கு இயல்பாயவற்றையன்றிப் பிற பெரிதும் உரையார், விரும்பியதொருவ னிப்பயன் வேண்டாவிடத்து. புலமை நிரம்பிய உள்ளத்தினரேல், அத்தகையார்க்குப் பிற புலவ


ருடைய பாடல்களினின்றும் அவரது உட்பான்மையை இனிது அறிதலும் இயலும். என்னையெனின், தாமும் அத்துறை போயவராகலின், அறிவா ரன்றே; புலமையா னுரைப்பது இது இயல்பா னுரைப்ப திது இயல்பானும் புலமையானு முரைப்பதிது வென ?

புலவன் தன் கவினிய பாடல்களான் பயில்வாரது உள்ளத்து உணர்ச்சியை எழுப்புகின்றனன். புலவன் பெற்ற உணர்வினைப் பயில்வாரும் பெற்று மெய்ப்பா டெய்துகின்றனர். பயில்வாரைப் புலவன் தன் இனிய பாடல்களால் தன் விருப்பிற்கு இணங்க நகைப்பிக்கின்றனன்; சினப்பிக்கின்றனன்; அவலத்துறுத்துகின்றனன்; தறுகட் படுத்துகின்றனன். இன்னனவெல்லாம் செய்வித்தற்குரிய உயிர்ப்பொருளைச் சுவைப்படுத்துக் கூறும் ஆற்றலன் புலவன் என்க. புலவரை அனைவரு மேத்துவது தாம் அவரிடத்து நின்று பெற்றுத் துய்க்கும் பல்வேறுபட்ட சுவைக்கு ஒரு கைம்மாறு அளிப்பது போலும் !

பொருளினது உண்மைக் கவினைக் காண்டலும் பிறர் நினைவு கோடலும் தேவர்க்கன்றே இயல்வன. புலவரும் அவற்றின் வல்லாராதலின், புலமையை ஓர் கடவுட்பான்மை என்பார் ஆன்றோரும். பிறர்க்குப் பெறலாகாததோ ராற்றலை நோக்கிக் கடவுட் டன்மை என்றல் இயல்பு. புலவரைத் தேவர் என்பது உபசார மென்பாருளராயினும், தெய்வத்திறல் அவர் மாட்டு அமைந்ததனை யாரு மறுாாவர். தேவர் ஒளியுடையர். அவ்வொளியான் புறவிருள் அகலுமென்ப. புலவர் அறிவென்னும் ஒளியினர். அகவிருளை யகற்றும் அவ்வொளி. ஆகலானும், தேவரினும் நினைவாற்றலின் மிக்கார் புலவராகலானும், தேவரினு மிக்கார் புலவர் என்றலும் என்னை இழுக்கு ? 'தேவரே கற்றாரும்' என்றனர் பஞ்சமூலத்தார்; 'தேவரனையர் புலவரும்' என்றனர் நான்மணிக் கடிகையார். இங்ஙன் கற்றாரைத் தேவர் எனக் கூறு நிற்பர் திருவள்ளுவர், 'நிலவரை நீள்புகழாற்றிற் புலவரைப் போற்றாது புத்தேளுலகு' எனத் தேவரைப் புலவர் என்றார். 'புலவர்' என்பது தேவர்க்கும் ஒரு பெயரென்க. இவற்றானெல்லாம் புலவர் தேவரனையர் என்பது நன்கு புலப்படா நின்றது.

புலவர் பொருள்களைப் பல்லாற்றாற் படைக்கும் ஆற்றலுடையர். அவர் திறுவிய பொருள் மேன்மேலும் அவரான் நன்கு செய்யுளிற் காக்கவும் படும். செய்யுட்களே அவராற் படைக்கப்படும் உடம்புகளாம்; அவற்றி னொழுகும் பொருள்களே உயிர்களாம். படைக்குந் திறலுடைய நான்முகப் புத்தேளும் படைப்பில் புலவரை ஒவ்வான். அவனாற் படைக்கப்பெறு முடல்கள் அழிவனவாகலானென்பர், குமர குருபரர்.

'கலைமகள் வாழ்க்கை முகத்த தெனினு
மலரவன் வண்டமிழோர்க் கொவ்வான்—மலரவன் செய்
வெற்றுடம்பு மாய்வனபோல் மாயா புகழ்கொண்டு
மற்றவர் செய்யு முடம்பு.' —நீதிநெறி விளக்கம்.




# இங்கிலாந்தில் மதச் சீர்திருத்தம்.

(T. S. ராஜகோபாலன், B. A., L. T.)

சென்ற தொடர்ச்சியில் பிரஸ்தாபிக்கப்பட்ட மார்ட்டின் லூதருடையது போன்ற கிளர்ச்சி இங்கிலாந்துக்குப் புதியதல்ல என்ற பெருமை எப்போதும் உண்டு. ஐரோப்பாவிலேயே, மதகுருமார்கள், துறவிகள் போன்றவர்களின் உபதேசங்களுக்கும் சம்பந்தம் இருக்கவேண்டுவ தவசியம் என்பதை வற்புறுத்தியதுடன் அனுஷ்டித்தும் காட்டிய புனிதர்கள் பலர் உண்டு என்பது ஸெயிண்ட் டாமினிக், ஸெயிண்ட் பிரான்ஸிஸ் போன்றவர்களின ஜீவிய சரித்திரங்களைப் படித்ததினின்றும் விளங்கும். ஆயினும் மார்ட்டின் லூதர் செய்த சில பிரசாரங்கள் சரியாக ஒரு நூற்றாண்டு முன்னமேயே இங்கிலாந்திலும் நடந்தது. அப்படிச் செய்தவர் ஜான் விக்ளிப் என்ற ஆங்கிலேய மதகுரு ஆவர். அவருக்கு மதச் சீர்திருத்த இயக்கத்தின் "சுக்ர நக்ஷத்திரம்" (The Morning Star of the Reformation) என்ற சிறப்புப் பெயரும் உண்டு. ஆனால் சில பெரியார்களே அவரவர்களுடைய ஜீவிய காலங்களிலேயே மதிக்கப்பெறுவர்! வேறு பலர் இருக்கும் வரையில் பலருடைய உபத்திரவங்களுக்கும், வசை மொழிகளுக்கும், தூற்றுதல்களுக்கும் ஆட்களாகி மனம் நொந்து மடிவதும் உண்டு என்பது சரித்திர அனுபவ உண்மையாகும்! விக்ளிப் பிந்திய இனத்தில் சேர்ந்தவர்.

அவர் இங்கிலந்தில் ஹென்ரி IV காலத்து இருந்தவர். முந்தின தொடர்ச்சிகள் ஒன்றில் சொல்லப்பட்டபடி மதகுருமார்கள் பொருள் வெறி பிடித்துழன்று, தர்ம ஸ்தாபன சொத்துகளைச் சுருட்டுவதும், பற்பல சடங்குகளைப் பாமர ஜனங்களுக்கு பைபிள் ஆதாரங் காட்டி பணம் பறிப்பதும், பாப நிவாரணப் பத்திரிகைகள், புண்ணியப் பத்திரிகைகள் விற்பதும், ஆடம்பர வாழ்க்கை நடத்துவதும், தங்களுடைய பாரமார்த்திக காரியங்களைக் கடமையாகக் கொள்ளாமல் இருப்பதும் போன்ற நிலையிலிருந்ததைக் கண்டு மனம் புழுங்கியவர். அவற்றை எடுத்துரைக்க முயன்ற காலத்தில் பழிச் சொற்களுக்கும் ஆளானவர். பிறகு மதகுருமார்கள் இருக்கவேண்டிய நிலைமையை பாமர ஜனங்களுக்கு உணர்த்தவேண்டிப் பாடுபடத் தொடங்கினர். முதலில் மதகுருமார்களும், துறவிகளும் உண்மைத் துறவிகளாக இருப்பதன் அவசியத்தை வற்புறுத்த, தானும் தன்னைப்போன்று நினைத்தவர்களையும் ஒன்றுகூடி "ஏழைப் பரதேசிகள் அல்லது உபதேசிகள்" என்ற பொருளுள்ள "Poor priests" கூட்டம் ஒன்றை ஆரம்பித்தார். ஆங்கிலேயருக்குப் புரியும்படியான ஆங்கிலோ சாக்ஸனிய பாஷையில் பைபிளை மொழிபெயர்த்து மதகுருமார்க

ளின் பணப்பறிப்பிற்கு ஆதாரமில்லை என்பதை விளக்கினர். தானும் தன் கூட்டத்தாரும் கிராமங்கள்தோறும் பரவி ஆங்காங்கு மத உபன்யாசங்களைச் செய்து, அவரவர்கள் சந்தோஷமாகக் கொடுத்ததை வாங்கியுண்டு காலங் கழித்து உண்மைத் துறவிகளின் நிலைமையை பாமர ஜனங்களின் மனதில் வலியுறுத்தினர். அவர்களுடைய தொண்டில் பரவசப்பட்டு ஆதரவளித்த ஜனங்களின் தொகை வளரலாயிற்று. அதைக் கண்ட மாதாகோவில் மதகுருமார்கள் அவர்களை "Lollards" அல்லது அலைந்து அலைந்து திரியும் பிழைப்பற்றவர்கள் என்றும் ஏசினர்.

ஏசலில் சலிக்காது காரியம் செய்ததைக் கண்டு, பெரிய மதகுருவான போப்பைக்கொண்டு பிரஷ்டம் செய்யச் சொன்னதுடன், அக்காலத்திய மத ப்ரஷ்டர்களுக்கு கிருஸ்தவ உலகில் ஏற்பட்ட உயிருடன் கொளுத்தும் தண்டனையும் விதிக்கப்பட்டது. அவர்கள் மத ப்ரஷ்டர்கள் (Heretics) என்றும் திரஸ்கரிக்கப்பட்டனர். அப்படியான நிலைக்கு அஞ்சிய பாமர ஜனங்களும் விலகியோடினர். இம்மத குருமார்களுக்கு அவ்வக்காலத்திய அரசர்களும் அனுசரணையாக இருந்ததும் ஆச்சரியமேயாகும்! ஆனால் விக்ளிப்பும் அவருடைய ஏழைப் பரதேசிகளும் செய்த பிரசாரம் வீண்போகவில்லை. அதுவே தியாகத்தின் தன்மையு மாகுமன்றோ? மார்ட்டின் லூதரின் வீர மொழிகள் இங்கிலந்து ஜனங்களுக்கு விக்ளிப்பின் பிரசாரத்தை நினைவுறுத்தியது! ஆனாலும் என்ன! மார்ட்டின் லூதருடைய ஏழு முக்கிய பிரச்னைகளுக்கும் இங்கிலந்து அரசரான ஹென்ரி VIII சரியான சமாதானம் சொல்லி "மதக்காவலன்" என்ற பட்டத்தையும் பெற்று விட்டார்! அவரும் முரட்டு சுபாவமுள்ளவர்! "அன்றே கொல்லக்கூடிய அரசன்" கோபத்திற்கு அஞ்சிய பலர் தங்கள் உத்ஸாகத்தைக் காட்டாமலே மனதிற்குள்ளே வைத்துப் புழுங்கினர்! அவர்களுடைய எண்ணங்களுக்கொப்ப அவர்கள் பக்கில் கடவுளும் இருந்து, அந்த ஹென்ரி VIII அரசரே போப்புடன் எதிர்க்கும் சந்தர்ப்பம் வந்து நேர்ந்தது!

இந்த ஹென்ரிக்கு அவருடைய அண்ணன் ஆர்தருடைய கைம்பெண், வயதில் மூத்த காதரீன் என்ற ஸ்பெயின் இளவரசி சீர்வரிசைகளை உத்தேசித்து மணம் செய்விக்கப்பட்டாள் என்று முன்னரே சொல்லப்பட்டிருக்கிறது. அவளிடத்தில் அரசனுக்கு இப்போது வெறுப்பேற்பட்டது. ஆன் பொலீன் (Anne Boleyn) என்ற வேறொரு பெண்ணின்மேல் காதல் கொண்டு மணம்புரிய விரும்பினர். அப்போது காதரீன் விவாகத்தை ரத்து செய்யவேண்டி யிருந்தது. அக்காலத்தில், அதற்கு அனுமதிபெறவேண்டி போப்புக்கு எழுதும்போது, "அண்ணன் மனைவியைத் தம்பி மணப்பது மத விரோதம். அக்காலத்தில் பெரிய அரசர்களின் அபிப்பிராயத்திற்காக, அந்த மணத்திற்கு போப் அனுமதி கொடுத்தது அடாதகாரியம். அந்த அனியாயத்திற்கு கடவுள் கோபங்கொண்டுவிட்டதால் என் குழந்தைகள் எல்லாம் எமன் வாய்ப்பட்டன. எஞ்சியிருக்கும் ஒரு சிறு பெண்ணும் எப்போதும் நோயுள்ளதாக இருக்கிறது. எனக்குப் பின் பட்டம்பெற ஆண்பிள்ளை பிறக்கவேண்டும். ஆகவே அந்த மணத்தை ரத்து செய்து ஆன்பொலீனை மணப்பதற்கு அனுமதி கொடுக்கவேண்டும்" என்று வேண்டினர். என்ன செய்வார் போப்! அவர் அந்த நியாயத்தை ஒப்புக்கொள்ளத்தான் வேண்டியிருந்தது. ஆனாலோ முன் ஒரு போப் அனுமதித்த விஷயத்தை உண்மையில் தப்பானு



லும் ஒப்புக்கொள்ளுவதானல், பெரிய மதகுரு ஸ்தான போப்பின் கௌரவத்திற்கே ஹானி வந்துவிடுமே என்ற ஒரு ஹோதா அவரை வாட்டியது! தவிரவும் இதர மன்னரசர்களைப் போலவே தானும் அரசியல் விஷயங்களில் கலந்து சண்டை சமாதானம், ராஜ்யம் பிடித்தல் முதல்யவற்றில் உழன்று, கசங்கி அப்போதுதான் ஸ்பெயின் அரசனால் கைதியாக்கப்பட்டு, தன் அரண்மனைகளெல்லாம் தீயிலிடப்பட்டு, உயிர்ப்பிச்சை பெற்று விடுதலையடைந்து சற்று ஆசுவாசப்பட்டுக் கொண்டிருந்தார்! அந்த ஸ்பெயின் அரசனுடைய சிற்றன்னையானாள் ஹென்ரி விலக்க விரும்பிய காதரீன்! அந்தப் பயம் ஒரு பக்கம் போப்பை வாட்டியது. ஆனாலும் ஹென்ரி நியாயத்தைக் கோரியதாலும், மார்ட்டின் லூதர் பிய்த்தெறிந்த காலத்தில் ஏழு கொள்கைகளை ஸ்தாபித்ததனாலும் நன்றியறிவு உள்ள போப் அவருக்கு அனுமதியளிக்கவும் விரும்பியவரானர்! "இருதலைக் கொள்ளி" என்பார்கள் வசனம்! ஆனால் போப்புக்கோ "எப்பக்கமும் கொள்ளியாக" இருந்தது எழுத அவசியமில்லாத சரித்திர பூர்வமான உண்மை.

ஆகவே பழி தன்னைவிட்டு நீங்குவதற்கு ஒரு உபாயம் கண்டுபிடித்தார். இந்த விவாகத்து விஷயத்தை இங்கிலந்திலேயே விசாரித்து முடிப்பதாகச் சொல்லி, தன் பிரதிநிதியாக காம்பெக்கியோ (Campeggio) என்பவரையும், இங்கிலாந்திலேயே அரசனுக்கு வலது கைபோன்றிருந்தவரும், போப்பின் இங்கிலந்து பிரதிநிதியாகவும் இருந்தவருமான ஹென்ரியின் மந்திரி உல்ஸி (Wolsey) என்பவரையும் திட்டஞ் செய்தார். ஆனால் காம்பெக்கியோவை சீக்கிரம் அனுப்பாததுடன் அனுப்பிய காலத்திலும் விஷயத்தை எடுக்காமல் காலம் தாழ்த்தவேண்டும் என்று சொல்லியும் வைத்தார். ஆகவே காம்பெக்கியோ வர மாதங்கள் பல சென்றன. வந்தும் ஆர்ப்பாட்டம் பலமாக இருந்ததைத் தவிர விஷயத்தைக் கவனிக்கவே யில்லை. காதரீன் மிகவும் உத்தமியும், ஒழுங்குள்ளவளும் ஆனதால் உல்ஸிக்கும் விசாரணை ஆரம்பிப்பதில் இஷ்டமில்லை. தவிரவும் அவரும் போப் ஸ்தானத்தை அடைய ஆவல்கொண்டவராக இருந்தார். ஆனால் அரசன் கோபத்திற்குப் பயந்து காம்பெக்கியோ ஆரம்பிக்கட்டும் என்று பழியைத் தீர்த்துக்கொள்ள விரும்பினர். இதையெல்லாம் கண்ட அரசனுக்கு ஆன்பொலினை மணந்துகொள்ளும் ஆசையும் வலுத்து ஆத்திரமும் அதிகரித்தது. இந்த நிலையில் தானே விசாரித்துத் தீர்த்துவிடுவதாக போப் காம்பெக்கியோவைத் திருப்பி யழைத்துவிட்டார். பாவம் காதரீனும் கால் மண்டியிட்டு அரசனிடமும் நியாயாதிபதிகளிடமும் வேண்டியளவு உருக்கமாய் மன்றாடினளாம்! வந்தது கோபம் அரசனுக்கு! உல்ஸியை உத்தியோகத்தினின்றும் விலக்கி, ராஜத்துரோக குற்றத்திற்காக தன் முன் விசாரணைக்கு வரக் கட்டளை யிட்டார். வரும் வழியிலேயே உல்ஸி மரணமும் அடைந்தார்.

பொது ஜனங்களின் மனப்போக்கை ஒருவாறுணர்ந்த அரசன் உடனே தன் பார்லிமெண்டு சபையைக் கூட்டினர். அந்த பார்லிமெண்டு சபை செய்த தீர்மானங்கள் மதச் சீர்திருத்தம் வருவதற்கு வழி செய்ததால் அதற்கு சரித்திரத்தில் சீர்திருத்த பார்லிமெண்ட் (The Reformation Parliament) என்று பெயர் ஏற்பட்டிருக்கிறது. தான் முன்பு ஏழு கொள்கைகளுக்கு சமாதானம் லூதருக்கு மறுப்பாக எழுதியதை மறக்கவில்லைபோலும்! அப்பொழுதும், இம்பொழுதும் "பணமே தெய்வம்" என்பது இருக்

து. "பணமென்றால் பிணமும் வாய் திறக்கும்" என்பது பழமொழி. தவிரவும் இங்கிலாந்து அரசன் அதிகச் செலவாளி. வெகு தாராளக் கையர்-வசனம் பொய்க்காமல் போப்பின் வரும்படியைக் கையை வைத்து "வருஷாந்திரக் காணிக்கைச் சட்டம்" (The Act of Annates) என்பதைச் சபையில் ஆதரிக்கச் செய்து, வருஷவாரியில் போப்புக்கு ஏராளமாகப் போய்க்கொண்டிருந்த காணிக்கைகளை ஒழித்தார். தன் அபிப்பிராயத்தை ஆதரிக்கக்கூடிய தாமஸ் கிரான்மர் என்பவரை காண்டர்பரி மதகுருவாக்கி, அவரைக்கொண்டு கோரிய விவாக ரத்தும், ஆன்பொலீன் விவாக அனுமதிப்பும் பெற்றார். அதற்கடுத்து "மேல் விசாரணைச் சட்டம்" (Act of Appeals) என்றதைப் பிறப்பித்து மத விஷயங்களில் முடிவான தீர்ப்பைச் சொல்லும் அதிகாரம் போப்புக்கிருந்ததை ஒழித்து காண்டர்பரி மதகுருவே தீர்ப்புச் செய்துவிடலாம் என்று ஏற்படுத்தினார். இச் சட்டங்களை பார்லிமெண்டு சபையிலிருந்த ஜனப்பிரதிநிதிகளும் உவந்து செய்துகொடுத்தார்கள்! இவ்வளவிலும் திரும்பாத போப்பின் நிலையைக் கண்டு முடிவாக "சர்வாதிகாரச் சட்ட" (Act of Supremacy) த்தையும் போட்டு, அரசியல் விஷயங்களி லுள்ளதைப்போல மத விஷயங்களிலும் அரசனே சர்வாதிகாரி என்றும் ஏற்படுத்திவிட்டார். இவ்வளவு தூரம் செல்வதைப் போப்பும் தடுக்க முடியவில்லை. (ஆனால் தடுக்க இஷ்டம்தானோ அல்லது முடியவில்லையோ என்பது புலனாகவில்லை.)

இதற்குள் சீர்திருத்த அபிமானிகள் சிலர் சமயம்பார்த்து அரசனிடம் அண்டி, மடாலயங்களெல்லாம் சோம்பச் சாவடிகள் என்று நினைக்கச்செய்து, அவைகளில் முதலில் சிறியவற்றையும், பிறகு பெரியவற்றையும் அழிக்கச் செய்து, அவ்விடங்களுக்குச் சொந்தமான ஜங்கம, தாவர சொத்துகளையெல்லாம் அரசனையும் கைப்பற்றச் செய்து தாங்களும் பங்கிட்டுக்கொள்ளலாயினர். அதன்பிறகு சீர்திருத்த மதத்தை அனுஷ்டித்த ஜெர்மனி தேசத்திய (Anne of Cleves) என்ற ஒரு பெண்ணை அரசனுக்கு மணம் செய்வித்தனர். (மணத்திற்கு அவசியமும் சந்தர்ப்பமும் அடுத்த தொடர்ச்சியில் தெளிவாகும்) அதைக் கண்ட அரசன் சீறி விழுந்து, தன்னைச் சீர்திருத்தக் கொள்கைகளில் இழுத்த தாமஸ் கிராம்வெல் என்பவனைச் சிரச்சேதம் செய்தார். உடனே ஆறு கொள்கைகள் சட்டம் (The Statute of Six Articles) என்பதைத் திட்டப்படுத்திக் கதோலிக்க அதாவது பழைய மதக் கொள்கைகளில் முக்கியமான ஆறு கொள்கைகளை எல்லாரும் அவசியம் அனுஷ்டிக்கவேண்டும் என்று கடுமையாகத் திட்டப்படுத்தினார். பிறகு வில்லியம் டிண்டல் (William Tyndal) என்பவர் ஆங்கிலத்தில் எழுதிய பைபிள் புத்தகத்தை உபயோகிக்கலாம் என்று ஏற்பாடு சட்டமூலம் செய்தார். மற்ற விபரங்கள் பின்னொரு கட்டுரையில் வரும்.

அடுத்த பின்வரும் விஷயங்கள் சிலவற்றை புரிந்துகொள்ள அவசியமான "ஹென்ரி VIIIன் மனைவியர்" என்ற வியாசம் எழுதப்படும்.

# அறிவு

(தென்னாப்பிரிகா-டர்பன், சரஸ்வதி சபைத் தலைவர்
திரு. ச. முனிசாமி பிள்ளை)

மக்கட் கூட்டத்திற்கும் மற்றுமுள்ள உயிர்த் தொகைகட்கும் இயற்கையாகவே அவ்வவற்றின் நிலைமைக் கேற்பக் கடவுள் அறிவை அளித்திருக்கிறார். உயிர்த் தொகைகளில் அறிவில்லாதன ஒன்றுமில்லை. அறிவு, உணர்ச்சி என்பன ஒரு பொருளையே குறிப்பன.

அறிதற்குப் புலன்கள் கருவிகளாக இருக்கின்றன. எவ்வுயிர்கள் எவ்வெப் புலன்களைக் கொண்டு உணர்கின்றனவோ அவ்வத்தன்மையைக் கொண்டு ஆன்றோர் ஓரறிவுயிர், ஈரறிவுயிர், மூவறிவுயிர், நாலறிவுயிர், ஐயறிவுயிர் ஆறறிவுயிர் எனப் பகுத்துள்ளார்கள். இவற்றுள் நாம் ஆராயவேண்டுவது ஆறறிவுயிர்களாகிய மக்களின் அறிவைப் பற்றியேயாம்.

மக்களுடைய அறிவு சிறுபோதில் மாசுண்டமணியென அறியாமையில் மூடப்பட்டிருக்கிறது. பின்னர், சிறிது சிறிதாகக் கல்வி கேள்விகளால் அறியாமைவிலக; கழுவிய மணியை யொத்து அறிவு துலக்கமுறுகின்றது ஆகவே கல்வியும் கேள்வியும் அறிவைத் துலக்கும் கருவிகளாகின்றன. அன்றியும் கல்வி எத்தகைத்தாக வுள்ளதோ அத்தகைத்தே அறிவும். இக்கூற்றை "மாந்தர்க்குக் கற்றனைத் தூறும் அறிவு" என்னும் வள்ளுவர் வாக்கே வலியுறுத்துகின்றது. கல்வியென்னும் பெருங்கடலானது மிகப் பரந்து ஆழ்ந்து கிடக்கின்றமையானும், அதனை அள்ளியுண்ணும் மக்கள் சில வாழ் நாட் பல்பிணியினரும், மூப்பும் சாக்காடு என்னும் இவற்றிற் கிலக்காயினரும் ஆயினமையின், முற்ற வுண்ண வலிவுடையராக இன்றித் தமது தகுதிக்கேற்ப பகிர்ந்து உண்கின்றனர். அறிவுடைமையின் சிறப்பை,

"அறிவு அற்றங் காக்கும் கருவி செருவார்க்கும்
உள்ளழிக்க லாகாவரண்"—எனவும்
அறிவுடைய ரெல்லாம் உடையார் அறிவிலார்
என்னுடைய ரேனும் இலர்—எனவும்

வள்ளுவனார் கூறிய தெள்ளிய தொடர்களான மக்கட் கூட்டம் நன்கு அறிக.

உணவானது அழிவுள்ளதும் துக்கமயமும் ஆன உடலை வளர்ப்பது போல, கல்வியானது அழிவில்லதும் இன்பமயமுமான அறிவை வளர்க்கின்றது. உண்ட உணவே பின்னரும் அவ்வுணவை உண்ண வலிமையளிப்பது போன்று, முதலில் அறிந்த கல்வியறிவே பின்னரும் அக்கல்வியையே மேலும் அறிய வலியளிக்கின்றது. நிற்க, இனி மக்களின் அறிவு எவ்வெவ்வகையில் ஒளி செய்கிறது என்பதை ஆராய்வோம்.

முன்னோர் மக்கள் யாவரும் தம் அறிவின் ஆற்றலைக்கொண்டு கல்விக்கடலில் சிறுசிறு பகுதியே பகிர்ந்து உண்கின்றனர் எனக் கூறினோம்; அவ்வாறே கிடைத்த அறிவைக்கொண்டு ஒரு கவி, உலகில் இயற்கையழகைத் தன் கவியால் நலன் பெறப் புனைந்து உலகினருக்கு அமுதமென யமைவுபெற அளிக்கின்றான். ஒரு மனிதன், உலகின்கண் காணும் பொருள்களையும், இடங்களையும், வானத்தின்கண் தோன்றும் நாண் மீன், கோண் மீன், தாரகைகளையும் கணக்கிட்டு அகிலம் வியப்ப அறிய அளிக்கிறான். ஒலிநூல் வல்லுநன் உலகத்துறம் உன்னத மொழிகளின் ஒலி வேற்றுமையுணர்ந்து, அம்மொழிகளின் அமைப்பையும், பொருளையும், வேற்றுமையையும் புலியினர் புந்தியிற் புகுத்து நெகிழ்த்து அறிவெனும் மலரை அலர்த்துகிறான். உயிர்நூல் உணர்ந்தோன், உயிர் வருக்கங்களின் இயற்கையமைப்பின் அழகை இத்தகைத்தென அதிசயிக்குமாறு தெளித்துப் புலியினர்க் களித்துக் களிக்கிறான். இவ்வாறு ஒவ்வொரு மற்றைய பகுதியினரும் தத்தமக் கியன்றவாறு அறிவெனும் புணையால் கல்விக் கடலில் அமர்ந்து கடந்து ஆங்காங்குத் தத்தமக்குக் கிடைக்கும் நவமான நலன்மணிகளை யுலகினர்க்குவந்துதவி மிளிர்கின்றனர்; இத்தகைய பெருமையியைந்த பொருள்களை உண்டாக்கி அவற்றில் அணிந்து மகிழும் கடவுளின் அற்புத ஆற்றலை வியக்கின்றனர். நம்மையும் வியப்பிக்கின்றனர். இவர்கள் தாம் தத்தம் வாழ்நாட்களை இன்ப நாட்களாக்கி உலகவாழ்க்கையில் நிகழும் இன்ப துன்பங்களில் மூழ்கிக் கிடவாமல், அவ்வின்ப துன்பங்களின் உணர்ச்சியையே அறியாது கழிக்கின்றனர்.

மற்றுஞ் சில உண்மையறிவினர், "சத்தமுஞ் சோதிடமும் என்றாங்கிவை பிதற்றும் பித்தரிற் பேதையாரில்" என அத்தன்மையினரை யிகழ்ந்து தம்மைப்படைத்த தனிமுதற் பொருளை யுணரும் வாழ்க்கையில் மூழ்கி நம்போன்ற உலகத்தினரினின்றும் பிரிந்து ஏமாப்புறுகின்றனர். இவ்வறிவே உண்மையறிவாம். இத்தகைய அறிவு தமக்குக் கிடைக்கும்படி முன்வினையியற்றிய அறிவுச் செல்வர்களை நோக்கி நாமும் அவரென ஆக விரும்புதல் கானமயிலாடக் கண்டிருந்த வான்கோழி தானுமதுவாகப் பாவித்து தன் சிறகை விரித்தாடினாற்போன்று, முடியுமாதலின், இத்துடன் நிறுத்தி உலக வாழ்க்கையே மேற்கொண்டு இவ் வாழ்க்கையையாவது நன்கு நிறைவேற்றுமாறு நம் அறிவைச் செலுத்துவோம்.

கல்வியில்லாத சில செல்வர்கள் தமது அறிவு மாசுண்டு இருப்பதால், தம் முன்னோர்கள் ஈட்டிவைத்த ஆஸ்தியைப் பலவழியிலும் நாஸ்தி செய்து வறியராகின்றனர். இன்னவர்கட்கும், தாம் பொருளீட்டும் ஒன்றற்கே பிறந்துள்ளோம் என நினைந்தோ வேறு என்ன எண்ணங்கொண்டோ தம் வாழ்நாட்களைப் பொருளீட்டலிலேயே கழித்து அப் பொருளின் பயனை வீணே யிழந்து இறந்துபடுமவர்கட்கும் கல்வியறிவு உண்டானால் நலம் பல வுண்டாம். இவர்களுக்கு அறிவுச்சுடர் கொளுத்தவும், அறிவைத் துலக்கும் கருவிகளிற் பத்திரிகைகளும் பிரசங்கங்களும் முக்கியமானவையாகையால் அவைகளிற் மக்கட்கு ஆர்வம் உண்டாகவும் கடவுளின் அருள் அமைவதாக!

மற்றும் பலபல துறையிலும் நம் அறிவைச் செலுத்தின் கட்டுரை மிக நீண்டுவிடுமாகையால், இத்துடன் நிறுத்திக்கொண்டோம்.

# மாதர் உலகம்



## பிராட்டியார்

(ஸ்ரீமதி. பண்டித-அலாம்பிகை அம்மையார்.)

இவ்வண்ணம் தலைசிறந்த பொறுமையுடன் மனக்கொதிப்பு ஆறினவளாய் விளங்கிய பிராட்டியாரின் முக மலர்ச்சியைக் கண்டு குளிர்ந்த இருதய முடையவரான தசரதரும் வானவர் குழாமும் விடைபெற்றுப் பிரிந்த நிகழ்ச்சியே சென்ற மாத வெளியீடாகும்.

இனித் தாழாமல் பதினைந்த ஆண்டுகள் முற்றுமுன் பரதனைச் சென்று அடைய வேண்டுமென்று கருதிய இராகவன் குறிப்புணர்ந்து வீடணன் புட்பக மென்னும் தெய்வ விமானத்தை யளிக்க அதில் அனைவர்களுடனும் ஏறிபுற படுங்காலையில் பிராட்டியாரைத் திரிசடை வணங்குகின்றாள். அப்பெண்ணரசியை வாழ்த்தி நீ இலங்கைக்குத் தெய்வமாக இருப்பாயாக என்று பிராட்டியார் ஆசி புகன்று தானும் பிரயாணமாகின்றார்.

இலங்கைக்கு அணங்கென இருக்குமாறு பணித்ததால் திரிசடை கன்னித் தெய்வமாகவே என்றும் பொலிவதாக எண்ணவேண்டி யிருக்கிறது.

இராம சரிதத்தில் ஒட்புயர்வற்ற பாத்திரம் பிராட்டியாரே. அவரது இக்கரற சிறைவாசத்தில் கொழுகொம்பாக விருந்து பிராட்டியார் உள்ளந் தேறி யிருக்குமாறு சில அந்தரங்க உண்மை வரலாறுகளை அரக்கியர் அறியாமல் அற்றம் நோக்கி உணர்த்திக் காத்தவள் திரிசடையே. அவளுடைய உழைப்பு இல்லாவிடில் சரிதப் போக்கே வேறு விதமாக மாறியிருக்கும். விபீடணரின் உயரிய குணங்களெல்லாம் உருக் கொண்டது போன்ற அத்திரிசடை அரக்கர் குழுவில் பிறந்தும் வளர்ந்தும் அவர்களுடைய கருணையற்ற புன்மைக் குணங்களிலும் ஒழுக்கங்களிலும் ஒரு சிறிதும் பயின்றாளில்லை. எட்டி மரங்கள் நிலவிய கானில் தோன்றிய சந்தன மரம்போலத் தன் பரிசுத்த இயற்கை மாறா திருந்தாள். இவ்வுத்தமியைப் பெற்ற தாயும் அரக்கர் குல மாதாக இருந்திருக்க முடியாது. புலாலுணவும் மதுபானமும் காண முடியாத இல்லம் வீபீடணர் மாளிகையொன்றே என முன்னம் அநுமாரும் "நிந்தனை நறவமும் நெறியில் ஊனுணும் தந்தன கண்டிலேன்" என்ற செய்யுள் வாயிலாக இராமனுக் குணர்த்தியுள்ளார். இதையும் நினைவு கூறுங்கால் விபீடணர் மணந்த மாது அவர்

லத்துக்கேற்ற உயர்குல வனிதையாகவே யிருத்தல் வேண்டு மென்பது தெளிவு. தற்காலத்திலும் அசைவ பரம்பரையிற் சிலர் அறிவின் பயனாகச் சைவ உணவைக் கடைப்பிடிக்கின்றனர். அவர்கள் இல்லத்து மடவார் அதற்கெதிரிடையாக இருப்பாராயின் அந்தோ அவர்களை மணந்த ஆடவர் படும் துன்பம் எடுத்துக் காட்டவும் முடியுமோ? அதை விவரிப்பதும் ஈண்டு எடுத்துக்கொண்ட ஆராய்ச்சிக்கும் அப்பாற்பட்டதே. எனவே திரிசடையின் தாயும் தருமசீலையாகவே யிருத்தல் கூடுமென்று கொள்ளல் இயைபுடைத்தே என்பது துணிபு. மங்கலத் தெய்வமாகிய பிராட்டியாரையே மனமடியாமற் காத்த பாக்கியவதியைப் பயந்த தாயின் வரலாறு இராமாயணத்தில் விவரிக்கப்படாதது பெரிய குறையேயாகும்.

பூமியிற் பிறந்த பிராட்டியாரை எடுத்து உடல் புளகித்து உள்ளங் குழைந்து வளர்க்கும் புண்ணியசாலியின் வரலாறும் கவிச்சக்கரவர்த்தியின் தெய்விக வாக்கில் காணக் கிடைக்கவில்லை என்பது பின்னும் பெருங்குறையேயாகும். ஞான வேந்தாகிய ஜனகருக்கு உரிய அரசியார் இருந்தாரல்லது இல்லை என்பதுகூடக் கம்பநாடர் கவிதைகளால் அறிய முடியவில்லை. நிற்க, இனிப் பிராட்டியார் விமான மூர்ந்து செல்லுகையில் தனது ஆருயிர்க் காதலனால் தன்னைப் பிரிந்திருந்த காலத்தில் கண்ட தலங்களையும் நிகழ்ந்த நிகழ்ச்சிகளையும் தொடர்ந்து புகலக் கேட்டு இன்புறச் செல்கின்றார். பிராட்டியார் அவ்வமயத்திலும் தன்னை யனல் மூழ்கப் பணித்த கொடுமையை ஒரு சிறிதும் நினைவுகூர்ந்தாரில்லை. பழமைபோல் நேசித்தார். இஃதன்றே அவர் ஜகன்மாதா வென்பதைப் பின்னும் அழகு செய்கிறது. மானிட மடவார் சென்ற பிறவியில் இடர் செய்தவராகக் கனவு கண்டாலும் பகைப்ப தியல்பு.

தேவ மாதரிலும் வன்மம் கொண்டு கொடுஞ் சாபமளித்த கதைகள் பல வுண்டு. இப்பெருமை தோன்றவே கம்பர் ஓரிடத்தில் "எண்களால் அளவாமானக் குணத்தொகுத் தியற்றினளை" என மனநெகிழ்ந்து போற்றினார் போலும். பிறகு கிட்கிந்தையை யணுகியபோது தான் தனியையாகப் போர்ப்பெரும் படைகள் சூழ அயோத்தி சென்றடைவது அரச குல மடந்தையருக்கு அழகிய தன்றென்றும் கிட்கிந்தையில் உள்ள பெண்கள் குழுவும் உடன்வரப் பணித்தல் வேண்டுமென விரும்புகின்றார். அவ்வாறே சுக்ரீவன் ஆணையால் அங்குள்ள வானர மகளிரெல்லாம் மானுட வடிவந் தாங்கி வந்து பிராட்டியாரை வந்து மங்கலப் பொருள்களோடும் வந்து கண்டு வணங்கி அருகுசூழ்ந் தமர்ந்தனர். உலகில் உள்ள சாமானியமான பெண்மைத் தன்மைக்கு அவசியமான (ஆடவர் குழுவிற் பெண்கள் தனித்திருப்பது அழகு செய்யாதெனும்) கொள்கையையும் பிராட்டியார் புறக்கணித்தாரில்லை. பின்னர் பிராட்டியார் அயோத்தியை யடைந்து நிகரிலாச் சிறப்பொடும் முடிசூட்டப்பெற்ற தாசரதியோடும் அரியணை பொலிந்து இன்புற்று வதிந்தனர்.

கம்பநாடர் பின்னும் பிராட்டியார் புல்லிய ஒருவனால் இழித்துரைக்கப் பெற்றதாகவும் அப்பழி மொழி கேட்ட இராமபிரான் கருப்பவதியாகவிருந்த தேவியாரை வஞ்சகமாகத் தேரேற்றி தம்பியாகிய இலக்குவனைக் கொண்டு துஷ்ட மிருகங்கள் வசிக்கும் பயங்கரமான ஆரண்யத்தில் தனிமையில் விட்டு வரும்படி ஆணை தந்ததாயும் அவ்வாறே விடப்பட்ட மைதிலியின் திக்கதியான நிலைமைக் கிரங்கி முழுது முணர்ந்த வான்மீகி முனிவர் அவரை யடைந்து அவர் சோகத்தை யாற்றித் தனது ஆச்சிரமத்தில் அழைத்து வந்து



முனிவர் பன்னியர் பலர் உபசரிக்கத் தந்தைபோற் புரிந்து போற்றி வந்ததாகவும் உரிய காலத்தில் உத்தம புத்திரனைப் பெற்று உவகையுடன் வளர்த்து வந்ததாகவும், இரகுபதி அசுவமேத யாகம் புரியத் தொடங்கி விட்ட அசுவத்தை பிராட்டியாரின் காதற் குமாரனாகிய லவன் என்னும் இளஞ் சிங்கமும் வான்மீகி பகவானால் தருப்பையினால் லவனைக் காணாதபொழுது பிராட்டியாருக்கு அஞ்சி சிருஷ்டிக்கப்பட்ட குசன் என்னும் தம்பியும் பற்றிப் பிணித்ததாகவும் அதனை விடுவிக்க அசுவ ரட்சகர்களாகத் தொடர்ந்து வந்த இராம சகோதரர்களை எதிர்த்து முறியடித்ததாகவும், இதனைக் கேட்ட இராமன் இத்துணை ஆற்றல் வாய்ந்த முனி குமாரர்கள் யாவரென வியப்புற்று வான்மீகி பகவானால் உண்மை யறிந்து தனதரசுக்குரிய அரும் புதல்வர்களே எனத் தெரிந்து உள நெகிழ்ந்து ஆராக் காதலுடன் அவர்களை யேற்றதாகவும் அம்முறையும் தன்னைப் பிரிந்திருந்த காலத்தில் பிராட்டியாரின் ஒழுக்கமுடைமைக்குச் சான்றாக மீண்டும் அனல் மூழ்க வேண்டிய விருப்பத்தை வெளியிட்டதாகவும் அது கேட்டுப் பொறாத சிந்தையராகிய பிராட்டியார் அனைத்தையும் வெறுத்துத் தன்னை யளித்த பூமிதேவியை வேண்டி இடமளிக்கும்படி ஒங்கி மண்மீதறைய உடனே பிலந் தோன்றியதாகவும் அதன் வழி மின்னொளிபோன்று வெளிவந்த பூமாதேவியின் தெய்வமாதின் வடிவம் தன் காதற் புதல்வியைக் கணத்தில் கொண்டு மறைந்ததாகவும் உருக்கரந்து வைகுண்டம் சென்றடைந்ததாகவும் அதுகண்டு வெகுண்ட இராமனை முனிவர் ஆற்றி மேல்விளைவுணர்த்தித் தணிவித்ததாகவும், பின்னர் திருமகளையிழந்து பல்லாயிரமாண்டுகள் பூமி பரிபாலனம் புரிந்து லவனுக்கும் குசன் என்னும் இளைய புதல்வனுக்கும் முடிசூட்டி தென்திசைக் கடவுள் நேரே வந்து நினைவூட்டப்பெற்று சகோதரர்களுடன் பரமபத நாட்டிற்குத் தெய்வவிமான மூர்ந்து சென்றதாகவும் இராமகதையின் பிற்பகுதி முடிவுபெறுவதாகக் காண்கிறோம். மனதாலும் சிந்திக்க முடியாத ஜனகியின் சோகந் ததும்பிய அதிகுரூர சம்பவங்களை ஆராய்ச்சிக்குரிய சுவையுடைய பகுதியாகக் கொள்ள மனம் ஒருப்படவில்லை. கவிச்சக்கிரவர்த்தியாகிய கம்பநாடரும் அவைகளைச் சித்தரிக்க மனந்தரியாமலே கைவிட்டிருக்க வேண்டுமென்பதும், இரக்கமும் நீதியும் கலந்த மென்மையான உள்ளமுடைய எவர்க்கும் தோன்றாமல் இருப்பதற்கில்லை. இன்றும் அறிஞர் எவரும் இம்மைப் பயன் குறித்துப் பாராயணம் செய்யும் பகுதியாகவும் கொண்டதாகத் தெரியவில்லை.

தாற்காலிகமாகத் துக்க நிவாரணம், சுகப்பிராப்தம் போதாவென்றுங் கோடிக்கணக்கான அறிஞர்கள் மீட்டுமீட்டும் சலிப்பின்றிப் படனம் செய்து பலன் பெறுவதும் பிராட்டியார் அசோகவனத்தில் அநுமனால் அளிக்கப்பட்ட கணையாழி பெற்றுக் களித்த பகுதியே யென்பதை ஈண்டு வாசகர் எவரும் மறப்பதற்கில்லை. எனவே பிராட்டியாரின் துக்கநிவாரணம் ஒன்றே அதனைப் படனம் செய்வோரின் சோகநிவாரண மார்க்கம் என்பது தெளிவு. பிராட்டியார் துயரத்தை மிகைப்படுத்த வெழுந்த பகுதிகளைப் படித்தாலும் படிப்போர்களுக்கு எதிர்பாராத துன்ப நிகழ்ச்சிகள் ஏற்படுவதும் அநுபவமுண்மை. ஆதலால் கற்பிலக்கணத்தினை உலகில் நிறுத்திப் பொறுமையைப் பொலிவித்துப் பூபாரம் நீக்கி நல்லோர்க் கிதம்புரிய அவனியில் அவதரித்த திருமகளாகிய பிராட்டியாரின் பெருமையைக் கவிச்சக்கிரவர்த்தி மனக்கண்களால் கண்டு போற்றிய அளவுடன் நிறுத்திக்கொள்ளுவதை வாசகர்கள் பொறை கூர்ந்து மன்னிப்பார்களாக. இனி, முடிவுரையாகச் சில பகுதிகள் வரைவது கடமை.

இந்தப் பிராட்டியாரின் சரிதம் இருபத்தினான்கு சஞ்சிகைகளில் அறிவுக்கும் ஆற்றலுக்கும் ஏற்ப விவரிக்கப்பட்டுள்ளது. தொகுத்துக் கூறுங்கால் இதிகாசங்களே மக்களுக்கு நல்லறிவூட்டும் சன்மார்க்க போதனைகளென்பது தெளிவு. அந்தத் தலையாய நோக்கங்கொண்டு வாசகர்கள் போற்றி யொழுகல் வேண்டுமன்றி நமது உணர்ச்சிக்குப் பொருத்தமற்றதாகத் தோன்றும் சிற்சில பகுதியில் இலக்கணக் கவிஞர் சொல் இன்பந்தேடுவர்; மலக்கு சொற்றேடுவர் புன்கணோர்கள் என்ற முன்னோர் கூற்றுக்கிலக்கணமாக வீணான வாதத்தில் இடர்ப்படுதல் அறிவுடைமையாகாது. சிறந்த பிராட்டியார் கம்பர் கூறியபடி கன்னிமாடத்திலிருந்து பிரதமக் காட்சியாக இராமனைக் கண்ணுற்று காதல் கொண்டதாக வைத்துக்கொண்டாலும் விற்பிடித்த கரத்தினன் முப்புரிநூலினன் ஆதலினால் என்னை மணமுடிக்கத் தக்க "அரசிளங்குமரனே காதல் வேண்டுமால்" என்பதை முதலாகக் கருதியிருக்கின்றார். தந்தையின் சங்கற்பத்திற்கு மாறாக முடியின் இக்குமாரனுடன் யானை நேசித்து இன்புறுவேன் என்று முடிவு செய்யாமல், இவன் அல்லனேல் இறப்பல் என்று உறுதிகொண்டதாக அமைத்திருப்பதும் பேரடக்கம், பெரியோர்க்கு மீறுமை காதற் கடிமையாகாமல் கொள்கைக் கடிமையாகும் உணர்ச்சி இவைகளை நன்கு விளக்குகின்றன.

தவிர, அரசபோகத்தில் வதியும் யுவர்களும், யுவதிகளும், அஞ்ஞான்று எளிய வாழ்க்கை மேற்கொள்ளவும், இயற்கை யுணவாகிய காய்கனி கிழங்குகளையுண்டு புற்றரையில் உறங்கித் தழைக்குடில்களில் வதிந்து தவ வாழ்க்கை பேணத் தயங்குவதில்லை யென்பதும் இச்சரித்திரத்தினால் அறியக் கிடக்கின்றது. மனித தேகம் வந்தபின் மூவரில் ஒருவராயினும் தவறுதல் இயற்கை யென்பதும் பிராட்டியார் பொன்மானைப் பற்றித் தரும்படி இராமனை வற்புறுத்தியதும், பின்னர் காவலாக இருந்த இளவலை நிந்தித்து அகற்றியதும் ஆகிய உதாரணங்களால் விளங்குகின்றது. எத்துணைத் தக்கோராயினும் தவறிழைத்தால் அதன் பயன் அவர்களைப்பற்றி வருத்தாமல் விடுவதற்கில்லை யென்பதும் இவ்வுதாரணத்தினாலேயே தெளிவாகின்றது.

"ஊழிற் பெருவலி யாவுள" என்ற வாக்கின்படி மனித சக்தியினால் வினைப்பயன் தடுக்கக்கூடிய தன்றென்பதும் தெளியக் காட்டுகின்றது.

பெண்கள்பால் கரைகடந்த பற்று வைத்து அவர்கள் ஆட்டி வைத்தபடியெல்லாம் ஆடினால் அதனால் விளையும் பெருந்தீங்கு எவ்வகையிலும் பிறகு திருத்த முடியாதென்பதற்குத் தசரதர் கைகேசியினால் அடைந்த கொடிய துன்பமே பெருஞ்சட்டாகும்—உத்தமமான மனைவியைப் பழி சூட்டி அடிக்கடி துன்புறுத்தும் கணவர் இறுதியில் துக்க வாழ்க்கையிற் றோய்வர் என்பது பிராட்டியை யிழந்து இராமன் உலகில் நெடுங்காலம் கசப்பான வாழ்வு நடாத்தியதே தக்க சான்றாகும்.

பெண்கள் நெக்குருகிக் கரைந்து அழுத கண்ணீர் வீழ்ந்த நாடு பின்னர் எக்காலும் பொலிவுடன் பழைய பதவியை அடைவதில்லை யென்பதும் தற்கால அயோத்தியைக் காண்போர் கருத்திற் பதியாமலிருக்க முடியாது.

தவிர, பெறற்கரிய செல்வம் பெற்றாலும் மதிப்பதற்கரிய தவம் புரிந்தாலும் கல்வி கேள்விகளிற் சிறந்தாலும், பரதாரத்தை விரும்புவானேயாயின்



அவர் உலகில் வீழ்ந்துபடுதல் உண்மையென்பது இராவண நாசமே உதாரணமாகும். புலனடக்கமும் தவநெறியும் தவறாதுபேணும் உறுதியுடையவர்களுக்கு அறக்கடவுளே தோன்றாத் துணையாக முன்னின்று காக்குமென்பதற்கு அரக்கன் இராஜதானியில் இரக்கமே உருக்கொண்டதுபோன்ற திரிசடையாகிய பெண் தெய்வத்தை முன்னரே தோற்றுவித்திருக்கும் நியதியே தக்க உதாரணமாகும். தான் பத்தினியாயின் தாசியர் வீதியிலும் வசிக்கலாம் என்னும் சாமானியப் பழமொழிக்கு விபீடணனின் சீலமும் குணமுமே போதிய காட்டாகும். சிற்றறிவினரைச் சேர்க்கை வாசனை களங்கப்படுத்துமே யன்றிப் பேரறிஞரை ஒன்றும் செய்யமாட்டாதென்பது இதனாற் போதருகின்றது. சுருங்கக் கூறுமிடத்து பெண்பாலாரைப்போல ஆண்பாலாரும் ஏக பத்தினி விரதம் அநுஷ்டிக்கலாமென்பதும் ஏகாதிபத்தியத்தையும் மெய்யறிவுண்டாயின் தயங்காமல் துறக்கலாமென்பதும் அடாது செய்தவன் அடைக்கலம் புகினும் அபயம் தருவது ஆண்மை யென்பதும் முக்கிய விடயங்களாகும்.

இனி நமது கட்டுரைத் தலைவியாகிய பிராட்டியார் மலர்ந்திருந்த குணநலங்களை விவரித்தல் என்போற் சிற்றறிவினரால் இயல்வதன்று. எனினும் இளமையிற் றுறக்கத் துணிந்ததும் கணவன்மாட்டு எவ்வித ஐயமும் கொள்ளாமல் பளிங்குபோல் இருந்ததும், இன்னா செய்த வன்கண்ணரக்கியரையும் மன்னித்ததும், தன்னுயிரை மாய்க்கக்கூடிய நிர்ப்பந்தம் நேர்ந்தபோதும் தனது வேந்தன் வீரத்திற்கு இழுக்கு நேருமென வெண்ணி அரக்கனைச் சபியாதிருந்த பொறுமையும், கைகேசியாகிய மாமியையும் அவமதியாத பெருங்குணமும் மனித வகுப்பில் பிறந்த உத்தம மாதர்க்கும் அமைவதன்றாகும்.

இவ்வளவும் உலகியல் அறத்தின்பாற் கருத்தூன்றி சீரிய ஒழுக்க நூலாகக் கருதும் வகையில் மிளிர்வதாகும். காலபேத வழக்குகட்கேற்ப முரண்பட்டதாகப்படுவதும் கவிகளின் கொள்கையின் சாயல் சிறிது உருக்கொள்ளுவதும் மரபேயாகும்.

இதிகாசங்களையே தத்துவார்த்தமாகக் கொள்ளும் தொன்மை வழக்காற்றில் இத்தகைய இடர்ப்பாட்டிற் கிடமேயில்லை. தசரதனை மனமாகவும் பத்துத் திக்குகளையும் தசேந்திரியங்களாகவும், பட்டமகிஷிகள் மூவரும் முக்குணங்களாகவும் நான்கு புத்திரர்களும் சதுர்வித புருஷார்த்தங்களாகவும், இராமன் பரமாத்மாவாகவும், பிராட்டியார் மூலப் பிரகிருதியாகவும், இராவணன் ஆணவமாகவும், மாரீசன் மாயையாகவும், சூர்ப்பநகை காமியமாகவும், விபீஷணன் சுத்த தத்துவமாகவும், திரிசடை சத்போதமாகவும் அநுமான் தீவிர வைராக்ய முயற்சியாகவும் அந்வயம் செய்து பார்ப்பின் எவ்வித ஆட்சேபங்களுமின்றாம். இவ்விதமாகப் பிறவும் பொருத்திக் கூறுவதுண்டு. முற்றும் விவரிக்கிற் பெருகும். அது வேறொன்றாக விரியும் ஆதலின் இம்மட்டோடு விடுப்போம்.

ஓம் சுபம்.

பிராட்டியார் திருவடிகளே சரணம்

# ‘மணிமேகலை’ நூலின் அமைப்பும சரித்திரக் குறிப்பும்

R. V. இராமஸ்வாமி B. A., B. L. வக்கீல், சேலம்.

(Right Reserved.)

## பதிகம் கூறும் கதை

சம்புத்தீவின் தெய்வமாகச் சம்புவென்பாள் விளங்கா நின்றனள். புன்தொழில் புனைந்து சூழத் தகாது செயல்கள் யாவும் தடையின்றிச் செய்துவந்த வெந்திறலரக்கர்கள், மாநில மடந்தைக்கு இன்னல் பல விளைத்து அவ்வம்மையை இடுக்கணுள் ளாழ்த்தி வந்தனர். தாங்கொணாத் துயருற்றுத் தவித்திடும் அம்மாதின் நிலையை நோக்கி ஆற்றொணாக் கோபம் சம்புத் தெய்வத்திற்குப் பொங்கி மேலெழுவ தாயிற்று. இன்னலை நீக்கி இன்பத்தை யாக்கி நிலமடந்தைக்கு நித்தியானந்தத்தை எய்துவித்தற் கெனத் தீவின் தெய்வம், கிளைகளைப் பரக்கக்கொண்ட சம்பு மரமொன்றன் கீழ்நின்று, வெம்பகை நோற்று ஒருவாளாயினள்.

**சம்பாபதி.**

மனைதொரு நிலையிருத்தி மாதவ மேற்கொண்ட அத்தெய்வ மாது காரிருளையும் கலங்கச் செய்யும் கருநிறம் வாய்ந்த விரிசடை கொண்டவள். இளங்கதிரைக் கொண்ட ஞாயிறையும் எள்ளும் தூய்மை தங்கிய தோற்றத்தினள். மாசின்றி விளங்கும் ஒளியுடைய மேனியள்; பொன்னிறங் கொண்டு திகழ்ந்து விளங்கிய நெடிய மாமேருவின் சிகையென நின்றிடும் ஒளியுடைய உச்சியில் தோன்றியவள். அவ்விடத்தை விட்டுத் தமிழ்த் தென்றல் தலைசிறந்து வீசிவந்த தென்றிசைக் கண்ணே பெயர்ந்து வசிக்க லுற்றவள். அவள் உறைவிடமாய்க்கொண்டு உவந்து இருந்தமை பற்றியே, பழம் பதி பலவன்றும் ஒல்காப்புகழை எக்காலத்தும் கொண்டு பிரசித்தி பெற்று மேன்மையொடு விளங்கிய காவிரிப்பூம்பட்டினத்திற்குச் சம்பாபதி யென்பது பழைய பெயராக வழங்கி வரப்படுவதாயிற்று.

செங்கதிர்ச் செல்வனின் திருக்குலமாகிய உயர்வற்ற தன் குலத்தைச் செழுமையால் விளங்கச் செய்திட, அக்காலத்திலிருந்த காந்தமனென்னும் சோழமன்னன், இச்சை பெரிதும் கொண்டனன். கஞ்சவேட்கையால் நெஞ்சம் பிணைந்த அஞ்சா அரசனாகாந்தமன், அமரமுனிவர் அகத்தியரை அண்டி அடிபணிந்து நின்று தன் குறைபாவும் அவர்பாற் கூறி, அதனைத் தீர்த்திடல் வேண்டுமெனக் குறையிரந்து நின்றனன். மன்னனின் மனக்கருத்தை மகிழ்வொடும் கேட்ட மாதவரும், தமது காத்தகத்திருந்த கமண்டலத்தைக் கவிழ்த்தனர். அதனுள்ளிருந்த காவிரியாகிய மங்கையும் வெளிப்போந்து, செம்மையால் விளங்கிய கீழ்த்திசை வழியே ஆரவாரத்தோடும், அதிவேகமாகச் செல்லலுற்றனள். சென்ற நதி மங்கை அவளும் சம்பாபதி தவம் செய்யாநின்ற நல்லிடத்திற் கருகாமையில், பெரு முழக்கொடு மண்ணையும் மக்களின் எண்ணையும் அச்சுறுத்தும் அலைகளைக் கொண்ட கடலோடு கலக்கக் கடிதே யோடி வருவா ளாயினள். அருந்தவ முதியோளாகிய சம்பாபதி, ஆங்கு நீர்ப்பாவையை உவந்து எதிர்கொண் டழைத்து,

**காந்தமன.**



“ஆணு விசும்பின் ஆயகங்கை
வேணவாத் தீர்த்த விளக்கேவா.”

வென ஆசிகூறி அன்பு நிறைந்த அகத்தோடும் அழைத்திட்டனள். அதுகண்டு பெருந்தவப் பெரியார் அகத்தியத் தபோதனர், ‘அன்னாய்! இந்தப் பெருமை தங்கிய அருந்தவ முதியோள், நின்னால் வணங்குந் தன்மையள்; அம்மாதைப் பணிந்து வணங்குக” எனக் காவிரியை நோக்கிக் கனிமொழி கூறினர். கூறலும், பரத கண்டத்தில் சிறப்புற்றோங்கிய கோடாச் செங்கோற் சோழர் தங்குலக் கொடியானவளும், அம்மன்னர் மன்னர் தம் கோணிலை திரிந்து கோடை நீடினுந் தனது நேரிய நன்னிலையினின்றும் சற்றும் திரியாத தண்டமிழ்ப் பாவையுமாகிய காவிரி நங்கை, அங்ஙனமே தொழுது நிற்பாளாயினள். நின்றவளைத் தொன் மூதாட்டி சம்பாபதி உவகையொடு நோக்கிச் “செம்மலர் முதியோனான பிரமதேவன், தெய்வக் கருவும், திசைமுகக் கருவும் செய்த அந்நாள் முதல், என் பெயர்கொண்டு விளங்கா நிற்கும் இம்மூதூர், இனி நின் பெயர்பூண்டு ஒளியொடும் விளங்கட்டும்” எனக் கூறி வாழ்த்தினள். சம்பாபதியெனச் சிறப்புடன் அழைக்கப்பட்டு வந்த அப்பதியும் அன்று தொட்டும் காவிரிப்பூம்பட்டினமென வழங்கப்படுவதாயிற்று.

**காவிரியின் பெருக்கு.**

இங்ஙனமாக இருபெயரினையும், வெம்பகைவரையும் அச்சங்கொண்டு பின் வாங்கச் செய்யும் பெருமையையுங் கொண்ட அந்நற்பதியில், பொது நன்மைகருதி நூறு வேள்வியரவோன்றனக்குப் பெருவிழா வொன்று வறையப்பட்டது. வறைந்ததும், மாதவியின் நற்றாயாகிய, சிதைந்த நெஞ்சினள் சித்திராபதி, வழக்கப்படி ஆடுதற்கு வாராத தன்னருமை மகளைக் குறித்து நகரம் முழுவதும், பழிமொழி பெருகி யுள்ளதை அன்னளின் தோழி வயந்த மாலையின் வாயிலாக அறிந்து, அவற்றினை மாதவிக்கும் தெரியப் படுத்தினன். நாடகக்கணிகை மாதவி, கள்ளப்பழியைக் காதிலேற்றுக் கடுங்கொலைக்கு ஆளாகிய தனது காதலன் கோவலன் இறந்ததின் பின்னர் மாதவத்தை மேற்கொண்டாளாகலின், தாய்மொழியைத் தாதி வாயிலாகக் கேட்டுச் சற்றும் அசைந்திட்டாளில்லை. அவள் மகள் மணிமேகலை, இறந்த தனது தந்தையை நினைந்து வருந்திய மனக்கவலையை மாற்றுதற்காக, மாமலர் கொய்து மாலை தொடுத்திடும் மனத்தோடு, அணிமலர்ப் பூம்பொழில் உவவனத் தகத்தை நாடித் தோழி சுதமதியோடுஞ் சென்றனள்.

**இந்திரவிழா.**

ஆங்கு, காமத்தீயின் வசப்பட்ட அரசிளஞ் சிறுவன் உதயகுமரன், கொடிய இச்சையோடும் தன்னை நாடி வருதலைக்கண்டு, அங்கிருந்த பளிக்கறை யொன்றின் உள்ளே புகுந்து மறைந்திருந்தனள். பாவையைக் காணாது சோழன் மதலை, கலங்கிய நெஞ்சினனாய்த் துயரத்தொடும் அகன்று அப்பாற் சென்று, “சூழ்ச்சியால் இவளை அடைந்திடுவேன்” என்று கூறி மீண்டனன். பின்னர் தெய்வீகத் தன்மை வாய்ந்த மணிமேகலா தெய்வமென்பது அவ்விடத்திற் றோன்றி, மணிமேகலையை எடுத்துச் சென்று மணிபல்லவமென்னும் தீவொன்றில் இட்டு அகன்றது. பின்பு அத்தெய்வம் உவவனமெய்தி மாதவியின் தோழியும் மணிமேகலையொடு வனம் வந்த வனிதையு

**வனத்தில் நடந்தவை.**

மாகிய சுதமதி யன்னையைத் துயில் எழுப்பி உற்றன கூறி உண்மையை அவளுக்கு விளக்கிச் சென்றது.

**தீவில் நிகழ்ந்தன.**

தீவினகத்தே தனித்து இருந்த மணிமேகலை துயிலுணர்ந்து, பயமும் துக்கமும் பெரிதுங்கொண்டு ஏங்கி வருந்தா நின்றனள். நிற்கும் அவள் முன்னர் ஒளிமணிப் பீடிகை ஒன்று தோன்றியது. அப்புத்த பீடத்தினின்றும் தனது பழம் பிறப்பெல்லாம் பான்மையி லுணர்ந்துகொண்டனள். பின்பு மணிமேகலா தெய்வம் அவள் முன் தோன்றி, வேற்றுரு அடைவிப்பதும், அந்தரத்தில் திரியச் செய்வதும், பசியை ஒழிப்பதுமாகிய மந்திரங்கள் மூன்றையும் உபதேசித்துச் சென்றது. தெய்வம் தோன்றிச் சென்ற பின்னர், மணிபல்லவத்துள்ள புத்த பீடிகையை தேவேந்திரனின் ஏவலால் காவல்பூண்டு ஒழுகுபவளாகிய (அத்தீவிற்கு அலங்காரமாக உள்ள) தீவதிலகை என்பாள், மணிமேகலையின் முன்பு தோன்றி, அள்ளக் குறையாது அறுசுவை அன்னமளித்திடும், அமுதசுரபி என்னும் பெயரினதான மாபெரும் தெய்வீகத்தன்மை வாய்ந்த பாத்திரத்தை, மடக்கொடி அவளை அடையச் செய்தனள்.

**வேற்றுருக் கொள்ளல்.**

பாத்திரம் பெற்ற பைந்தொடி உபதேசபலத்தால், மீண்டும் தனது நகரை அடைந்தாள். அங்கு மாதவியோடும் சுதமதியோடும் சென்று புத்த சங்கத்தைச் சார்ந்த மாதவர் அறவணரைத் தொழுதனள். அவரால் அமுதசுரபிக்கு அதிபனாயிருந்த ஆபுத்திரனின் வரலாறும், அவனுக்குச் சிந்தாதேவி அப்பாத்திரத்தைக் கொடுத்த விதத்தையும் கூறக் கேட்டனள். கேட்டதன் பின்னர் அப்பாத்திரத்தைக் கொண்டு பிச்சை ஏற்றற் பொருட்டு அவ்வூர்ப் பெருந் தெருவிற்குச் சென்றனள். பத்தினிப் பெண்டிர் பலர் பிச்சையிட அவற்றைப் பெற்றுக்கொண்டு காரிகை, எதிர்ப்பட்ட காயசண்டிகை என்பாளின் வயிற்றெழுந்த ஆனைத்தீ யென்னும் தீரா பசிப்பிணியைத் தீர்க்கச் செய்து, அவ்வூரின் அம்பலத்தை அடைந்தனள். ஆயிழை அம்பலமடைந்த செய்தியை அறிந்த கொங்கலர் நறுந்தார்க் கோமகனும் அவ்விடத்தை அணுக லுற்றனன். அவனது வருகையா லுளவாகும் தீமைகளை ஊகித்துணர்ந்து அவற்றினைப் போக்குவான் கருதிய மணிமேகலை, "வஞ்சை விஞ்சையன் மகள் வடிவாயினள்" அவ்வடிவோடும் அறஞ் செய்வோளாகிய சோழமன்னனின் வான் சிறைக் கோட்டத்தை அறக்கோட்ட மாக்கினள். வேற்றுருக் கொண்டிருந்த அவள் தனது மனைவி காயசண்டிகையே என நினைந்து, நிகழ்ந்தன அறியாத காஞ்சனன் என்னும் வித்யாதரன், அவ்வாயிழை தன்னை அவள் விரும்பாதிருக்கவும் தான் அவளை அகலாது அடைத லுற்றனன் 'கணவன் தன்னை மதியாது காரிகைமன்னன் மகனோடும் காதலுற்றனள்' எனச் சீற்றங்கொண்டு, தனது மைந்துடை வாளினால் நள்ளிரவதனில் வந்து அவனை வெட்டி வீழ்த்தினன். பழம் பிறப்பதனைப் பாங்குடன் உணர்ந்த பாவையவளும், முற்பிறப்பதனில் தனது கணவனாயிருந்த அரசிளங் குமரன் வாளுக் கிரையாகிக் கீழே கிடந்தலைக் கண்டு வாட்டங்கொண்டு வருந்தினள்.

அங்கிருந்த கந்திற்பாவை தெய்வமென்பது அவளுக்கு ஆறுதல் கூறித் தேறுதல் செய்து, இனி நிகழ உள்ளனவற்றைக் கூறுகின்றது. இக்கொலை நிகழ்ந்ததின் காரணமாக மணிமேகலை, மறைகழல் வேந்தன் மாவண் கிள்ளி



**சிறைவாசம்.**

யால் சிறையி லடைக்கப்பட்டனள். நாள் சில சென்றிட, சிறைக்கோட்டத்தி னின்றும் விடுபட்டு நறுமலர்க்கோதை இராசமாதேவியின் வயப்பட்டனள். பழி வாங்கும் நோக்குடன் வாட்டிய தேவியின் சூழ்ச்சி வலையில் சிக்கிச் சுழன்றிடாது தனது மந்திரபலத்தால் இலகுவே விலகி, அன்னளுக்கு நல்லறம் பலவும் நயந்துரை கூறி உபதேசித்து அவ்விடம் விட்டு நீங்கினள். சென்றவள் ஆபுத்திரனின் நாடாகிய சாவகநாட்டை அடைந்து, அம்மன்னனொடும் சென்று பீடிகையை மீட்டும் தரிசிக்க லாயினள் அப்பால் உயர்ந்த தவமுனிவன் வடிவைக்கொண்டு, பொற்கொடி மணிமேகலை, சேரமன்னனின் இராசதானியாக விளங்கிய வஞ்சி நாட்டை அடைந்து,

"நவையறு நன்பொரு ளுரைமினோ வெனச்,
சமயக்கணக்கர் தந்திறங் கேட்டுச்,"

**புகழ்வாழ்வும் இறுதிக் காலமும்.**

சிந்தையிற்கொண்டு ஆழ்ந்து சிந்திக்க லுற்றனள். தனது அருமைத் தாயையும் அருந்தவர் அறவணரையும் பின் தேடியவளாய்க் கச்சிமாநகரை யடைந்தனள். புகுந்தவள், தான் கொண்டிருந்த பொய்யுருவாகிய முனியுருக் களைந்து, முனிவர் தம் பாதத்தை முறைப்படி வணங்கித் தவத்திறம் பூண்டு தருமங்கேட்டுப் பின்னர் பவத்திற மறுகெனப் பாவை நோற்பதாயினள்.

**பாடலின் வரலாறு.**

இச்செய்திகளை இளங்கோவேந்தன் அருளொடுங் கேட்டுவரக் கூலவாணிகன் சாத்தன் என்னும் புலவர் இனிய நற்றமிழ் மொழியிலே, 'மணிமேகலைத் துறவு' என்ற பெயரொடும் இதனை ஆறைம் பாட்டினால், நிலவுலகத்தில் என்றும் நின்று உலவுதற்கென அருளிச் செய்தனன். இதுவே பதிகம் கூறும் கதை வரலாறு. இனி இங்கு சுருங்கக் கூறியுள்ளவற்றை ஒன்றன் பின் ஒன்றாக ஆராய்ந்திடுவோம்.

(தொடரும்.)

ஏஜெண்டுகள் தேவை.

எல்லா ஊர்களிலும் நமது 'ஆனந்தபோதினி' மாத, வாரப் பத்திரிகைகளை விற்பதற்கும், சந்தா சேர்த்துக் கொடுப்பதற்கும், விளம்பரம் சேர்த்துக் கொடுப்பதற்கும் தக்க சாமர்த்தியமுள்ள ஏஜெண்டுகள் தேவை. விவரம் அறிய விரும்புவோர் எமக்கு எழுதித் தெரிந்து கொள்ளவும். நமது புஸ்தகங்களும் பத்திரிகைகளும் எல்லா ஸ்டேஷன்களிலுமுள்ள ஹிக்கின்பாதம் புஸ்தகசாலைகளில் கிடைக்கும்

மானேஜர்.

# அப்யங்க ஸ்நானம்

(வி. சங்கரய்யர்.)

அப்யங்க ஸ்நானம் என்பது எண்ணெய் ஸ்நானம் என்று பொருள். இதை முறையோடு ஸ்நானம் செய்தால் மாத்திரமே சுகமடைய முடியும். சிலர் எண்ணெயை ஐந்து நிமிடங்களுக்குள் தேய்த்துக் கொண்டு உடனே அரப்புத் தேய்த்து ஸ்நானம் செய்கிறார்கள். வேறு சிலர் புஜபல பராக்கிரம முள்ளவர்களைக்கொண்டு தலையில் தாளம் போட்டுத் தேய்க்கச் சொல்லுகிறார்கள். நம் வீடுகளில் பெண்கள் தானாக எண்ணெய் தேய்த்துக் கொள்ளக்கூடாது என்று மற்றவர்களைக் கொண்டு எண்ணெய் தேய்க்கச் செய்கிறார்கள். இதனால் தேய்ப்பவர்கள் சூடு (காங்கை) இவருக்குத் தாக்குகிறது. இவைகளெல்லாம் உசிதமல்ல.

**சரியான முறை:**—பிறருடைய உதவியின்றி தானே யாவரும் எண்ணெய் தேய்த்துக்கொள்ளப் பழகவேண்டும். உச்சிமுதல் உள்ளங்கால்வரை ஒவ்வொரு பாகத்திலும் எண்ணெய் படும்படியாகத் தேய்த்துக்கொள்ளவேண்டும். நன்றாக அழுத்தித் தேய்க்கவேண்டும். தலையில் தேய்க்கும்பொழுது ஒவ்வொரு ரோமக்கால்களையும் கை விரல்களால் கலைத்துவிட வேண்டும். "எண்ணெய் விட்டுக் கெட்டது காது, விடாமல் கெட்டது கண்" என்பது ஆன்றோர் சொல். காதுக்குள் எண்ணெய் விடக்கூடாது. வலது கண்ணுக்கு வலது கை முதல் மூன்று விரல்களிலும் இடது கண்ணுக்கு இடது கை மூன்று விரல்களிலும் எண்ணெயைத் தேய்த்துக்கொண்டு பீளை வரும் மூக்கின் சமீப பாகமாக ஆரம்பித்து மாற்றிமாற்றி மை இடுவதுபோல் கண் கரிப்புத் தாங்கும்வரை மறுபடியும் மறுபடியும் தேய்க்கவேண்டும். இதனால் கண்களிலுள்ள தூசி மாசுக்கள் வெளியாகும். இதனால் கண்கள் சிவக்கும். நாசியில் நீர் இறங்கும். பிறகு பாசிப் பருப்பு, அரைப்பு, முதலியவைகளால் சரீரத்திலுள்ள அழுக்கை நன்றாகத் தேய்த்து எண்ணெயுடன் போக்கவேண்டும். பிறகு சரீரத்தில் துளி ஜலம்கூட இல்லாமல் துடைத்துவிட வேண்டும். அன்று பகல் நித்திரை செய்யக்கூடாது. எண்ணெய் ஸ்நானம் செய்த அன்று தலை சீவுதலும் கூடாது. தலை நன்றாக உலர்ந்தபின் வேண்டுமானால் தலை சீவிக்கொள்ளலாம். சனியும் புதனும் ஆண்பிள்ளைகளும் செவ்வாயும் வெள்ளியும் பெண்பிள்ளைகளும் எண்ணெய் தேய்த்து ஸ்னானம் செய்யத் தவறக்கூடாது.

**குணங்கள்:**—இவ்வித ஸ்நானத்தால் சரீரத்திலுள்ள சகலவித உஷ்ணமும் பறந்துபோய்விடும். மேகரோகங்களினால் ஏற்படும், கண்களில் நீர் வடி



தல், கண் எரிவு, கண் சிவப்பு, கண் மறைவு, கண்வலி முதலிய பல வியாதிகள் குணமாகின்றன. சரீரத்தில் உள்ள ரோமங்கள் வழி எண்ணெய் உட்சென்று உள்ளங்கங்களுக்கு மார்தவத்தை உண்டாக்குகின்றன. இந்த முறைப்படி அப்யங்க ஸ்னானம் செய்தால் நல்ல தாது பலமுண்டாகும். எண்ணெய் ஸ்நானம் வெந்நீரில் செய்வது உத்தமம். மறுநாட் காலை குளிர்ந்த ஜலத்தில் ஸ்னானம் செய்தால் மாத்திரமே மேற்கூறிய குணங்கள் உண்டாகும்.

எண்ணெய் ஸ்நானத்துக்கு நல்ல எள் எண்ணெய்தான் உத்தமம். அதிலும் எண்ணெயின் 1/3 பாகம் நெல்லிக்காய்ச் சார், 1/3 பாகம் கரிசாலங்கண்ணி (கரப்பான், பிருங்கம், கய்யாந்தரை)ச்சார், 1/3 பாகம் பசுவின்பால் இவைகளை ஒன்று சேர்த்துக் காய்ச்சி நல்ல மிளகு போட்டால் அது வெடிக்கின்ற பக்குவத்தில் இறக்கி ஆறினபிறகு சீசாக்களில் வைத்துக்கொண்டு தேய்த்துக் குளிக்கவும். இது மிகவும் தேகாரோக்கியமானது. யாவரும் இப்படி விதிவத்தான அப்யங்க ஸ்னானம் செய்துவந்தால் அவர்களும் உஷ்ணரோகங்கள் ஏற்பட்டு வைத்தியரைத் தேடவேண்டிய அவசியமேயில்லை. ஆண்பிள்ளைகளுக்கு சுக்கில பலமும் பெண் பிள்ளைகளுக்கு சோணித பலமும் உண்டாவது உறுதி. அதன் காரணமாக பிற்காலத்தில் சத்தாகவும் ஆயுஷ்மந்தனாகவும் உள்ள சந்ததிக்கும் காரணமாகிறது. அப்யங்க ஸ்நானம் செய்த அன்று ரதி சுகத்தில் இச்சை வைக்கக்கூடாது. கடினமான வேலை செய்யக் கூடாது. குளித்தவுடன் வாயு கொள்ளாமலிருக்க மூன்று அல்லது ஐந்து அல்லது ஏழு நல்ல மிளகும் உப்பும் வாயில் போட்டுக் கடித்து சாப்பிடவும். தலை எண்ணெய் வைத்துக்கொண்டு தலை துடைத்து மிளகு சாப்பிடும்வரை பக்ஷணங்களோ, மற்ற ஆகாரமோ உண்ணவோ, அல்லது தண்ணீர், காபீ முதலியவை அருந்தவோ செய்யக்கூடாது. கூடுமானால் குளித்தவுடன் மிளகு, சாம்பிராணி, ஓமம், விபூதி இவைகளாலாகிய பொடியை உச்சியில் தேய்த்து மூக்கில் முகருவது தேக சவுக்கியத்துக்கு இன்றியமையாதது. 'வைத்தியனுக்குக் கொடுப்பது வாணியனுக்குக் கொடு' என்ற பழமொழி யறியாதவர் இரார். ஆகையால் எக்காரணத்தையிட்டும் எண்ணெய் தேய்த்துக்கொள்வதில் அசிரத்தையோ அலக்ஷியமோ செய்யாமல் மேற்கூறிய விதிப்படி எண்ணெய் தேய்த்துக் குளித்து 'நோய்க்கிடங்கொடா'மல் இருக்கும்படி யாவரையும் கேட்டுக்கொள்ளுகிறேன். யாவரும் ஒருநாளும் இரவு காலங்களிலும் எண்ணெய் தேய்த்துக் குளித்தாலும் தயிர் உபயோகிக்கவே கூடாது. ராத்திரியில் தயிர்சேர்த்து உண்டால் உறங்கும்பொழுது ஜீரணக் கருவிகளுக்கு ஒருவிதமான சக்தி குறைந்து உண்பவர்களுக்கு வாழ்வுநாளின் எண்ணிக்கையைக் குறைக்கின்றது. மோர் கூட்டலாம். மோரின் குணத்தைக் குறித்து வேறோரிடத்தில் விவரமாகக் கூறுகின்றேன்.

# வீர ரசம்

—:(O):—

(தி. அகரம். வே. அப்பாசாமி.)

இலக்கிய நூற்களில் பலதிறப்பட்ட ரசப்பாக்களும், வசன நூற்களும் இலங்கி வருவது யாவருமுணர்ந்ததேயாம். நம் அகத்தில் ஆக்கப்படும் ரசம் நாவினுக்கு ருசி தருதற்பொருட்டாகும்; அந்நாவும் பலதிறப் ரசத்திலே—மிகுதியும் தனக்கு விருப்பமுள்ளதிலேயே ஈடுபடுகின்றது. சில அதிக கார்ப்புள்ள மிளகுரசத்தினையும், சில மணங்கமழும் பன்னீர் ரசத்தினையும், மற்றுஞ்சில இயற்கைக் கேற்ப ஏற்ற ரசத்தினையும் ஊற்றும்படி வேண்டுகின்றது. நாவிற்கேற்ற ரசம் நாம் உண்டுபண்ணுதற் கூடும். உள்ளத்திற்கேற்ற ரசம் உண்டுபண்ண இயலுமா? கடவுளருளால் உன்னத உலகில் யுகாதியிலிருந்தே உள்ளரசம் உலவி வருகின்றது. அவை நூலளவில் நவரசமென இறுதியிட்டுளர். ஆயினும் இலக்கண இலக்கிய நூற்கள் சிங்காரம், வீரம், கருணை, சோகம், பக்தி இச்சுவைகளையே பெரும்பாலும் மிளிரச் செய்கின்றன. இச்சுவையாவும் அவரவருடைய பண்பிற்கேற்பவும், பயிற்சிக்கேற்பவும், தேச இயற்கைக் கேற்பவும் உள்ளத்தில் ஊறி நிற்கின்றது. எச்சுவையினை அதிகம் பண்பிலும் பயிற்சியிலும் நுகருகின்றார்களோ, அதுவே மிகுதியாக தலைசிறந்து நிற்கின்றது. சில இடங்களில் இச்சுவைகள் குலத்திற்கேற்பவும் பருவத்திற்கேற்பவும் பெரும்பாலும் மாறி நிற்றலும் உண்டு. எச்சுவை எத்தன்மைத்தாயினும், அச் சுவையினை அதிகப்படுத்த அவாவியுள்ளோர், பயிற்சி முறையில் சீர்படுத்த முயன்றிடின் முடியுந்தகைமையுடையதாகும். பயிற்சி முறையில் அடங்கா ரசம் இல்லை என்று உறுதியாக உரைக்கக்கூடும்.

பல திறப்பட்ட உள்ள ரசத்தினை பருவ பகுப்பின்கண் பகுக்கப் புகுவோமாகின், இளமையில் இன்பரசமும், நடுப்பிராயத்தில் வீரரசமும், முதுமையில் பக்தி ரசமும் தலைசிறந்து ஒழுகி நிற்பதைக் காணக்கூடும். நாம் கூறப்புகும் வீரரசம் நடுப்பிராயத்தினில், உச்சிச் சூரியனேபோன்று உன்னத நிலைமை நின்று ஒளி வீசலுறுகிறது. எஞ்சிய ரசங்களோ காலை மாலை கதிரவனேபோன்று கம்பீரமில்லாமலிருக்கின்றது. இவ்வீரம் சில இடங்களில் குலப் பண்பினால் இளமையிலும் இலகக்கூடும். ஆயினும் உடல் வலிவும் திமிரும் ஒருங்கேயுள்ள வீர ஆடவனிடம், அஞ்சா நெஞ்சுடை சிறுவன் வீரங்கொண்டெதிர்த்து நிற்பின் என்னாம்! அவன் கதி அதோகதி என்பது அறிந்த விஷயமாம். ஆகலின், ஆகக்கட்டும், வலிவும், திமிரும் வாய்ந்த ஆடவனே வீரத்தை இயற்ற வல்லவனாவான்.

உலக மக்கட் டொகுதியில் ஆடவரே இவ்வீரரசத்தின் விளைவினைக் காண்டற்கூடும்; பெண்மக்கள் அதனைக் காண்டற்கரியதோ என வினவின், பெண்மக்களிலும் பருவத்திற்கேற்ற இப்பான்மை இலகிக்கொண்டிருக்கிறது; அவர்களின் ஆகக்கட்டும் வலுவும் அமுக்கப்பெறுதலான் வீரம் ஓங்க இடந்



தாது துருப்பிடித்துப் போகின்றன. பிறகும் பயிற்சியின்மையால் படனற்று வீரம் வீணே மண்ணுக் கிரையாகிறது. ஏற்றப் பயிற்சி முறையில் பரிபாலித்துவரின் பெண்டிரிடமும் ஆடவரினைவிட ஆண்மை அதிகம் செழித்தோங்கும். இதற்கு அக்காலத்திய மறமகளிரே போதிய சான்றவர். ஜான்ஸி ராணி, ரஜியா, சாந்துபீபி முதலிய அரசிகள் அமர்க்களத்தினில் அடையலாரை வெல்ல வீரங்கொண்டு வெட்டிய மைந்தர்கள் கணக்கிலடங்கா! அவர்கள் தங்களாண்மையினைப் பரக்கக் காட்டி ஆடவரினும் பெண்டிர் வலுவுள்ளவரென தெள்ளிதிற் றெரிய இடங்கொடுத்து மாயாப் புகழுடன் மறைந்தனர்.

மறச் சுவையினை யுண்பதற்கேற்ற காலம் இளமைப் பருவமாம். ஆதலின் குழந்தைகளிடத்து, கூற்றுவனும் அஞ்சத் தக்க மாற்றம் இடம் பார்த்துப் புகலும்படிக்குக் கற்பித்தல் வேண்டும். அச்சம் என்பது அணுவளவும் அறியாது நிற்றல்வேண்டும்; வீரத்தை சீரிய நெறியினிற் காட்டும்படி கற்பித்தல்வேண்டும். இவ்வாறு கற்பிக்கப்பெறின் காளையனது கட்டுற்ற காயத்துடன் மட்டற்ற ஆண்மை மலையிலொளிர் தீபமெனத் திகழும். இதற்கு எடுத்துக் காட்டாக இந்திய சரித்திர சுத்த வீரதீர திலகமாம் சிவாஜி மன்னன் இளமைப் பருவந்தொட்டே தாதாஜிகாண்டதேவ் துகாராம் இவர்களின் போதனையாற் றெளிவுற்று, பரந்த அறிவுடன், சிறந்த வீரனாய்த் திகழ்ந்தோங்கியதை இயம்புதற்கூடும்.

வீரரசத்தினை விழுமிய முறையில் உண்டலால்,—பரந்த நோக்கமும்—சிறந்த கருத்தும்—உன்னத செய்கையும்—உத்தம குணங்களும்—உத்தமரிடத்தில் உழுவலன்பும்—சமயத்திடத்தில் சான்ற தகைமையும்—முன்னோர் கொள்கையில் முனைந்த ஊக்கமும்—நல்லறம் நாட்ட எல்லோரினும் முன் சொல்வதிலும் ஏற்றமுடைய இடங்கொடுக்கிறது. இத்தகைய மறச்சுவையை இளம்பருவந் தொட்டு கற்க ஏற்ற அளவிற்கு அஞ்சிய இரசத்தினை பிறமொழிகளில இரந்துண்ணுகவாறு சங்க கால நூற்களிலேயே அதிகம் தொகுத்துப் போயினர். பிற்றை நூல்களிலும் பெரும்பாலும் தொகுத்துளரேயாமாயினும், மகளிரின் வீரச் செயல்களை மாண்புற அமைக்காது, குறிப்பாக ஆடவரை மட்டுமே—பெரிதும் மேம்பாடுடைய நிலைமையிற் பொறித்துளர். மகளிரின் மறத்தினை மறைத்துக் கிடத்தனர். எது எவ்வாறாயினும், வீரத்தின் தன்மையையும் விளைவிக்கும் இடத்தினையும் இனி சற்று ஆராய்வோம்.

வீரம் என்பது அஞ்சாமை எனப் பொருள்படும். சாவோ ஆறிலுமுண்டு; நூறிலுமுண்டு என்பது யாவரும் அறிந்தது. "நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும், பெருமை யுடைத்து இவ்வுலகு" என்ற நாயனார் மொழியை நன்காராய்ந்தவர் வீரம் விளைவிப்பப் பின் வாங்கார். அவ்வீரத்தை மிகுதியும் விழுமிதாய்ப் பாராட்டுவதற்குக் காரணம் அதனிடத்துள்ள அருமையேயாம். தகைசான்ற உன்னத உலகில், அருமையினும் அருமையாகிய அன்னை தந்தையர்—பெண்டிர்—பிள்ளைகள்—உற்றார்—உறவினர்—இவையாவற்றிலுஞ் சிறந்த செல்வம்—போகபூமி இவைகளைத் துறந்து உயிர்போனாலும் போகட்டும் இருந்தாலும் இருக்கட்டும் என்று உயிரினைத் திரணமா யெண்ணி கூற்றின் வாயிற் குதிப்பானே போன்று, உற்சாகத்துடன் செல்ல எல்லோராலும் இயலாமையே அதன் அருமைக்குப் பரந்த காரணமாகும். இன்னும் உடலை வளர்க்க மானங்கெட்ட ஜீவனம் பல செய்

நாளும் செய்வனேயொழிய இறத்தற்கு மனமில்லையென, பலர் ஊரூராய் பற்பல இழிதொழில்புரிந்து உயிர் வாழ்வதை இன்றும் கண்கூடாகக் காண்கிறோம். இவ்வாறு உயிரினை நச்சுவோர் எவ்வாறு வீரம் இயற்றுதற்கூடும். உலகம் நிலைத்திருக்கும்வரையில் மாயா உயிருடன் இருக்க விரும்புபவரே விழுமிய வீரத்தினை இயற்றுதற்கூடும். இதுபற்றியே, 'உயிரை விற்று உறு புகழ்கொள உழல்பவர்" என கலிங்கத்துப்பரணி கூறியுள்ளது போன்றிருக்கின்றது. புகழிலும் பலதிறப்பட்ட புகழினை விரும்பி வீரம் இயற்றுபவருளர். கூலி கைக்கொள குற்றேவல் புரிந்துவரும் தொழிலாளர் தங்களது கூலி நிலைக்க, தலைவனிடம் கட்டளையைத் தட்டாது செய்ய முன்னின்று நாளும் வீரன் எனப் புகழ்கொள உழல்கின்ற கூலி வீரர் பலர். அவருள்ளும் முன்சென்றால் ராமபாணம், பின்சென்றால் ராவணனது கைவாள் என்னும் நிபந்தனை கொண்டு முன்னும் பின்னும் பார்த்து, தலைவன் தூங்காது இருப்பனேயாயாகில் வீரம்யற்ற இறங்குவார் சிலர். வேறு சிலர் தான் பெறப்போகும் சன்மானம் சம்பளம் இவைகளின் பொருட்டு உண்மையாகத் தீரங்காட்டுவர். இவ்வாறுஉண்மையான வீரம் உழற்றுபவர் எண்ணிக்கையிற் குறைந்து நிற்பர். மற்றுஞ் சில பகுதியினர் காமுற்ற காதலியின்பொருட்டு இயற்றொணா வீரம் இயற்றி நிற்பர். அதனுள்ளுள்ள நன்மை தீமை நாடாது சிருங்கார ரசமுண்ணும் பொருட்டு செய்யும் வீரம் அவ்வளவு விழுமிய தாகாது. இத்தகையதெல்லாந் தவிர்த்து பின் எவ்வாறான நிலைக்கு, உலகபோகத்தினை துறந்து உயிரைத் திரணமாயெண்ணி—உற்சாகத்துடன் வீரமியற்ற முன்வரவேண்டும் என்ற வினாவுக்கு, கீழ்க்கண்ட செய்யுள் விளங்கிய விடைதருவதாகும்.

"உலகினில் வாழும் ஒவ்வொரு வர்க்குமே
இன்றோ பின்றோ எய்திடுஞ் சாவு;
இங்ஙனம் இருக்க எங்ஙனம் ஒருவன்
தன்குல முன்னவர் மன்புகழ் காக்கவும்
தான்பணி கடவுளர் தளிகளைக் காக்கவும்
தன்னை யீன்றளித்த அன்னையைக் காக்கவும்
அன்புடன் அணைத்து மென்பால் ஊட்டி
தன்மக வோம்பும் நன்மனை காக்கவும்
பெரும்படை யென்று பேதியா நெஞ்சொடு
விரும்பிப் பகைவரை வேல்கொடு தாக்கி
துரும்பென உயிரை இகழ்ந்து துறத்தலின்
அரும்புகழ்ச் சாவினை அடைத லாகும்மே."

அதாவது தன்குலத்தாரின் கீர்த்தி, கடவுளினிருப்பிடம், அருமைத் தந்தை தாய், தனது இல்லாள், கற்புடைநங்கை, தனமொப்பிய தருமம் இவைகட்கு இன்னல் ஏற்படின் வீரத்தில் இழிதல்வேண்டும் என்பதாம். இங்ஙனமுன யாவையுமொருங்கு சேர்ப்பின் நாட்டின் நன்மையை நாடும் நற்காரியம் என நவிலலும் பொருந்தும். மேற்கூறியவையிற் பலவற்றினுக் கேற்றாற்போல வீரங்காட்டும் பண்டைய மகளிரை பாக்களா லலங்கரித்துப் பாவலன் பாரிற்குதவியதால் இரண்டு சருக்கிக் காட்டுவாமெனத் துணிவுறுவல்; ஒக்கூர் மாசாத்தியாரின் பேருளால் கீழ்க்கண்ட புறநானூற்றுப்பா அலங்கரிக்கப்பட்டுள்ளது.



'கெடுகசிந்தை கடிதிவள் துணிவே,
மூதில் மகளி ராதற் றகுமே
மேல் நாளுற்ற செருவிற் கிவள்தன்னை
யானை யெறிந்து களத்தொழிந் தனனே!
நெருந லுற்ற செருவிற்கிவள் கொழுநன்
பெருநிரை விலங்கி யாண்டுப் பட்டனனே!
இன்றும் செருப்பறைகேட்டு விருப்புற்று மயங்கி
வேல்கைக் கொடுத்து வெளிது விரித்துடீஇப்
பாறு மயிர்க்குடுமி யெண்ணெய் நீவி
ஒருமக னல்ல தில்லோள்
செருமுகம் நோக்கிச் செல்கென விடுமே!

இவ்வாறு மறமகளிராற்றியுள்ள மறம் கேட்போர் உள்ளத்தினை கலக்கமுறச் செய்கின்றது. நாட்டிற்காக நடந்த யுத்தத்தில் தகப்பன் யானையால் அடிபட்டு இறந்தும், கொழுநனை மாற்றலர் சிறை மாட்டுவித்தும், பலவித துன்பத்திற் காளாயுள்ள மங்கை, தனது அருமருந்தன்ன ஆருயிர்ப் புதல்வனை எண்ணெயாட்டி, மயிர் நீவி, வேல் கொடுத்து போருக்கு அனுப்புகின்றனளே என்ன தீரம்!

இதேபோன்று மற்றோர் மறமகளிர் தனது தநயன் அமரின்கண் முதுகு காட்டி பின்னோட மாற்றாரால் முதுகினில் அம்பு அழுத்தப்பட்டு ஆவி துறந்தான் என்று அஞ்சற்காரர் அறைய, "ஆ! அப்படியா! என் மகன் முதுகினில் அம்புபட்டு இறந்தனனா? முதுகினில் அம்புதைத்து ஆவி துறந்திருப்பானாயின், இன்னே இன்னமுதூட்டிய இவ்விருதனங்களைக் கொய்தெறிவேன்" என, தொங்கு தோலினள் அங்கு சப்தங்கூறி ஆராய்ந்தறிய அமர்க்களம் நண்ணினள். ஆண்டு அக்குமரன் மார்பு நுழையினால் மாண்டதைக் கண் குளிரக் கண்டு பெற்றநாளினும் பெருமகிழ்வெய்தி முத்தந் தந்தனள். என்னே இவள் பெருந்தீரம்! களத்தினிடையே காண்டற்கரிய கதியிலுள காளையினை கட்டித் தழுவி முத்தமிடுதல் எத்துணிவு பெற்றியதேயாம். இத்தகைய அஞ்சா நெஞ்சுடைய மறக்குல மகளிர்கள் தன் நாட்டின் பொருட்டு மக்கள் இறத்தற்குத் துணிந்து மகிழு தன்மையையு முடையவராயிருந்த இந்நாடு தற்போது எந்நிலையிலுளது? மறமகளிர்களின் மணங்கொண்டாவது புத்துயிர் பெற்று புது வாழ்வு பெறவொணாதா! இவ்வாறுள வீரத்தின் ரசத்தினைப் பிழிந்து இளஞ்சிறார்களுக்கு விழுமிய முறையினில் வீரரசத்தினை அளித்தல் வேண்டும். இவ்வாறு அளித்தற்கு ஆசான், தந்தை தாய் இவர்களே ஏற்றவராவர். வீரத்தினை உபயோகிக்கும் வழியை நன்கு விவரித்தலை ஆசான்கள் கடமையாகக் கொளல் வேண்டும்; கொள்வரேயாமாயின் பிற்காலப் பெருநிலைக்கு ஏற்ற வழிகாட்டியாவரென்பதில் ஐயமின்று. பொறுக்கெனப் பாய்தல், வீணிற் பிரவேசித்தல், ஆராயாது நுழைதல், உள் தந்திரம் அறியாமை, உற்ற துணையில்லாமற் செல்லல் இவைகளால் நேரிடும் அபாயத்தினை தக்க சான்றுடன் விவரித்துரைத்தல் மிக்க அவசியமாகும். இவ்வாறு பெற்றோரும் கற்றோரும், மற்றோரும் மதலைகளிடம் வீரத்தினை விருப்புடன் விழுமிய வழியில் ஊட்டுவாராயின், உத்தம வீரர் பலர் நம் தேயத்தின் கண் உலவக்கூடும்

அவ்வாறுள்ள வீரர் பலர் விளங்குவரேயாமாயின், நாடு, மதம், கோவிற்குளம், தானதருமம் இவைகள் செழித்தோங்கி தேசம் சுதந்தரம் பெறுவதற்கு இடமில்லாமற் போகாது. ஆகையால் இன்றே விழுமிய வீரர் பலரை விளங்க வைக்க ஆர்வங்கொண்டு வீட்டில் உள்ள இளஞ்சிறார்க்குக் கல்வித் துறையில் வீரமியற்றவல்ல நூல்களின் ரசத்தினைப் பிழிந்துப் புகட்டல் வேண்டுமென்பது எமது துணிபு.

இத்தகைய மறத்தின் மாண்பினை மாமுனியாம் காந்தியடியார் அவர்கள் எக்காலத்தில் உண்டு திளைத்தனரோ! யாமறியேம். மறத்தினை யியற்றும் முறைப்படி, தன் நாடு, மதம் மக்களின் மேன்மை இவைகளை உயர்த்துவதற்காக அரும்பாடு படுகிறார். ஆண்மையுங் காட்டுகிறார். அவரது ஆண்மை மூன்றாவது சர்வகட்சி மகாநாட்டின்கண் கூறப்பெற்ற செம்மொழியினை யுன்னிடின் அங்கைக் கனிபோன்று அழகுறத் தெரியும். அவ்வாண்மை வார்த்தை யாவது ஆங்கிலேயரை நோக்கி, "உங்கள் ஆகாயக்கப்பற்படைக்கும் பீரங்கிப் படைக்கும் யாங்கள் அஞ்சோம்" என்பதேயாகும். இத்தகைய மொழி எதன் பொருட்டு உரைத்தார்? பக்திரச மிகுந்த பரதேசியார்க்கு இத்தகைய மொழி, எவ்விடத்து இவ்வாறு உரைத்தற்கு நாவெழுந்தது? மேலும் வயது தளர்ந்த பற்கழன்ற பண்புடை முனி, இவ்வீரவார்த்தை புகல, யாரிடம் எக்காலம் கற்றாரோ! அறிகிலேம்! இத்தகைய மாவீர புருடனுக்கு நாமளிப்பது யாது? அன்னார் வழிக்கண், நமது ஆண்மை ரசத்தினை அதிகம் விருத்திசெய்து வீரங்கொண்டு முன்பின் பாராது குதித்தலேயாம்.

"Funny" Magzin of India

(Bi-monthly) Published on the 5th & 20th

GIVES THE BEST OF EVERYTHING

**Jokes, Stories, Serials, Humorous articles
Cartoons of great events and
Competitions.**

LUCKY NUMBER SCHEME & FREE PUZZLE PRIZE
OUR ADDITIONAL FEATURES.

**Price As. 1-6.**

AVAILABLE AT ALL STALLS & NEWS AGENCIES.

*Apply to:—*

**The "Funny Magzin" Office,**

*No. 6, Lawyer Chinnathambi Mudali St.,*
**Sowcarpet, MADRAS**

# நெஞ்சொடு புலம்பல்

(R. V. R. சேலம்.)

ஏழை நெஞ்சே! இயம்புவன் கேளாய்
புகழொடு வாழ்ந்திட வழியுனக் குண்டு
தீவினை யொழிக்கும் சன்மார்க்கம் பற்றாய்
அன்றேல் நெஞ்சே! அலைவது திண்ணம்
அழுவது திண்ணம் அல்லலு முற்றே

சதமென் றெண்ணினை இச்சட வுடலை
போற்றினை உன்னையே ஏத்தினை நித்தம்
கண்கவ ராடை யுன்மேனி புனைந்தனை
நறுமணங் கமழும் கந்தமும் பூசினை
மாலைகள் சூடி உலாவி மினுக்கினை

கண்கவ ரணிகள் கணக்கில அணிந்தனை
படமுனை யெடுத்துப் பார்த்துப் பொங்கினை
பஞ்சணை படுத்தாய் பொருளில் புரண்டனை
ஆடம் பரத்தி லாடி முகிழ்ந்தனை
மாதரொடு மகிழ்ந்தாய் பாலரொடு நகைத்தாய்

என்மனை மகவென்று இறுமாந் திருந்தாய்
துஞ்சினை சுகத்தில் துயரினை அறியாய்
காரினும் கடிந்திடும் ஊர்தியிற் சென்றனை
பலருனைக் கண்டிட பவனியும் வந்தனை
மயங்கினை மயங்கினை மாயையின் இருளில்

மந்திபழி முகத்தினை மதியென நவின்றாய்
பீளையொழு கண்ணினைக் கமலமே யென்றாய்
பயனிலாப் புருவத்தை வில்லெனப் புகழ்ந்தாய்
குறும்புறும் காதினை இளந்தண்டென மொழிந்தாய்
சளிவிழு மூக்கினைக் குமிழெனப் பகன்றாய்

துற்கந்த வாயினைப் பொற்செப்பென் றுகந்தாய்
அழுக்குறு பல்லினை முத்தென்று புகன்றாய்
புன்சொல் பயிலுமுன் புல்லிய நாவை
இன்னிசைக் களஞ்சிய மென்றே கூறினை
தீயரைத் துதித்தாய் மேலரை விடுத்தாய்

நன்னெறி விட்டுத் தீவழி போயினை
கடமையைத் துறந்துன் நன்மையை மறந்தாய்
பொருளதைத் தேடப் பொய்பல சொன்னாய்
வஞ்சனை செய்தாய் வாதொடு சூதினை
சுயநலங் கருதித் துதித்துப் புகழ்ந்தாய்

உண்மையை யறிவாய் உள்ளதை யுணராய்
நேசங் கொண்டுநீ நித்திய மென்றவிப்
பாச வுடலைப் பருந்துபின் தின்னும்
ஊனதென தென்றுநீ ஏங்கிய தேகம்
தீக்கிரை யாகுமுன் மயிர்ப்புத் துடலம்

புழுவுண நிற்குமுன் பாவம் பற்றிடம்
அறிவாய் நெஞ்சே! அறியா யிதனை
சோற்றுப் பையிது நோயுறு மூரு
நாற்றத்தோல் மேய்ந்த நாறும் யாக்கை
உதிரச் சட்டி கவலைத் தோட்டம்

புழுக்கள் நெளிந்திடும் ஊன்பொதி பிண்டம்
கூற்றுவன் வெட்டும் பாவக் கட்டை
கோபத் துருத்தி வினையுள கோணி
காதல் விளைமரம் ஆசை நிறைகுழி
பொய்ப் பெயர் புனைந்த பொய் யிவ்வோடு

காசினி சிறிக்கக் கவலை பலவுற்றுக்
காசி லாடிக் கலங்கும் காத்தாடி
மலம் நிறைகுடம் ஐம்புலப் பறவை
அசுத்தம் நிறைந்த ஆபாசக் கூரை
தோலும் எலும்பும் தொகுத்துடன் கூடிய

ரத்தமும் சீயும் கொண்டுள புன்கலம்
காற்றுப்பை யிது விதிவிளை நிலம்
அகம்புறம் விரித்து அறிய நோக்கின்
அப்பா லுறுத்தும் அழுக்குப்,பெட்டி
அருந்தின மலமாம் புனைவன அழுக்காம்

உடுப்பன நீக்கிலோ புலால் புறத்திடுவது
நிணமும் நரம்பும் கோத்த இம்மேனி
அயனளி சித்திரம் ஆணவ வீடு
நில்லாது செல்லுமிது நிலையாது வாழ்வே
நித்தியமற்ற இவ்வநித்திய வாழ்வைக்



கனவிது என்பது கருதாய் கருதாய்
மின்னென ஒளித்து மறைந்திடு மிதனை
நாடக வாழ்வென்று நயந்துநீ அறியாய்
நீர்மே லெழுத்தில் வுடலினை நினையாய்
முத்தும் பவளமும் நிகரிலாச் செல்வமும்

பூண்டவ ரன்றி மிடியினர் தாமும்
கண்டனை பலரும் காலனால் கவர்ந்திடல்
நடுவன் வருவான் நடுங்கிநீ நிற்க
இளையோ ருயர்ந்தோர் இன்னிசை மாதர்
அறத்தின ரென்றவன் எண்ணா னப்போ

போற்றினும் போகான் தூற்றினும் போகான்
பொருள்தரின் போகான் உயிருடன் போவான்
அந்நாள் உன்னையும் அடைந்திடும் நெஞ்சே!
கண்டனை உடலைக் கழுகொடு நரியும்
உண்டு பின்னாடும் உகந்தநற் கூத்தைப்

போம்பிணம் சுற்றிப் பொங்கி அழுமினிச்
சாம்பிணம் தன்னைக் கண்டனை கண்ணால்
கொண்டனை யில்லை அறிவினை நெஞ்சே!
வந்தது முண்டோ பிறக்கையி லுடனே
சென்ற துண்டோ இறந்தவர் பின்னே

மகிழ்ந்துநீ எத்தித் துகிலதில் கொண்டு
களிப்புடன் கழித்த அவ்விள மையும் நில்லா
புகழ்ந்தென தென்றுநீ போற்றியே நித்தம்
அணைத்துக் காத்த உன் யாக்கையும் நில்லா
பாடுபல பட்டுநீ பரிதவித் தோடியே

தேடிய அந்தப் பொருளுமே நில்லா
சூழ்ந்துனை நாடிய உற்றவர் வேறே
போற்றியுன் பொருள்பெற்ற சுற்றமும் வேறே
தாரமும் தனயரும் தந்தையும் வேறே
சதமிலை யாதுமிச் சகந்தனில் தானே

மைந்தரும் வாரார் மனைவியும் வாரார்
மகிழ்ந்துனை மயக்கிய செல்வமும் வாரா
உன்னுடன் பிறந்துனை ஓட்டுவித் தலைத்தவை
பஞ்சபூத முனைப் பற்றியே வாரா
உயிருனைப் பிரிந்திடில் உலகுனை மறக்கும்

மனைவியும் மைந்தரும் கைகழுவி மீள்வர்
இக்குற்ற வாழ்வுனக்கு இதுதான் அறியாய்
ஏழை நெஞ்சே! அறியாய் இதனை
இருவினை யுண்டு உன்னுடன் வரத்தானே
விதையது போல முளையது வருமே

நல்லன செய்தால் நல்வழி பெறுவாய்
அல்லன செய்தால் அலைந்திடு வாயே
சென்றன வாழ்நாள் பய னின்றாக
உள்ளன இனிநீ உகக்கக் கழியாய்
நன்னெறி நில்லாய் ஐம்புலன் வெல்லாய்

அறிவினைக் கொள்ளாய் அறம்பல செய்யாய்
உகப்பன செய்தே உண்மையை நாடாய்
தீயன விலக்காய் இன்சொலை யகற்றாய்
நோவன கூறிப்பின் நொந்தனை யடையேல்
மாதர்தம் மயக்கம் மனத்தினிற் றள்ளு

ஈவது விரும்பிச் சினமது போக்காய்
உள்ளும் புறமும் ஒன்றாய்க் கொள்ளு
உள்ளதைக் கொண்டு உகந்திடு உதவியே
பாழுக் குழைத்துப் பாடினிப் படாது
உண்மைப் பொருளை நாடியே நில்லாய்

நித்தியப் பொருளொன்று உலகினி லுண்டு
ஒன்று தானது நித்திய மாகும்
முளரிநீர் போவது வினைகளை மாற்றும்
நித்திய வாழ்வும் சித்தியு மீயும்
சத்திய மிதனை அறிவாய் நெஞ்சே!

பந்தனை போக்குமக் கந்தனின் பாதம்
அடியினைத் தொழுவாய் அருளினைப் பெறுவாய்
அழலுறும் நெய்யென அன்பா லுருகிப்
போற்றுவாய் நெஞ்சே! போற்றுவாய் நீயே
கந்தனைக் கடம்பனைக் கார்மயில் நாதனை

ஈராறு தோளனை ஆறுதலை யோனையே
வள்ளிநாதனைக் கங்கையின் மைந்தனை
சரவணப் பொய்கையில் தாவி விளையாடிய
நித்தியன் சத்தியன் நேய மிக்கோனை
நேசமுடன் நித்தமும் போற்றினை யானால்

கடிந்திடும் தீமை ஒடிந்திடும் வினையும்
கொடுமையின் பெருக்குகள் எரிந்திடும் உண்மையாய்
வந்திடும் கந்தனின் தன்னருள் உனக்கு
கருணை பெற்றபின் சிறப்புடன் வாழ்வாய்
உத்தம நாமமு முலகினிற் கொள்வாய்

இம்மையி லன்றி மறுமையில் தானே
வேண்டின வேண்டியாங்கு அளித்திடும் வேலனைப்
போற்றுக நெஞ்சே போற்றுக நெஞ்சே
தஞ்ச மடைந்தேன் காத்திடு என்றவன்
நித்திய பாதம் போற்றுக நெஞ்சே!

# நாடகமேடையில் தேர்ச்சிபெறுவ தெப்படி?

(ராவ்பகதூர். ப. சம்பந்த முதலியார், பி.ஏ., பி.எல்.)
(காபிரைட்.)

(761-ம் பக்கத் தொடர்ச்சி.)

இன்னும் இவ்விஷயத்தில் இக்கலை பயில விரும்பும் மாணவர்க அனுசரிக்க வேண்டிய மற்றொருமார்க்கம், சிறந்த சித்தி வினைஞரால் எழுதப்பட்ட சித்திரங்களினுடையவும், முக அங்க பாவங்களை ஆராய்வதாகும். சித்திரங்களையும் சில்பங்களையும் ஆராய்ந்து பார்ப்பதினால் அவ்வக்காலத்து ஜனங்களுடைய பாவனைகளெல்லாம் மிகவும் நன்றாய் விள கும். இதற்கு இரண்டொரு உதாரணங்களை இங்கெடுத்து எழுதுகிறேன் எனது புத்தாவதாரம் என்னும் நாடகத்தில் நான் கௌதமபுத்தராக நடிக்க தீர்மானித்த பொழுது, கௌதமர், புத்த பதவியை யடைந்தபொழுது,எப்ப வீற்றிருந்தார். அல்லது முகபாவம் எப்படி யிருந்தது என்று அறித பொருட்டு, சென்னை மியூசியத்திலிருக்கும் அஜெண்டா குகைகளிலுள்ள சித் திரப்படங்களின் நகல்களை யெல்லாம் பரிசோதித்துப் பார்த்தேன். அ குள்ள அமராவதி ஸ்தூபத்திலுள்ள விக்கிரஹங்களை யெல்லாம் ஆராய்ந்த னேன். எதுவும் என் மனதிற்கு முழு திருப்தியைத் தரவில்லை. கடைசியாக எனது பாலிய நண்பர் வி. ஸ்ரீனிவாச ஐயங்கார் வீட்டிற்கு ஒருநா போயிருந்தபொழுது, அவர் பல வருடங்களாக அருமையாய்ச் சேகரித்த வைத்திருக்கும் பித்தளை பெண்கள் உருவங்களில், புத்தருடைய விக்கிஹரப் ஒன்று கிடைத்தது. அதற்கு "தியானிபுத்தர்" என்று பெயர்; அதாவது தியானத்திலிருக்கும் புத்தருடைய கோலம் என்று பொருள் படும். அ பர்மா சிப்பியின் தொழிலோ அல்லது சீனதேசத்து சில்பியின் தொழிலோ, அறியேன்; அவ்விக்ரஹம் என் மனதைக் கலகலத்தது. அத உட்கார்ந்திருந்த கோலத்தையும் தியானஞ் செய்யும் முகக்குறிப்பையும், பன் முறை பார்த்து அப்படியே என் மனதில் பதியச் செய்து கொண்டேன். பிறகு நாடகதினத்தில் போதி விருட்சத்தின் கீழ் நான் உட்கார வேண்டி வந்தபொழுது அம்மாதிரியே உட்கார்ந்து தியானஞ் செய்ய முயன்றேன். மற்றொரு உதாரணம், எனக்குத் திருப்பரங்குன்றத்தில் கிடைத்தது. திருப் பரங்குன்றக் கோயிலில் படியேறின வுடனிருக்கும் பெரிய மண்டபத்தில், வலது பக்கமா யிருக்கும் ஒரு தூணில், சுப்பிரமணியர் தெய்வயானையைப் பாணிக்கிரஹணம் செய்து கொண்ட காட்சி மிகவும் அற்புதமாய் சில்பியால் கருங்கல்லில் செதுக்கப்பட்டிருக்கிறது. அதைப் பன்முறை, நான் சிறு வயது முதல், பார்த்திருக்கிறேன். அதன் விசேஷம் என் மனதில் ஒன்றும் படவில்லை. இரண்டு வருடங்களுக்கு முன்னர். மதுரை டிராமாடிக் கிளப்

பார், எனது "சுபத்திரார்ஜுனு" என்னும் நாடகத்தை ஆடியபொழுது, அவ்விடம் நான் போயிருந்தேன்; அச்சமயம், சுபத்திரையை அர்ஜுனனுக்கு ஸ்ரீகிருஷ்ணபகவான் தாரை வார்த்துக் கொண்டிருக்கும் பொழுது, சுபத்திரையின் கைமேலே யிருக்கவேண்டுமோ, அர்ஜுனன் கைமேலே யிருக்க வேண்டுமோ என்னும் கேள்வி வந்தது. அதன் பேரில் மதுரையிலுள்ள மீனாட்சியம்மாள் கலியாண சிலைகளை யெல்லாம் கவனித்தேன். பிறகு, ஒரு நாள் திருப்பரங் குன்றத்திற்குப் பழையப்படி, நாடக தினம் பூசைக்குப் போனபோது, மேற்சொன்ன சுப்பிரமணியர் தெய்வானை, திருக்கலியாணக் கோலச்சிலையை உற்று நோக்கினேன். யாருடைய கை மேலே யிருக்க வேண்டும் யாருடைய கை கீழே யிருக்கவேண்டு மென்பதை அறிந்தது பற்றி, அச்சமயம்தான், அச்சிலையிலிருந்த முருகப்பெருமான், முகபாவமும், தெய்வயானை தேவியின் முகபாவமும் எனது மனத்தைக் கொள்ளைகொண்டது. இதை வாசிக்கும் எனது நண்பர்கள் யாராவது இனி திருப்பரங்குன்றத்துக்குப்போவதாயின் இச்சிலை யுருவைக் கட்டாயமாய்க் கவனிக்கும்படிவேண்டுகிறேன். அப்படி கவனிப்போர்களுக்கு ஷண்முகப் பெருமான் முகத்தில் தக்க பெண்மணியை மணக்கிற சந்துஷ்டியையும், தெய்வநாயகியின் முகத்தில், பெண்டிற்குரிய மடம், நாணம், அச்சம், பயிர்ப்பு என்கிற நான்கு குணங்களையும், தக்க மணாளனைப் பெறுகிறேமென்கிற சந்தோஷத்தினு லுண்டான புன்முறுவலும். அவ்வுருவங்களைச் செதுக்கிய கல்தச்சன் வெகு அழகாய்க் காட்டி யிருப்பதைக் காண்பார்கள். அன்றியும் நமது பூர்வீக கிரந்தங்களில் காமத்துப்பாலில், ஸ்பர்ச சுகம் என்பதை கவிகள் வர்ணித்திருக்கின்றனர். நாயகன் நாயகிகளுடைய கரங்கள் முதன் முதல் ஸ்பர்சித்த பொழுது அவர்களுக்குண்டாம் இன்பத்தை இச்சிலையுருவங்களில் சிலபி அற்புதமாய்க் காட்டியிருக்கிறார். இதைக் கவனிக்க விரும்புவோர் இச்சிலை யுருவங்களின் மிகவும் அருகில் நிற்காமல் சுமாற் நாற்பத்தைந்து அடி தூரத்திலிருந்து சற்று நேரம் உற்று நோக்கவேண்டும், அப்பொழுதுதான் அவர்களுக்கு இந்த அற்புதமான அழகு கொஞ்சம் கொஞ்சமாய் வெளிப்படும். இப்பிம்பங்களை இதுவரையில் நான் பன்முறை பார்த்திருக்கிறேன்; ஒவ்வொரு முறைபார்க்கும் பொழுதும், புதிய புதிய அழகு இதில் என் கண்ணுக்குத் தோன்றுகிறது. இதை இன்னும் பார்க்கவேண்டும் என்னும் ஆர்வம் எனக்கு அடங்கவில்லை. இதில் ஒரு வேடிக்கை யென்னவென்றால், சில சமயங்களில், இவ்விக்கிஹரங்களை வேறு யாராவது கவனிக்கிறார்களா என்று அங்கு ஒரு பக்கமாக நின்று கவனித்திருக்கிறேன். திரள்திரளான ஜனங்கள் அவ்வழியாகப் போய் வந்து கொண்டிருக்கின்றனர். ஆயினும் நான் இவற்றின் அழகைக் காட்டிய எனது இரண்டொரு மதுரை நண்பர்களைத் தவிர, மற்றவர்கள் யாரும் இதை சற்றுங் கவனித்ததையும் கண்டேனில்லை. இது நமது தமிழ்நாடு செய்த பாபம் போலும்! இதைப்போன்ற பல அற்புதமான சில்ப வேலையமைந்த பிம்பங்கள் இருக்கின்றன. பல ஸ்தலங்களில், அவற்றின் ஆச்சரியமான அழகை அனுபவிக்கும் ஆன்மாக்கள்தான் அதிகமாய் காணேம்! இதைப் பார்க்கும் எனது நண்பர்களிற் சிலராவது, தாங்கள் மதுரைக்குப் போகும்படி நேரிட்டால் தவறாது இந்த க்ஷேத்திரத்திற்கும்போய் மேற்சொன்ன சிலை யுருவங்களைக் கண்டு களிப்பார்களாக. இவற்றை வர்ணிக்கும் எனது சந்தோஷத்தில் எதன்பொருட்டு இதை இங்கு எழுத வாரம்பித்தேன் என்பதை மறந்தேன். இதைப்பற்றி இங்கு இவ்வளவு விவரமாய் எழுதியது



நாடகமேடையில் பெரிய ஒரு நடிகர், ஏதாவது பாணிக்கிரஹண நாடகங்களை நடிக்க வேண்டுமென்றால், இதைப் பார்த்து இதைப் போல் நடிக்க வேண்டு மென்பதே, சுபத்திரார்ஜுனு என்னும் நாடகத்தில் இக்காட்சியை நான் நடிக்கும் பொழுதெல்லாம், அச்சிறந்த சில்பியின் எண்ணப்படி எனது முகபாவத்தை வைத்துக்கொள்ள வேண்டுமென்று பன்முறை பிரயத்னப் பட்டிருக்கிறேன். ஆயினும் அதன்படி நடிக்க என்னாலாக வில்லை. யென்றே நான் ஒப்புக்கொள்ள வேண்டும்.

இப்பகுதியை விட்டகலு முன், இன்னொரு விஷயத்தை எழுத விரும்புகிறேன். நாடகக்கலை பயில விரும்பும் அநேக மாணவர்கள், என்னிடம் வந்து, நீங்கள் ஆடிய இந்த ஆட்டத்தில், இன்ன வார்த்தைகள் பேசும் பொழுது, உங்கள் கையை எப்படி வைத்துக் கொள்ளுகிறீர்கள்; எப்படி நிற்கிறீர்கள்; முகத்தை எப்படி வைத்துக் கொள்ளுகிறீர்கள் என்று என்னைக் கேட்டிருக்கின்றனர். அவர்களுக் கெல்லாம், நான் கொடுக்கும் உத்தரமாவது "எனக்கு அதெல்லாம் ஞாபகமில்லை," நான் இந்த பாத்திரத்தை நடிக்க வாரம்பிக்கும்பொழுது, நான் அந்த பாத்திரம் என்றே நினைத்துக் கொள்ளுகிறேன். அப்பாத்திரத்திற்குரிய அங்கக் கிரியைக்கெல்லாம் பிறகு எனக்கு சுலபமாக வருகிறது. இந்த இடத்தில் இப்படி கையை வைத்துக் கொள்ளவேண்டும்; இப்படி நிற்கவேண்டும், இப்படி நடக்க வேண்டும், இப்படி முகத்தை வைத்துக்கொள்ள வேண்டும் என்று நிர்ணயித்துச் செய்வதில்லை. பாத்திரத்திற்குரிய மனோபாவத்தைக் கொண்டபின், இவைகளெல்லாம் தக்கபடி தானுக வரும்; ஆனால் மேற்கொண்ட பாத்திரத்தின் மனோபாவத்தைத் தக்கபடி பெறுவதுதான் கொஞ்சம் கஷ்டம்.

தற்காலத்திற்குப் பொருந்தியதாக நாகரீகத்தின்படி, நாடகமாடுவதில் முக்கியஸ்தானம் நடிப்பிற்கும் (actury) இரண்டாவது ஸ்தானம் சங்கீதத்திற்கும் கொடுக்கவேண்டுமென்பது என் அபிப்பிராயம் என்பதை என் நண்பர்களுக்கு முன்பே தெரிவித்திருக்கிறேன். இதிஹாச புராணக் கதைகளை ஆடும்பொழுதன்றி மற்ற நாடகங்களில் சங்கீதம் மிகவும் குறைவாகத்தானிருக்க வேண்டுமென்பது என் கருத்து. இங்கிலாந்து முதலிய தேசங்களில் நாடக மேடையில் நாடகங்கள் இரண்டு பிரிவாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. கேவல நாடகம் (drama keeper) சங்கீத நாடகம் (Opera) என்று. சங்கீத நாடகங்களில் பாட்டு முதன்மையா யிருக்கும். வசனம் மிகவும் கொஞ்சமா யிருக்கும். நம்முடைய தேசத்திற்கு உதாரணமாக நந்தனர், ராமதாஸ், அரிச்சந்திரன் முதலிய நாடகங்களைக் கூறலாம். மற்ற நாடகங்களில் சங்கீதமே இருக்கலாகாது. இதற்குமேல் சங்கீதத்தைக் கேட்க விரும்புவோர்கள் சங்கீதக் கச்சேரிக்குப் போய்க் கேட்க வேண்டுமே யொழிய, நாடக மேடைக்குப் போகலாகாது. இங்கிலாந்து முதலிய தேசங்களிலுள்ள மேற் குறித்த பிரிவினை நம்முடைய நாட்டிற்கு வர, இன்னும் சில ஆண்டுகள் பிடிக்குமென்று நினைக்கிறேன். அதுவரையில் சாதாரண நாடகப் பிரியர்கள், ஒவ்வொரு நாடகத்திலும் கொஞ்சமாவது சங்கீதத்தைக் கேட்க விரும்புகிறபடியால், தற்காலத்திய நடிகர்கள் சங்கீதத்தைக் கற்க வேண்டியது அவசியமாகிறது. ஐரோப்பா முதலிய கண்டங்களிலுள்ள ஆக்டர்கள் சங்கீத நாடகங்களில் (Opera) ஆடுபவர்களா யில்லாவிட்டால் அவர்களுக்கெல்லாம் இக் கவலையே யிடையாது. இதைப்பற்றி முதல் முதலாக நான் நாடகமேடையில் தேர்ச்சி

பெற விரும்பும் எனது நண்பர்களுக்கு கூறவேண்டிய விஷயம் என்னவென்றால் சங்கீத ஞானமில்லாதவர்கள், நாடக மேடையின்மீது பாட பிரயத்தனமே படலாகாது என்பதாம். என்னுடைய சங்கீத ஞான சூன்யத்தைப் பற்றி முன்பே எனது நண்பர்களுக்குத் தெரிவித்திருக்கிறேன். ஆகவே நான் ஏறக்குறைய மேடையின்மீது பாடுவதேயில்லை என்றே சொல்லவேண்டும். அன்றியும் சங்கீதஞான மிருந்தபோதிலும் சாரீரம் இல்லாவிட்டால், பாடாமலிருத்தலே மேலாகும். இதைப்பற்றிய ஒரு சிறு கதை இங்கு எனக்கு நினைவிற்கு வருகிறது. ஒரு முறை ஒரு சங்கீதப் பிரியர் எங்கள் சபை ஆக்டர்களை, நீங்கள் (ஆர்மோனியத்தில்) எந்தக்கட்டை (ஸ்ருதி) யில் பாடுகிறது? நீங்கள் எந்த கட்டையில் பாடுகிறது? என்று கேட்டுக்கொண்டு வந்தார். மற்றவர்களெல்லாம் அவரவர்கள் சாரீரத்திற்கு தக்கபடி, 2½ கட்டை, 3கட்டை 4 கட்டை என்று சொல்லிக்கொண்டு வந்தார்கள். என்னைக் கேட்டபோது, எனக்கு அருக்கட்டை என்று பதிலளித்தேன். ஆகவே என்னைப் போன்ற "அருக்கட்டை" சங்கீத முடையவர்கள் பாடாதிருத்தல் நலம்.

பாடவேண்டுமென்று விருப்பமுள்ளவர், சாரீரம் தக்கபடி யுடையவர்கள் முதலில் சங்கீதம் பழகித்தான் தீரவேண்டும். 'கல்விக்கு ராஜபாட்டை கிடையாது' என்று ஓர் ஆங்கில பழமொழியுண்டு. அம்மாதிரியாகவே சங்கீதத்திற்கும் ராஜ பாட்டை கிடையாது. ஒவ்வொருவரும் சரளி வரிசை, கண்ட வரிசையில் ஆரம்பித்து, கிரமமாகக் கற்றுத்தான் தீரவேண்டும். ஏதோ மிகவும் சிலருக்குத்தான் சுர ஞானம் சுயமாய்க் கிடைக்கும். மற்றவர்களெல்லாம் ஓர் தக்க உபாத்தியாயரிடம் கற்றுக்கொள்ள வேண்டும். சங்கீதத்திற்கு இரண்டு முக்கியமான அம்சங்களுண்டு. ஸ்ருதி லயம்; லயம் என்பது தாளமாம். இவ்விரண்டை சங்கீதத்திற்குத் தாய் தந்தை என்று சொல்லப்பட் டிருக்கிறது; இரண்டு மிருந்தால்தான் சங்கீதம் புகழ்பெறும். ஆயினும் "தாரை"யை மறந்தாலும் "தாயை" மறக்கலாகாது. ஏனெனில் ஸ்ருதியை விடாது பாடத்தகுந்த சக்திபெற் றிருந்தால், நாடக மேடையில் சில விருத்தங்கள் முதலிய பாட்டுகளைப் பாடலாம். இவற்றிற்கு தாளம் அவசியமில்லை. ஸ்ருதியைவிட்டு பாடுவதைவிட நாடகமேடையின்மீது ஏறாதிருக்கலாம். எவ்வளவுதான் பிரபலமான சங்கீத வித்வானா யிருந்தாலும், மேடையின்மீது ஸ்ருதி விலகிப் பாடினால், சங்கீத ஞானம் சிறிது மில்லாத எனக்கு வெறுப்பா யிருக்கிறது. மற்றவர்களுக்கு எப்படி யிருக்கும்?

இந்த சந்தர்ப்பத்தில் சங்கீதத்தைப் பற்றிய ஒரு சிறு கதை நினைவிற்கு வருகிறது. சுகுண விலாச சபை ஸ்தாபிக்கப்பட்ட பிறகு நான் சங்கீதம் கற்கவேண்டுமென்று பிடில் (Violin) கற்க ஆரம்பித்தேன். எனக்கு காலஞ்சென்ற சாமி ஐயர் என்பவர் உபாத்தியாயராக இருந்தார். அவரிடம் ஏழு வருடங்கள் பிடில் வாசிக்கக் கற்றேன். வர்ணங்கள், கீர்த்தனைகள், ராகங்கள் பல கற்றேன். ஆயினும் தாளம் என்பது என் கையிலும் ஏறவில்லை. மூளையிலும் ஏறவில்லை. அதன் பிறகு எனது பால்ய நண்பர் வி. வி. ஸ்ரீனிவாசய்யங்காருக்கு ராகம் வருவது எவ்வளவு கடினமோ அவ்வளவு கடினம் தாளம் எனக்கு சரியல்ல வென்று கற்று கைவிட்டேன். நான் பிடில் கற்க ஆரம்பித்தபொழுது, எனது உபாத்தியாயர் சாமி ஐயர், எனக்கும் தன் குமாரனை, தற்காலம் பிடில் வாசிப்பதில் பெயர்பெற் றிருக்கும் பாலகிருஷ்ண ஐயருக்கும் ஒன்றாய்க் கற்பிக்க ஆரம்பித்தார். பாலகிருஷ்ண ஐயர் தாளங்களில்



நல்ல தேர்ச்சிபெற்று நல்ல பிடில் வித்வானானார். நானோ நிரட்சரகுட்சியாய் சங்கீதத்தில் ஒரு தேர்ச்சியும் அடையாதவனா யிருக்கிறேன்; வேண்டுமென்றால் நான் ஒன்று சொல்லிக்கொள்ளலாம். சுமார் நாற்பது வருடங்களுக்கு முன் சென்னை கலாசாலையில் கீர்த்திபெற்ற பலகலைகளில் வல்லவரான எம். ஏ. ரங்கநாத முதலியார் என்பவர் ஒருவரிருந்தார். அவரைப் பற்றி முன்பே இந் நாடகமேடை நினைவுகளில் முதலில் சிறிது எழுதி யிருக்கிறேன். அவர் பெயர்பெற்ற கல்விமானெனப் பெயர்பெற்ற பிறகு அநேகர் தானும் எம். ஏ. ரங்கநாத முதலியாரும் ஒரு வகுப்பில் வாசித்தவர்கள் என்று ஜம்பம் சொல்லிக்கொள்ளுவார்கள். அம்மாதிரியாக, நானும் பிடில் வித்வான் பாலகிருஷ்ண ஐயரும் ஒரே உபாத்தியாயரிடம் சிட்சை சொல்லிக்கொண்டோம் என்கிற ஜம்பத்தை சொல்லிக்கொள்ளலாம்.

நாடகமேடையில் நான் பாடாததிற்குக் காரணம் மேற்குறித்ததுதான். ஏதாவது கட்டாயமாய்ப் பாடவேண்டுமென்றால் சில விருத்தங்கள் பாடுவதுடன் நிறுத்திக்கொள்வது என் வழக்கம். இங்கு எனது நண்பர்களுக்கு நான் தெரிவிக்க வந்தது என்னவென்றால், தாள ஞானம் இல்லாவிட்டால் சங்கீதத்தின் அருகிலேயே போகவேண்டாம் என்பதேயாம்.

ராக தாள ஞான முடையவர்களாய் நாடகமேடையின்மீது பாட விரும்பும் எனது நண்பர்களுக்குச் சில விஷயங்களை வற்புறுத்த விரும்புகிறேன்.

முதன்முதல் அவர்கள் கவனிக்க வேண்டியது. நாடக கர்த்தா பாட்டுகள் எழுதி யமைத்திராவிட்டால் பாடவேண்டிய சந்தர்ப்பங்களுக்கேற்ற பாட்டுகளைத் தக்கோர்களிட மிருந்து எழுதிக்கொள்ளவேண்டும். வருகிறேன், போகிறேன், உட்காருகிறேன் என்பதற்கெல்லாம் பாட்டுகள், ஆபாசமாகும். சோகம், கோபம், சிருங்காரம் முதலிய தக்க ராகங்களே யமைந்த சந்தர்ப்பத்தில்தான் பாட்டுகள் அமைத்துக்கொள்ள வேண்டும். அப்பாட்டுகளிலுள்ள வார்த்தைகள், சந்தர்ப்பங்களுக் கேற்றபடி யிருக்கிறதா என்று பார்த்துக் கொள்ளவேண்டும். அன்றி நாடகத்தின், ஆரம்பத்தில், நம்பிராஜர், தங்கள் குல தெய்வமாகிய சுப்பிரமணியரைப் போற்றும் பொழுது பாட்டில் 'வள்ளி மணவாளா' என்று பாடியதைக் கேட்டிருக்கிறேன்; இப்படிப்பட்ட ஆபாசங்களை யெல்லாம் கட்டாயமாய்த் தவிர்க்கவேண்டும்.

அன்றியும் பாடும் பாட்டுகள் தக்க ராகங்களில் இருக்கின்றனவா என்று பார்த்துக்கொள்ளவேண்டும். அதாவது சந்தர்ப்பத்திற்குத் தகுந்த ராகங்களா யிருக்கின்றனவா என்று பார்த்துக்கொள்ள வேண்டும். கோபாவேசத்தில் சஹானா ராகத்தில் பாட்டு வைத்துக்கொண்டால் எப்படி யிருக்கும்? அல்லது அழவேண்டிய சமயத்தில் அடானா ராகத்தில் அழத் தொடங்கினால் என்னவா யிருக்கும்? இன்னின்ன ராகத்திற்கு இன்னின்ன ராகங்கள் உரியவை என்றும் நிபந்தனை யுண்டு. அதையும் கவனிக்க வேண்டும். காட்சி நடந்தேறும் சமயம் சாயங்காலமா யிருக்கும், அச்சமயம் பூபாளம் பாட ஆரம்பித்தால், அல்லது காலையா யிருக்கும், அச்சமயம் மத்யமாவதியில் பாடினால், ஒரு தெலுங்கு நாடகத்தில் பாதுகா பட்டாபிஷேக நாடகத்தில். அதிகாலையில் தசரதரை எழுப்பவேண்டிய சுமந்திரன் வேடம் பூண்ட வொருவர், பைரவியில் பாட ஆரம்பித்தது எனக்கு நினைவிற்கு வருகிறது. இப்படிப்பட்ட ரசாபாசங்களையெல்லாம் அறவே ஒழிக்கவேண்டும்.

இவைகளை யெல்லாம் விட பாடும்பொழுது முக்கியமாகக் கவனிக்க வேண்டிய விஷயம் என்ன வென்றால் மேற்கொண்ட பாத்திரத்திற்கும் கதையின் சந்தர்ப்பத்திற்கும் தக்கதான முகபாவத்தையும் அபிநயத்தையும் அணுவளவும் மறக்கலாகாது. அந்த சந்தர்ப்பத்திற்குத் தகுந்த பாவத்தை யொட்டியே பாட்டைப் பாட வேண்டும். சில வருடங்களுக்கு முன்பாக நம் நாடக மேடையில் கதாநாயகன் கதாநாயகியுடன் சிருங்கார ரசத்தில் சம்பாஷிக்கும் தருணத்தில் காம்போதியில் பாடிய மெட்டு அவரைக் கன்னத்தி லறைவது போலிருந்து, அவர் பாடிய பாஷையை அறியாமலவர் ஏதோ தன் காதலியுடன் சண்டை போடுகிறார் என்றே எண்ணி யிருப்பார்; அந்த ஆக்டர் பாடிய மாதிரியும் அபிநயமும் அவ்வாறு இருந்தது; இக்குற்றம் அணுகாதபடி மேடையின்பேரில் சங்கீதம் பாட வேண்டு மென்று விரும்பும் எனது இனிய நண்பர்கள் மிகுந்த சிரமம் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று வேண்டிக்கொள்ளுகிறேன்.

மேலும் பாட்டைப் பாடும்பொழுது தனியனா யில்லாவிட்டால் யாரிடம் அப்பாட்டைப் பாட வேண்டுமோ அவர்களை நோக்கியேதான் பெரும்பாலும் பாட வேண்டும்; இச்சந்தர்ப்பத்தில் பெரும்பாலும் என்று நான் எழுதியதற்குக் காரணம் சில சந்தர்ப்பங்களில் சபையோர் பக்கமாக முகத்தைத் திருப்பவேண்டி வரும் என்பதேயாம். இதை விட்டு ஹார்மோனியம் பக்கமாகவும் பக்க வாத்தியக்காரன் பக்கமும் நின்று அவரைப் பார்த்து பாடுவது மிகவும் கண்டிக்கத் தக்கதாம். இதைப் பார்க்கிலும் மோசமெதுவும் கிடையா தென்றே தான் கூற வேண்டும். இக்குற்றம் ஜீவனோபாயமாக நாடக மாடுபவர்களிடம் பெரும்பாலும் குடி கொண்டிருக்கிறது. இதை அவர்கள் அடியுடன் அகற்று மளவும் தென் இந்திய நாடக மேடைக்கு விமோசனமே கிடையாதென்பது நிச்சயம். சங்கீத வித்வானாகிய கதாநாயகன்வேடம் பூண்ட ஒரு ஆக்டர் தன் நாயகியைப் பார்த்துப் பாட வேண்டிய பாட்டை ஹார்மோனியம் வாசித்துக்கொண் டிருந்த சாயபுவைப் பார்த்து, "மனமோகன மானே" என்று ஆரம்பித்துப் பாடியதைக் கண்டு நான் துக்கப்பட்டிருக்கிறேன்! தமிழ் நாடக மேடை விர்த்தியடைய வேண்டுமென்று விரும்பும் எனது நண்பர்களில் ஒவ்வொருவரும் இப்படிப்பட்ட அசங்கியமான அசம்பாவங்களை வெளிப்படையாகக் கண்டித்து, நமது நாடக மேடையானது அபிவிர்த்தி யடையுமாறு தங்களாலியன்ற அளவு உழைபபார்களாக.

நாடக மேடையில் பாடும் ஆக்டருக்கு இன்னொரு முக்கியமான கஷ்டமிருக்கிறது. அது என்ன வென்றால் வசனத்தை யொட்டிப் பாட்டை ஆரம்பிக்க வேண்டுவதாம்; நூற்றில் தொண்ணூற்றொன்பது ஆக்டர்கள் தாங்கள் பேசிக்கொண்டு வரும் வார்த்தைகளை நிறுத்திவிட்டு ஸ்ருதியைக் கவனித்து 'உம்' என்று குரலை யெழுப்பி பிறகே பாட ஆரம்பிக்கிறார்கள். நாடகக்கலையில் பரிபூரணமாக தேர்ச்சி பெற்றவர்கள் அவ்விதம் செய்யார்; வசனத்துடன் கலந்தே பாட்டை ஆரம்பிப்பார்கள்; வசனம் எங்கு முடிகிறது. பாட்டு எங்கு ஆரம்பிக்கப்படுகிறது என்று பகுக்க முடியாத வசனத்தை யொட்டி ஆரம்பிப்பார்கள்; இவ்விஷயத்தில் எனது நண்பராகிய அ. கிருஷ்ணசாமிஐயருக்குள்ள பாண்டித்யத்தைப் பற்றி முன்பே எழுதி யிருக்கிறேன். இது மிகவும் கடினம் தான். ஆயினும் எந்த சிரமமாவது பட்டு கற்க வேண்டியதெனலாம்; "நீ கற்றிருக்கிறாயா?" என்று என்னைக் கேளாதீர்கள். இன்னபடி செய்தல்



தாமென்று கூறவந்திலன். நான் சொல்லுகிறபடி செய்யுங்கள், நான் செய்கிறபடி செய்ய வேண்டாம்! என்று ஆங்கிலத்தில் ஒரு பழமொழியுண்டு, அதைக் கடைப்பிடித்து நடக்க வேண்டுகிறேன்.

சங்கீதப் பிரியர்களான ஆக்டர்கள் மேடையின் மீது தவிர்க்க வேண்டியது மற்றொன்றுண்டு, அதாவது ராக ஆலாபனை அதிகமாகச் செய்வதேயாம். நாடக மேடை மீது தருவையோ அல்லது விருத்தத்தையோ பாடும்பொழுது வெறும் ஆலாபனையை எவ்வளவு குறைக்க வேண்டுமோ அவ்வளவு குறைக்க வேண்டுமென்பது என் அபிப்பிராயம். இதற்கு முக்கிய காரணம் பாட்டிலுள்ள வசனங்களைப் பாடும்பொழுது அவைகளுக்குரிய அபிநயத்தை முகத்திலும் அவயவங்களிலும் காட்டலாம். வெறும் ராக ஆலாபனை செய்பவர் இதைச் செய்வது எளிதில் ஏற்படுவதேயாம். அன்றியும் பாட்டின் ராகங்களை விட்டு "தோம்தானா" என்றாவது அல்லது ரிகம, கபப, பதனி" என்று சுத்த ஸ்வரங்களைப் போட்டாவது பாடுவது நாடக மேடைக்குக் கொஞ்சமேனும் பொருந்தாததாம். கதாநாயகன் கதாயகிக்குப் பாடும் பாட்டில் ஸலாம் போட்டுப் பாடுவதானால் அதற்கு என்ன அபிநயம் பிடிப்பது! இப்பழக்கம் பெரும்பாலும் நாடகமாடுபவன் ஜீவனோபாயமாக உடைய ஆக்டர்களிடம் மிகவும் குடிகொண்டிருக்கிறது. இக்குற்றத்தை எல்லா ஆக்டர்களும் முற்றிலும் தவிர்க்க வேண்டு மென்பது என் கருத்து. அவ்வாறு யாராவது ஆக்டர் சங்கீதத்தில் தன் திறமையை சபையோருக்குக் காட்ட வேண்டு மென்று விருப்ப மிருந்தால், சங்கீத கச்சேரிகள் ஏற்படுத்தி, அவைகளில் ராக ஆலாபனைகளும் ஸலாம் போடுவதையும் தனக்கிஷ்டமான வரையில் காட்டட்டும். நாடக மேடையில் இது உதவாது என்பதைத் தான் மிகவும் வற்புறுத்த வேண்டும்.

அன்றியும் ராகங்களை ஆலாபனை செய்து சங்கீதத்தை விஸ்தரிப்பதினால் இன்னொரு முக்கியமான கஷ்டம் இருக்கிறது. ஒரு ஆக்டர் மற்றொரு ஆக்டருடன் சம்பாஷணை செய்யும்பொழுது ஒரு பாட்டை இரண்டு மூன்று நிமிஷங்கள் பாடினால் பாட்டைக் கேட்கும் ஆக்டர், இன்ன முகபாவத்துடன் இதைக் கேட்க வேண்டு மென்று தீர்மானித்து அதற்குத் தக்கபடி அபிநயிக்கலாம். இதை விட்டு கால் மணி வரையில் ராக ஆலாபனை செய்து சங்கதிகள் போட்டு பாடினால் பாட்டைக் கேட்கும் ஆக்டர் என்ன செய்வது? இந்த கஷ்டத்தை நான் பன்முறை அனுபவித்திருக்கிறேன். பல ஆக்டர்கள் இச்சந்தர்ப்பங்களில் நாங்கள் என்ன செய்வது என்று கேட்டிருக்கிறார்கள். மற்றுஞ் சில சிறந்த தேர்ச்சி பெற்ற ஆக்டர்களால் நீடித்த காலம் தக்கபடி முகபாவத்தை வைத்திருக்க முடியும். மற்றவர்களுக்கு இது ஒரு பெருங் கஷ்டமேயாம். இப்படிப்பட்ட கேள்வி கேட்டும் எனது நண்பாகளுக்கு நான் வேடிக்கையாகச் சொல்லும் பதில் ஏற்ற தொன்றாம். "கூடுமான வரையில் உங்களுடன் பாடும் ஆக்டர்களைப் பாட்டைத் தக்கபடி குறுக்கிப் பாடச் சொல்லுங்கள், அதற்கு மேல் அவர்கள் அத்து மீறினால், அச்சமயங்களில் கொஞ்சம் அவலை கையில் வைத்துக்கொண்டு பாட்டு முடிகிற வரையில் அதை மென்றுகொண்

டிருங்கள்" என்பதேயாம். இக்குற்றம் ஜீவனோபாயமாக ஆடும் ஆக்டர்களிடம் மிகவும் அதிகமா யுண்டு; இதைப்பற்றி பிறகு நான் எழுதவேண்டி வரும்.

மேலும் பாடும்பொழுது பல்லவியையோ அனுபல்லவியையோ, சரணத்தில் ஏதேனுமொரு அடியையோ, வெவ்வேறு "சங்கதி"களுடன் பாட வேண்டி திருப்பித் திருப்பிப் பாடவேண்டி வந்தால் தக்கபடியான வெவ்வேறு அபிநயங்களுடன் பாடினாலன்றி ரமிக்காது. சதிர்க்கச்சேரியில் ஒரு பதத்தைப் பாடும் நடன மாது அப்பதத்தைப் பன்முறை பாடும்பொழுதும் தக்கபடி வெவ்வேறு அபிநயம் பிடிக்கின்றாளே யொழிய ஒரே அபிநயத்தைப் பன்முறை காட்ட மாட்டாள். ஆகவே நாடக மேடையின் மீதும் வெவ்வேறு அபிநயத்துடன் எத்தனை முறை கூறக் கூடுமோ அத்தனை முறைதான் பாட்டைத் திருப்பித் திருப்பிப் பாட வேண்டும். இதற்கு ஒரு உதாரணம் கொடுக்கிறேன். கதாநாயகன் கதாநாயகியை ஏதோ கோபித்துக் கூறுகிற பாட்டொன்றை எடுத்துக்கொள்வோம். பாடும் ஆக்டர் அக்கோபத்தை நான்கு விதத்தில் அபிநயித்துக்காட்டச் சக்திவாய்ந்தவனாயின் அந்நான்குமுறை அப்பாட்டையோ, பல்லவியையோ திருப்பிப் பாடலாம். அதற்கு மேல் பாட்டில் வெவ்வேறு சங்கதிகள் போடுவதற்காக காட்டின அபிநயத்தையே காட்டிக்கொண்டிருப்பா னாயின், அது நாடக மேடைக்குப் பொருத்தமானதாயிராது. இதை ஜீவனோபாயமாக நடிக்கும் ஆக்டர்கள் முக்கியமாகக் கவனிப்பார்களாக.


## ஒரு சிறந்த நாவல் சஞ்சிகை

'மனமோகினி' என்னும் நமது இனிய நாவல் சஞ்சிகைக்கு இப்போது பிப்ரவரி முதல் பதின்மூன்றாவது ஆண்டு நடந்து வருகிறது. இதில் 'நாகபுரியின் நாகரிகம்' என்னும் புதிய நாவல் ஆரம்பிக்கப்பட்டு வெளியாகிவருகிறது. இந்நவீனகம் படிக்கப் படிக்கத் தெவிட்டாத அமுதமாகும். இதுவே ஆங்கில நாவலாசிரியராகிய ரெயினால்ட்ஸின் கடைசி கதையாகையால் மிக்க ருசிகரமாக இருக்கும். சுமார் நான்கு ரூபாய் விலையுள்ள நாவல் ஒரு வருஷத்தில் கிடைக்கும். பிரதி மாதமும் கிரௌன் 1-க்கு 16 சைசில் 80 பக்கங்கள் வெளியாகின்றன. இதன்,

வருஷ சந்தா ரூபா 2—8—0 தான்.

அன்னிய நாடுகளுக்கு ரூபா 3—0—0.

உடனே முன்பணம் அனுப்புங்கள்.

மானேஜர் :—'ஆனந்தபோதினி' ஆபீஸ்,
தபாற்பெட்டி நெ. 167, மதராஸ்.


# தென்னிந்திய உற்சவங்கள்

(ஆரியூர்—வ. பதுமநாப பிள்ளை.)

"திருக்கோயில் இல்லா ஊர் திரு இல் ஊர்"—என்றார் பெரியார். கடவுள் வழிபாட்டுக்கு உரிய பொது இடம் ஒன்றேனும் இல்லாத ஊர், வேறு எத்தகைய சிறப்புகளுடன் விளங்கினும் உண்மையன்பர்களுக்கு உவப்பூட்டக் கூடியதாகாது. புண்ணிய பூமியாகிய இத் தென் தமிழ் நாட்டிலே, சின்னஞ் சிறு விநாயகர் கோயிலாகவாவது ஒரு கோயிலும் இல்லாத ஒரு சிறு கிராமத்தைபும் காண்பது அரிது. 'கோயில்' என்பது 'எவ்வுயிர்க்கும் தனிப்பெருந் தலைவனாக விளங்கும் இறைவன் உறையும் இடம்' எனும் பொருளுடையதாகும். 'பார்க்கும் இடம் எங்கும் ஒரு நீக்கமற நிறைகின்ற பரிபூரணானந்த" சொரூபனாகிய இறைவன் இல்லா இடம் எதுவுமில்லையாயினும், பார்த்த இடமெங்கும் பகவத்—சொரூபமாகக் காணக்கூடிய தீவிர ஞான பக்குவம் அடையாதவர்களுக்கு திருக்கோயில் வழிபாடு இன்றியமையாததாதலால், "ஆலயம் தொழுவது சாலவும் நன்று"—என்று ஔவைப் பிராட்டியாரும் அறிவுறுத்தி யருளினர். கலியின் கொடுமையாலோ, கவனிப்பாரின்மையாலோ, அகங்கார மிகுதியினாலோ தற்காலத் தமிழ்நாட்டுத் திருக்கோயில்களிலே பல வகைப்பட்ட குறைபாடுகள் காணப்படுவது உண்மையே. அதனாலேயே, ஆன்ம உருக்கத்திற்குச் சிறந்த சாதனங்களாக—இறைவனது இன்னருட் படைப்பின் அற்புதப் பேரழகு நிரம்பப் பெற்ற அழகிற் சிறந்த இடங்களில், முன்னோர்களால் அமைக்கப்பட்ட ஆலயங்களை அடியோடு அழித்துவிடவேண்டும் என்று வாதிப்பது அறிவுடைமையாகாது.

நெல்லின் மேலுள்ள உமியைப் போக்கி, அதற்குள்ளிருக்கும் அரிசியைப் பயன்படுத்திக் கொள்வதை விட்டு விட்டு, நெல்லையே புறக்கணித்து விடுவது அறிவுடைமையாகாது. கரும்பின் மேலுள்ள பட்டையை உரித்து உள்ளிருப்பதைச் சுவைக்காமல், கரும்புக்கழியை எறிந்து விடுவோர் எவரும் இலர். தர்மகர்த்தர்களின் கவனக் குறைவினாலோ, அர்ச்சகர்களின் அலட்சிய புத்தியினாலோ, பணப்பித்து மிகுதியினாலோ இன்றைய தென்தமிழ்நாட்டுத் திருக்கோயில்களிலே பல வகைப்பட்ட குறைகள் காணப்படலாம். அக் குறைகளையே காரணமாகக் கொண்டு, ஆயிரக் கணக்கான வருஷங்களாக அழியாமலிருந்துவரும் ஆலயங்களை விரைவில் அழித்துவிட வேண்டுமென்று வாதிப்பது அறியாமையே ஆகும்.

பசுவின் உடல் முழுவதும் இனிய பால் நிரம்பி யிருப்பினும், அதன் மடிக்காம்புகளில் கைவிரல்களை வைத்துக் கறந்தாலன்றி, அப்பாலைப் பெறுவது அசாத்தியம் என்பது அனைவருக்கும் தெரியும். "இகபர இரண்டினிலும் உயிரினுக்கு உயிராகிய இறைவன், எல்லா இடங்களிலும் நிறைந்து நிற்கும்

அருட்பெருஞ் சோதித் தனிப்பெருங் கருணையாளனுக இருப்பினும், எந்த இடத்தில் பல்லாயிரக் கணக்கான வருஷங்களாக பல்லாயிரக்கணக்கான அன்பர்கள் உண்மைப் பேரன்புடன் இறைவனை வழிபட்டு வந்தார்களோ, அந்த இடத்தில் பகவத் சாந்நித்யம் எக்காலத்திலும் இனிது பொருந்தியிருக்கும்" என்னும் உண்மையை நன்கு சிந்தித்து உணர்ந்து ஆலய வழிபாட்டில் உண்மைப் பேரன்புடன் ஈடுபடுவது மெய்யன்பர்களின் இன்றியமையாத சீரிய கடமையாகும்.

திருக்கோயில்கள் நிரம்பிய தென்றமிழ் நாட்டிலே, பல வகைப்பட்ட உற்சவங்கள் நடத்தப்பட்டு வருகின்றனவாயினும், முன்னோர்கள், எந் நன்னோக்கத்துடன் உற்சவங்களை ஏற்படுத்திச் சென்றூர்களோ, அந் நன்னோக்கம் இக்காலத்தில் பெரும்பாலும் கவனிக்கப்படுவதில்லை என்பது மிகுந்த வருத்தத்துடன் ஒப்புக்கொள்ளவேண்டிய உண்மையாகும். அதுமட்டுமல்ல; அந் நன்னோக்கங்களுக்கு முற்றும் மாறுபட்ட முறைகளிலும் தற்காலத் தென்னிந்தியக் கோயில்களில் உற்சவங்கள் நடத்தப்பட்டு வருவதன் பயனுக, உண்மையன்பர்களது உள்ளம் பெரிதும் புண்படுவதாக இருக்கிறது. அவ்வாறு நடத்தப்பட்டு வருவதன் பயனுக, தற்காலத்தில் ஆலய வழிபாட்டைப் பலர் வெறுக்கவும் சிலர் எதிர்த்துப் பிரசாரம் செய்யவும் நேர்ந்திருக்கிறது. இந்நிலைமையை கூடிய விரைவில் மாற்ற முயன்றூலன்றி, ஆலய வழிபாட்டை ஆதரிப்போர் தொகை மிகமிகக் குறைந்துவிடக் கூடும். 'சீர்திருத்தம்' 'சீர்திருத்தம்' என்று சொல்லிக்கொண்டு ஆக்க வேலையை விட்டு விட்டு அழிவு வேலையில் ஈடுபடுவது, எதிர்பார்க்கப்படும் நற்பயனை அளிக்கக் கூடியதாகாது.

முற்காலத் தென் தமிழ்நாட்டுத் திருக்கோயில்களிலே நடத்தப்பட்ட உற்சவங்கள், சிறந்த முறையில் நடத்தப்பட்டு வந்தன. அவ்வுற்சவங்களை நடத்தியவர்களும் நடத்த உதவி செய்தவர்களும் கண்டு களிக்கக் கூடியவர்களும் பகவத்—பக்தியில் பெரிதும் சிறந்து விளங்கினர். அதன் பயனுக, அக்காலத்திய தென்னுட்டுத் திருக்கோயில்கள் காண்போர் அகத்தில் பகவத்—பக்தியைப் பெருக்கக் கூடிய சீரிய அன்பு நிலையங்களாக விளங்கின.


ஆனுல், இக்காலத் தென்னிந்தியக் கோயில்களில் நடத்தப்பட்டுவரும் உற்சவங்கள் காண்போர், அகத்தில் பகவத்—பக்தியை வளர்க்கக் கூடாதனவாக இருந்து வருவதோடு, அதற்கு மாருக உள்ளத்திற்குள் ஒடுங்கிக் கிடந்த உலக இன்ப இச்சைகளைக் கிளறி எழுப்பி மன அமைதியைக் குலைத்து பல வழிகளிலும் மனத்தைச் சிதற வைப்பனவாக இருந்து வருகின்றன.

ஒரு ஊரில் உற்சவம் நடத்தப்படுவதாகக் கேள்விப்பட்டு விட்டால், அவ்வூரில் திரளான ஜனங்கள் கூடி விடுகிருர்கள். அவர்களுள், பகவத் சேவை ஒன்றையே பலனுகக் கருதி உண்மைப் பக்தியுடன் உற்சவங்களைப் பார்க்கக் கூடுபவர்களின் தொகை மிக மிகக் குறைந்து வருகின்றது. கண்ணுக்கினிய வாணவேடிக்கை முதலிய காட்சிகளைக் காண்பதற்காக கூடுவோர் சிலர்;செவிக்கினிய நாதஸ்வரக்கச்சேரி முதலியவைகளைக்கேட்பதற்காக கூடுவோர் சிலர்; நாவுக்கினிய பலவகைப் பட்சணங்களையும் பழங்களையும் உண்டு களிப்பதற்காக கூடுவோர் சிலர்; 'தமாஷாகப் பொழுது போக்கலாம்' என்னும் எண்ணத்துடன் கூடுவோர் சிலர்; நாட்டியக் கச்சேரியில் நாட்டங்கொண்டு கூடுவோர் சிலர்; இலவசமாகக் கிடைக்கும் சாப்பாட்டில் ஆசை மிகுந்து கூடுவோர் சிலர்; தத்தமக்குள்ள ஆடை யாபரணங்களின் சிறப்பைப்



பலர்க்கும் காட்டும் நோக்கத்துடன் கூடுவோர் சிலர். இறைவனது இன்னருள் திருவுருவின் அழகில் ஈடுபட்டு, பக்திரஸத்தை அனுபவித்து ஆனந்திக்கவேண்டுமென்னும் சீரிய நன்னோக்கத்துடன் கூடும் உண்மையன்பர்கள் மிக மிகச் சிலரே.

ஒரு ஊரில் உற்சவம் நடைபெற்றுல், அவ்வுற்சவத்தை முன்னிட்டு அவ்வூருக்கு வரும் உண்மை யன்பர்களுக்கு 'அன்ன விசாரம்' ஏற்படாதிருப்பதற்காக, அவர்களுக்கு இலவசமாக அன்னமளிக்க ஏற்பாடு செய்யப்பட்டது. அவ்வாறு அடியார்களுக்கு அன்னமளிப்பதை சைவர்கள் 'மாகேச்வர பூஜை' என்றும், வைணவர்கள், 'ததியாராதனை' என்றும் வழங்கிவந்திருக்கிறூர்கள்.





ஆனுல், இக்காலத்திய உற்சவங்களில் கூடும், 'அடியார்கள்' எனப்படுவோரில் மிகப் பெரும்பான்மையோர், 'அன்னத்தின் அடியார்க்கும் அடியர்களாகவுமே இருந்து வருவது பெரிதும் வருந்துவதற்கு உரியது.

உற்சவ காலத்தில் கூடும் உண்மை யன்பர்களுக்கு அன்னமளிக்க வேண்டியது இறைவனது திருவுள்ளத்திற்கினிய சிறந்த தருமம்என்பதை எவரும் மறுப்பதற்கில்லை. ஆயினும், அத் தருமத்தை சிறந்த முறையில் தகுந்தவர்களுக்குச் செய்யவேண்டுமென்பதை எவரும் மறந்துவிடக் கூடாது. உள்ளூரில் உள்ளவர்களுக்கும் தமக்கு வேண்டியவர்களுக்கும் உணவளித்துவிட்டு, வெளியூர்களி லிருந்து பகவத்—சேவைக்கென்றே வந்தவர்களையும் வலிந்து நுழைந்து பந்தியில் இடம் பிடிக்க முந்திக்கொள்ள மனமின்றி சற்று நாணத்துடன் ஒதுங்கி நிற்பவர்களையும் கவனியாமல் விட்டு விடுவது, இறைவனது திருவுள்ளத்திற்கினிய சிறந்த தருமமாகாது. பகவத்—பக்தி சிறிதும் இல்லாத வெறும் சோற்றுச் சாமிகளுக்கும் உற்சவ காலங்களில் இலவச உணவு அளிக்கப்படுவதன் பயனுக, உண்மை யன்பர்களது பசிப்பிணியைப் போக்கி, அவர்களை மகிழ்விக்க வேண்டிய அன்னதான சமாஜங்களாகிய ததியாராதனைக் கூடங்கள் முதலியன, வயிற்றை வளர்ப்பதற்காகவே ஊளூராகத் திரியும் சோம்பேறிகள் உறங்கும் இடங்களாக—மடங்களாக—மாறிவிட்டிருக்கின்றன. உற்சவ காலங்களில், கோயில்களில் பகவத்—சேவைக்காக காத்து நிற்கும் பாகவதர்களைவிட, இராமானுஜ கூடங்களில் சோற்றுக்காக காத்து நிற்கும் பாகவதர்களின் தொகை பன்மடங்கு அதிகரித்திருப்பது சர்வசாதாரணமாகிவிட்டது. இத்தகைய கேவல நிலைமை கூடிய விரைவில் மாற்றப்பட

வேண்டியது அவசியம். "கூழாட்பட்டு நின்றீர் உள்ளீரேல், எங்கள் குழுவினில் புகுதலொட்டோம்"—எனும் பெரியாழ்வார் அருள் மொழியின் உண்மைப் பொருள் நன்கு சிந்தித்து உணரத் தக்கது.

ஏராளமான ஜனங்கள் கூடுவார்கள் எனும் காரணத்தை முன்னிட்டு, தென்னிந்தியாவில் நடத்தப்படும் பிரபல உற்சவங்கள் பலவற்றிலும் நூற்றுக் கணக்கான பொருட் செலவில் பலவகைப்பட்ட விசித்திர வாணவேடிக்கைகள் நடத்தப்பட்டு வருகின்றன. நாடு வறுமையின் கொடுமையால் வாடித் தவிக்கும் இக்காலத்திலே, சில நிமிஷக் காட்சி யின்பத்திற்காக நூற்றுக் கணக்கான பொருளை வீணில் செலவழிப்பது மிகவும் வருந்தத் தக்க கேவலமான — பொருளற்ற— வெறும் கண்மூடி வழக்கமாகும். அப்படிப்பட்ட வாணவேடிக்கைகள், பகவானது திருவுள்ளத்திற்கு இன்பூட்டக் கூடியன வென்றோ பகவத்—பக்தி வளர்ச்சிக்குத் துணை செய்யக் கூடியனவென்றோ எவரும் கூறத் துணியார். அப்படிப்பட்ட வாணவேடிக்கைக்காக வீணில் பாழாக்கப்படும் பெரும் பொருளைக்கொண்டு, உற்சவ காலத்தில் கூடும் நூற்றுக் கணக்கான ஏழைகளுக்கு அன்ன மளிப்பது சிறந்த பெருந் தரும மாவதோடு இறைவனது பணியுமாகு மென்பதை, தென்னிந்தியத் திருக்கோயில்களில் உற்சவங்களை நடத்திவைக்கும் அன்பர்கள் அனைவரும் கவனித்து நடப்பது பெரிதும் நலந் தருவதாகும்.



பிரசித்தி மிகுந்த பெரிய கோயில்கள் பலவற்றில் நடைபெறும் உற்சவங்களில், இறைவன் எதிரில் தாசிகளின் நடனக் கச்சேரியும் நடத்தப்பட்டு வருகிறது.

காமம் முதலிய எண்ணங்களை மறந்து, கடவுளிடத்தில் அன்பு செலுத்த வருவோரின் அகத்தைக் கறைப்படுத்தக் கூடியவாறு பேரின்பத் திருவுருவினனாகிய இறைவன் திருமுன்பு, சிற்றின்பக் கிளர்ச்சியை எழுப்பக்கூடிய நாட்டியக் கச்சேரி நடத்தப்பட்டு வருவது எவ்வளவு விபரீதமான குருட்டு சம்பிரதாயம்! பக்தர்களது பஜனையைக்கண்டு அகம் மகிழும் ஆண்டவன் திருமுன்பே, தேவதாசிகளின் நாட்டியம் நடைபெர்று வருவது எதற்காக? காம கோபங்களை வெற்றி கொண்டவர்களுக்கே திருவருள் பொழியும் இயல்பினனாகிய இறைவனை மயக்குவதற்காகவா? பலவகைக் கவலைகளையும் மறந்து பகவானைச் சேவிக்கவரும் பக்தர்களை மகிழ்விப்பதற்காகவா? தற்காலப் பிராமண அர்ச்சகர்களும் வேதபாராயண—அத்யாபக கோஷ்டியனராகிய ஸ்வாமிகளும் பூதேவர்களாதலால், அவர்களுக்கு தேவலோக போக சிந்தனை தோன்றச் செய்வதற்காகவா? வேறு எதற்காக? அகம் கசிந்து உருகி பக்திப் பெருக்கால் ஆடும் ஆட்டமே இறைவனுக்கு இன்பூட்டக்கூடிய தென்பதையும், மெய்யன்பர்களை மகிழ்விக்கக் கூடியவை, பகவத் சேவையும் பகவத்-பஜனையுமே என்பதையும், தேவர்க்கும் கிடைத்தற்கரிய பகவத்— கைங்கரிய பாக்யத்தைப் பெற்றுள்ள உத்தம அந்தணர்களுக்கு மகிழ்வூட்டக் கூடியவை, பகவத்—சேவையும், வடமொழி தென்மொழி வேதபாராயணங்களுமே என்பதையும் ஒவ்வொருவரும் தத்தமது சித்தத்தில் பசுமரத்தாணியென்னப் பதிய வைத்துக் கொள்ள வேண்டியது அத்தியாவசியமாகும்.





பெருமாளுக்கு முன்னால் திவ்யப்ரபந்த பாராயணம்; பின்னால் வேத பாராயணம். பெருமாளுக்கு எதிரிலோ, தாசியின் நாட்டியக் கச்சேரி; நட்டுவனின் பாட்டு! பகவானைச் சேவிக்க அவாருகில் வர முயலும் அன்பர்களை, அவ்வாறு நெருங்க வொட்டாவாறு தாசியைச் சுற்றி சூழ்ந்து நின்று கொண்டிருக்கும் 'ஷோக்—மைனர்க'ளின் கூட்டம்! என்ன விபரீதக் காட்சி இது! செல்வத்திலும் மகாத்மியத்திலும் பெரிதும் உயர்ந்த பெரிய கோயில்கள் பற்பலவற்றில் நடைபெறும் உற்சவங்களில், இத்தகைய விபரீதக் காட்சியைக் காணநேரும் உண்மை யன்பர்களது நெஞ்சம் எவ்வளவு புண்படக் கூடுமோ! தமிழ்நாட்டை விட்டு இத்தகைய விபரீதங்களெல்லாம் அகன்றொழியும் நாள் எந்நாளோ, அந்நாளே தென்னிந்திய உற்சவங்களுக்குள்ள குறைபாடுகள் மறையும் நன்னாளாகும்.

தென்னிந்தியாவிலுள்ள பெரிய திருக்கோயில்கள் பலவற்றில், உற்சவ காலங்களில் வேறொரு கேவலச் செயல் நடைபெற்று வருகிறது. மூலஸ்தானத்திலுள்ள கடவுளைச் சேவிக்க வேண்டுமானால், ஏதேனும் காணிக்கை

செலுத்திய பின்பே, பக்தர்கள் சந்நிதிக்கு உள்ளே செல்ல அனுமதிக்கப்படுகிறார்கள்! கையில் பணமிருந்து காணிக்கை செலுத்தியவர்களுக்கே பகவத்—சேவை; காணிக்கை செலுத்தச் சக்தியற்றவர்கள், எப்படிப்பட்ட மகா பக்தர்களாக இருந்தாலும் வருத்தத்துடன் கோயில் வாயிலிலேயே நின்றுவிட வேண்டியதுதான்! இவ்வண்ணம், ஒப்புயர்வற்ற தனிப்பெருங் கருணைப் பெருக்கினால் இன்னருள் திருவுருக்கொண்டு இறைவன் எழுந்தருளியுள்ள திருக்கோயில்கள் பலவற்றை, உற்சவ காலங்களில் 'பொருட்காட்சிச் சாலைக'ளாக மாற்றிவிடுவோரது மகாபசாரம் அருட்பெருங் கடலாகிய ஆண்டவனால் மன்னிக்கப்படத் தகாது—என்பது கவனிக்கத் தக்கது.




பிரசித்தி மிகுந்த பெரிய திருக்கோயில்கள் சிலவற்றில், கேவலம் 'பழக்கம்'—என்ற ஒரே காரணத்தை முன்னிட்டு இக்கால நிலைக்குச் சிறிதும் பொருந்தாதனவும் விபரீதார்த்தம் கொள்விக்கக் கூடியனவுமாக சில உற்சவங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. அவற்றுள் 'மட்டையடி உற்சவம்'—என வழங்கப்பட்டுவரும் 'ப்ரணய கலக உற்சவம்' ஒன்று. கடவுள் வைப்பாட்டி வீட்டுக்குச் சென்றாராம்; அதைக் கேள்வியுற்ற அவரது தேவி, அவரிடம் ஊடல் கொண்டு, தனது தோழிகளைக்கொண்டு பூப்பந்துகளாலும் வாழை மட்டையாலும் பழங்களாலும் தனது நாயகனை அடிக்கச் செய்கிறாளாம்! முடிவில், ஒருவாறு சமாதான மடைந்து தனது நாயகனைத் தன்னிடம் அழைத்துக் கொள்கிறாளாம்!

இவ்வுற்சவத்திலே, இக்காலத்திய ஆலய தேவதாசிகள் "தேவியின் தோழிகள்"—என்ற ஸ்தானத்திலிருந்து வாழைமட்டையையும் பூச்செண்டுகளையும் பழங்களையும சுவாமியின் பரிவாரங்களாகிய அர்ச்சக பிராமணர்கள் மேல் வேடிக்கையாகவும் குறும்பாகவும் வீசி எறிகின்றனர். அப்பொழுது பக்கத்தில் நிற்கும் 'ஷோக்—மைனர்கள்' செய்யும் சில்லரைத் திருவிளையாடல்களின் இழிவு, கேவலம் எழுத்தால் எழுதி உணர்த்தக்கூடிய தன்று. பெண்ணாசைப் பித்தர்கள்—தங்களது கேவல ஆசைப்பித்தை "பற்றிலார் பற்ற நின்ற பரமகருணாநிதி" யாகிய பகவான் மேலும் ஏற்றத் துணிந்தது எவ்வளவு கொடிய அபசாரம்! 'ப்ரணய கலகம்' என்பது எவ்வளவோ உயர்ந்த



கருத்துடைய சிறந்த விஷயமாகும். அதன் உண்மைத் தத்துவார்த்தங்களை உள்ளபடி உணர்ந்து மகிழக்கூடிய மனமில்லாதவர்கள், அதை விபரீதார்த்தப் படுத்திக்கொள்வது எவ்வளவு அறியாமை! அத்தகைய உற்சவங்களைக் காண்போர் மனதில், எத்தகைய உணர்ச்சி உண்டாகக் கூடுமென்பதைச் சொல்லவும் வேண்டுமோ? "சுவாமியே வைப்பாட்டி வீட்டுக்குப் போகும்போது, நாம் வைப்பாட்டி வீட்டுக்குப் போவதில் என்ன தோஷம்?"—என்று வாதிப்போரின் தொகையை அத்தகைய உற்சவங்கள் மிகவும் பெருக்கி விடுகின்றன. நெடுங்காலமாக அத்தகைய உற்சவங்கள் இந்நாட்டில் நடத்தப்பட்டு வந்திருந்தாலும், தமிழர்களது தற்கால நிலைமையை உத்தேசிக்கும்போது, அத்தகைய உற்சவங்கள் இனியேனும் நிறுத்தப்பட்டுவிட வேண்டியது அத்தியாவசியம் என்பது எவர்க்கும் இனிது புலனாகும். "தொன்மையவாம் எனும் எவையும் நன்றாகா; இன்று தோன்றியவாம் எனும் எவையும் தீதாகா"—எனும் பெரியோர் அருள்மொழி ஈண்டு நன்கு சிந்தித்துப் பார்த்தற்கு உரியதாகும்.

சென்னையைப் போன்ற பெரிய நகரங்களில் நடைபெறும் உற்சவங்களிலே, சில்லரைத் திருவிளையாடல்களில் பெரிதும் தேர்ந்த 'ஷோக் மைனர்க'ளின் கூட்டம் அதிகமாகக் காணப்படுகிறது. சுவாமி வீதி யுற்சவம் கண்டருளும்போது அவர்கள் செய்யும் பலவகைப்பட்ட குறும்புகள், சுவாமியைச் சேவிக்கவரும் உண்மை யன்பர்களுக்கு மிகுந்த தொல்லை விளைவிப்பனவாக இருந்து வருகின்றன. தெரு ஓரத்தில் ஒதுங்கி நின்றுகொண்டிருப்பவர்கள் மீதும் வேண்டுமென்றே மோதி இடித்துக் கொண்டு போவதும், வேண்டுமென்றே பெண்கள்மேல் இடித்துக்கொண்டு போவதும், கூட்டத்தில் புகுந்து மற்றவர்களை நெருக்குவதும், நாட்டியக் கச்சேரியையும் நாதஸ்வரக் கச்சேரியையும் சூழ்ந்து கொண்டு சுவாமிக்கு முன் செல்பவர்களுக்குப் பலவகைப்பட்ட இடையூறுகள் செய்வதும், வாயில் சிகரெட் பிடித்துக்கொண்டே பகவானை வேடிக்கைப் பொம்மைபோல நினைத்து அலட்சியமாக நோக்குவதும் மைனர்களுக்கு உற்சாகம் மிகுந்த திருவிளையாடல்களாக இருந்து வருகின்றன. அத்தகைய மைனர்களால் பெருமான் சேவைக்காகக் கூடும் மற்றவர்களுக்கு எவ்வித இடையூறும் விளையாவாறு தகுந்த நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டியது, அவ்வக்கோயில் தர்மகர்த்தர்களின் இன்றியமையாத பெருங்கடமை யாகும்.



அன்பினாலும் பக்தியினாலும் ஒற்றுமையை வளர்க்கத்தக்க இடங்களாகிய திருக்கோயில்களிலே, அதிகாரத்துடனும் ஆடம்பரமாகவும் கூட்டத்தை 'ஒழுங்கு படுத்துவ'தற்காக—கோயில் பாதுகாப்புக்காக—போலீஸ்காரர்களை உற்சவங்களுக்கு வரவழைப்பது பெரும் அவமானமாகும். அப்போலீஸார், தங்களது அதிகாரத்தையும் முரட்டுத்தனத்தையும் சிறைப்படுத்தப்பட்ட கைதிகளிடம் எவ்வாறு காட்டுகிறார்களோ, அவ்வாறே அவற்றை பகவத்சேவைக்காக கூடும் பக்தர்களிடமும் காட்டுவது பெரிதும் வருந்தத்தக்கதாகும். அன்பு நிலையங்களாகிய ஆலயங்களிலே, ஒற்றுமையாகவும் ஒழுங்காகவும் நடந்து கொள்ள முடியாதவர்கள், சமூக வாழ்விலும் தேசிய— வாழ்விலும் ஒற்றுமையாகவும் ஒழுங்காகவும் நடந்து கொள்வது எவ்விதத்தில் சாத்தியமாகும்?




குறிப்பிட்ட ஊரில்—குறிப்பிட்ட நாட்களில்—உற்சவத்தைக் காரணமாக வைத்துக்கொண்டு கும்பல் கூடி, மீண்டும் வீணே கலைந்து விடுவதால் எவ்வித பயனுமில்லை; அதனால், இறைவனது திருவருளைப் பெறுவதும் அரிதாகும். நூற்றுக்கணக்காகவும் ஆயிரக்கணக்காகவும் ஜனங்கள் கூடும் உற்சவ காலங்களிலே, பகவத் வைபவங்கள் சமய—சமூக—தேசிய முன்னேற்றத்திற்கேற்ற சீரிய நல்வழிகள் முதலியவற்றைப்பற்றி தகுந்த நல்லறிவாளர்களைக்கொண்டு சிறந்த பிரசங்கங்கள் செய்வதால், உற்சவத்திற்காக கூடுவோர் சீர்திருந்தவும் கூடும்; அப்பணி, இறைவனது திருவுள்ளத்திற்கு பெருமகிழ்வூட்டக்கூடிய சீரிய செம்பணியாகவும் இருக்கும். அத்தகைய ஊக்கத்தையும் உற்சாகத்தையும் ஆலய தரும பரிபாலகர் பகவத்—பக்தியை மேன்மேலும் பெருக்கிக்கொண்டு சிறந்த பயன் பெறக்கூடிய நல்லறிவையும் உண்மையன்பையும் தென்னிந்தியத் திருக்கோயில்களில் நடைபெறும் உற்சவங்களை முன்னிட்டு கூடும் அன்பர்களுக்கும் வழங்கி யருள, இன்னருள் வடிவினனாகிய இறைவன் திருவுள்ளம் இரங்கி யருள்வானாக

---

## ஒரு அறிவிப்பு

கடந்த வைகாசிமாத இதழில் 816—வது பக்கத்தில் வெளியா யிருக்கும் "ஆரோக்கிய உயிரெழுத்துக்கள்" "ஆரோக்கிய தீபிகை" (ஏப்ரல் இதழ்) என்னும் சுகாதாரப் பத்திரிகையிலிருந்து 'எடுத்துப் போடப்பட்டவை யாகும். —[ப—ர்.]



மானேஜர்:— (புதிதாய் பியூன் வேலை கேட்க வந்திருப்பவனிடம்) "என்னிடம் வேலைக்கு வருபவன் நல்ல படிப்புள்ளவனா யிருத்தல் வேண்டும்."

வேலை கேட்பவன்:—"நான் அதிகம்படித்தவனென்றே முன் நான் வேலை பார்த்த ஆபீசில் என்னை நிறுத்திவிட்டார்கள்."

***

அப்பா, நீங்கள் எனக்கு அரை ரூபாய் பணம் கொடுத்ததாக சொப்பனம் கண்டேன்.

குழந்தாய், நீ நல்ல பையனாய்விட்டதால் நீயே அதை வைத்துக்கொள்.

***



தகப்பன்:—"அப்பா! பல் வைத்தியரிடம் போய் இந்தப் பல்லைப் பிடுங்கிக் கொண்டால் தான் பல் வேதனை தீரும்போலிருக்கு."

பையன்:—"அப்பா அன்றைக்கு ஒருவரிடம் நீங்கள் சண்டை போட்டுக் கொள்ளும் போது உன் பல்லைப் பிடுங்கி விடுவேன் என்று ஒருவர் சொன்னாரே; அவரிடம் போனால் இலவசமாகப் பிடுங்கிவிட மாட்டாரா?"

கணவன்:—"இது என்ன மருந்து?"


மனைவி:—"மறதிக்காக வைத்தியரிடம் வாங்கி வைத்தீர்களே அந்த மருந்துதான். கடந்த மூன்று மாதங்களாக அது அலமாரியில் அப்படியே உறங்குகிறது.

கணவன்:—"இனி அதைச் சாப்பிட்டு ஆகவேண்டிய தென்ன?"

மனைவி:—"தொடர்ந்துசாப்பிட்டால் மறந்துவிடாமல் எனக்குச் சேலை எடுத்துக்கொண்டு வருவீர்களல்லவா!"



***



தன்னையும் பிள்ளைகளையும் கைவிட்டு விட்டதாகவும், குடும்ப சவரக்ஷணைக்கு அவன் மாதா மாதம் பணங் கொடுத்துதவ ஆர்டர் செய்யவேண்டுமென்று மனைவி கோர்ட்டில் விண்ணப்பம் பண்ணியிருந்தாள்.

கோர்ட்டார்:—(கணவனைப் பார்த்து) உன் குடும்ப சவரக்ஷணைக்காக மாதா மாதம் ரூ. 10-கொடுக்க வேண்டுமென்று கோர்ட்டில் தீர்மானித்திருக்கிறது."

கணவன்:—"எஜமான்களே கோர்ட்டாரின் புண்ணியத்திற்கு அநேக வந்தனம். நானும் அவளுக்கு வருஷத்துக்கு இரண்டு சேலைகள் எடுத்துக் கொடுத்து விடுகிறேன்."

***

அடடா நான் தவறிப்போய் அல்லவா உன்னைக் காண்டாமிருகம் என்று சொல்லிட்டேன்.

ஏன்?

நீ தம்பிடிகூடப் பெறுமானமில்லையே; காண்டாமிருகம் ஆயிரம் ரூபாய் விலையாமே.





நடிகர்:—நான் நாடகத்தில் நடித்த அன்று ஒரு மைலுக்கப்பால் ஜனங்கள் சத்தமிட்டுச் சிரித்தது கேட்டது.

சிநேகிதர்:—ஒரு மைலுக்கப்பால் என்ன நடந்தது?

***

சடகோபாலய்யங்கார் தன் நண்பரான சுந்தரமய்யர் வீட்டுக்கு மத்தியானம் 12 மணிக்கு நல்ல வெய்யில் வேளையில் போனார்.

சடகோபாலய்யங்கார் வருவதை பார்த்த சுந்தரமய்யர் தன் மனைவியை அழைத்து யாராவது இங்கு வந்து என்னை எங்கே என்று கேட்டால் நான் வெளியே போய் இருக்கிறேன் என்று சொல்லிவிடு என்று சொல்லி வீட்டிற்குள் போய்விட்டார்.

சற்று நேரத்திற்கெல்லாம் சடகோபாலய்யங்கார் சுந்தரமய்யர் வீட்டிற்கு வந்தார். வாயிற்படியில் சுந்தரமய்யர் மனைவி நிற்பதைப் பார்த்து, அவளிடம் உன் கணவர் எங்கே என்று கேட்டார். அதற்கு சுந்தரமய்யர் மனைவி இப்பொழுதுதான் என் கணவர் வெளியே போனார் என்றாள். அதற்கு சடகோபாலய்யங்கார் இந்த வெய்யலில் எந்த மடையனாவது வெளியே போவானா? என்றார். இதையெல்லாம் கேட்டுக்கொண்டிருந்த சுந்தரமய்யர் ஜன்னல் வழியாக தலையை நீட்டி இந்த வெய்யிலில் வந்த நீயே சர்வ மூட்டாள். நான் வீட்டிலேயே சுகமாய் இருக்கிறேன் என்றார்.

***

உபாத்தியாயர்:— டே ராமா? காபி கொண்டுவந்தையா?

(ராமன் காப்பிகடை அம்பி அய்யர் மகன்) இதோ சார் கொண்டு வருகிறேன் என்று சொல்லி கடைக்குபோய் ஒரு கப் காபி வாங்கிக்கொண்டு வந்தான்.

உபாத்தியாயர்:—ஏண்டா முட்டாள், நான் காபி எழுதிக்கொண்டு வந்தாயா என்று கேட்டால் ஒருகப் காபி வாங்கிக்கொண்டு வந்திருக்கிறாயே?

ராமன்:—இதை முதலில் சாப்பிடுங்கோ சார்; பிறகு காபி எழுதுகிறேன், என்றான்.

***

கடைக்காரர்:—'அம்மா' என்னவேணும்?

சிறுமி:—10 பலம் கல்கண்டும் பாக்கிச்சில்லரையும் வேணும். சாயங்காலம் எங்கப்பா ஒரு ரூபா கொண்டுவந்து கொடுப்பா.




**காதலை அளக்குங் கருவி:**—யூகோஸ்லேவியாவைச் சேர்ந்த பெல்கிரேடிலுள்ள விஞ்ஞான சாஸ்திரி யொருவர் காதலையளக்குங் கருவியொன்றைக் கண்டுபிடித்திருக்கிறார். இக் கருவியைக்கொண்டு காதலர் இருவரின் காதல் வேட்கை எவ்வளவு இருக்கிறதென்பதைக் கண்டுபிடித்துவிடலாம்.

* * *

**3000 வருடத்திய பவுண்டன் பேனா:**—அமெரிக்காவுக்கும் மெக்ஸிகோவுக்கும் நடுவேயுள்ள ரியோகிராண்ட் என்னும் நதிக்கரையில் பள்ளமொன்றைத் தோண்டியபோது அதில் ஒரு பவுண்டன் பேனா அகப்பட்டது. அது மனிதன் எலும்பினால் செய்யப்பட்டது. அதில் ஊற்றப்படும் அக்காலத்திய இங்கியைக் கொண்டு எழுதும்போது ஊறி வரும்படியாக செய்யப்பட்டிருந்தது. அது 3000 வருடத்துக்கு முன் வழங்கப்பட்டதாக இருக்கவேண்டுமென்று ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர்.

* * *


**200 பாஷைகளில் வல்லவர்:**—உலகிலேயே அதிக பாஷைகள் தெரிந்தவர் 84 வயதுள்ள ஸர் ஜார்ஜ் கிரியர்ஸன் என்னும் ஆங்கிலேயராம். அவர் முன்னூறு பாஷைகளில் வல்லவராக இருக்கிறாராம். இந்தியாவில் தாழ்ந்த வகுப்பினர் பலருடைய பாஷைகள் எழுத்துமூலமாக வெளியாகவில்லையென்றும், அவை வெறும்பேச்சு வழக்கில் இருப்பதாகவும் அவைகளை யெல்லாங்கூடத் தெரிந்துகொள்ள அவர் விரும்புவதாகவுஞ் சொல்லப்படுகிறது.

* * *

**தொழிலாளிப் பெண் நாவலுக்குப் பரிசு:**—புடாபெஸ்ட் என்னுமிடத்துக்கு அருகிலுள்ள மில் ஒன்றில் நெசவுத் தொழிலில் ஈடுபட்டுள்ள மிஸ். மார்த்தி ஜார்ஜிலீ என்னும் பெண்மணி தனது ஓய்வு நேரத்திலேயே ஒரு நாவலை யெழுதி முடித்தாள். இவ் வருஷத்தில் அப் பிரதேசத்தில் எழுதப்பட்ட நாவல்களில் இந்நாவலே சிறந்ததெனக் கருதப்பட்டு அப் பெண்மணிக்குப் பரிசு அளிக்கப்பட்டதாம்.

* * *

**உலகிலேயே மிகச் சிறிய புத்தகம்:**—ஹென்றி சேம்பர்லேன் என்னும் அமெரிக்கக் கவியால் உமர்கயாம் என்பார் எழுதிய ருபய்யத் என்னும் நூலின் ஒரு பாகம் ஆங்கிலமொழியில் எழுதப்பட்ட ஒரு புத்தகம் ஆக்ஸ்போர்ட் லைபரரிக்கு இலவசமாகக் கொடுக்கப்பட்டு அதில் வைக்கப்பட்டிருக்கிறது. அது கால் அங்குலம் உயரமுள்ளதாயும், ஒரு அங்குலத்தில் பதினாறில் மூன்று பங்கு அகலமுள்ளதாயும் இருப்பதோடு, ஒன்றரை குன்றுமணி நிறையுள்ளதாகவும் இருக்கிறதாம். எனவே, இது உலகிலேயே மிகச் சிறிய புத்தகமாகக் கருதப்படுகிறது.




ஸ்பெயினிலிருந்தும், ஜர்மனியிலிருந்துந்தான் முதன்முதலாக ஊசிகள் இங்கிலாந்துக்கு அனுப்பப்பட்டன. ஆனால், 1919-வது வருடத்தில் இங்கிலாந்தில் முதன்முதலில் ஒரு ஜர்மானியர் ஊசியைத் தயாரித்ததாகத் தெரிகிறது.

* * * *

பிராங் சௌதால் என்னுமொருவர், சைகிளில் தினந்தோறும் 40 மைல் தூரத்திலுள்ள ஒரு இடத்துக்குப்போய்த் தன் வேலைகளைக் கவனித்துக் கொண்டு மீண்டும் அன்றிரவுக்குள் திரும்பி வந்துவிடுகிறாராம்.

* * * *

உலகத்தில் மொத்தம் 9,400 வியாபாரக் கப்பல்கள் இருக்கின்றனவாம். இங்கிலீஷ் பாஷையில் நான்குலக்ஷம் வார்த்தைகள் இருக்கின்றன. ஆனால் ஒருவருக்காவது முழுவதும் தெரியாதாம்.

* * * *

ஜேபானத்தில் மத்தநீர்த்தத்திற்கும், நீன்சிங்கிற்கு மிடையில், 18 மைல் நீளமுள்ள தொங்கு பாலம் போடப்படுமாம். அவ்வாறு கட்டப்பட்டால் உலகத்திலேயே பெரியதொரு பாலமாய் அது இருக்குமாம். மூன்றுநாள் பிரயாணத்தை இப்பாலத்தின் வாயிலாக 3 மணிக்குள் முடித்துவிடலாம்.

* * * *

கோல்பா முனையின் பக்கத்தில் இறந்துகிடந்த ஒரு திமிங்கலம் 52 அடி நீளமுள்ளதா யிருந்ததாம்.

* * * *

1658-ல் இங்கிலாந்தில் ஒருபவுன் சிறந்த தேயிலை 5 பவுன் 4 ஷில்லிங் விலைக்கு விற்கப்பட்டதாம்.

* * * *

தென்னாப்பிரிக்காவில் ஓரிடத்தில் பெண்ணொருத்தி ஆடவர்களைப் போல் கிஜார் அணிந்துகொண்டதற்காக மாஜிஸ்திரேட் அவளுக்கு அபராதம் விதித்தாராம்.

* * * *

செஸ்டர் என்னுமிடத்தில் பிரேதம் எடுத்துச் செல்கையில் எதிர்ப்படுவோர் எவரேனும் தனது தலையிலுள்ள தொப்பியை எடுக்காவிட்டால் அவரைக் கோர்ட்டின் முன் கொண்டுவந்து நிறுத்தித் தண்டனைக்குள்ளாக்கும் வழக்கம் இருந்து வருகிறது.

* * * *

மொராக்கோவில் ரோமாட் என்னும் ஒருவகை பழங் குடிகளின் தலைவன் 15 ஆயிரம் மக்களைத் தன் ஆதிக்கத்தில் வைத்தாளும் ஆற்றல் வாய்ந்தவனாயினும், அவனுக்கு எழுதப் படிக்கத் தெரியாதாம். மேலும், அவன் கல்வி கற்பது தகுதி வாய்ந்த தலைவனுக்குரிய செயல் அல்ல என்று கூறுகிறானாம்.

# ஆசிரியர் குறிப்புக்கள்

## பாடலிபுரக் கூட்டம்

சென்ற மாதம் பாடலி புரத்தில் இந்திய மக்கள் ஆவலுடன் எதிர்பார்த்திருந்த அகில இந்திய காங்கிரஸ் கமிட்டிக் கூட்டம் சிறப்பாக நடந்து முடிவுற்றது. அதில் மகாத்மாகாந்தி உட்பட காங்கிரஸ் தலைவர்கள் பெரும்பாலாரும், சுயராஜ்யக் கட்சியினரும், காங்கிரஸ் அபேதவாத கட்சியினரும் ஒன்றாகக் கலந்துகொண்டது குறிப்பிடத்தக்கது. யாவரும் கூடி யாலோசித்ததன் பயனாக, இரு முக்கிய தீர்மானங்கள் நிறைவேறின. அதாவது பொதுஜன சட்ட மறுப்பையும், தனிப்பட்டவர்கள் சட்டமறுப்பையும் நிறுத்திவிட வேண்டுமென்பது ஒன்று; சட்டசபைகளுக்குச் செல்லக்கூடாதென்ற லாகூர் காங்கிரஸ் ஏற்படுத்தியிருந்த தடையை நீக்கி, காங்கிரஸ்காரர்கள் சட்டசபைகளுக்குச் செல்லலாம் என்பது இரண்டு. இத் தீர்மானங்கள், தற்கால நிலைமையை யொட்டியனவா யிருப்பதோடு, பொதுமக்கள் ஆதரவைப் பெறக் கூடியனவாகவு மிருக்கின்றன. சுயராஜ்யக் கட்சி மேற்கொள்ள வேண்டுமென்றிருந்த சட்டசபை பிரவேசத்தைக் காங்கிரஸே மேற்கொண்டது பெருத்த விசேஷமாகும். எதற்காகச் சுயராஜ்யக் கட்சி தோன்றியதோ அதைக் காங்கிரஸ் ஏற்றுக்கொண்டதால் இனி அதற்கொன்றும் வேலையில்லை. எனினும் அது இருந்துகொண்டுதான் இருக்கும். சட்டசபைகளுக்குக் காங்கிரஸ்காரர்களை நிறுத்துவது முதலிய வேலைகளைக் கவனிப்பதற்காகக் காங்கிரஸ் பார்லிமெண்டரி கமிட்டி யென்று ஒன்று ஏற்படுத்தி யிருக்கிறார்கள். அதன் கொள்கைகள் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி அப்போதைக்கப்போது தீர்மானிக்கிறபடி யிருக்கும். தேர்தலை நடத்தி வைக்கவும், அதற்கு வேண்டிய நிதியைத் திரட்டவும் 25-பேர்களடங்கிய ஒரு போர்டு ஏற்படுத்தப் பட்டிருக்கிறது. இவ்வளவு திட்டங்களும் அமைந்த தீர்மானத்தை மகாத்மாவே பிரரேபித்து நிறைவேற்றினர். ஆனால் இத் தீர்மானம் கொண்டுவரப்பட்டபோது திரு. அபயங்கர் எதிர்த்தார். இவர் எதிர்ப்புக்கும், மற்றவர்கள் கேட்ட கேள்விகளுக்குந் தக்க பதிலை மகாத்மா தமது உருக்கமான சொற்பொழிவின் மூலமாக அளித்தார். சட்டசபைப் பிரவேசத்தில் மகாத்மாவுக்கு நம்பிக்கையில்லை யானாலும், அதில் நம்பிக்கை கொண்ட காங்கிரஸ்காரர்கள் பிரவேசித்து காங்கிரஸ் லக்ஷியத்தைக் கூடியவரையில் நிறைவேற்றுவார்களாக என்று அவர் கூறியது அவரது பரந்த நோக்கத்தையே காட்டுகிறது. அடுத்த தேர்தலில் மற்றக் கட்சியினர் செல்வாக்கும் காங்கிரஸ் செல்வாக்கும் தெரிந்துவிடும். அகில இந்திய காங்கிரஸ் இப்போது சட்ட மறுப்பை நிறுத்தி விட்டதால், இனி அரசாங்கத்தார் என்ன செய்யப் போகிறார்களென்பது தெரியவேண்டும். இப்போதேனும், அரசாங்கத்தார் இதுவரை இருந்ததுபோல் இராமல், அடக்கு முறைச் சட்டங்களை ரத்து செய்தும் சிறைவாசஞ் செய்யும் காங்கிரஸ்காரர்களை விடுதலைசெய்தும் இந்திய மக்களின் நன்மதிப்பைப் பெறுவார்களா?

---

## காந்தியடிகளின் கால்நடைப் பிரயாணம்

அஹிம்ஸா மூர்த்தியான காந்தியடிகள் தாழ்த்தப்பட்ட மக்களின் முன்னேற்றத்தின் பொருட்டு அகில இந்தியச் சுற்றுப் பிரயாணம் மேற்கொண்



டிருத்தல் எல்லாருக்கும் தெரிந்த விஷயம். இதுகாறும் ரயிலிலும் மோட்டாரிலும் ஆங்காங்குச் சென்று தீண்டாமைவிலக்குத் தொண்டாற்றினர். இப்பொழுது அந்த முறையை மாற்றிக்கொண்டு சாத்தியமானவரை கால் நடையாகவே பிரயாணம் செய்து தொண்டாற்றவேண்டும் என்று முடிவு செய்துள்ளார். ஒரிஸ்ஸா மாகாணத்தில் முக்கியமான கிராமங்களுக்குக் கால் நடையாகவே சென்று மக்களிடையே சொற்பொழிவுகள் நிகழ்த்தினர்—பண வசூல் செய்தார். கால் நடையாகச் சென்று கிராம ஜனங்கட்கு உபதேசம் செய்தால் தக்க பயன் விளையும் என்பது மகாத்மாவின் நம்பிக்கை. அதற்கு உதாரணமாகப் புத்தர், சங்கரர் முதலிய மகான்கள் தங்கள் கொள்கைகளைப் பரப்பிய விதத்தை எடுத்துக் காட்டுகிறார். உண்மையில் பெரிய மத ஸ்தாபகர்கள் எல்லாரும் தங்கள் தங்கள் கொள்கைகளைப் பரப்பும்பொருட்டு மகத்தான தியாகங்களைச் செய்திருக்கிறார்கள் என்பது சரித்திரப் பிரசித்தம். மூட மக்களின் துன்பங்கட்கும் தொல்லைகட்கும் உட்பட்டிருக்கிறார்கள் என்பதையும் நாம் அறிவோம். இப்பொழுது காந்தியடிகளின் நிலைமையும் அப்படியேதான் இருக்கிறது. அவருடைய கொள்கைகளையும் உபதேசங்களையும் ஒப்புக்கொள்ளாத ஸநாதநிகள் அவருக்கும் அவரைச் சேர்ந்தவர்கட்கும் எத்தகைய கொடுஞ் செயல்களைச் செய்யவும் பின் வாங்குகின்றார்கள் இல்லை. ஆனால் ஆத்ம சக்தியில் வீறுகொண்டு விளங்கும் காந்தியடிகள் ஒன்றையும் லக்ஷியம் செய்யாமல் தமது கடமையில் முனைந்து நிற்கின்றார். தமது கொள்கையை நிலைநாட்டக் கஷ்ட நஷ்டங்களை அனுபவிப்பது மாத்திரமல்ல—உயிர்த்தியாகம் செய்யவும் சித்தமாயிருக்கிறார். எனவே காந்தியடிகள் கால்நடைப் பிரயாணம் செய்யும் கஷ்டத்தை மேற்கொண்டதைக்கண்டு நாம் ஆச்சரியம் அடையவில்லை. ஆனால் இக்கால நிலைமையையும் காந்தியடிகள் ஆற்ற வேண்டிய வேலையின் அளவையும் நோக்கும்போது அவர் கால்நடைப் பிரயாணம் செய்வதாக முடிவு செய்தது நமது துரதிர்ஷ்டம் என்றே கூறவேண்டும். புத்தரும் சங்கரரும் கால்நடை யாத்திரை செய்து தங்கள் கொள்கைகளைப் பரப்பியது உண்மையே. அக்கால நிலைமை வேறு. அந்தக்காலத்தில் ரயில்—மோட்டார் முதலிய போக்கு வரவு சாதனங்கள் இல்லை. இந்தக் காலத்தில் அத்தகைய சௌகரியங்கள் விசேஷமாய் உண்டு. குறுகிய காலத்தில் பலவிடங்களுக்குச் செல்லலாம். தேக சிரமம் அதிகம் இருக்காது. கால்நடையாகச் செல்லுவதால் காந்தியடிகள் உத்தேசிக்கும் பலன் கிடைத்தாலும் வீண் காலக் கழிவும் சிரமமும் அதிகமாக ஏற்படும் என்பதை மறுப்பதற்கில்லை. எனவே முப்பத்தைந்து கோடி மக்கள் வாழும் பெரிய தேசமாகிய இந்தியாவில்—ஏழுலக்ஷம் கிராமங்களிலும் காந்தியடிகளின் சந்தேசம் பரவவேண்டுமானால் அவர் தமது கால்நடைப்பிரயாண உத்தேசத்தை மாற்றிக்கொள்ளவேண்டும் என்றே விரும்புகின்றோம்.

---

## அகில ஆசியத் தொழிலாளர் காங்கிரஸ்

சென்ற மாதம் முதலாவது அகில ஆசியத் தொழிலாளர் காங்கிரஸ், கொழும்பு நகரில், ஸிலோன் தொழிலாளர் காரியாலயத்தில் கூடியது. இந்தியா ஜப்பான் முதலிய தேசங்களின் பிரதிநிதிகள் இதில் கலந்துகொண்டனர். இம் மகாநாட்டில் தலைமை வகித்த ஸ்ரீமான் ஏ. இ. குணசிங்கரும், அதை ஆரம்பித்து வைத்த தொழிலாளர் இலாகா மந்திரி கனம் பெரி


சுந்தரம் அவர்களும் அகில ஆசியத் தொழிலாளர் காங்கிரஸ் கூட்டவேண்டிய அவசியத்தையும் தொழிலாளர் உரிமைகளையும் தெளிவாக எடுத்துக் காட்டினர். இப்பொழுது சர்வதேசத் தொழிலாளரிடையே ஆசியத் தொழிலாளருக்குச் சமத்துவமான அந்தஸ்து இல்லை. ஆசியத் தொழிலாளர் நிலைமையானது இதர தேசத் தொழிலாளரின் முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டையா யிருக்கிறது என்ற ஒரு அபிப்பிராயம் எங்கும் நிலவி யிருக்கிறது. ஆசியத் தொழிலாளருக் குள்ளேயே ஏற்றத் தாழ்வுகள் பாராட்டப்படுகின்றன. சர்வ தேசச் தொழிலாளர் மகாநாட்டில் ஆசியாவுக்குப் போதிய பிரதிநிதித்வம் இல்லை. இந்நிலையில் ஆசியத் தொழிலாளர் தங்கள் சுயமதிப்பைக் காப்பாற்றிக்கொள்ளவும், உலகத் தொழிலாளருடன் சரி நிகர் சமானமாய் விளங்கவும் ஒன்றுபட வேண்டியது அவசியமாகும்.

---

## பெரிசுந்தரம் பொன்மொழி

அகில ஆசியத் தொழிலாளர் காங்கிரஸை ஆரம்பித்து வைத்த மந்திரி கனம் பெரிசுந்தரம் அவர்கள் தொழிலாளர் முன்னேற்ற சம்பந்தமாக வெளியிட்ட இரண்டொரு கருத்துகள் பொன்னேபோல் போற்றத் தக்கவை ஆகும். “தொழிலாளர் பிரச்சினை, வறுமை முதலிய விஷயங்களை மத, தர்ம வழிகளில் தீர்த்துவைத்த காலமுண்டு. ஆனால் இப்போதைய உலகில், தர்மத்தையோ, அநுக்கிரகத்தையோ பெரிதாகக் கருதுவதற்கில்லை. ஏற்பாடான வழியில் தொழிலாளர்கட்கு உதவி செய்யவேண்டிய அவசியம் இப்பொழுது ஏற்பட் டிருக்கிறது, அதைத் தர்மமாக ஏற்றுக்கொள்ள அவர்கள் தயாராக இல்லை. அது தங்களுடைய உரிமை என்று அவர்கள் கருதுகிறார்கள். ஆகவே அரசாங்கமானது சமூக நீதியையும் தொழில் சமாதானத்தையும் அடிப்படையாகக்கொண் டிருக்கும்படி நமது சமூக, பொருளாதார, ராஜீய வாழ்வைத் திருத்தி அமைத்துக் கொள்ளவேண்டும்” என்று கூறினார். ஒரு பொதுப் புள்ள பதவியை வகிக்கும் கனம் பெரிசுந்தரம் அவர்கள் கூற்றை நேயர்கள் கூர்ந்து சிந்தித்தல் வேண்டும். இக்காலத்தில் முதலாளிகள் தாங்களே ஆதிக்கம் செலுத்தப் பிறந்தவர்கள் என்று எண்ணிக்கொண் டிருக்கின்றனர். தொழிலாளர்களை அடிமைகளாகப் பாவிக்கின்றனர். “தொழிலும் விலையுள்ளது; தொழிலாளர் இல்லையேல் ஊதியமும் இல்லை” என்ற உண்மையை முதலாளிமார் உணரும் காலமே உலக சமாதானம் நிலவும் காலமாகும். உழைப்புக்கூலியை யாசகம் கொடுப்பதாக பாவிக்கும் மனப்பான்மை முதலாளிமாரிடமிருந்து ஒழியவேண்டும் என்றே கனம் பெரிசுந்தரம் கருதுகின்றார். உலகில் பிறந்த ஒவ்வொருவரும் உலக சுகபோகங்களில் உரிமை உடையவர்கள் என்ற அபிப்பிராயம் நாளுக்குநாள் வலிமை யடைந்து வருகிறது. காந்தியடிகளும் தொழிலாளருக்கு லாபத்தில் பங்கு கொடுக்க வேண்டும் என்று வற்புறுத்தி யிருக்கிறார். சமதர்மக் கொள்கையைத் தைரியமாக வெளியிட்ட கனம் பெரிசுந்தரம் அவர்களைப் பெரிதும் பாராட்டுகின்றோம்.

---




# நீல அறையின் மர்மம்

(எஸ். எஸ். வாஸன்.)

(879-ம் பக்கத் தொடர்ச்சி.)

மீனாள்:—என்னுடைய நண்பரொருவ ரிடமிருந்து.

நான்:—அந்த நண்பருடைய பெயர் எங்களுக்குத் தெரியக்கூடாதா? தயவுசெய்து அந்நண்பர் யார் சொல்...... இப்படி உன்னைவிடாது கேட்பதைப் பற்றி நீ ஆயாசப்படலாம். ஆனால் இது விஷயத்தில் நீ கொஞ்சங்கூட ஆயாசப்படக்கூடாது. ஏனென்றால் நீல அறையில் புத்திக்கெட்டாத மர்மமொன்று சூழ்ந்துகொண் டிருக்கிறது. இந்த மர்மத்தினால் பலருக்கு ஆபத்து உண்டாகும்; ஆனபடியால் இந்த மர்மத்தைக் கண்டுபிடிக்கவேண்டியது அவசியமாயிருக்கிறது. இப்படிக் கண்டு பிடிப்பதற்கு எங்களுக்கு சகல உண்மைகளும் தெரிந்திருக்கவேண்டும்.

மீனாள்:—நீல அறையில் என்ன மர்மமிருக்கிறது?

நான்:—அந்த அறைக்குள் எவரொருவர் போகின்றாரோ அவர் திரும்பி அறையைவிட்டு வெளியே வரும்போது நிச்சயம் மூர்ச்சையாகிக் கீழே விழுந்துவிட வேண்டியதுதான். இந்தமாதிரி கேஸ்களில் தக்க சிகிச்சையில்லாமற்போனால் உயிர் போய்விடும். பாலாமணியம்மாள், இதோ நிற்கும் டாக்டர் நடேசன் அவர்கள், நான்எல்லோரும் நீலஅறைக்குள் போய்த்திரும்பி அவஸ்தைப் பட்டுவிட்டோம்!—என்றேன்.

இதைக்கேட்டு மீனாள் கரை கடந்த ஆச்சரியங் கொண்டாள். தனக்குத் தான் இந் நிலைமை ஏற்பட்டதென்றால் நீல அறைக்குள் போய்விட்டு வருவோர் எல்லோருக்கும் இந்த மாயம் உண்டாகிறது என்று கேட்க அவள் அதிசயித்தவளாய், “ஆம், இவ்விஷயம் மர்மமாகவே யிருக்கிறது. எனக்கும் அறையை விட்டு வெளியே வந்தபோது தான் இந்த மயக்கமும் தேகவலியும் உண்டாயின. அந்த ஸ்திரீ சொல்லிய சமாசாரத்திற்குப் பதில் எழுதுவதற்காக ஒரு கடிதம் கொண்டு போவதற்கு அறையை விட்டு வெளியே வந்தேன். உடனே என்னுடைய தேகத்தில் ஆயிரம் தேள் கொட்டுவதுபோல் வாதையேற்பட்டது. மூர்ச்சையாகிக் கீழே விழுந்து விடுவேன் போல் தோன்றியபடியால் கடிதங் கொண்டு வருவதற்குப் போகாமல் திரும்பியும் நீல அறைக் குள்ளேயே புகுந்து விட்டேன். மேஜையை பிடித்துக்கொண்டு சிறிது

நேரம் நின்றேன்; ஆனால் அதிக நாழிகை நிற்க முடியாமல் அப்படியே கீழே விழுந்து விட்டேன்" என்றாள்.

"நீ இவ்வாறு கீழே விழும் சமயம் பார்த்து அந்த ஸ்திரீ மெதுவாக விலகி விட்டாள் அல்லவா?" என்று நான் கேட்டேன்.

"அப்படித்தா னிருக்கவேண்டும். பிறகு அவளை நான் பார்க்கவேயில்லை. நான் உரக்கக் கூச்சல் போட முயன்றேன்; ஆனால் முடியவில்லை. அவள் போகும்போது மின்சார விளக்கும் அணைந்து போய்விட்டது. இதுவும் அவளுடைய வேலைதானென்று எண்ணுகிறேன்" என்றாள் மீனாள்.

"அந்த ஸ்திரீ கொண்டு வந்த சமாச்சாரம் இன்னதென்றும் யாரிடமிருந்து வந்ததென்றும் சொல்ல மாட்டாயா?" என்று இரைச்சலாகக் கேட்டேன்.

இது கேட்டு மீனாள் பாலாவைப் பார்த்துக்கொண்டு சிறிது நேரம் மௌனமாயிருந்துவிட்டுப் பிறகு, "அல்ல; இவ்விரண்டு விஷயங்களையும் சொல்ல முடியாது" என்று தீர்மானமாக பதில் சொன்னாள்.

இந்த ஸ்திரீ கொண்டுவந்த சமாச்சாரம் மீனாளுடைய காதலன் கோவிந்த ராஜனாலாவது அல்லது சபாபதி முதலியாராலாவது அனுப்பப்பட்டிருக்கவேண்டுமென்று என் மனதிற் பட்டது. இந்த ஸ்திரீயும் அக்கொடிய 'சாரதா' தான் என்று தீர்மானங் கொண்டேன்.

இவ்வாறு நான் சாரதாவைப் பற்றியும் சபாபதி முதலியாரைப் பற்றியும் சிந்தித்துக்கொண் டிருக்கையில் டாக்டர் நடேசன் மீனாளைப் பார்த்து "இந்த ஸ்திரீயின் கைஸ்பரிசம் உன் பேரில் பட்டதா? நன்றாக ஞாபகப் படுத்திச் சொல்லவேண்டும்" என்று கேட்டான்.

மீனாள்:—இல்லை; அவள் என்னருகிலேயே யில்லை. முன் பின் அவளை எனக்குத் தெரியாததலால் நானும் அவளிடம் நெருங்கவில்லை.

டாக்டர் நடேசன்:—இவ்விதம் நீ மூர்ச்சையானதற்குக் காரணம் இந்த ஸ்திரீயாகத்தா னிருக்கவேண்டுமென்று உனக்கு சந்தேக முண்டாக வில்லையா?

மீனாள்:—சந்தேகமே கிடையாது. நான் மூர்ச்சையாவதற்கு அவள் எப்படிக் காரணமாவாள்?

டாக்டர் நடேசன்:—இல்லாத பட்சத்தில் அவள் ஏன் மின்சார விளக்கை யணைத்து விட்டுத் திருட்டுத்தனமாகப் போக வேண்டும்?—என்று கேட்டார்.

இதைக் கேட்டதும் மீனாள் மிக்க தீரமான பார்வையுடன் டாக்டர் நடேசனை நோக்கி "அப்படி நான் மூர்ச்சை யடைந்தது அந்த ஸ்திரீயினாலே யென்றே வைத்துக்கொள்வோம். இப்பொழுது நீங்களெல்லோரும் மூர்ச்சை யானீர்களே? இதற்குக் காரணம் யார்?" என்று கேட்டாள்.

இக் கேள்விக்குப் பதில் சொல்லத் தெரியாமல் டாக்டர் நடேசன் திகைத்தார். பிறகு சிரித்துக்கொண்டு, "இவ்விஷயத்தைப் பற்றி எந்த வழியிலும் நிச்சயிக்க முடியவில்லை. இதைப்போன்ற அதிசயம் நான் கண்டதுமில்லை, கேட்டதுமில்லை" என்றார்.

இரண்டொரு நிமிஷங் கழித்து நான் சற்றுத் தாழ்ந்த குரலில், "இந்த நீல அறை இவ் வீட்டிலிருக்கிறது மிக்க அபாயகரமானதே! இருந்தாலும் இந்த மர்மம் இன்னதென்று கண்டுபிடித்து விட்டால் உடனே எதாவது பரி



காரம் செய்துகொள்ளலாம்" என்று சொல்லிவிட்டுப் பிறகு மீனாளைப் பார்த்து "உனக்கு இந்த மர்ம ஸ்திரீயின் மூலமாக சமாச்சாரம் அனுப்பிய பேர்வழி யாரென்று நீ தெரிவித்துவிடும் பட்சத்தில் இம் மர்மமெல்லாம் ஒழிந்துவிடும். இந்த ஒரு கேள்விக்கு மட்டும் நீ மறைக்காமல் உண்மையைக் கூறிவிட்டாலும் எங்களுக்கு மெத்த அநுகூலமாயிருக்கும்" என்றேன்.

இதற்கு மீனாள் என்னைப் பார்த்து "நான் சொல்வதை கேட்டுக்கொண்டு பிறகு பேசுங்கள். இந்த சமாச்சாரம் அனுப்பிய பேர்வழி எனக்கு நன்மையைச் செய்ய ஏற்பாடுகள் செய்வாரே யொழிய என் உயிரைப் போக்க ஒருகாலும் துணிய மாட்டார். இனி இந்த வழியில் உங்களுக்குச் சந்தேகம் வேண்டாம்" என்றாள்.

"ஆனால் இந்த மர்மஸ்திரீ?............இந்த ஸ்திரீயை இதற்கு முன்னால் உனக்குத் தெரியாது என்பது நிச்சயந்தானா?—அவளை இதற்கு முன் நீ பார்த்தது கூட இல்லையா?" என்று நான் கேட்டேன்.

"நிச்சயமாய்ச் சொல்வேன்; கொஞ்சங்கூட தவறில்லை. நான் இந்த ஸ்திரீயைப் பார்த்ததே கிடையாது!" என்று பதில் சொன்னாள் மீனாள்.

இதைக் கேட்ட பின் நான் டாக்டர் நடேசனின் முகத்தைப் பார்த்தேன். அவரும் மீனாள் சொல்வதை நம்ப முடியாமல் என்னைப் பார்த்தார். போகப் போக நீல அறையின் மர்மம் அதிகரித்துக்கொண் டிருக்கிறதே தவிர, கொஞ்சமாவது விளங்குவதாயில்லை.

மறுபடியும் நாங்களெல்லோரும் நீல அறையி னருகிற் சென்றோம். வெளியிலிருந்து பார்த்தால் அந்த அறையைப்பற்றிக் கொஞ்சங்கூட சந்தேகங் கொள்ளுவதற்கில்லை.

அங்கு போனவுடன் டாக்டர் நடேசன் எல்லோரையும் பார்த்து, "மறுபடியும் நான் இவ்வறைக்குள் சென்றுதான் கவனிக்கவேண்டும்" என்றார். இதைக் கேட்டதும் பாலாமணியம்மாள் அச்சங்கொண்டு, "ஒருதரந்தான் அங்கு போய்விட்டுத் தப்பிவந்தீர்கள். மறுமுறை போவது அவ்வளவு உசிதமல்ல" என்றாள்.

இதுகேட்ட டாக்டர் நடேசன் "அப்படியில்லையம்மா? இவ்விஷயத்தை இத்துடன் விட்டுவிடுவது ஆபத்தான காரியம். மேலும் இந்த மர்மத்தைக் கண்டுபிடிக்கவேண்டுமென்றே கங்கணங் கட்டிக்கொண்டிருக்கிறேன்" என்று சொல்லிவிட்டுப் பிறகு என்னைப் பார்த்து, "இதோ குழாயும் மருந்துமிருக்கிறது. இன்ஜெக்ஷன் என்று கத்தினால் உடனே தாமதமின்றி இன்ஜெக்ஷன் செய்யவேண்டும்" என்று கூறினார்.

இந்த சமயத்தில் பாலாமணி வேண்டாம் என்று பயத்தினால் தடுத்தாள். நான் "பிரயாசையைக் கெடுக்காதீர்கள்" என்று சொல்ல, டாக்டர் நடேசன் "என் உயிரைக் கொடுத்தாவது இந்த மர்மத்தைக் கண்டுபிடித்தே தீருவேன்" என்று கூறிக்கொண்டே நீல அறைக்குள் சென்றார்.

இவ்வறைக்கு ஸ்பிரிங் கதவுகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. யார் உள்ளே போகவேண்டுமானாலும், இந்தக் கதவுகளைத் தள்ளிக்கொண்டே தான் போகவேண்டும். அப்படி அன்னவர் உள்ளே சென்றபிறகு இக் கதவுகள் அரைவாசி மூடிக்கொள்ளும். செல்வந்தர்கள் வீட்டில் இம்மாதிரி ஸ்பிரிங் வேலை செய்யும் கதவுகளையே உபயோகப்படுத்துகிறார்கள்.

# " ஆனந்தபோதினி " பஞ்சாங்கம்.

பவ௵ ஆனிமீ—கலியுகாதி 5036, சாலிவாகனம் 1857,
பசலி 1343-44, கொல்லமாண்டு 1109, ஹிஜுரி 1353,
இங்கிலீஷ் 1934௵ ஜூன்மீ—ஜூலைமீ

| ஆனிமீ | ஜூன்மீ | வாரம். | திதி. | நக்ஷத்திரம் | யோகம். | விசேஷங்கள். |
|---|---|---|---|---|---|---|
| 1 | 15 | வெள் | திரி21-48 | புன4-20 | சி4-20மர | சர்வ முகூர்த்தம், கரிநாள் |
| 2 | 16 | சனி | சது28-20 | பூச12-20 | சி12-20ம | மாச சதுர்த்தி விரதம் |
| 3 | 17 | ஞா | பஞ்34-35 | ஆயி20-0 | சி20-0மர | நவக்கிரகசாந்தி செய்ய |
| 4 | 18 | திங் | சஷ்40-3 | மக27-10 | ம27-10சி | ஷஷ்டி,ஆரண்ய கவுரி விரத |
| 5 | 19 | செவ் | சப்44-13 | பூர33-8 | சி33-8அ | 9-க்குள் மழை [நாள் |
| 6 | 20 | புத | அஷ்46-35 | உத்37-28 | அ37-28ம | ஆனித் திருமஞ்சனம், கரி |
| 7 | 21 | வியா | நவ47-3 | அஸ்39-55 | சித்60 | வியாதியஸ்தர் குளிக்க |
| 8 | 22 | வெள் | தச45-23 | சித்40-10 | சித்60 | கடகாயனம் நா-6-48 |
| 9 | 23 | சனி | ஏகா41-38 | சுவா38-35 | அ38-35சி | சர்வ ஏகாதசி |
| 10 | 24 | ஞா | துவா36-3 | விசா35-5 | மர60 | இராமலக்ஷ்மண துவாதசி |
| 11 | 25 | திங் | திர18-58 | அனு30-3 | சித்60 | பிரதோஷம், விவாகம் |
| 12 | 26 | செவ் | ச○21-0 | கே23-55 | ம23-55அ | பௌர்ணமி,ரிஷப பூஜை |
| 13 | 27 | புதன் | பௌ12-5 | மூல17-8 | மர17-8அ | |
| 14 | 28 | வியா | பிர2-50<br>துதி58-43 | பூரா10-3 | சித்60 | |
| 15 | 29 | வெள் | திரி45-10 | உத்3-3<br>திரு56-35 | சித்3-3மர | |
| 16 | 30 | சனி | சது37-25 | அவி51-8 | சித்51-8அ | |
| 17 | 1 | ஞா | பஞ்30-53 | சத46-55 | சித்60 | |
| 18 | 2 | திங் | சஷ்25-35 | பூர44-8 | மர44-8சி | |
| 19 | 3 | செவ் | சப்21-48 | உத்42-45 | அ42-45சி | |
| 20 | 4 | புதன் | அஷ்19-38 | ரே43-10 | மர60 | |
| 21 | 5 | வியா | நவ19-5 | அஸ்44-55 | அ44-55சி | |
| 22 | 6 | வெள் | தச19-55 | பர48-10 | சித்60 | அடுப்புவைக்க,ஆயுதம்பழக |
| 28 | 7 | சனி | ஏகா22-18 | கி✻52-40 | அமி60 | கிருத்திகை, சர்வ ஏகாதசி |
| 24 | 8 | ஞா | துவ25-53 | ரோ58-18 | சித்60 | விவாகம்,சர்வ முகூர்த்தம் |
| 25 | 9 | திங் | திர30-28 | மிரு60 | அமி60 | பிரதோஷம், மாச சிவராத் |
| 26 | 10 | செவ் | சது35-48 | மிரு4-23 | சித்4-23ம | வியாதியஸ்தர் குளிக்க[திரி |
| 27 | 11 | புத | ●41-50 | திரு11-10 | சித்60 | சர்வத்திர அமாவாசை |
| 28 | 12 | வியா | பிர48-8 | புன19-40 | அமி60 | ஆஷாடசத்தம் |
| 29 | 13 | வெள் | துதி54-35 | பூச27-33 | மர60 | சந்திர தெரிசனம் |
| 30 | 14 | சனி | திரி60 | ஆயி35-20 | ம35-20அ | நவக்கிரக சாந்தி செய்ய |
| 31 | 15 | ஞா | திரி0-58 | மக42-40 | ம42-40சி | மாச சதுர்த்தி விரதம் |

(1934௵ ஜூலைமீ — printed vertically beside the second column from 1 July)

| | | | |
|---|---|---|---|
| | சுக் | செவ் | ஞாயி புத |
| சனி | 8-ரிஷ-சுக்<br>8-கட-புத<br>19-மிதுன<br>வக்ரி-புத<br>21-மிது-செ | | கே |
| ராகு | | | |
| | | | குரு |

PRINTED & PUBLISHED BY N. MUNISAWMI MUDALIAR,
AT THE " ANANDA BODHINI " PRESS,
NO. 6, LAWYER CHINNATHAMBI MUDALI STREET, MADRAS.

பூலோகத்தின்கண் புண்ணிய கீர்த்தியாய் விளங்க—உயர்பதவி—கௌரவம்—மஹத்துவம்—புகழ்ச்சி—அதிர்ஷ்டம்—ஜீவசக்தி—கார்யசித்தி—முதலானவைகளை அனுபவிக்கவேண்டி அபூர்வ ரகஸ்யங்களை சுலபமாக அறிந்து அனுஷ்டிப்பதற்கு—ஸ்வாமி ப்ரேமானந்த யோகீஸ்வரர் அவர்களினால் லோகோபகாரமாய் எழுதப்பட்ட

# வசீகரண தந்த்ரம்

அல்லது

# மனோவசிய சாஸ்திரம்

என்னும் அதியற்புத கிரந்தத்தை உடனே விலைக்கு வாங்கி வாசித்து லாபம் அடையுங்கள்! இதில் கோரிய பெண்ணை மணமுடித்தல், மணமகன் மணமகளுடைய காதலை விருத்தி செய்தல், கன்னிகை வசீகரணம், மணமில்லா மணத்தை மகிழ்வுபெறச் செய்தல், ப்ரேமாபிவிர்த்தி, கிரந்தரமான நட்பைப்பெறல், மணத்திற்கு முந்தி மணப்பெண்ணின் ப்ரீதியைப்பெறல், ஸ்திரீகளிடத்தில் கௌரவம் பெருதல், பிரிவுற்ற தம்பதிகள் கூடுதல், வேண்டுமளவு சந்ததிபெறல், கணவனின் கெட்டநடத்தைகளை திருத்துதல், பெண்களின் துர்நடத்தைகளை நிறுத்துதல், தனவந்தனை தன்வயமாக்கிக் கொள்ளல், உருக்கமற்ற உறவினரின் உருக்கத்தை பெறுதல், பேய் பிசாசுகளை ஓட்டுதல், சூன்யம் திருப்புதல், பைத்தியம் போக்கடித்தல், மானவ வசியம், ஜீவஜந்துக்களின் வசியம், தனாகர்ஷணம், கனாகர்ஷணம், ஜனாகர்ஷணம், மோஹனம், ஸ்தம்பனம், உச்சாடனம், வித்வேஷணம், மாரணம், சாந்தி முதலாக 100 ப்ரயோகங்கள் சிறுவர்முதல் பெரியவர் ஈறாக அறிந்துகொள்ளும்படியான சுலபமான நடையில்—இனியமொழியில் எழுதப்பட்டன.

மேற்சொன்ன விஷயங்களெல்லாம் இப் புத்தகத்தில் இல்லையென்று எவரேனும் நிரூபித்தால் அவருக்கு இப்புத்தகத்திற்கு வாங்கிக்கொண்ட விலையை யாதொரு ஆக்ஷேபனையின்றி திருப்பிக்கொடுத்து விடப்படும். இன்னும் இதைவிட திடமாக வேறு என்ன உறுதி சொல்லலாம்?

அதிர்ஷ்டம் உள்ளவர்கட்கே இப் புத்தகம் கிடைக்கும்! நாளை எழுதலாமென்று காலம் தள்ளாமல் மறந்துவிடுமுன் இன்றே-இப்பொழுதே-ஒரு புத்தகத்திற்கு-ஆர்டர் செய்து வாங்கிப் படித்து அதிலுள்ள இன்பத்தைக் கண்டு களி கூருங்கள்!

**விலை ரூபாய் இரண்டே!**

குறிப்பு:—ரூபா இரண்டு முன்பணமாக மணியார்டர் செய்தால், ஒரு புத்தகம் தபால் பார்சலில் அனுப்பப்படும்.

எம். எஸ். ராமுலு கம்பெனி,
286, அப்பா பில்டிங்ஸ், எஸ்பிளனேட், மதராஸ்.

[illegible]த தமிழ் நூல் வெளியீடு

# நாலடியார் மூலமும்

## விரிவான உரையும்.

**செம்பூர் வித்வான்-வீ. ஆறுமுகஞ் சேர்வை அவர்களைக்கொண்டு இந்நூல், மிகத் தெளிவாகவும், விரிவாகவும் பழைய உரைகளையும் தழுவிப் புதிதாக எழுதப்பட்ட சிறந்த உரையுடன் இப்போது வெளிவந்திருக்கிறது.**

இந் நாலடியார் என்னும் நூலானது, ஏறக்குறைய இரண்டாயிரம் வருடங்களுக்குமுன் கடைச்சங்க காலத்தில், பாண்டியனிடம் வந்திருந்த ஜைன முனிவர் பலரால் தனித்தனி வெண்பாக்களாக இயற்றப்பட்டு பின்னர் அப்பாண்டியனால் தொகுக்கப்பட்டுப் பெயரிடப்பட்ட சிறந்த நீதி நூலாகும். உலகத்தில் பல தேசத்தாராலும், பல சமயத்தாராலும் கொண்டாடப்படும் திருக்குறளோடு ஒப்புமை யுடையது, உலகத்தார் பலருக்கும் பொதுவாகப் பற்பல நீதிகளை எடுத்துரைக்கக் கூடியது. உலகத்தில் மனிதர்க்குப் பயன்தரத் தக்க நூல்களில் இது சிறந்ததாகும். பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் இது முதன்மை பெற்றதாகும். மனிதர் அடையவேண்டிய அறம், பொருள், இன்பம், வீடு என்னும் புருடார்த்தங்கள் நான்கினையும் அடைதற்கு இந்நூல் நல்ல வழிகாட்டி யாகும். மாணவர்களும், மற்றவர்களும் அவசியம் படிக்கத் தக்க நூலாகும்.

இதற்குப் பிற்காலத்தில், 'பதுமனார்' என்னும் சிறந்த புலவரொருவர், பால், இயல், அதிகாரம் என்னும் பாகுபாடுகளைச் செய்து சிறந்த உரை யொன்றும் இயற்றி யிருக்கின்றார். வேறு சில சிறந்த புலவர்களும் சில உரைகள் எழுதியிருக்கின்றார்கள்.

இது, அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என்னும் மூன்று பால்களையும், பதினொரு இயல்களையும், நாற்பது அதிகாரங்களையும், நானூறு செய்யுட்களையு முடையது.

இந்நூலுக்கு, முன் பதுமனார் முதலியவர்களால் இயற்றப்பட்ட சில உரைகள் இருப்பினும், அவை சிறந்த கல்வி யறிவுடையாரே படித்துணரத் தக்க பழந்தமிழ் நடையில் அமைந்திருப்பதாலும், ஆரம்பக் கல்வி யுடையாரும், சாமானியக் கல்வி யுடையாரும் தக்க ஆசிரியரிடம் பாடங்கேட்டுத் தெரிந்து கொள்ளக் கூடியனவா யிருப்பதாலும் எவரும் தாமே படித்துணரத் தக்க விதத்தில் இக்காலத்துக்கேற்ப எளிய தமிழில் தெளிவான உரை யொன்று எழுதி வெளியிட வேண்டுமென்று பலர் எம்மிடம் கேட்டுக்கொண்டதற் கிசைந்து, அவர்கள் விரும்பிய விதமாகவே இவ்வுரை எழுதி வெளியிடம் பெற்றிருக்கிறது. இதில் பதவுரையும், கருத்துரையும், விசேடவுரையும் யாவர்க்கும் சந்தேக முண்டாகாதபடி பொருள்களை நன்கு விளக்கிக்காட்டி மிகத் தெளிவாக எழுதப்பட்டிருக்கின்றன. பழைய உரைப் பகுதிகள் மிகத் தெளிவாக விரித்தெழுதப்பட் டிருக்கின்றன. நூல் அமைப்பிற்கு விரோதமாகவும், முன்னுக்குப்பின் முரணாகவும் பொருள்பட்டுச் சந்தேகங்களை விளைவித்துக்கொண்டிருந்த உரைப்பகுதிகளில் ஐயம் நீங்குமாறு பொருத்தமான பொருள்கள் விளக்கப்பட் டிருக்கின்றன. புதிய உரைகளும் ஆங்காங்கே விரித்தெழுதப்பட் டிருக்கின்றன. சில செய்யுட்களின் சரியான பொருள் விளங்காமல் மயக்கத்தை உண்டாக்கிக் கொண்டிருந்த உரைகள், வேறு நூல்களின் ஆதாரங்களைக்கொண்டு சந்தேகம் நீங்கச் சரியான விதத்தில் அமைக்



கப்பட் டிருக்கின்றன. வேறு நூல்களில் விளங்காதிருந்த பொருள்கள், இந்நூற் செய்யுளின் ஆதாரத்தைக்கொண்டு விளக்கப்பட் டிருக்கின்றன. இதுவரை இந்நூலுரைகளிற் காட்டப்படாத பற்பல சிறந்த கருத்துக்கள் இவ்வுரையில் நூதனமாக எழுதப்பட்டிருக்கின்றன. இந்நூல் முதற் செய்யுளுரையில் ஜைனமதக் கோட்பாடுகள் மிகத் தெளிவாக எடுத்தெழுதப் பட்டிருக்கின்றன. பல கல்விமான்களும், ஜைனர்களும் நாளடைவில் சில பாடல்களுக்குத் தெரிவித்துவந்த அரிய உரைகளும் இப்புதிய வுரையில் காட்டப்பட்டிருக்கின்றன. இலக்கணக் குறிப்புக்களும், இலக்கியக் குறிப்புக்களும், தொல்காப்பியம், நன்னூல் முதலிய இலக்கண நூல் சூத்திரங்களின் உதாரணங்களாலும், சிந்தாமணி, சிலப்பதிகாரம், கலித்தொகை, நீலகேசி, சூடாமணி நிகண்டு, பழமொழி, அறநெறிச்சாரம், திருநூற்றந்தாதி முதலிய இலக்கிய நூற் செய்யுட்களின் உதாரணங்களாலும் மிகத் தெளிவாக எடுத்துக் காட்டப்பட்டிருக்கின்றன. இன்னும் இவ்வுரையில் செய்யப்பட்டிருக்கும் திருத்தமான வேலைகள் பல.

இதுவரை, நாலடியாருக்கு இத்தகைய தெளிவான உரை வெளிவந்ததில்லை என்பது இதைப் படித்துப் பார்ப்பவர்க்கு நன்கு விளங்கும். இது டபுள்கிரௌன் 16-பேஜ் அளவில் 51-பாரங்களுக்கு மேற்பட்டும் 820 பக்கங்களுள்ளதாயும் அச்சிடப்பட்டிருக்கிறது. தமிழர் ஒவ்வொருவரும் அவசியம் வாங்கிப் படிக்கத் தக்கது.

**இதன் விலை ரூபா 2—8—0.**

ஆனந்தபோதினி சந்தாதாரர்களுக்கு 31-8-34 வரை விலை ரூ. 1—12—0

# நாகரீகம்?

**இரண்டாம் பதிப்பு.**

**சே. இராஜு செட்டியார், எம்.பி. பி.ஐ., அவர்கள் இயற்றியவை**

'நாகரீகம்' என்ற உயர்ந்த பெயரை வைத்துக்கொண்டு இக்காலத்து நடைபெறும் பல போலி வழக்க ஒழுக்கங்களின் சீர்கேடுகளை ஒழிக்கவும், நீதியும், உண்மையும், அன்பும் நிலைகுலைந்து, மூலை முடுக்குகளில் தேங்கிக் கிடக்க, அநீதியும், பொய்யும் கொடுமையும் ஒருங்கு திரண்டு கரைகடந்து பெருகி வரும் பெரு வெள்ளத்தைத் தடுக்கும் அணைக்கட்டாக இந்நாவல் வரையப்பட்டது. இதில் உள்ளதை உள்ளபடியே எடுத்துக் காட்டி இந்தியர் எல்லோரும் ஒன்று சேர்ந்து அன்புடன் வாழவேண்டுமென்று அரும் பெரும் நீதிகளடங்க பலதிறத்து மனிதர்களின் சுபாவத்தையும் போக்கையும் விளக்கிக் காட்டப்பட்டிருக்கிறது; இதில் ஜாதி சமூக கட்டுப்பாடுகளின் ஊழல்களும், ஆப்தமித்திரனின் அருங்குணங்களும், கருத்தொருமித்த காதலர்களின் அந்தரங்கப் பிணைப்பும், மோசக்காரர்கள் இறுதியில் நாசமுறுவதும், பல அத்தாட்சிகளோடு எடுத்துக் காட்டப்பட்டிருக்கிறது. இதை எல்லாரும் வாசித்து நற்பயனடைந்து இன்புறுவார்களாக. இதன் விலை ரூபா 2.

ஆனந்தபோதினி சந்தாதாரர்களுக்கு 31-8-34 வரை விலை ரூ. 1—8—0

---

**ஆனந்தபோதினி ஆபீஸ்,** தபால் பெட்டி நெ. 167, மதராஸ்.

# கிராமக் கோர்ட்டுகள் சட்டம்.

(சென்னை 1888ளுத்து 1-வது ஆக்ட்.)

சென்னை ராஜதானியின் கிராமங்களில் ஏற்படுத்தியிருக்கும் கிராமக் கோர்ட்டுகளில் (கிராம முனிசிப் கோர்ட்டுகளிலும் கிராம பஞ்சாயத்து கோர்ட்டுகளிலும்) நடக்கும் சட்ட திட்டத்தைக் குறித்த டை ஆக்டை, 1920ளுத்திலும், 1929ளுத்திலும் ஏற்பட்ட திருத்தங்களுடன் ஆக்டையும், அதன்படி செய்யப்பட்ட விதிகளையும், இன்னும் அவைகளுக்கு சம்பந்தமான கிராம மேஜஸ்திரேட்டு ரெகுலேஷன்களையும், இதர சட்டங்களையும் அனுபந்தங்களுடன் சேர்த்து விரிவான உரையுடன் எளிய தமிழ் நடையில் சென்னை ஹைகோர்ட்டு அட்வோகேட்டுகள் ம-ள-ள-ஸ்ரீ, K. ஜகன்னாத சாஸ்திரியார், B.A. B.L., K. சங்கர சாஸ்திரியார், B.A. B.L., அவர்களால் எழுதப்பட்டுள்ளது. இதன் விலை ரூபா 1—8—0.

## இதர ஆக்ட் புஸ்தகங்கள்

| | ரூ. | அ. | | ரூ. | அ. |
|---|---|---|---|---|---|
| இந்தியன் பினல் கோட் சட்டம் | 3 | 0 | பஞ்சாயத்துச் சட்டம் | 1 | 4 |
| கிரிமினல் லா | 3 | 0 | இந்துதேச சாட்சி ஆக்ட் | 1 | 0 |
| சிவில் லா | 3 | 0 | தேவஸ்தான சட்டம் | 1 | 0 |
| புது விவகார சிந்தாமணி | 2 | 8 | எஸ்டேட் லாண்டு ஆக்ட் | 1 | 4 |
| புது பெரிய ஹிந்து லா | 2 | 0 | ஸ்டாம்பு ஆக்ட் | 0 | 12 |
| மூகம்மதியன் லா | 2 | 0 | ரெஜிஸ்ட்ரேஷன் ஆக்ட் | 0 | 10 |
| கிராம முன்சிப் சட்டம் | 1 | 8 | டிரஸ்டிகள் சட்டம் | 0 | 12 |
| பரம்பரை கிராம உத்தியோகஸ்தர்கள் சட்டம் | 1 | 0 | கால நிர்ணயச் சட்டம் | 0 | 8 |
| இன்கம் டாக்ஸ் சட்டம் | 1 | 0 | நில ஆக்கிரமிப்பு என்குரோச்மெண்ட் சட்டம் | 0 | 4 |
| லோகல்போர்ட் ஆக்ட் | 2 | 0 | கிராமச் சுகாதாரம் | 0 | 2 |

## நிமித்தியகுறி சாஸ்திரம்

மனதில் நினைத்துக்கொள்ளும் காரியங்களையும், அவற்றின் பலாபலன்களையும் அறிந்து சொல்லும் மார்க்கங்கள் விளக்கமாகக் கூறப்பட்டிருக்கின்றன. இது ஜோதிடர்களுக்கு மிகவும் உபயோகமானது. விலை அணா 2.

## இந்திராபாய் அல்லது இந்திரஜாலக்கள்ளன்

இந்த சம்பந்தப்பட்ட குற்றவாளியாகிய முஷ்டிக்காம் என்ற கள்ளன் கல்வி, சாஸ்திர ஆராய்ச்சி. தந்திரம் சாமார்த்தியம் முதலிய யாவும் உடையனாதலின், அவன் தன் கூட இருக்கும் ஆட்களுக்குக் கூட தன் சுய உருவத்தைக் காட்டாமலே கேட்போர் நெஞ்சம் கலங்கும்படியாகச் செய்யும் பல கொலை களவுகள் அதிசயமானவைகளே. இந்திராபாய் பன் முறைகளில் அக்கள்வனிடம் சிக்கிக்கொண்டு சற்றும் எதிர் பாராத ஆச்சரியமான விதமாய்ப் பிராணாபத்துக்களி லிருந்து தப்புவதும் அவளைக் காப்பாற்றவும், முஷ்டிகரத்தைக் கண்டு பிடிக்கவும் துப்பறியும் கிருஷ்ணாராவ் செய்யும் அற்புத சாமார்த்தியங்களும் வாசிப்போர்க்கு மிக்க பிரமையை யுண்டாக்கும்.

இதன் விலை ரூபா 2—8—0

**ஆனந்தபோதினி ஆபீஸ், மதராஸ்.**



# மதிமோச விளக்கம்.

(ஸ்ரீ இராஜகோபால பூபதி அவர்கள் இயற்றியது)

ஆன்றோர் மதிக்கும் நான்காம் பதிப்பு.

223-பக்கங்கள் கொண்டது. 16-விநோதமான சித்திரப்படங்கள் சேர்க்கப்பட்டது. உயர்ந்த தீக்கு கடிதத்தில் அச்சிடப்பட்டது.

தருமமே தழைத்தோங்கி வளர்ந்துவந்த மகா புண்ணிய பூமியாகிய நம் பரதகண்டத்தில், கலிகாலந் தொடங்கியதிலிருந்து, மனிதர், சீரழிவப்பட்டு, மன மாறுபட்டுத் தருமத்தில் செலுத்தும் சிந்தையை மிகுதியும் அதர்மத்தில் செலுத்தி வருவதால் அறநெறி குறைந்து மறநெறி வளர்ந்து வருகின்றது. அதற்கேற்ப வஞ்சமும், சூதும், பஞ்சமா பாதகமும் அவற்றிற்கஞ்சா நெஞ்சமும் படைத்த மனிதரே நாள்தோறும், நாடுகள் தோறும், நகர் தோறும், வீடுகள்தோறும் மலிந்து, விநோதம் விநோதமான படுமோசம், மதிமோசம், நிதிமோசங்களையும், சூது வஞ்சனைகளையும் செய்து வருகின்றனர். காலம் செல்லச் செல்ல இதற்குமுன் கண்டும், கேட்டுமிராத எண்ணிறந்த மோசநாசச் செயல்கள் எங்கும், என்றும் நூதனம் நூதனமாகத் தோன்றி அதியற்புதத்துடன் வளர்ந்துகொண்டே வருகின்றன; அவற்றைச் செய்யும் மனிதர்களும் உற்பாத பிண்டங்களாய் ஒருவரை யொருவர் எடுத்து விழுங்குவோராய் அற்புதமாக உற்பவித்து மலையை விழுங்கிய மகாதேவன் போல வளர்ந்து சிறந்து ஜெகஜாலப்புரட்டராயும், அண்டப்புரட்டராயும், நிமைப் புளுகராயும் பரவி வருகின்றனர். இவர்களுடைய மகாமோசச் செயல்களால் சூதுவாதறியாத உலகத்தார் அடையும் கஷ்ட நஷ்டங்களுக்களவேயில்லை. வியாபாரத்தொழில் முழுவதிலும் மோசம்; விவசாயத்திலும் மோசம்; உத்தியோகத் துறைகளினும் ஒப்பில்லா மோசம்; வித்தையிலும் மோசம்; வேடிக்கையிலும் மோசம்; வைத்தியத்திலும் மோசம்; மாந்திரீகத்திலும் மோசம்; சோதிடத்திலும் மோசம்; சோற்றுக்கடையிலும் மோசம்; கப்பலிலும் மோசம்; ரெயிலிலும் மோசம்; நீதிச்சபைகளிலும் மோசம்; தேசச் சேவைகளிலும் மோசம்; கோவிலிலும் மோசம்; குளத்திலும், வீட்டிலும் மோசம்; காட்டிலும் மோசம; நாட்டிலும் மோசம்; நகரத்திலும் மோசம். இப்படியே மனிதர் தலை நீட்டு மிடங்களெல்லாம் மோசமயமாகவே விளங்குகின்றன. உலக முழுவதும் இவ்வாறே மோசம் நிறைந்ததா யிருப்பதனாலே, வஞ்சகமற்ற மனிதர் துன்பத்திற்குள்ளாகிச் சதா சர்வகாலமும் சஞ்சலப்படுகின்றனர்; இத்தகைய மோசநாச வலையினின்றும் தப்புதற்கு மார்க்கங் காணாதவர்களாய்த் தவிக்கின்றனர். ஆதலின், இந்தப் படுமோசப் பெரும் பாதாளத்தில் மனிதர் வீழ்ந்து மயங்காமல் தப்பித்துய்தற் கேதுவாயிருக்கும்படி, உலகத்தில் உலாவும் எண்ணிறந்த மோசச் செயல்களெல்லாம், இப்புத்தகத்தில் மிக்க விளக்கமாக எழுதப் பெற்றிருக்கின்றன.

இது இவ்வளவு பயன் சிறந்ததா யிருப்பதனாலேயே இதன் மூன்று பதிப்புகளும் வெகு சீக்கிரம் செலவாகி இப்போது இந் நான்காம் பதிப்பு வெளிவந்திருக்கின்றது. இப்பதிப்பிலும் பெரும்பாகமான காப்பிகள் செலவாகிவிட்டன; சொற்பக் காப்பிகளே இருக்கின்றன.

இதன் விலை ரூபா 1—0—0.

ஆனந்தபோதினி சந்தாதாரர்களுக்கு விலை அணா 12.

---

**ஆனந்தபோதினி ஆபீஸ், தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.**

# பகவத்கீதை வசனம்

ஸ்ரீ மகாத்மாவினால் சிறப்பித்துக் கூறப்படுவதும், ஸ்ரீ சங்கரர், ஸ்ரீ ராமானுஜர், ஸ்ரீ மாத்வர், ஸ்ரீ நீலகண்டர் முதலிய சமயாச்சாரியர்களின் வியாக்கியானங்கட்குப் பாத்திரமாக விளங்கியதும், ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவினால் அருளிச் செய்யப்பட்டதுமாகிய பகவத்கீதையைச் சிறிது கல்வியறிவுள்ள ஆண்களும் பெண்களுங்கூடப் படித்துப் பயன் பெறவேண்டும் என்னும் நன்னோக்கத்துடன் அது பிரபல நாவலாசிரியரும், கைவல்ய நவநீத வசன நூலாசிரியருமாகிய ஆரணி குப்புசாமி முதலியாரவர்களால் எளிய இனிய வசன நடையில் எழுதப்பட்டது.

அழகிய காலிகோ கட்டடம். இதன் விலை ரூ. 1—8—0.

## காதலி ? ஒரு இனிய அருமையான தமிழ் நாவல்.

இதில் நவீன நாகரிகம், காதலின் வெற்றி, 'அவனன்றி ஓரணுவும் அசையாது', 'விதியின் வலி' என்னும் பல உயரிய நீதிகள் செல்வர்களின் ஆடம்பர வாழ்க்கை, சீர்திருத்தத்தின் சீர்கேடு ஆகிய பல அரிய அறிவைப் புகட்டும் அதியற்புத விஷயங்கள் அடங்கியிருக்கின்றன.

இதன் விலை அணு 10.

ஆனந்தபோதினி சந்தாதாரர்களுக்கு 31-8-34 வரை விலை அணு 8.

## பவளத்தீவு 2-பாகம்

இக்கதையில் ஒரு செல்வச் சீமான் பேராசையால் செய்யும் குற்றத்திற்காக அவன் சந்ததியார் கொடிய சாபத்தை யனுபவிப்பது யாவர்க்கும் மேலான படிப்பினையைக் கற்பிக்கும். இதில் வரும் ஒவ்வொரு ஆசாமியின் சரித்திரமும் அவரவர் தத்தமது நடக்கைகளுக்குத் தக்க பலனை முடிவில் அடைவதும் ஒவ்வொரு நேர்த்தியான நீதியைப் போதிக்கும். இக்கதை ஆரம்பமுதல் முடிவுவரை வாசிப்போர் மனதைப் பூர்ணமாய்க் கவர்ந்து கொண்டு மிக்க களிப்பை யளிக்கும். 2-பாகம் விலை ரூபா. 3.

ஆனந்தபோதினி சந்தாதாரர்களுக்கு 2-பாகமும் விலை ரூ. 2—4—0



## திருவருட்பா.

(அடக்க விலை)

நாளது வரையில் கிடைத்த பல அரிய உபதேசங்கள், உண்மை நெறிகள், சன்மார்க்க வெளியீடுகள் அடங்கியது. தடித்த கிளேஸ் காகிதம் சுத்தமான பதிப்பு, பலமான அழகிய பட்டு கலிகோ பைண்டு. ஒவ்வொன்று சுமார் ஆயிரம் பக்கங்கள். 2-வால்யூமும் ரூபா 6 தான். தபால் அல்லது ரயில் செலவு வேறு. சொற்ப பிரதிகளே கைவசமுள்ளன. முந்துவோர்க்கே கிடைக்கும்.

ஆனந்தபோதினி ஆபீஸ், தபால் பெட்டி நெ. 167, மதராஸ்.

# தத்வசங்க்ரஹ ராமாயணம்

இரண்டாம் பதிப்பு.

இது சமஸ்கிருதத்திலிருந்து மொழிபெயர்க்கப்பட்ட அருமையான நூல். இதனை ஒரு முறை படிப்பவர்கள் இம்மை மறுமை யென்னும் இருவகை வாழ்விற்குரிய சாதனங்களை யுணர்ந்து மக்களாய்ப் பிறந்த தாம் அனுஷ்டிக்கவேண்டிய ஒழுக்கங்களைக் கைக்கொண்டு பகவானுடைய திருவருட் குரியவராக விளங்குவர் என்பதில் ஐயமில்லை. இந்த கிரந்தம் துஷ்ட நிக்ரஹ சிஷ்டபரிபாலன நிமித்தம் உலகத்தில் லக்



யவந்தனை விளங்கிய தசரத பூபதிக்கு ஸ்ரீ ராமனாக அவதரித்த ஜகத் பிரபுவின் குணாதிசயங்களைப் பற்றிப் பேசுவது.

ஸ்ரீ ராமாவதாரத்தின் உண்மை இதனைப் படிப்பவர்க்கு உள்ளங்கை நெல்லிக் கனிபோல் விளங்கும். இதனைப் படித்தால் அநேக ஞான நூற்களைப் படித்த பயனை ஒருங்கே யடையக் கூடும். ஸ்ரீராம பூஜா விதிகளும் அர்ச்சனைகளும் இதன்கண் விவரிக்கப்பட்டுள்ளன. இதுவரையில் வெளியான ராமாயணங்களைவிட மும்மடங்கு மேலான தத்வ உபதேசங்கள் இதன்கண் காணலாம்.

உபாசகர்களுக்கு வேண்டிய பல அரிய விஷயங்களுடன் கூடியது. ஸ்ரீ ராம சரிதையை வாசிப்பதே இகபர நன்மை யளிக்குமென்பர் பெரியோர். இதில் எண்ணிறந்த மிக்க அருமையான விஷயங்கள் அடங்கியிருக்கின்றன.

இதன் விலை ரூபா 4.

# ஸ்ரீமத் கம்பராமாயண வசன சங்கிரகம்

(சப்தகாண்டங்கள் அடங்கியது.)

(நான்காம் பதிப்பு) இதன் விலை ரூபா 2.

ஸ்ரீ இராமர் பட்டாபிஷேகம் ஆப்டோன் படம் சேர்க்கப்பட்டது. மிக்க திருத்தங்களோடு கிளேஸ் கடிதத்தில் அச்சிடப்பட்டுள்ளது.

☞ சொற்ப காப்பிகளே அச்சிடப்பட்டிருக்கின்றன. ஆதலின் புஸ்தகம் வேண்டியவர்கள் முன்னரே எழுதிப் பெற்றுக்கொள்க.

ஸ்ரீ இராமபிரான் சரிதையை விரித்துக் கூறும் இந்த இராமாயணமானது மிக்க புண்ணிய கதை யென்பது உலகறிந்த விஷயம். இதனைப் பாராயணஞ் செய்வதாலுண்டாகும் பயன்கள் அளவிடற்கரியனவாம். இதனைப் பக்தி சிரத்தையுடன் படிப்பவற்கு உலகத்தில் விரும்பக்கூடிய பொருள்களெல்லாம் கைகூடும்; உயர்ந்த அறிவுண்டாகும்; கீர்த்தி அதிகரிக்கும்; மோக்ஷத்தை அடையும் மார்க்கம் ஏற்படும் இலக்குமி கடாக்ஷமுண்டாகும்.

---

ஆனந்தபோதினி ஆபீஸ், தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.

# நாகரீக நங்கையர் கழுத்துச் சங்கிலி




இது சுத்தமான 18 காரட் கொண்ட ரோல்ட் கோல்ட் பிளேட் நெக்லேஸ் என்னும்

## கழுத்துச் சங்கிலி

3 வருஷம் உத்திரவாதமுள்ளது. இது சுத்தமான ரோல்ட் கோல்டால் செய்யப்பட்டு இமிடேஷன் வைரம், சிவப்பு, ரத்தினங்கள் முதலியவை பதிக்கப் பெற்றது. படத்திற் கண்டபடி மிகவும் வேலைப்பாடுடையது. பதக்கம் அமைக்கப்பெற்றது. கண்ணைக் கவரக்கூடியது. அசல் தங்கத்தால் செய்ததுபோலவே யிருக்கும். யாவரும் எத்தேயத்தினரும் உபயோகிக்கலாம். இதன் விலை ரூபா 1—8—0

ஒரே சமயத்தில் இரண்டு சங்கிலிகளுக்கு ஆர்டர் கொடுத்தால் தபால் செலவு இல்லை.

# ரோல்டு கோல்டு "பிடோ" லீவர் கைகெடியாரம்.



எங்கள் ரிஜிஸ்டர் ரோல்டு கோல்டு "பிடோ" லீவர் கைக்கெடியாரம் பார்வைக்கு அழகாயிருக்கும். சரியான டைம் காட்டும். சிலிண்டர் கெடியாரங்களைப்போல் கொஞ்ச நாளைக்குள் நின்று போவதல்ல. 5 வருஷமல்ல பத்து வருஷங்கூட ரிபேர் இல்லாமல் போகக்கூடிய கடியாரம். இதை வாங்குவோருக்கு ரோல்டு கோல்டு கெடியார கைச்சங்கிலி இனாமாகச் சேர்த்து அனுபப்படும். 5 வருஷ காரண்டியுடன் அனுப்பப்படும். இனாம் சங்கிலியுடன் கடியாரம் விலை ரூ 5-12-0. ஸ்டாக் கொஞ்சம் உடனே எழுதுங்கள்.

சுபீரியர் வாட்சு கம்பெனி, கெடியார வியாபாரிகள், மதராஸ்.

---

# ஸ்ரீ மஹா பாரதம் விராடபர்வ வசனம்

நமது இதிகாசங்களில் சிறந்ததும், அறம் பொருள், இன்பம், வீடு என்ற உறுதிப் பொருள்களைத் திறம்பட வகுத்துரைப்பதினால் ஐந்தாம் வேதம் என்று சிறப்பிக்கப் படுவதுமாகிய ஸ்ரீ பாரதம் விராடபருவம் புதிய பதிப்பு வெளிவந்து விட்டது. சரளமான செந்தமிழ் நடை. முத்துப்போன்ற பெரிய எழுத்துக்களில் அமைந்த சுத்தப்பதிப்பு; விசித்திரப்படங்களுடன் இலங்குவது. சாமானியப் படிப்புள்ள ஆடவர் பெண்டிர் எல்லாருக்கும் எளிதில் பொருள் விளங்கும். சொற்ப பிரதிகளே கைவசம் உள்ளன. உடனே முந்துங்கள். உறுதியான கட்டிடம்.

இதன் விலை ரூபா 1—4—0

ஆனந்தபோதினி சந்தாதாரர்களுக்கு விலை அணா 12.

ஆனந்தபோதினி ஆபீஸ், தபால்பெட்டி நெ. 187, மதராஸ்.

# பூவுலக வாழ்க்கைக்கு இன்றியமையாத சிங்கபலத்தைத் தருவதெது?




அமிர்த சஞ்சீவி லேஹியமும்,

அயஸ்காந்த செந்தூரமுமே

முறையாய்ச் செய்த அயக்காந்த செந்தூரத்தைக் காட்டிலும் தேகபலத்தைத் தரும் ஔடதம் வேறொன்றுமில்லை.

## விளம்பரம்.

இதைக் கண்ணுறும் கனவான்களே!

இந்த லேகிய செந்தூரங்கள் சாமான்யமானவையல்ல. அபாரமான பலத்தைத் தரக்கூடிய சக்தி அமைந்துள்ளவை. உறுதியாய் இவற்றை நம்பி வாங்கிச் சாப்பிட்டால் ஒரே தடவையிலேயே இவற்றின் விசேட குணம் நன்கு விளங்கும்.

# இந்த லேகிய சேந்தூரங்களால்
## நிவர்த்தியாகும் முக்கிய வியாதிகளாவன:

தற்காலத்தில் மனிதரின் பால்ய சேஷ்டையாலும், இரத்தப் போகங்களாலும் அவர்க்கு உண்டான 20 வகை மேகரோகங்கள், சூலைரோகம், குன்மரோகம், பித்தபாண்டு, கைகால் முடக்கு, ஓடுவாய்வு, பித்த வெப்பம், நெஞ்சு தொண்டை எரிச்சல், வயிற்றுப்பிசம், அஜீரணம், பசியில்லாமை, தாதுஹீனம், தேக உளைச்சல், கண்ணில் நீர்வடிதல், சோம்பல், நித்திரையில்லாமை, தலை சுழற்றல், நீர் இறங்கும்போது பொறுக்கமுடியாத பாதையைத்தரும் தந்திமேகம் முதலியவைகள் ஆச்சரியப்படத்தக்க விதமாய் நீங்கிவிடும். பயங்கரமான மேக சம்பந்த வியாதிகளைப் பத்தே வேளையில் போக்கி சப்த நாம்புகளுக்கும் முறுக்கேற்றி அபரிமிதமான இரத்த விருத்தியைப் பெருக்கி பலத்தைத் தருவதில் இதற்கு மிஞ்சின இலேகிய பஸ்பம் வேறெங்குமில்லை என்று நாம் உறுதியாகச் சொல்லுவோம். இதல்லாமல் தேகத்தைப் புஷ்டியாக்கித் தேகத்தடிப்பு கக்கண் வெளுத்திருத்தல் முதலிய வியாதிகளைக் கண்டித்து தினந்தோறும் மலத்தைத் தாராளமாய்ப் போக்குவதில் இந்த லேகிய செந்தூரங்களே முதன்மையானவையென்பதை நாம் எமது அனுபவத்தில் கண்டிருக்கிறோம். நீங்க இந்த லேகிய செந்தூரங்கள், மேற்கண்ட வியாதிகளைக் கண்டிப்பாய் நிவர்த்திக்குமா என்னும் சந்தேகமுடையோர் பரீக்ஷார்த்தமாக முதலில் 48-நாளைக்கு வாங்கி யுண்டால் இவற்றின் அபாரகுணம் தெரியவரும். தவிர யாங்கள் இம்மகத்துவம் பொருந்திய லேகிய செந்தூரங்களை எவ்வளவு சிறப்பித்துக் கூறியபோதிலும் அது தகும். மேலும் இவற்றை நோய் உள்ளவரே தாம் சாப்பிடவேண்டும் என்ற அவசியமில்லை; யாவரும் சாப்பிடலாம். நோய் உடையவர்களைவிட நோய் இல்லாதவர்கள் எண்ணிக்கையாக 48-நாள் இந்த லேகிய செந்தூரங்களை யாதும் பத்தியமின்றிச் சாப்பிட அவர்க்கு நல்ல பலம் வரும். இது தவறாது. இவற்றைத் தருவித்து நண்பர் எண்ணிக்கையாகச் சாப்பிட்டு 10-நாளைக்குள் குணம் இல்லாவிடில் உடனே தெரியப்படுத்தினால் கட்டாயம் இவற்றிற்கு வாங்கிய பணம் வாப்ஸ் செய்யப்படும். தவிர மேற்காட்டிய நோய்கள் உடையோர் 48-நாட்கள் சாப்பிடுவார்களேயானால் அவை முழுதும் நீங்கிவிடும். அப்படி நீங்கிக் குணம் ஏற்படாவிடில் நாங்கள் அதற்கு உத்திரவாதிகளாவோம். யாங்கள் இவ்வளவு அருமையான லேகிய செந்தூரங்களை எவ்வளவோ சிரத்தையுடன் கஷ்டப்பட்டு முடித்துப் பரோபகாரத்தமாய் வெளியிட்டோம். இவ்வருமை வாய்ந்த லேகிய செந்தூரங்களுக்குப் பொன் மெடல், வெள்ளிமெடல், பெற்றதல்லாமல் ஆயிரக்கணக்கான யோக்கியதா பத்திரங்களும் பெற்றிருக்கின்றோம். ஆதலின் நமது லேகிய செந்தூரங்கள் நாம் சொன்னபடி குணத்தைக் கொடுக்கும் என்பதைப்பற்றி ஜவாப்தாரியாயிருக்கக் காத்துக் கொண்டிருக்கிறோம்; இது உண்மை. இவற்றை ஒரேதரம் தருவித்துப் பாருங்கள்; எமது உண்மை விளங்கும்.

வாதாதிக்க தோஷத்தினாலாவது, துராப்பியாசத்தினாலாவது, அதிகமனக் கவலையினாலாவது, அடிக்கடி உண்டாகும் நோயினாலாவது, மற்றெந்தக்காரணத்தினாலாவது பலமிழந்தவர்கள் எண்ணிக்கையாக ஷை லேகிய செந்தூரங்களைப் புசிப்பார்களானால் இவை தேகாரோக்கியம், வலிமை, அழகு முதலியவற்றை அவர்க்குக் கொடுத்து அவர்களைச் சந்தோஷிக்கச் செய்யுமென்பதில் தடையில்லை. வெளியூர்க் கனவான்கள் இந்த லேகிய செந்தூரங்களில் முழு நம்பிக்கை வைத்து ஒரே ஒருதரம் இவற்றைப் பரீக்ஷிப்பார்களானால், அவர்கள் அவசியம் ஆனந்தமடைவார்கள்.

இந்த லேகிய செந்தூரங்களுக்குப் பத்தியமே கிடையாது. எந்தப் பண்டங்களையும் நீக்குதலின்றி சாப்பிடலாம், மருந்து சாப்பிடும்போது பசி அதிக

# சுகபேதி மாத்திரை.

இந்த மாத்திரையில் 2-முதல் 5-வரை திரேக திடமறிந்து மாத்திரையைச் சாப்பிட்டு கொஞ்சம் ஜலம் சாப்பிடவும். இவ்விதம் சாப்பிட்டால் சுகமாய் பேதியாகிவிடும். மாத்திரையை அனுப்பும்பொழுது உபயோகிக்கும் முறை தெரிந்து கொள்ளலாம். 25-மாத்திரை அடங்கிய புட்டி 1-க்கு அணா 6.




# யூகலிப்டஸ் ஆயில்.
## (சுத்தமான நீலகிரித் தைலம்)

வைத்தியத்தில் கைதேர்ந்த ஒரு அனுபோக வைத்தியரால் செய்யப்பட்ட இந்தத் தைலம் வாந்திபேதி, பிளேக்வியாதி, தேள் முதலிய விஷ ஜந்துக்களின் கடி, கத்தி வகையறா, வெட்டுக் காயங்கள், நரம்புச்சுளுக்குகள், தீப் புண்கள், வெந்நீர்பட்டு வெந்த புண்கள், பிளவைகள், புரைபோன இரணங்கள், இருமல், கக்குவாய் இருமல், வாய்பிடிப்பு, குடைச்சல், வாய்வினால் உண்டாகும் கொடூரமான பல்வலி, தலைவலி, ஒற்றைத் தலைவலி, கண் எரிச்சல், கண் கட்டி, முதலிய ரோகங்களுக்குக் கைகண்ட ஒளஷதம்.

1 அவுன்ஸ் புட்டி 1-க்கு அணா 4.
1 ,, 1-டஜன் (12) க்கு ரூ. 2—8—0.

# நரைமயிர் கருக்குந் தைலம்.



தற்காலத்தில் பலவிதமாகச் செய்து விற்கப்பட்டு வருகிற கப்புகள் மயிரைச் செம்பட்டையாகவும் பசுமை நிறமாகவும் சாம்பல் வர்ணமாகவும் ஆக்கி விகாரப்படுத்தி விடுகின்றன. நமது தைலமோ நரைத்த மயிருக்குப் பூசிய 3-நிமிஷத்திற்குள்ளாக நரைப்பதற்கு முன்பிருந்த கருமை நிறத்தையும் பளபளப்பையும் உண்டு பண்ணும். மேலே கூறியுள்ள விகார குணங்கள் இதில் உண்டாகமாட்டா, இதைப் பூசிய பிறகு முகலட்சணமும் வசீகரமு முண்டாகிறபடியால் வயோதிகரும் வாலிபரைப்போல் தோற்றப்படுவார்கள். இதை உபயோகிக்கும் விதம் பார்சலோடு தெரிவிக்கப்படும். விலை ரூ. 1.

# கள்ள நோய் நிவாரணி.
## இது 3-தினத்தில் குணப்படுத்தும்.

மேக உஷ்ணம் என்பது வரம்பற்ற ஸ்திரீ போகத்தினால் தாது கெட்டு மூலத்தில் அக்னி அதிகரிப்பதனால் ஏற்படும் கள்ளநோய். நீரடைப்பு, சதையடைப்பு, பவுத்திரம், அரையாப்பு முதலியன இந்த நோயின் மூலமாய் ஏற்படும். நீர்க்கடுப்பும், குத்தலும், எரிச்சலும் காண்பதுண்டு. இவைகளை நீக்கி நல்ல சுகத்தைக் கொடுக்கக்கூடிய அநுபவ மருந்து இது. பத்தியம் கிடையாது. இதனை உபயோகிக்கும் விவரம் மருந்துடன் அனுப்பப்படும்.

புட்டி 1-க்கு விலை ரூ. 1. தபாற்கூலி வேறு.

---

தனலட்சுமி கம்பெனி, நெ. 6, வெங்கடேச மேஸ்திரி தெரு, மதராஸ்

யாய் எடுக்கும் ஆதலால் பச்சைப்பயற்றுக் குழம்பு, கறி மார்க்கண்ட ரூப்பு, இவைகளை அதிகமாகப் பசியைத் தணிக்கக்கூடிய விதமாகத் தாமதம் செய்யாமல் சாப்பிடல் வேண்டியது. இவற்றைப் புசிக்கும்போதெல்லாம் பலகாராதிகள் சாப்பிடல் வேண்டும். தயிர், பால், நெய் முதலியவைகள் எவைகளாயிருந்தாலும் சந்தேகமின்றிச் சாப்பிட்டு வரலாம்.

இவ்வருமை வாய்ந்த லேகிய செந்தூரங்களை மட்டும் ஒருவர் தருவித்து எண்ணிக்கையாக 48-நாள் சாப்பிடுவாரே யானால் இவை தேகத்தில் வடிவடிவ, மேகமெல்லாம் சூரியனைக்கண்ட பனிபோல் நீங்கி அவர் தேகமானது வலுத்துப் புதிய ரத்தம் பரவித் தன் வாழ்நாள் பரியந்தம் இளைக்காமலிருக்கும். இவற்றைப் புருஷன் பெண்சாதி இருவரும் ஏககாலத்தில் ஒற்றுமையாய்ச் சாப்பிட்டு வந்தார்களேயானால், அவர்க்கு உதிக்கும் மக்கள் மிகுந்த தேஜஸோடு தோன்றுவார்கள். இது உண்மை. இதை அதிகம் எழுதுதல் அனுவசியம். இந்தியா, பர்மா,ஸிலோன் ஆகிய உள் நாடுகளுக்கு 24-நாள் சாப்பிடக்கூடிய லேகியமும் செந்தூரமும் விலை ரூ. 1-12-0. போஸ்டேஜ் அணா 8. ஒரே தடவை 48-நாள் மருந்து வாங்குவோர்க்கு போஸ்டேஜ் உள்பட ரூ. 4.

பினாங்கு, சிங்கப்பூர், செட்டால் முதலிய அயல்நாடுகளுக்கு 24-நாள் சாப்பிடக்கூடிய மருந்து விலை ரூபா 1-12-0. தபாற்கூலி ரூபா 1-4-0.

48 நாள் மருந்து வாங்குவோருக்கு போஸ்டேஜ் உள்பட ரூபா 5-8-0. சிங்கப்பூர், பினாங், மலாக்கா முதலிய வெளிநாடுகளுக்கு வி. பி. ஆர்டர் இருக்காலும் முன்பணம் அனுப்பாதவர்களுக்கு மருந்து அனுப்பப்படமாட்டாது.

**விலாசம்:—லேகியம் டிபோ,**

**44, தம்புலையர் தெரு, மதராஸ்.**


---

# சர்வதேள் விஷ சஞ்சீவினி.

(ரிஜிஸ்டர் டிரேட் மார்க்)

பட்டவுடனே விஷம் பறக்கும்! அழுதவன் சிரிப்பான்!!

இதில் குணமில்லையென்று நிரூபிப்பவர்களுக்கு 100-ரூபாய் இனாம்.




நமது நாட்டிற்கு இது அவசியமாய் ஒவ்வொரு குடும்பத்திலும் சதா கையிருப்பாய் இருக்கவேண்டிய ஓர் ஔஷதமாகும். இது ஆங்கில யூனானி தமிழ் வைத்திய நிபுணர்களால் நன்கு மதிக்கப்பட்டுள்ளது. இதை நாள்பட வைத்திருப்பதால் இதன் குணம் சற்றும் குறையாது. தேள், நட்டுவாய்க்காலி, செய்யான், பாம்பு, எலி முதலியவற்றின் விஷங்களை இரண்டொரு நிமிஷங்களில் இது அடியோடு நீக்கக்கூடியது. எண்ணிறந்தோர் இதனால் சுகமடைந்திருப்பது பிரத்தியக்ஷ அனுபவமானதால் இதைப்பற்றி நாம் அதிகம் கூறவேண்டியதில்லை. இது இரண்டுவித மருந்துகளடங்கியது. இதை உபயோகிக்கும் முறை மருந்தோடு அனுப்பப்படும். விலை:—இரண்டுவித மருந்தும் அடங்கிய பாக்கெட் 1-க்கு அணா 8. தபாற்கூலி அணா 4. டஜன் 1-க்கு விலை ரூபா 5.

ஏககாலத்தில் 3-பாக்கெட் வாங்குவோருக்குத் தபாற்கூலி இனாம்.

வியாபாரிகளுக்கு 100-க்கு 25 கமிஷன் கொடுக்கப்படும்.

---

தனலட்சுமி கம்பெனி, நெ. 6, வெங்கடேச மேஸ்திரி தெரு, மதராஸ்.



# கர்ணபிந்து

காதில் சீழ் வடிதல், காது குத்தல், காது கேளாதிருத்தல், காதில் நமைச்சல் முதலிய வியாதிகளுக்கு இந்த மருந்தில் 2-துளி காலை மாலைகளில் காதில் விட்டுவர, காதிலுள்ள நோய்களெல்லாம் நீங்கிவிடும்.

புட்டி 1-க்கு அணா 4.

வி. பி. தபாற்கூலி பிரத்தியேகம்.

# சர்வபடை சம்மாரன்



சரீரத்தின் இடுக்கான இடங்களாகிய தொடையின் இடுக்கு, அக்குள், இடுப்பு முதலிய இடங்களில் சிறிது சிறிதாகப் படர்ந்து இரவில் ஓயாத நமைச்சலைத் தந்து நித்திரையைப் பங்கப்படுத்திச் சரீரத்துக்கு அதிக கஷ்டத்தை உண்டு பண்ணும் படைகள், ஒரே தடவையில் இந்தச் சர்வபடை சம்மாரன் என்னும் தைலத்தை உபயோகித்த மாத்திரத்தில் சூரியனைக்கண்ட பனிபோல் நீங்கும்.

புட்டி 1-க்கு அணா 4. தபாற்கூலி வேறு.

தனலட்சுமி கம்பெனி, நெ. 6, வெங்கடேச மேஸ்திரி தெரு, மதராஸ்,

---

# பூவேலை தைக்கும் கைமெஷீன்

இவ்வாச்சரியமான மெஷீன் பலவித பூச்சித்திர வேலைகளோடு சேர்த்தாகத் தைப்பதற்கு மிகவும் அவசியமானது. கொஞ்சநாள் அனுபவத்திலேயே ஸ்திரீ புருஷர்கள் யாவரும் இதை எளிதில் அறிந்து கொண்டு இவற்றின் உதவியால், மெத்தை படுக்கை, படுக்கை உறைகள், தலையணை உறைகள், மேஜை விரிப்புகள், ஜன்னலின் திரைச்சீலைகள், குழந்தைகளின் சொக்காய்கள், ஸ்திரீகளின் கவுன்கள், குல்லாய்கள், இவைகளில் பலவித பூச்சித்திர வேலைகளமைத்து கண்களைக் கவரும்படி செய்யலாம்; சுவற்றில் களி மண்ணால் பலவிதப் பூச்சித்திர வேலைகள் அமைப்பதற்கும் இது மிகவும் சாதனமானது.



ஒவ்வொரு ஸ்திரீக்கும் தங்கள் ஓய்வு நேரங்களில் இது மிகவும் உற்சாகத்தைத் தந்து தங்கள் மனத்திற்கினிய யுக்தியுடன் புதுபுது வேலைப்பாடான பலரக பூவேலை சித்திர வேலைகள் செய்வதற்கு இது மிகவும் அவசியமானது.

வாங்கிப்பார்த்தாலே இதன் அருமை பெருமை விளங்கும். சற்றே நிமிஷத்தில் இதை அறிந்து கொள்ளும்படியான முறையையும் இதனுடன் அனுப்புவோம். பல ஆச்சரியமான வேலைகளைப் பகட்டாகவும் நேர்த்தியாகவும் இதன் உதவியால் செய்து முடிக்கலாம்.

அநேக பள்ளிக்கூடங்களில், மாணவர்களுக்கு இவ்வேலைப்பாடுகளைக் கற்பிக்கும் பொருட்டுத் தருவித்து நல்ல பலனை அடைந்திருக்கிறார்கள்.

இதை உபயோகிக்கும் முறை அடங்கிய புஸ்தகம், இம் மெஷீனுடன் கூட பெட்டியில் அடக்கம் செய்து அனுப்பப்படும். விலை ரூ. 2-8-0-தான்.

---

இராஜலட்சுமி கம்பெனி, நெ. 44, தம்புலையர் தெரு, மதராஸ்.

# ருதக நிவாரணி மாத்திரை.



ஸ்திரீகளுக்கு மாதாந்திர பஹிஷ்டை (ருது) கிரமமாக வெளிப்படாமை காலந்தவறி வெளிப்படுதல், சிலகாலம் வெளிப்படாமலே யிருத்தல், வயிற்றுவலி, ஜுரம், மார்பு நோய், மயக்கம், கழுத்திசிவு, ஜன்னி தோஷங்கள், மஞ்சட் காமாலை, உணர்ச்சியின்றி சிறுநீர் பெருக்கெடுத்தல், மூர்ச்சையாகுதல், மார்பு படபடவென்று அடித்துக்கொள்ளுதல், மேல் மூச்சு வாங்குதல், மர்மஸ்தானத்தில் பொறுக்கமுடியாத வேதனை உண்டாகுதல் இன்னும் மாதர்களுக்குக் காணும் ருது சம்பந்தமான எல்லா வியாதிகளையும் கண்டித்து கருப்பகோசத்தைச் சரிப்படுத்திச் சந்தான விருத்தியை உண்டாக்கும்.

ஒரு டப்பி மாத்திரை விலை ரூபா 1.

# (காட்லீவர் ஆயில்) மீன் எண்ணெய்.




இது பலத்தை உண்டாக்குகிறது. தவிர இரும்பலினால் உண்டாகும் இளைப்பையும் அடக்கும். இளைத்தவர்கள் உபயோகித்தால் தேகம் புஷ்டியாகும், ரத்தத்தைச் சுத்தி செய்யும், சுவாசகோசங்களின் ரோகத்தைக் குணப்படுத்தும், சரீரத்தினுடைய ஒவ்வொரு பாகத்துக்கும் பலத்தைக் கொடுக்கும். இதைக் குழந்தைகளுக்கும் கொடுக்கலாம். புட்டி 1-க்கு விலை ரூ. 1-8-0.

# கருவைத் தடுக்கும் ஔஷதம்

இந்த இரகசிய கருவைத்தடுக்கும் ஔஷதம் ஜர்மன் தேசத்தில் செய்யப்பட்டு அநேக பண்டித மேதாவிகளால் பரிசோதிக்கப்பட்டு நற்சாக்ஷி பத்திரங்கள் பெற்றிருக்கிறபடியாலும் நமது தேசத்தில் வரவுக்கு மிஞ்சிய குழந்தைகளைப் பெற்று குடும்பங்கள் கஷ்டப்படுவதை யோசித்தும், சில பலவீனப்பட்ட தாய்மார்கள் அடிக்கடி கர்ப்பம் தரித்து தனது சரீரம் நொந்து வீணிலை யடைவதைக் கண்ணுற்றும் தற்சமயம் எங்களால் ஒளஷதம் தருவிக்கப்பட்டு விற்பனை செய்து வருகிறோம். உபயோகிக்கும் முறை ஔஷதத்துடன் அனுப்பி வைக்கப்படும். விலை ரூபா 2—0—0.

# டேபில் டைம்பீஸ் இனாம்!!!

எங்கள் 22 காரட் ரோல்ட் கோல்ட் "கோல்டன்" கைக்கெடியாரம் வாங்குகிறவர்களுக்கு மேஜையின்பேரில் வைக்கக்கூடிய ஒரு அழகான டேபில் டைம்பீஸ் இனாமாகச் சேர்த்து அனுப்பப்படும். இரண்டும் 5 வருஷம் உத்திரவாதம். முந்துங்கள். விலை ரூ. 6-4-0. தபால் கூலி பிரத்தியேகம்.



கருணாநிதி டிபோ, நெ. 1/6, வெங்கடேச மேஸ்திரி தெரு, மதராஸ்.

# புதிய கொக்கோக வசனம்

## (உண்மையான இன்பநூல் இதுவே)

இதைப்போன்ற பலவித புஸ்தகங்கள் வெளிவந்திருப்பினும், அவைகளில் விஷயங்கள் மனதிற் பதியுமாறு எழுதப்படவில்லை. ஆனால் இச்சிறு நூலில் ஆண் பெண் இருபாலரும் சிற்றின்ப சம்பந்தமாகவும், இல்வாழ்க்கை சம்பந்தமாகவும் அறியவேண்டிய பல விஷயங்களும், மர்மங்களும் தெளிவான நடையில், சுருங்கச்சொல்லி விளங்கவைக்கப்பட்டிருக்கிறது. இப்போது இரும்பதிப்பு வெளியானதாலேயே இதை மக்கள் எவ்வாறு விரும்புகிறார்களென்பது தெரிகிறது. சட்டைப் பையில் அடங்கும்படியான அளவு புஸ்தகம் விலை ரூபா 1—0—0. வி. பி. வேறு.

## காதலர் கண்டு களிப்புறும் நூல்கள்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| இன்பவாழ்க்கையின் இரகசியம் | 2 | 0 | ரதி சாஸ்திரம் ... | 1 | 4 | 0 |
| இல்வாழ்க்கையின் இரகசியம் | 2 | 0 | சரீர மர்ம சாஸ்திரம் ... | 1 | 0 | 0 |
| மணவாழ்க்கையின் மர்மங்கள் | 2 | 4 | மதனாதி ரஹஸ்யம் ... | 2 | 0 | 0 |
| மாதர் நீதி ... | 1 | 0 | ரதிமதனசிருங்கார ரகஸ்யம் | 1 | 0 | 0 |
| இல்லற இன்பரகசியம் ... | 0 | 8 | மாயாஜால விநோதம் ... | 1 | 0 | 0 |
| ஸ்திரீ புருஷ தத்துவம் ... | 3 | 0 | மனோவசிய சாஸ்திரம் ... | 1 | 8 | 0 |
| முத்தத்தின் மர்மம் ... | 1 | 8 | ஸ்திரீ புருஷ ரகசியம் ... | 1 | 8 | 0 |

விலாசம்:—ஆரியன் புக் டிபோ, திருவல்லிக்கேணி, மதராஸ்.

# அயக்காந்த சத்தின் திராவகம்.



இந்தத் திவ்ய ஔஷதம், விஷசுரம் முதலிய எத்தகைய ஜுரத்தினாலும் தேகம் மெலிந்து வெளுத்துப் போனவர்களுக்கும், வேறு பல வியாதிகளால் தாக்கப்பட்டுப் பலமற்றுப் போனவர்களுக்கும், தாது விருத்தி நாட்டங்கொண்டு பல மருந்துகளைச் சாப்பிட்டு குணமடையாதவர்களுக்கு இது ஒரு அமிர்தமாகும் என்றே நிச்சயமாகக் கூறுலோம். இம்மருந்தை உட்கொள்வதால் மல ஜலம் தாராளமாய்க் கழிந்து பசியின்மையைப் போக்கி ஜீர்ண சக்தியைக் கொடுத்துப் பரிசுத்த இரத்தத்தைப் பெருக்கும். தாதுவிருத்தி உண்டாகும். தேகம் சிவப்படைந்து முகம் வசீகரமாகும்.

இம் மருந்தைச் சாப்பிடுகிறவர்கள் தேக திடத்தைப் பெற்று, வலிவுள்ள மக்களைப் பெறுவார்கள். சகல இன்பங்களையும் அனுபவிக்கலாம். ஆண்பெண் இருபாலரும் எப்பொழுதும் உபயோகிக்கலாம்.

பெரியவர்கள் ஒரு அவுன்சு தண்ணீர் அல்லது பசும்பாலில் 10, 12-துளி வரையிலும், சிறியவர்கள் 2-முதல் 6,7-துளிகள் வரையிலும் காலைமாலை இருவேளையும் சாப்பிடவேண்டும். இதற்கு யாதொரு பத்தியமுமில்லை. எல்லா ஏழைகளும் வாங்கி உபயோகிக்கும்பொருட்டே மிகக்குறைந்த விலைக்கு விற்கிறோம். ஒருமாதம் சாப்பிடக்கூடிய மருந்து 0-12-0 தபாற் செலவு வேறு.

கருணாநிதி டிபோ, நெ. 1/6 வெங்கடேச மேஸ்திரி தெரு, மதராஸ்.

முதல்தரமான—V. H. R. A Quality

# பெருங்காயம்.

ஆகேகர் உணவை, இனிமையும்படுத்தி ஜீரணிக்கவும் செய்யும் நல்ல பெருங்காயம் கிடைப்பது அரிதா யிருக்கின்றதென்றும், அதில் உயர்ந்ததைத் தயாரித்துப் பலருக்கும் உபயோகமாகும்படி வியாபாரஞ் செய்யவேண்டு மென்றும் எங்களைக் கேட்டுக்கொண்டபடியால், இப்போது மேலான பெருங் காயம் உயர்ந்ததாயும், வியாதிகளைக் கண்டிக்கக்கூடியதாயும், விலை சரசமாயும் நம்மிடத்தில் கிடைக்கும். வேண்டுவோர் வரவழைத்துக்கொள்ளலாம்.

1-இராத்தல் அல்லது 1-பவுண்ட் ரூ. 2.<br>
½-இராத்தல் ரூபா 1—1—0. } தபாற்கூலி வேறு.



## மோகினி பரிமள கூந்தல் தைலம்

5 வித இனும் சாமான்கள் சேர்த்தனுப்பப்படும்.

இந்தத் தைலத்தை கூந்தலில் தடவிக் கொண்டால் இன்றுமலர்ந்த புஷ்பங்களின் வாசனைக்கு நிகராயிருக்கும். கூந்தலுக்கு வளர்ச்சியைத் தருவதுடன் தலைக்கொதிப்பையும் அடக்கி தேகத்திற்கு ஆரோக்கியத்தைத் தரவல்லது. விலை அணு 18.

இனும் சாமான்:-1 செண்டுபுட்டி, 1 பெட்ரும் படம், 1 ஜவ்வாது பில்லை, 1 சவர்சாந்து, 1 சிறிய கண்ணாடி.

## 130 சாமான்கள் அடங்கிய பெட்டி

இதன் விலை ரூபா 2-12-0 தான். இதன் விலை ரூபா 2-12-0 தான்.

187519

சாமான்களின் விவரம்.

18 காரட் ரோல்டு கோல்டு அழகிய நிப்புள்ள பவுண்டன் பேனா 1; 18 காரட் ரோல்டு கோல்டு இமிடேஷன் வைர மோதிரங்கள் 2; ஷை சர்ட் பொத்தான்கள் செட் 12; ஷை கல்லிழைத்த புரூச் 1; ஜப்பான் நூதன பொம்மைகள் 6; நேர்த்தியான முகம் பார்க்கும் கண்ணாடி 1; அழகிய தந்த சீப்பு 1; மடிப்புள்ள கத்தி 1; நேர்த்தியான கத்தி 1; காம்பினேஷன் நூதன சாவி வளையமும் செயின் 1; உயர்ந்த பென்சல்கள் 12; பென்சல் சீவிப்புடன் கூடிய கவர் 1; பலரக பென் ஹோல்டர்கள் 6; உயர்ந்த நிப்புகள் 12; மணிபர்ஸ் 1; ஜெர்மன் இங்கிபுட்டி 1; இங்கி மாத்திரைகள் 12; செண்ட் புட்டி 1; தேசிய டிரான்ஸ்பர் படங்கள் 32; பலரக சேப்டி பின்கள் 25; ஆக 130 சாமான்கள் அடங்கிய பெட்டிக்கு ரூ. 2—12—0.

---

கருணாநிதி டிபோ, நெ. 176, வெங்கடேச மேஸ்திரி தெரு, மதராஸ்.